Issued—10—1—1974]

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

MONDAY 26th NOVEMBER 1973

Volume CXII—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1973

Legislative Council Department
Fort St. George, Madras-9.

PRICE 35 *Paise*]

Tamil Nadu Legislative Council Debates

FORTY-SIXTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

26th to 30th November 1973.

Volume CXII (Nos. 1-5).

TABLE OF CONTENTS

	PAGES
Personnel of the Government of Tamil Nadu ...	i-v
Principal Officers of the Tamil Nadu Legislative Council	vii
List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies	ix-xi
Monday, the 26th November 1973.	
I. Questions and Answers	1-16
II. Discussion on the First Statement of Supplementary Expenditure for 1973-74	16-74
III. Discussion on the Statement of Demands for Grants for Excess Expenditure for 1968-69 ...	75
Tuesday, 27th November 1973.	
I. Questions and Answers	77-93
II. Announcement *re* Message from the Assembly	93
III. Government Bill—	
The Madras City Municipal Corporation Laws (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 29 of 1973)	93-101

PAGES

Tuesday, 27*th November* 1973—cont.

IV. Discussion on the Annual Financial Statement for 1973–74 and the Supplementary Financial Statement for 1972–73 of the Tamil Nadu Electricity Board—*cont.*	101–132
V. Papers laid on the table of the House	132

Wednesday, 28th November 1973.

I. Questions and Answers	139–158
II. Announcements—	
(1) Messages from the Governor	158
(2) Messages from the Assembly	158
III. Government Bills—	
(1) The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1973 (L.A. Bill No. 35 of 1973)	158–219
(2) The Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1973 (L.A. Bill No. 36 of 1973)	219–220
IV. Papers laid on the table of the House	220–221

Thursday, 29*th November* 1973.

I. Questions and Answers	227–245
II. Point of Order *re* Question-hour	246–247
III. Calling attention to non-payment of house rent allowance to staff of Raja Serfoji Government College, Thanjavur	248–249
IV. Non-official Resolutions—	
(1) Appointments to the Union and State Judiciary	249–276
(2) Adoption of Ten-year School Course from 1974–75 School Year as in other States in India	276–291
V. Papers laid on the table of the House	292

63104

PAGES

Friday, 30*th November* 1973.

I. Point of Order *re*—	
(1) Wearing of Badge	293, 312–313
(2) Adjournment of the House early on 29th November	313–314
II. Questions and Answers	293–312
III. Announcement *re* Messages from the Assembly	314–315
IV. Calling attention to non-appointment of Graduate Teachers who participated in agitation for supervision work in S.S.L.C. Examination in October 1973	315–317
V. Government Bills—	
(1) The Tamil Nadu Prohibition (Suspension of Operation) (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 25 of 1973)	318–340
(2) The Tamil Nadu Excise (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 26 of 1973)	341–342
(3) The Tamil Nadu Cultivating Tenants Protection (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 27 of 1973)	342–350
(4) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1973 (L.A. Bill No. 32 of 1973)	351–352
VI. Papers laid on the table of the House ...	352
Index	361–389

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

THIRU KODARDAS KALIDAS SHAH.

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration. Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Information and Public Relations, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. S. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMI, Minister in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர் :

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) .அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்-குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி விளம்பரம், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சேரணி, இளைஞர் அணி, பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகித கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்—பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (வருவாய்த் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.— வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழிலாளர், வீட்டுவசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், குடிசை மாற்று வாரியம்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.— போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

சட்டமன்ற மேலவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. எஸ். டி. ஆதித்தன்.

திரு. என். வில்சன் அப்பலோஸ்.

திரு. எஸ். நாராயணசாமி.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்.

சட்டமன்றச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
1 அப்துல் வகாப், கே. எஸ். ..	மாநிலச் சட்டப் பேரவை.
2 அய்யணன் அம்பலம்	மதுரை உள்ளாட்சி மன்றம்.
3 அறிவழகன், கே., எம்.ஏ. ..	சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி.
4 அறிவுடைநம்பி, புலவர் ஓ. ..	வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி.
5 அனிபா, நாகூர், ஈ.எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல்.	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
7 ஆறுமுகசாமி, எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
8 இராசகோபால், சி. வி.	மாநிலச் சட்டப் பேரவை.
9 இராசமாணிக்கம், எஸ்.ஏ. ..	மாநிலச் சட்டப் பேரவை.
10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்).	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
11 இராணி அண்ணாதுரை	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ்.	தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
13 இராமசுப்பையா, காரைக்குடி ..	நியமனம்.
14 இராமநாதன், எம்.	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
15 இராஜா அய்யர், எம்., எம்.ஏ., எல்.டி.	மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி.
16 இராஜு, ஜி. என்.	மாநிலச் சட்டப் பேரவை.
17 ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.ஏ. (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்).	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள்.
18 கணபதி, கே. எஸ்.	தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள்.
19 கணேசன், சா.	மாநிலச் சட்டப் பேரவை.
20 காட்டூர் கோபால்	மாநிலச் சட்டப் பேரவை.
21 காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம்.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
22 குன்றக்குடி அடிகளார், தவத்திரு.	நியமனம்.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
23 கோலப்பா, சி. ஆர்.	மாநிலச் சட்டப் பேரவை.
24 சக்தி மோகன், ஆர்.	மாநிலச் சட்டப் பேரவை.
25 சங்கரலிங்கம் பிள்ளை, எம். ..	திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள்.
26 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல்.	தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள்.
27 சாம்பசிவம், இரா.	தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
28 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்).	நியமனம்.
29 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்).	மாநிலச் சட்டப் பேரவை.
30 சுந்தரேசத் தேவர், என்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
31 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி ..	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள்.
32 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி.	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
33 தங்கப் பாண்டியன், வி., பி.ஏ.,பி.டி.	மாநிலச் சட்டப் பேரவை.
34 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்).	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள்.
35 திருஞானசம்பந்தம், பி. ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
36 தென்னரசு, எஸ்.எஸ்.	நியமனம்.
37 தேவராஜ், வி. எம்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
38 நடராசன், என். வி. (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
39 நடராசன், எம். கே. டி.	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
40 நாராயணசாமி, பி. (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
41 நாராயணசாமி, டி. வி.	நியமனம்.
42 நாராயணசாமி, எஸ்.	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
43 பகவதி, டி. கே.	நியமனம்.
44 பக்கர், எம். எம்.	நியமனம்.
45 பராங்குசம், ஜி. (அரசாங்க கொறடா).	மாநிலச் சட்டப் பேரவை.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
46 பலராமன், எல்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
47 பொன்னுவேலு, டி. கே. ..	மாநிலச் சட்டப் பேரவை.
48 மணி, கே. எஸ்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
49 மாசிலாமணி, எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
50 முத்து, பி. டி.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51 முத்து, எஸ்.	மாநிலச் சட்டப் பேரவை.
52 முத்துகிருஷ்ணன், டி.வி. ..	மாநிலச் சட்டப் பேரவை.
53 முத்துசாமி, எஸ்.	சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள்.
54 ரசல்ராஜ்	நியமனம்.
55 வசந்தபாய், ஜி.	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
56 வில்சன் அப்பலோஸ், என். ..	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
57 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். ..	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58 வெங்கா, வி.	செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
59 வெள்ளபாண்டியன், எஸ். ..	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60 ஜனார்த்தனம், ஏ.பி.	நியமனம்.
61 ஜார்ஜ் கோமகன்	மாநிலச் சட்டப் பேரவை.
62 ஜெயராம் செட்டியார், எஸ். ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
63 வெற்றிடம்	

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் நாற்பத்தி ஆறாவது கூட்டத் தொடர்.

திங்கட்கிழமை, 1973, நவம்பர் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Selection Grade B.T. Assistants

*113 *Q.*—THIRU N. WILSON APPOLLOS (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any quota has been fixed for each district for the Selection Grade B.T. Assistants ; and

(*b*) if so, the basis on which the quota is fixed ?

தேர்வு நிலை பி. டி. ஆசிரியர்கள்

(திரு. என். வில்சன் அப்பலோஸ் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும், தேர்வு நிலை பி. டி. ஆசிரியர்களுக்கு ஒதுக்கீட்டளவு ஏதும் வரையறுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எந்த அடிப்படையில் அந்த ஒதுக்கீட்டளவு வரையறுக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 10 வருட பணி முடிந்த அனைத்து நிரந்தர பி.டி. ஆசிரியர்களும் தேர்வு நிலை தகுதியுடையவர்கள் ஆவார்கள் என அரசு ஆணை (நிலை) 519 நாள் 31—3—1973-ல் ஆணையிடப் பட்டுள்ளது.

எனவே விருக்காடு அடிப்படையில் முன்னர் வழங்கப்பட்ட தேர்வு நிலை பி.டி. ஆசிரியர் பதவிகளை மாவட்ட வாரியாக பகிர்ந்தளிக்கும் அவசியம் இனி இல்லை.

புலவர் ஓ. அறிவுடைநம்பி : தலைவர் அவர்களே, பி.டி. ஆசிரியர்களைப்போல் இடைநிலை ஆசிரியர்களையும் 10 ஆண்டுகாலத்தில் தேர்வுநிலை ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதை பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

Ex-Grade II Hindi Pandits

* 114 *Q.*—THIRU S. JAYARAMA REDDIAR (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether in the case of any Ex-Grade II Hindi Pandits, now serving as Secondary Grade Assistants in the Government Secondary Schools in the Tirunelveli district, the Special Pay and Dearness Allowance they were drawing, have not been taken into account for re-fixation of their salary with effect from 2nd October 1970 ; and

(*b*) if so, the reasons therefor ?

முன்னாள் இரண்டாம் நிலை ஹிந்தி பண்டிதர்கள்

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் தற்போது, ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களும், முன்னாளில் இரண்டாம் நிலை ஹிந்தி பண்டிதர்களாகப் பணியாற்றியவர்களுமான ஆசிரியர்கள் எவருடைய நேர்விலும், 2—10—1970-ம் நாளிலிருந்து செயல்படுத்தப்பட்ட சம்பள விதங்கள் திருத்தியமைப்பில், அவர்கள் பெற்றுவந்த சிறப்புச் சம்பளம், அகவிலைப்படி ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) சிறப்பு ஊதியம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் பழைய ஊதியவிகிதத்திற்குரிய பஞ்சப்படி (சிறப்பு ஊதியம் நீங்கலாக) கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) 5—6—1971 நாளிட்ட நிதித்துறை அரசாணை (நிலை) எண். 828-ன்படி ஒரு தரத்திலுள்ள எல்லா அலுவலர்கட்கும் வழங்கப்பட்டுள்ள சிறப்பூதியத்தை மட்டுமே ஊதியத்துடன் சேர்த்து அதற்கான பஞ்சப்படி நிர்ணயம் செய்யலாம். அப்படியல்லாது அந்தத் தரத்திலுள்ள ஒரு சிலருக்கு மட்டுமே தனிக்காரணங்களுக்காக சிறப்பூதியம் ஏதேனும் வழங்கப்பட்டிருந்தால் அதனை பஞ்சப்படி கணக்கிடுவதற்கு சேர்க்கக்கூடாது. அத்தகையோர் ஊதியத்திற்கு மட்டும் என்ன பஞ்சப்படி உண்டோ அதை மட்டுமே கணக்கிலெடுத்துக்கொள்ளவேண்டும். இதில் குறிப்பிட்டுள்ள ஹிந்தி ஆசிரியர்களில் வாரத்திற்கு 12 உயர் வகுப்புகள் எடுத்து வந்த ஒரு சிலருக்கு மட்டுமே மாதம் 10 ரூபாய் சிறப்பூதியம் வழங்கப்பட்டுவந்ததால் மேற்சொன்ன ஆணையின்படி அச் சிறப்பூதியத்தைச் சேர்த்து பஞ்சப்படி கணக்கிடுவது இயலாது.

Graduate Teachers

* 115 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether Graduate Teachers appointed as temporary teachers in Government (Board) High Schools subsequent to 1st April 1970 are required to appear before the Tamil Nadu Public Service Commission, once again ;

(*b*) if so, whether exemption from age rules will be given to those who crossed the age-limit of 30 years even before 1st July 1972 ; and

(*c*) whether there will be special safeguards to secure the absorption of all those already in such service ?

பட்டதாரி ஆசிரியர்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1970 ஆம் நாளுக்குப் பிறகு அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில், தற்காலிக ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், மீண்டும் ஒருமுறை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் கழகத்தின் தேர்வுக்கு வருமாறு கோரப்படுகின்றனரா ?

(இ) ஆமெனில், 1—7—1972 ஆம் நாளுக்கு முன்னரே 30-வயது என்ற வயது வரம்பைக் கடந்தவர்களுக்கு வயது வரம்பு குறித்த விதிகளிலிருந்து விலக்களிக்கப்படுமா ?

(உ) அதுபோன்ற பணியில் ஏற்கனவே உள்ள அனைவரையும் ஈர்த்துக் கொள்ள உறுதி செய்யச் சிறப்புப் பாதுகாப்புகள் உள்ளனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) 1—4—1970 முதல் 3—3—1973 வரை அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிக நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணிகள் வரன்முறைப்படுத்தப்படும்.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிற் கல்விக் கல்லூரிகள் அல்லது கல்வி நிலையங்களில் வேலை பார்க்கின்ற தமிழாசிரியர்களையும் இதே வரையறையில் நிரந்தரமாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் கல்வி நிலையங்களிலே இதே கேடரிலே அவர்கள் இருந்திருப்பார்களானால், அது கவனத்தில் கொள்ளப்படும். அப்படி இல்லாவிட்டால், தனிக் கேள்வி போட்டால் அதுபற்றித் தெரியவரும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன் இவர்கள் மறுபடியும் வரவேண்டியதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பப்ளிக் சரவிஸ் கமிஷன் 'நாட் செலக்டட்' என்று பல பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கடிதம் எழுதி அனுப்பி இருக்கிறது. 'நாட் செலக்டட்' என்றால், அவர்களுடைய விண்ணப்பம் 'ரிஜெக்டட்' என்று பொருள் அல்ல என்று சொல்லப்படுகிறது. ஆகவே அவர்களுடைய நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். குறிப்பாக தர்மபுரி மாவட்டத்திலே நிறைய ஆசிரியர்களுக்கு இப்படிப்பட்ட கடிதங்கள் வந்திருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு நாம் முதலில் அனுப்பிவிட்டோம். ஆகவே சர்விஸ் கமிஷனில் செலக்ஷன் ஆகி வருவதை எடுத்துக்கொண்டு, அவர்கள் செலக்ட் செய்யாதவர்களை, அரசாங்கமே தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்யலாம் என்ற அடிப்படைதான் இருக்கிறது. அவர்கள் யார் யாரை

செலக்ட் பண்ணவில்லையோ, அவர்களை அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஏற்கெனவே அளித்த உறுதிமொழியின்படி, செய்து கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, அப்படியென்றால், அவர்களை சர்விஸ் கமிஷனுக்கு அனுப்பியிருக்க வேண்டியதில்லையே. அவர்களுக்குப் பணச் செலவு, வேலைக் கெடுதல் போன்றவையெல்லாம் ஏற்படுகிறதே. ஏன் அனுப்பியிருக்க வேண்டும்? அனுப்பாமலேயே இருந்திருக்கலாம் அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களை அனுப்ப வேண்டியதுதான் முறை. வேலை கொடுக்கும்போதே, முறைப்படுத்த வேண்டும் என்று சொன்னோம். ஆனால் சென்ற ஆண்டு கிளர்ச்சி செய்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து முயற்சித்தபோது, அந்தக் கிளர்ச்சியைக் கைவிடுவதற்கு இதை ஒரு உடன்பாடாக வைத்துக்கொண்டார்கள். அந்த உடன்பாட்டின்படி சர்விஸ் கமிஷன் எடுக்காதவர்களை, அரசாங்கமே தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தின் உறுதிமொழி 'பி விங்' ஆசிரியர்களுக்குத்தான் பொருந்தும். 'ஏ விங்' ஆசிரியர்களுக்குப் பொருந்தாது என்று சொல்கிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் தகராறு ஏற்பட்டதே 'பி விங்' ஆசிரியர்களுக்குத்தான். 'ஏ விங்' ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து இருந்து வருகிறது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரியிலே பயின்று, பாடம் போதிப்பதற்குத் தகுதி உள்ளவர்கள் என்று நற்சான்றிதழ் அளித்துவிட்டு, மேலும் இதுபோன்ற முறைக்கு அவர்களை ஆளாக்குவது முறையா, அதை அரசு மறு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்க வேலைகளுக்கு எடுப்பதற்குத்தான் இந்த முறை இருக்கிறது. தனியார் பள்ளிகளிலே சேர்க்கிறபோது, பி. டி. தகுதி பெற்றவர்கள் அத்தனை பேரையுமே சேர்த்துக்கொள்ள வழி இருக்கிறது. ஆனால் அரசாங்கத்தின் சார்பாக இருக்கிற பள்ளிகளிலே சேர்த்துக்கொள்ளும்போது, சர்விஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக செலக்ஷன் செய்யப்பட்டவர்கள், 'நாட் செலக்டட்' என்று அறிவிக்கப்பட்ட தேர்வு பெறாதவர்களுக்கு முன்னதாக சீனியர் என்று ஏற்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுத்து வரன்முறைப்படுத்துகிறது. அதிலேயிருந்துதான் அவர்களுடைய சர்வீஸ் கணக்கிடப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, இந்தச் சலுகை 'பி விங்' ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. 'ஏ விங்' ஆசிரியர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்படுவதால், அது தேவையில்லை என்று கூறுகிறார்கள். கழிந்த சில ஆண்டுகளாக பி. டி. ஆசிரியர்களை ஏ விங்கிற்காக பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் எடுக்கப்படாமல் இருந்தால் 10-ஏ (1)ன் படி நியமிக்கப்படுவார்கள். பல ஆண்டுகள் தற்காலிகமாகவே வேலை பார்த்து வருகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து சர்வீஸில் இருக்கிறவர்களுக்கு இதே மாதிரி விதிவிலக்கு அளிக்க அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றி இப்பொழுது பிரச்சினை இல்லை. அதுபற்றி யாராவது எழுதிக் கேட்பார்களேயானால், அதுபற்றி ஆராய்ந்து முடிவு சொல்லப்படும்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: தலைவர் அவர்களே, போராட்டத்தில் ஈடுபடாத 'ஏ விங்' ஆசிரியர்கள் குறித்து இந்தச் சலுகை தருவது நியாயம் என்று அரசு கருதாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 'ஏ விங்' ஆசிரியர்கள் நீண்ட பெருங்காலமாகவே சர்வீஸ் கமிஷன் மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள். 'பி விங்' ஆசிரியர்கள் டிஸ்டிரிக்ட் போர்டினால் நியமிக்கப்பட்டு வந்தார்கள். நாம் எடுத்துக்கொண்டதற்குப் பிறகு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் வர வேண்டும் என்ற ஒரு புதுத்தன்மையை பி விங்குக்கு நாம் ஏற்படுத்தினோம். ஆகவே அதிலே இரண்டு மூன்று ஆண்டு காலம் சர்வீஸ் கமிஷனுக்கு வருவதற்கு முன்பு வேலை பார்த்து வந்தவர்கள் அத்தனை பேரையும் வீட்டுக்கு அனுப்பக்கூடாது, எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற பிரச்சினை பி விங்கைப் பொறுத்து வந்தது. ஆனால் ஏ விங்கைப் பொறுத்து தொடர்ந்து சர்வீஸ் கமிஷனுக்குப் போக வேண்டும் என்ற உணர்வு உண்டு. பி விங்கைப் பொறுத்தவரையில், சர்வீஸ் கமிஷனுக்குப் போக வேண்டும் என்ற உணர்வு

1970 க்குப் பிறகுதான் ஏற்பட்டது. ஆகவேதான் அந்தச் சங்கடம். ஆனால் இனிமேல் வருகிற எந்த 'பி விங்' ஆசிரியரும் கட்டாயம் சர்வீஸ் கமிஷனுக்குப் போக வேண்டும். ஒப்பந்தத்திற்குப் பிறகு வருகிறவர்கள் அத்தனை பேரும் கட்டாயம் போகத்தான் வேண்டும்.

* 116 *Q*.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether Grade I posts have been sanctioned up to the end of 1972 according to the rule of the ratio of 1 : 2 among the Government Graduate Teachers ;

(*b*) if not, the reason for the delay ;

(*c*) whether for purposes of calculation of the percentage of Graduate Teachers (Government), the number of Educational Officers, First Grade Educational Officers and Headmasters are also taken into account ;

(*d*) if so, whether the Graduate Teachers are affected as a result of the inclusion of the above mentioned Educational Officers who draw higher scales of pay than the Graduate Teachers ; and

(*e*) if so, whether the Government will take steps to remove the same ?

பட்டதாரி ஆசிரியர்கள்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு பட்டதாரி ஆசிரியர்களின் 1 : 2 என்ற விகிதத்தில் முதல் கிரேடு வழங்குவது என்ற விதிப்படி 1972 மார்ச்சு முடிய வழங்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையென்றால், காலதாமதத்திற்கு காரணம் யாது ?

(உ) பட்டதாரி ஆசிரியர்களின் (அரசு) மொத்த எண்ணிக்கையில், கல்வி அதிகாரிகள், முதன்மைக் கல்வியதிகாரிகள், தலைமையாசிரியர்கள் இவர்களையும் சேர்த்து சதவிகிதம் கணக்கிடப்படுகிறதா ?

(எ) ஆமெனில், பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள விகிதத்திற்கு மேல் உயர்ந்த சம்பள விகிதத்திலுள்ள மேற்கூறிய கல்வியதிகாரிகளையும் சேர்த்துக் கணக்கிடுவதால் பட்டதாரி ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்களா ?

(ஐ) ஆமெனில், அதை நீக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இரண்டாம் நிலை பதவிகளில் மூன்றில் ஒரு பாகமே முதல்நிலை பதவிகள். அதன்படி பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(உ), (எ) & (ஐ) தமிழ்நாடு கல்வி சார்நிலைப்பணியில், பள்ளித்துணை ஆய்வர்/உதவியாசிரியர்கள் இணைந்த இரண்டாம் நிலை பணியமைப்பில் நிலையான பணியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு முதல் நிலை பணியிடங்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிரந்தரமான அடிப்படையில் பதவி உயர்வு அளிப்பதால் முதல்நிலை இடங்களிலிருந்து பதவி உயர்வு பெற்று மாவட்டக் கல்வி அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர் போன்ற அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களாக பணிபுரிவோருக்கு அவர்கள் மேற்கூறிய பதவிகளில் நிரந்தரமாக்கப்படும்வரையில் அவர்களுக்கு முதல்நிலை பணியிடங்களில் மீள் உரிமை (lien) இருப்பதால் அவ்விடங்களை நிரந்தர காலியிடங்களாகக் கொண்டு பதவி உயர்வினால் நிரப்ப இயலாது. 10 ஆண்டுகள் பி.டி. ஆசிரியர்களாக பணிபுரிந்தவர்கட்கு தொழிலிலும் நடத்தையிலும் நல்லவிதமாக உள்ளார்கள் என்பதைப் பொருத்து தேர்வுநிலை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணை 1—4—1973 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே ஏ விங்கிலே பணியாற்றக்கூடியவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பதவி உயர்வைப் போலவே, பி விங்கிலே இருக்கக்கூடியவர்களுக்கும் பதவி உயர்வு தர கல்வி இயக்குநர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படி டி.இ.ஓ. போன்ற பதவிகளை இவர்களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏ விங்கிலே இருப்பவர்களுக்கு அக்கவுன்ட் டெஸ்ட் முதலியவற்றையெல்லாம் 'பாஸ்' பண்ண வேண்டிய முறை இருக்கிறது. பி விங்கிலே இருப்பவர்களுக்கு அந்த நிலைமைகள் இல்லை; ஒத்த நிலை கொண்டுவந்ததற்குப் பிறகு, அந்த முறை ஏற்படும். அந்த ஒத்த நிலை வருமானால், ஒரே மாதிரியாகக் கவனிக்கப்படும் சூழ்நிலை இருக்கும்.

Representation from the Madurai University Teachers' Association

* 117 *Q.*—THIRU S. JAYARAMA REDDIAR (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received from the Madurai University Teachers' Association in March, 1972 praying for extension of all the benefits enjoyed by the teachers in Government Colleges to those in Aided Colleges and to remove all the existing disparities ; and

(*b*) if so, the action taken thereon ?

மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் முறையீடு

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும், மானியம் பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும், தற்போதுள்ள ஏற்றத் தாழ்வுகள் அனைத்தும் அளிக்கப்பட வேண்டுமென்றும் கோரி, 1972 மார்ச்சில், மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்திடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில் அதையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் பல்வேறு கோரிக்கைகள் அரசால் பரிசீலிக்கப்பட்டு தேவையான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. சில கோரிக்கைகளின் மேல் ஆணை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

Tourist Bungalow at Kodaikanal

* 118 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Tourism Development Corporation have undertaken the construction of any tourist bungalow at Kodaikanal ; and

(*b*) if so, the details thereof ?

கோடைக்கானலில் சுற்றுலா மாளிகை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோடைக்கானலில் சுற்றுலா மாளிகை கட்டும் பணியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ. 11.5 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கோடைக் கானலில் சுற்றுலா மாளிகை ஒன்று கட்டக் கருதியுள்ளது. கட்டக் கருதப் பட்டுள்ள சுற்றுலா மாளிகையானது இரு படுக்கையுள்ள 51 அறைகளையும் சுமார் 40 படுக்கை வசதியுடைய கூடம் ஒன்றையும் கொண்ட 4 அடுக்கு மாளிகையாக இருக்கும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, இது போன்று குற்றாலத்தில் சுற்றுலா வளர்ச்சி துறையின் சார்பாக ஒரு மாளிகை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதாக அறிந்தேன். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன். அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஏற்கெனவே குற்றாலத்தில் பொதுப் பணித் துறையின் சார்பாக ஒரு சுற்றுலா மாளிகை இருக்கிறது. குற்றாலம் டவுன்ஷிப்பிலும் பல மாளிகைகளைக் கட்டிக் கொண் டிருக்கின்றனர். ஆகையால் சுற்றுலாத் துறையின் சார்பாகக் கட்ட வேண்டிய அவசியமில்லை. அப்படி அவசியம் ஏற்படும்போது, அதுபற்றி ஆலோசிக்கப் படும்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman. Sir, may I know where at this Tourist Bungalow in Kodaikanal is being built?

MR. CHAIRMAN : Does the hon. Member want to know the location of the Bungalow?

THIRU G. VASANTHA PAI : Yes, Sir.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கு ஒய்.எம்.சி.ஏ. பங்களா ஒன்று இருந்தது. அதைத்தான் சுற்றுலாத் துறை யினர் வாங்க இருக்கின்றனர். அந்தக் காம்பௌண்டில்தான் அந்த மாளிகை எழுப்பப்படும்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, why not the Government build one near the Berigem Lake?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் குறிப்பு ஒன்று இருக்கிறது. அந்த ஏரிக்குப் பக்கத்தில் சுற்றுலா மாளிகை கட்ட வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அந்த பேரிஜம் ஏரித் தண்ணீ ரானது கோடைக்கானலுக்கும், பெரிய குளத்திற்கும் குடி தண்ணீராகப் பயன் படுகிறது. எனவே அந்தத் தண்ணீரைக் கெடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கு கட்டப்போவது சுற்றுலா மாளிகைதான். அங்கு வருபவர்கள் ஓரிரு நாட்கள் தங்கும் வகையில் அது அமையக்கூடும். அந்த அளவுக்குத்தான் அங்கு கட்ட லாம்.

Fully qualified Grade II Tamil Pandits

* 119 *Q.*—THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that some of the fully qualified Grade II men and women Tamil Pandits working in the Government 'A' Wing schools have been placed under Rule 10 (a) (i) of the General Rules in spite of their continuous service of three years;

(*b*) if so, whether they are ordered to be ousted at the end of the academic year and re-appointed in the same vacancy, when the school reopens; and

(*c*) the steps proposed to be taken by the Government to make them permanent and to promote them as First Grade Tamil Pandits?

முழுத் தகுதி பெற்ற இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள்

திரு. எஸ். நாராயணசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அரசினர் 'அ' பிரிவுப் பள்ளிகளில் முழுத் தகுதி பெற்ற இரண் டாம் நிலை இருபால் தமிழாசிரியர்களில் பலர் மூன்றாண்டுகள் தொடர்ந்து பணி யாற்றியும் 10 (அ) (1) தற்காலிக நிலையிலேயே வைக்கப்பட்டிருப்பது உண்மையா?

(ஈ) ஆமெனில், ஆண்டு இறுதியில் அவர்கள் பணியினின்றும் நீக்கப்பட்டு திரும்பவும் அதே இடத்தில் பணிபுரியும் ஆணையிடப்படுகின்றனரா ?

(உ) அவர்களை நிரந்தரமாக்கி முதல்நிலை பதவி உயர்வு கொடுக்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை—'அ' பிரிவு பள்ளிகளில் முழுத் தகுதிபெற்ற இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் யாரும் தொடர்ந்து மூன்றாண்டுகள் தற்காலிக நிலையில் பணிபுரியவில்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

(உ) முதல்நிலை தமிழாசிரியர்கள் பதவிக்கு தகுதி பெற்றவர்களின் விண்ணப்பங்கள் வாய்ப்பு வரும்போது கவனிக்கப்பட்டு வருகின்றன.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழாசிரியர்களிடத்தில் உள்ள இரண்டு நிலை வேறுபாட்டினை ஒழிக்க வேண்டுமென்றும், அகற்ற வேண்டுமென்றும் தொடர்ந்து கோரிக்கைகள் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அரசு அதுபற்றி என்ன முடிவு எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரண்டு நிலைகளுக்கும் புலவர் பட்டம் போதுமென்று இரண்டாம் நிலையைச் சேர்ந்தவர்கள் வாதாடுகிறார்கள். 5-வது அல்லது 7-வது வகுப்பு படித்துவிட்டு புலவர் பட்டம் பெற்றவர்களையும், 10 ஆண்டுகள் படித்துவிட்டு, அதற்குப் பிறகு 5 ஆண்டுகள் படித்து, மொத்தம் 15 ஆண்டுகள் படித்து புலவர் பட்டம் பெற்றவர்களையும் ஒரே நிலையில் வைக்க வேண்டுமென்று வாதாடுகிறார்கள். இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களை முதல்நிலைத் தமிழாசிரியர்களாக்கலாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது. பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து அறிக்கை அரசுக்கு வந்ததற்குப் பிறகு அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. [illegible] தலைவரவர்களே, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் அடிக்கடி கிளர்ச்சியில் ஈடுபடுகிறார்கள். அதைப்பற்றிய பிரச்சினை ஆலோசனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைச் சீக்கிரம் முடிவு செய்ய அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் இதில் விரைவாக ஒரு முடிவு எடுக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு விரைவில் அது குறித்து அரசு ஒரு முடிவு எடுக்கும்.

House-site pattas to the Harijans

* 120 *Q.*—THAVATHIRU **KUNDRAKKUDI ADIGALAR** : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government received any representation to distribute house-site pattas to the Harijans of Pudukudiyiruppu in the Thengamputhur Panchayat, Kanyakumari district ; and

(*b*) if so, the action taken by the Government thereon ?

அரிசனங்களுக்கு மனைப்பட்டா

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குமரி மாவட்டம், தெங்கம்புத்தூர் பஞ்சாயத்து, புதுக்குடியிருப்பில் குடியிருக்கும் அரிசனங்களுக்கு மனைப்பட்டா வழங்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்ததா ?

(இ) ஆமெனில், அந்த விண்ணப்பத்தின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) வீட்டுமனை பட்டா கோரி 17 மனுக்கள் வரப்பெற்று அவை விசாரணை செய்யப்பட்டு 17 மனுதாரர்களுக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன.

House-site pattas distributed through Harijan Welfare Department in North Arcot district

* 121 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of villages in which house-site pattas were distributed through Harijan Welfare Department in North Arcot district during 1970-71 and 1971-72 ; and

(*b*) the details thereof ?

அரிசன நலத்துறை மூலம் வட ஆற்காடு மாவட்டத்தில் வழங்கப்பட்ட வீட்டு மனைகள்

திரு. எல். பலராமன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசன நலத் துறை மூலம் வட ஆற்காடு மாவட்டத்தில் 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளில் வீட்டு மனைகள் எத்தனை கிராமங்களில் வழங்கப்பட்டன ?

(இ) அவற்றின் விபரம் யாது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 1970-71-ம் ஆண்டு 93 கிராமங்கள். 1971-72-ம் ஆண்டு 15 கிராமங்கள்.

(இ) 1970-71—

	கிராமங்கள்
திருவண்ணாமலை வட்டம்	8
செங்கம் வட்டம்	5
போளூர் வட்டம்	8
வேலூர் வட்டம்	9
வாலாசா வட்டம்	10
அரக்கோணம் வட்டம்	11
குடியாத்தம் வட்டம்	9
வாணியம்பாடி வட்டம்	1
ஆரணி வட்டம்	3
செய்யார் வட்டம்	12
வந்தவாசி வட்டம்	11
மொத்தம்	93

1971-72—

	கிராமங்கள்
திருவண்ணாமலை வட்டம்	1
போளூர் வட்டம்	1
அரக்கோணம் வட்டம்	3
வாலாசா வட்டம்	3
வேலூர் வட்டம்	1
குடியாத்தம் வட்டம்	1
வாணியம்பாடி வட்டம்	1
திருப்பத்தூர் வட்டம்	2
ஆரணி வட்டம்	2
மொத்தம்	15

திரு. எஸ். பலராமன்: தலைவரவர்களே, சில கிராமங்களில் அரிஜன மக்களுக்கென்று நிலங்களை ஆர்ஜிதம் செய்து, இரண்டு மூன்று ஆண்டுகளாகி யும் அதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொடுக்காமலிருப்பது அரசுக்குத்

தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். அது போன்று கிராமங்களில் இருக்கக்கூடிய மனைகளை அரிஜன மக்களுக்கு விரைவாக ஒதுக்க அரசாங்கம் முயலுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, பொதுவாக ஆர்ஜிதம் ஒத்துக்கொள்ளப்பட்ட இடங்களிலெல்லாம் பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் இன்னும் எத்தனை கிராமங்கள் கையகப்படுத்தப்பட்டு, பணம் கொடுக்கப்படவில்லையென்ற விவரம் தற்போது இல்லை. இருந்தாலும் அதிகமாக இருக்காதென்று நான் கருதுகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அரிஜனக் குடியிருப்பு மனைப் பிரச்சினைக்குக் கூட, விடுதலை வெள்ளி விழா கொண்டாடிய பிறகும்கூட, தீர்வு காண முடியாமல் இருக்கிறது. எனவே அவர்கள் குடியிருக்கும் மனைகளையெல்லாம் உடனடியாக ஒரே தேதியில் அவர்களுக்கு உரிமையாக்கும் சட்டத்தைச் செய்ய வேண்டும். இந்த மனைப் பட்டா வழங்குவதற்கு நீண்ட நெடுங்காலமாகிறது. இந்த வேலை எவ்வளவு காலத்திற்கு நிகழுமென்பது புரியவில்லை. அவர்களுக்கு மனைப் பட்டா வழங்குவதில், தாசில்தாரை அணுகுவது போன்ற காரியங்களில் இடர்ப்பாடுகள் இருப்பதால், உடனடியாக ஒரு தேதியில் அவர்களுக்குக் குடியிருப்பு மனைகளை உரிமையாக்கும் சட்டத்தைக் கொண்டு வரும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடங்களுக்கெல்லாம், இப்போது நிலமில்லாத ஏழைகளுக்கு, நிலப் பட்டா, வீட்டு மனைப் பட்டா வழங்குவதன் மூலமாக ஏராளமானவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டதில், ஏறத்தாழ 1½ லட்சத்திற்கும் மேலாக அரிஜன மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலத்தை வாங்குகிற முறையிலேயும் அரசாங்கம் பணம் செலவழித்து, அந்த நிலங்களை வாங்கிக்கொண்டிருக்கிறது. 'ஜயந்தி' வீடுகள் என்று வெள்ளி விழாக் காலத்தில், அவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டித் தர வேண்டுமென்ற செயற்குறிப்பும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றது. விரைவில் எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் இன்றைக்கு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

Construction of a Dam at Emuthikuttai in North Arcot district

* 122 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to construct a dam at Emuthikuttai near Andiyappanur under the foot hill of Kambukudi of Javvadu Hills, North Arcot district ;

(*b*) if so, the estimate of the construction work ; and

(*c*) the date on which this work will begin ?

வட ஆற்காடு மாவட்டம் எமுதிக்குட்டை என்னும் இடத்தில் அணை கட்டுதல்

திரு. எல். பலராமன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலையைச் சேர்ந்த கம்புகுடி மலையின் அடிவாரத்தில், ஆண்டியப்பனூர் அருகில் எமுதிக்குட்டை என்னுமிடத்தில் அணை கட்ட திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், மதிப்பீடு எவ்வளவு ?

(உ) எப்போது இவ்வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ரூபாய் நாற்பத்தைந்து லட்சங்கள்.

(உ) இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. 1973-74 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையின் மீது விவாதம்.

* **திரு. எல். பலராமன் :** மாண்புமிகு தலைவரவர்களே, 1973–74-ஆம் ஆண்டின் கூடுதல் செலவின் மானியக் கோரிக்கையின் மீது இங்கே அறிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதிலே உபரியாக சில செலவினங்களை சில நியாயமான காரியங்களுக்கு மேற்கொண்டிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இதில் சில தவறுகள், குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன

என்பதையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இங்கே 'தேர்தல்கள்' போன்று 45 ஒதுக்கீடுகளைச் செய்து, அவைகளுக்கெல்லாம் மேலும் உபரியாகப் பணம் செலவிடப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு நாட்டிலே தேர்தல்களுக்கென செலவு செய்கின்ற பணம் நல்ல முறையில் பயன்படுகின்றதா என்று பார்க்க வேண்டும். ஜனநாயகத்தில் நல்ல முறையில் தேர்தல்கள் நடக்க வேண்டுமென்று அரசாங்கமும், பொது மக்களும் கருதும்போது, அங்கே பல தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. நகரமன்றத் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும்போது, கட்சிக் கண்ணோட்டத்துடன் தயாரிக்கிறார்கள். தங்கள் கட்சிக்காரர்கள் என்றால் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதும், எதிர்த் தரப்பினர் என்றால் பட்டியலில் விடுவதும் இன்றைக்கு சர்வ சாதாரணமாக இருக்கின்றது. இவைகளைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயகத்தில் பஞ்சாயத்துத் தேர்தல்களும், நகரமன்றத் தேர்தல்களும் அடிப்படையானவையாகும். எனவே இந்தத் தேர்தல்கள் நல்ல முறையில் நடப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை நல்ல முறையில் இயங்கினால்தான், ஜனநாயகம் நாட்டிலே நிலைத்திருக்க முடியும். எனவே இன்றைக்கு ஆளுங் கட்சிக்குச் சாதகமாக காவல் துறையினர் இயங்குவார்களானால், அது ஜனநாயகத்தைக் கொல்லும் ஒரு கருவியாக மாறிவிடுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு குறிப்பாக திருச்சி கிளைவ் ஹாஸ்டல் நிகழ்ச்சியையும், பாளையங்கோட்டை நிகழ்ச்சியையும் பார்த்தால், அந்த அறிக்கைகள் மிகக் கேவலமாக, வருத்தத்திற்குரியவையாக இருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அறிக்கைகள் கேவலமாக இருக்கின்றனவா, தீர்ப்பா ? 4-4 பி.

திரு. எல். பலராமன் : அறிக்கைகள். இதிலே வந்திருக்கக்கூடிய வாசகங்கள் மிகவும் வருத்தத்திற்குரியவையாக இருக்கின்றன. காவல் துறையினர் நடந்துகொண்ட முறையைச் சுட்டிக்காட்டியிருப்பதைப் பார்க்கும்போது, எந்த அளவுக்கு காவல் துறையினர் மிகவும் கடுமையாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஒழுக்கம் உடையவர்களாக இருக்கவேண்டிய, அரசினுடைய கடமையில் முதல் பொறுப்பு ஏற்றிருக்கின்ற அந்தப் பகுதி, நல்ல முறையில் நடக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டம் இன்றைக்கு சமுதாய வளர்ச்சிக்காக, கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் வாழவேண்டுமென்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டம் கிராமங்களிலே மிகக் கேவலமாகச் செயல்படுகிறது. அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கின்றது என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன். அந்த வளர்ச்சி இன்றைக்குக் குறைவாக இருந்துகொண்டிருக்கின்றது. சமுதாய வளர்ச்சித் திட்டப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்கள், மற்றவர்கள் ' அமைச்சர் அவர்கள் மிக்க ஆர்வமாக இருக்கின்றார் ' என்று அவரைப் பாராட்டுகின்ற அளவுக்கு, அதிலே மிகவும் ஆர்வம் காட்ட வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு சென்னை மாநகராட்சியிலே பல ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று கூறி பல அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அதை ஒரு பக்கம் நாம் பாராட்டும்போது, உள்ளாட்சித் துறையிலும் இதுபோன்ற நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதையும் கண்காணிக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். பல தவறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேல் மட்டம் முதல் கீழ் மட்டம் வரையில் தவறுகள் மலிந்திருக்கின்றன என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொது மக்களுடைய, கிராம மக்களுடைய, ஏழை எளிய மக்களுடைய, சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காகப் பாடுபடக்கூடிய அலுவலகம் மிக ஒழுங்காக, சீரிய முறையில் இருந்தால்தான், நாடாளும் அந்த அலுவலர்கள் தூய்மையாகப் பணி செய்ய முடியும். இந்த நிர்வாகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறைவாக இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் பொதுப்பணி, சாலைப் போக்குவரத்துத் திட்டம் இவைகளுக்கு இங்கே ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். பல கிராமங்களிலே நல்ல போக்குவரத்துச் சாலைகள் இல்லை. ஆனால் நாம் வெள்ளி விழாவும், சுதந்திர விழாவும் கொண்டாடிவிட்டோம். அதைப்பற்றிப் பெருமையாகப் பேசுகின்ற இந்த நேரத்தில் கிராமங்களில் சாலைகள் இல்லையென்பதை மனதில் இருத்தி கிராம நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலைகள் என்று இரு பிரிவுகள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள், அது பாராட்டுக்குரியது. அதை விரைவுபடுத்தவேண்டியிருக்கின்றது. இது விஷயத்தில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தியிருக்கின்றார்கள் என்றாலும், அதைப் பரவலாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். சில கிராமங்களில் இன்றைக்குக்கூட வண்டிகள் போவதற்கோ, சைக்கிள்கள் போவதற்கோ சாலை இல்லாதிருக்கும் நிலை, இந்த

அரசுக்குத் தெரியும். அந்த அளவுக்கு வசதியற்ற கிராமங்களை முதலாவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். பஸ் ஓடுகின்ற சாலைகளைத்தான் எடுத்துக்கொள்வோம் என்று இருக்கக்கூடாது. ஆயிரம் மக்கள் வாழ்கின்ற கிராமப்பகுதியிலுள்ள பாதைகள் சரியில்லை என்றால், அதையெல்லாம் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து யூனியன்களோ செய்வதற்கான பணவசதி அவைகளிடம் இல்லாத காரணத்தால், இன்றைக்கும் சில கிராமங்கள் போக்குவரத்து வசதியில்லாமல் அந்த மக்கள் பழைய நிலையிலே இருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன். குறிப்பாக நான் ஒரு உதாரணத்தைச் சொல்கின்றேன். வேலூர் நகரத்தில் 5 மைல்களுக்குள் அடங்கியிருக்கும் கிராமம், நாய்க்கனேரி என்ற கிராமம். ஆயிரக்கணக்கான மக்கள் வாழக்கூடிய இடமாக இருந்தும், அவர்களுக்குச் சாலைப் போக்குவரத்து வசதி இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நெடுஞ்சாலை, கிராம அபிவிருத்திப் பிரிவினர் மேற்பார்வையில் இருக்கிறது. அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட ஆசைப் படுகின்றேன்.

மேலும் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பூம்புகார் நகரத்திற்கு 8 லட்ச ரூபாய் இந்த துணை மதிப்பீட்டிலே ஒதுக்கியிருக்கின்றார்கள். தமிழர் கலாசாரம் வளர வேண்டுமென்றாலும், தமிழ்ப் பண்பாட்டை உயர்த்த வேண்டுமென்றாலும், தமிழர் பண்பாட்டிற்கு நாங்கள் எல்லாம் விரோதிகள் அல்ல என்று சொல்லிக்கொள்கின்றேன். இன்றைய சூழ்நிலையில் அவ்வளவு தொகை எதற்கு என்பதுதான் கேள்விக்குறியே தவிர வேறல்ல. இன்றைக்கு மக்களுக்குத் தேவையான வசதிகள், மனித அடிப்படைத் தேவைகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. வாழ வழியில்லை என்ற நிலை ஒரு பக்கம் இருக்க, அவர்களுக்கெல்லாம் வாழ்வு அளிக்கவேண்டிய பொறுப்பு மிகுந்த அரசு இன்றைக்கு இவ்வளவு தொகை ஒதுக்கியிருப்பது, தமிழ் வளர்ச்சிக்காக என்று இருந்தாலும், மனிதாபிமானத்தோடு பார்க்கும்போது, தேவையா என்ற கேள்வி எனக்கு இருந்துகொண்டிருக்கின்றது. இந்த நிலையைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகின்றேன்.

சுற்றுலா வளர்ச்சிக்காக இன்றைக்கு ஆடம்பரச் செலவு ரூ. 5 லட்சம். அவ்வளவு அதிகமான தொகை இங்கே இதற்காக ஒதுக்கியிருக்கின்றார்கள். சுற்றுலா வளர்ச்சிக்கு வெளிநாடுகளிலிருந்து பயணிகள் இங்கு வரும்போது அவர்களுக்குக் கவர்ச்சிகரமாக இருக்க வேண்டுமென்று தொகை ஒதுக்கப்பட்

[திரு. எல். பலராமன்] [1973 நவம்பர் 26

டிருக்கின்றது. இந்த நாட்டிலே இருக்கக்கூடியவர்களுக்கு வேண்டிய அடிப்படையான காரியங்களைச் செய்து கொடுத்த பின்னர், இந்தச் செலவுகளைச் செய்ய வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

பிச்சைக்கார நிலையங்களை பல இடங்களில் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். பிச்சைக்காரர் நல்வாழ்வு என்பது ஒரு நல்ல திட்டம். பத்து நிலையங்கள் என்பது அரசின் குறிக்கோளாக இருக்கின்றது. இப்போது 8 நிலையங்கள் இருந்தும், நாட்டிலே தொழுநோயுள்ளவர்கள் கணக்கையெல்லாம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்தத் தொழுநோயாளிகள் எங்கு பார்த்தாலும் பொது இடங்களில் இருப்பது அவர்களுக்கு அரசு தேவையானதைச் செய்யவில்லை என்பதைத்தான் காட்டுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழுநோயாளிகள் அந்த விடுதியில் இருப்பதற்குக்கூட அச்சப்படுகின்றார்கள். அதற்கு அவர்களுக்குப் போதிய உணவு அளிக்கப்படவில்லை என்ற காரணம் தான் கூறுகின்றார்கள். அவைகளையெல்லாம் நன்கு மாற்றியமைக்க வேண்டும். கிராமங்களிலே தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் அலைந்துகொண்டிருப்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், வீண் செலவுகள், அதிகமான செலவுகள் செய்துகொண்டு அந்தச் செலவினங்களுக்கெல்லாம் அனுமதி கோருவது நல்ல மரபல்ல. இன்றைக்கு நாடு ஏழ்மையான கட்டத்திலே இருந்துகொண்டிருக்கின்றது. நம் அரசு ஏழை எளிய மக்களை நல்ல முறையில் வாழ்விக்க வேண்டுமென்று பாடுபடக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றோம். இனி முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் தங்கள் சுற்றுப்பிரயாணங்கள் காரணமாக அதிகச் செலவினங்களை பொதுமக்களுக்கு உண்டாக்காது தவிர்க்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நாம் ஒழுங்காகத் திட்டங்களை நிறைவேற்றி எல்லா மக்களும் வாழ்வதற்கு வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

-30 திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,
.ப. தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டுள்ள துணை மானிய மதிப்பீட்டின் மீது என் கருத்துக்களைச் சொல்லுவதில் நான் மெத்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று தமிழக அரசானது சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களைக் கைதூக்கிவிடும் திட்டம் எது ஒன்றைக் கொண்டு வந்தாலும், அது பூம்புகார் நகரை அழகுற உருப்பெறச் செய்வதானாலும் சரி, வீர பாண்டிய கட்டபொம்மனுக்குச் சிலை வைத்து பண்டைய தமிழனின் வீரத்தை எடுத்துக்

1973 நவம்பர் 26] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

காட்டும் முயற்சியானாலும் சரி, அல்லது பாரிக்கு விழா எடுப்பதானாலும் சரி, 1967-க்கு முன்பு மங்கி மறைந்து போய்விட்ட தமிழனின் பெருமையை இன்று நமது தமிழக முதல்வர் அவர்கள் மீண்டும் தமிழகத்தில் கொண்டு வருவது, அவர்களுக்கே உள்ள கட்சிக் கண்ணோட்டத்தோடு எப்படியாவது இந்த அரசுக்கு மாசு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட மதிப்பிற்குரிய திரு. பலராமன் அவர்களுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி, அருவருப்பாக இருக்கலாம். ஆனால், மாண்புமிகு தலைவரவர்கள் மூலம் மாண்புமிகு எதிர்க்கட்சியினருக்குத் தெரிவித்துக் கொள்ளுவேன் : வட இந்தியாவிலே 'இவைகள் எல்லாம் ஊர்கள்தானா' என்று சொல்லத்தக்க இடங்களிலே பெரிய பெரிய நட்சத்திர மாளிகைகளைக் கட்டி, அங்கெல்லாம் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கொண்டு வந்து. 'இதுதான் அசோகன் வாழ்ந்த கடம், இதுதான் அக்பர் இருந்த கோட்டை' என்றெல்லாம் பழமையான சின்னங்களைக் காண்பித்து சரித்திரம் பேசுகின்றார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், நமது மதிப்பீட்டுக் குழுவின் சார்பிலே நாம் பாடலிபுத்திரம் சென்றிருந்தோம். அங்கெல்லாம் பண்டைய நாகரிகம், கலாச்சாரம் ஆகியவற்றின் சின்னங்களையெல்லாம் நமக்கு எடுத்துக் காண்பித்தார்கள். 'இதுதான் சந்திரகுப்தன் வாழ்ந்த இடம்' என்றெல்லாம் காண்பித்து, அங்கே நேபாளத்திலிருந்து வந்து தங்கியுள்ள இரண்டு பௌத்த பிட்சுக்களை காண்பித்து, நமக்கெல்லாம் அந்தப் பகுதியின் சரித்திரத்தை எடுத்துச் சொல்லுகின்றார்கள். நாம் அங்கே சென்றால், தங்குவதற்கு பிரம்மாண்டமான மாளிகைகளைக் கட்டிவைத்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட பண்டைய கலாச்சாரங்களை, பண்டைய நாகரீகங்களை எடுத்துச் சொல்லும் சின்னங்களைப் புதுப்பித்து இந்த நாட்டின் வரலாற்றை எடுத்துச் சொல்லுவதற்கு நாம் தவறிவிட்டால், இந்த அரசு தவறிவிட்டால், வருங்காலச் சந்ததி நிச்சயமாக நம்மை வாழ்த்தாது.

நமது நண்பர் திரு. பலராமன் அவர்கள் தயவுசெய்து பூம்புகாரைச் சென்று பார்த்தால், அவர்கள் இதுபற்றி தாம் தெரிவித்த கருத்துக்களை நிச்சயம் மாற்றிக்கொள்ளுவார்கள் என்றே கருதுகின்றேன். பூம்புகார் திறப்பு விழாவின்போது, அங்கே வந்திருந்த பல சட்டமன்ற உறுப்பினர்கள் பெருந்தன்மையோடு அதைப் புகழ்ந்து பேசினார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள்கூட அதைப்பற்றி மிகவும் பெருமையாகப் பேசினார்கள். அங்கேயுள்ள வழிகாட்டிகள், 'இந்தப் பகுதிக்கு ஒரு உணர்ச்சியினை, புத்துணர்ச்சியினை ஊட்டியிருக்கின்றார்கள், இதைத் திறந்து வைப்பதினால் தமிழர்களுடைய வீரம் மட்டுமில்லை, தமிழர்களுடைய பண்டை நாகரீகம், தன்மான உணர்ச்சி எல்லாம் இந்தப் பூம்புகார் பட்டினத்தின் வாயிலாகப்

பரவுகின்றது' என்று பெருமையாக எடுத்துச் சொன்னார்கள் அன்றைக்கு. திரு. பலராமன் அவர்கள் அங்கே போய்ப் பார்த்தால், அவர்கள் இதையெல்லாம் நன்கு தெரிந்துகொள்ளலாம். மிக்க கலை உணர்வு உடைய நமது டாக்டர் கலைஞர் அவர்கள் இதை உருவாக்கிவிட்டார்களே என்பதில் ஒருக்கால் கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால், நேரில் சென்று பார்த்தார்கள் என்றால், திரு. பலராமன் அவர்கள் அதைப் புகழ்வது மட்டுமில்லாமல், இது இன்னும் சிறப்பாக இருக்க வேண்டும் என்றுதான் சொல்லுவார்கள்.

முன்னேற்றக் கழக அரசு எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும், அது உலகத் தமிழ் மகாநாடானாலும் சரி, பூம்புகார் பட்டினமானாலும் சரி, எது ஒன்றிலும் குறை கண்டாக வேண்டும் என்ற நிலைதான் இருக்கின்றது. ஆனால், ஒன்றை ஒத்துக்கொண்டாக வேண்டும், இந்த அரசுக்கு மட்டுமல்ல எந்த அரசுக்கும் aesthetic sense இருந்தால்தான் அது செம்மையாக இருக்கும், அழகுற இருக்கும் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. பொதுவுடைமை நாடான சோவியத் நாட்டிலேகூட வெறும் சோற்றை மட்டும் நம்பிக்கொண்டிருக்கவில்லை. அவர்களும் ஒவ்வொன்றிலும் கலை உணர்ச்சியைக் காண விழைகின்றார்கள். அழகுற பல கட்டிடங்களைக் கட்டி அதிலே அழகைக் காண்கின்றார்கள். அவர்கள் கலை உணர்ச்சியினை பல நாடகங்கள் மூலமாகவும் கலைக் காட்சிகளின் மூலமாகவும் பிறருக்குக் காண்பிக்கின்றார்கள். அப்படிப்பட்ட கைங்கரியத்தை நமது மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் இங்கே துணிந்து செய்யட்டும். 'தூற்றுவோர் தூற்றட்டும், நாம் தொடர்ந்து இந்த நற்பணியினைச் செய்வோம்' என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

மேலும் ஒரு கருத்தினை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இன்று மத்திய-மாநில அரசுகளின் உறவு முறைபற்றி மிகக் கடுமையாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம் நாம். நாம் அண்டை மாநிலமான கேரளத்திற்கு நம்மிடம் உபரியாக உள்ள அரிசியைக் கொடுக்கிறோம். அதே நேரத்தில் அவர்களிடம் உபரியாக உள்ள மின் சக்தியை நாம் பெறுகிறோம். வீட்டுக்கு வீடு பொருள்களை வாங்கிக்கொள்ளுவது போல பண்டமாற்று முறையில், மாநிலத்திற்கு மாநிலம் நமக்கு இருப்பதை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களிடம் உள்ளதை நாம் பெறுகின்றோம். இது மிகச் சாதாரணமாக உள்ள பிரச்சினை. ஆனால், இதிலே மத்திய அரசானது தனக்குள்ள அதிகாரத்தை இதிலே காண்பிக்க வந்திருப்பதாவது உண்மையிலேயே வேதனைக்குரிய ஒன்றாகும். தமிழ்நாடு இப்படி அண்டை மாநிலத்திற்கு உணவினைக் கொடுத்துவிட்டால், தமிழகத்திற்குத் தனிச் சிறப்பு வந்துவிடும் தமிழகம் பெருமை பெற்றுவிடும், தமிழகத்தின் பெருமை இந்தியத் துணைக்

கண்டத்தில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பரவும், இப்படிப்பட்ட பெருமைக்கெல்லாம் உரியது இன்று தமிழகத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று அனைத்துலக மக்களும் எண்ணத் தலைப்பட்டுவிடுவார்கள் என்ற எண்ணத்தில், அப்படிப்பட்ட பெருமை ஏற்படாதவாறு இப்போது இந்தியப் பேரரசு குறுக்கிட்டு, அண்டை மாநிலத்திற்கு உணவினைக் கொடுத்தாலும் எங்கள் மூலம்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த சந்தர்ப்பத்திலே நமது மதிப்புமிக்க முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன், துணிந்து நமது மாநில அரசுக்கும் கேரள அரசுக்கும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள வேண்டும். எப்படி காவிரி நீரைப் பங்கு கொள்வதிலே நமது மாநிலத்திற்கும் மைசூருக்கும் இடையிலே ஒரு ஒப்பந்தம் இருந்ததோ அதுபோன்று நமக்கும் கேரளத்திற்கும் இடையிலே ஒரு நீண்ட கால ஒப்பந்தத்தை, இருபது ஆண்டுகாலத்திற்கு அல்லது இருபத்தைந்து ஆண்டு காலத்திற்கு நமது உணவினை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களிடம் உள்ள மின் சக்தியை நாம் பெற்றுக்கொள்ளுவதற்கு ஏற்ப ஒரு ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ள வேண்டும். இதன் காரணமாக மத்திய அரசு ஏதாவது காரணம் காண்பித்து தமிழகத்தை ஏதாவது நிர்ப்பந்தத்திற்குக் கொண்டுவரக்கூடும், அல்லது தொந்தரவிற்குள்ளாக்கக்கூடும் என்று எண்ணினால், நமது மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவேன், நாங்கள் எடுக்கும் எந்த முடிவையும் நாட்டு மக்கள் தலை வணங்கி ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றார்கள்.

இன்னும் மத்திய அரசுபற்றிச் சொல்லும்போது, மேலும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், தருமபுரி மாவட்டம் ஆக இரண்டும் மிகவும் பின்தங்கிய பிரதேசம் என்று அறிவித்து, இந்த மாவட்டங்களிலே சாலைகள் அமைப்பது, இருக்கும் சாலைகளைச் செப்பனிடுவது போன்ற பல்வேறு நிர்மாணத் திட்டங்களை மேற்கொள்ளுவது போன்றவற்றுக்கு இரண்டு கோடி ரூபாய்த் திட்டத்தைத் தயாரிக்கும்படி மத்திய அரசில் சொன்னார்கள். அதையொட்டி நமது அரசிலும் பல்வேறு நிர்மாணத் திட்டங்களை உருவாக்கி அனுப்பிவைத்தார்கள். ஆனால், திடீரென்று அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்படும் என்று சொன்ன பணத்தைக் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். இது போன்று வறட்சி நிவாரண நிதியின் கீழ் இன்னும் கொடுக்க ஒப்புக்கொண்ட தொகைகளையும் மத்திய அரசினர் திடீரென்று கொடுக்காமல் நிறுத்தியிருக்கின்றார்கள். இன்னும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மனித சக்தியினைப் பயன்படுத்தி, 'க்ராஷ் ப்ரோக்ராம்' என்ற அடிப்படையில் சில சிறு திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு முன் வந்தது. அதுவும் இப்போது நிறுத்தப்

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1973 நவம்பர் 26

பட்டுவிட்டது. இப்படி பல சிறு சிறு திட்டங்களுக்கு மத்திய அரசு முதலில் பச்சைக் கொடி காட்டிவிட்டு, ஏதோ மத்திய அரசு மாநில அரசினைப் பரிவுடன் பார்க்கின்றது என்ற எண்ணம் ஏற்படத் தக்க விதத்தில் முதலில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துவிட்டு, பின்னர் அவை கிடையாது என்று மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்கின்றது. தலைநகருக்குப் பக்கத்திலுள்ள உத்திரப் பிரதேசம், பீஹார், மகாராஷ்டிரம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களுக்கு இந்த வகையில் அதிக நிதி உதவிகளை அளித்து, நமது தமிழகம் புறக்கணிக்கத்தக்க நிலையில் இருக்கும்போது, மதிப்பிற்குரிய மாற்றுக் கட்சியினர் எந்தப் போராட்டத்திற்கு நாம் முனைப்பாக இருக்கலாம், யாரைத் தூண்டி விட்டு நமது அரசுக்கு நிர்ப்பந்தத்தை உருவாக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பதை விடுத்து, இதில் கொஞ்சம் கவனம் செலுத்தியாக வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல, போராட்டங்களைத் தேடி அலைவதில் முனைப்பாக இருப்பதை விடுத்து, மத்திய அரசு இந்த மாநிலத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளைத் தடுத்து நிறுத்தும் போக்கினைத் தவிர்த்து, நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தை இந்த மாமன்றத்தின் மூலம் நிலை நாட்டிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒரு குற்றச் சாட்டைத் துணிந்து சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன், தமிழகத்திலே எங்கோ ஏதோ ஒரு மூலை முடுக்கிலே தவறு ஏதாவது நடந்துவிட்டால், அதை வைத்து இந்த அரசின் மீது எப்படிக் களங்கம் கற்பிக்கலாம் என்று இன்றைக்குப் பல அரசியல் கட்சிகள் முன்வந்திருக்கின்றன. இங்கே ஏதோ பல அநியாயங்கள் நடந்துவிட்டதுபோலப் பேசும் அந்த மதிப்பிற்குரிய நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்ளுவேன். மத்திய அரசு நடத்தும் உணவுக் கார்ப்போரேஷன் நிறுவனத்தில் சுமார் ரூ. 26 கோடியளவிற்கு பயங்கரமான ஊழல்கள், கொள்ளைகள் நடைபெற்றிருக்கின்றன. பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய நேர்ப் பார்வையிலுள்ள அகில இந்திய உணவுக் கார்ப்போரேஷனில் ரூ. 26 கோடிக்குக் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கின்றது. இந்த விஷயத்தில் இதுவரையில் யாருமே எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. மாற்றுக் கட்சியினர் இதுபற்றிக் கவலை தெரிவித்தார்களா, இங்கேயுள்ள சிறு சிறு பிரச்சினைகளிலே இவ்வளவு ஆர்வம் காண்பிக்கும் அவர்கள் இவற்றில் கவனம் செலுத்தினார்களா என்று தெரியவில்லை. எனவே அவர்கள் இவற்றையும் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, எனது மாவட்டத்தையொட்டிய சொந்தப் பிரச்சினைகள் இரண்டைப்பற்றிப் பேச அனுமதி வேண்டுகிறேன்.

1973 நவம்பர் 26]

மாண்புமிகு மேலவைத் தலைவர்] இதுவரையில் பேசியது என்ன? பி.ப. 4-40

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அனுமதியோடு என்னுடைய சொந்தப் பகுதியிலுள்ள இரண்டொரு பிரச்சினைகள் பற்றிப் பேச விழைகிறேன். அதற்கு அனுமதி வேண்டுகிறேன்.

முகவை மாவட்டத்தில் அருப்புக்கோட்டை தாலுகாவில் நீண்ட காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற, அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பயன்படுகிற சென்னம்பட்டி கால்வாய்த் திட்டம் இன்றையதினம் அரசின் பரிசிலனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இது அந்தப் பகுதி மக்களால் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மெத்த பெருமையோடு, பூரிப்போடு சொல்லிக் கொள்கிறேன். அருப்புக்கோட்டை, முதுகளத்தூர் பகுதிகளின் பின்தங்கிய மக்களின் சார்பாக, அங்கே வாழ்கிற பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பாக என்னுடைய பாராட்டையும், நன்றியையும் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசால் பல்வேறு திட்டங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன, பல்வேறு புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கருணை உள்ளத்தோடு இந்த ஒரு காரியத்தை—சென்னம்பட்டி கால்வாய்த் திட்டத்தை—நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

* திரு. சி. ஆர். கோலப்பா: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டு துணை மானியக் கோரிக்கை அறிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1973-74-ம் ஆண்டில், 27 கோரிக்கைகளுக்காக ஏறக்குறைய 751 லட்ச ரூபாய் ஒதுக்கி, பலதரப்பட்ட மக்களுடைய நன்மைக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருப்பது குறித்து உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக பிற்பட்ட மக்களுக்காக இந்த 27 கோரிக்கைகளில் பொருத்தமான பணங்களை ஒதுக்கி நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். உள்ளபடியே இதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக 751 லட்சம் ரூபாயில் மிகவும் பிற்பட்ட மக்களுக்காக 5 லட்ச ரூபாய் ஒதுக்கி, மிகவும் பின் தங்கிய சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்துபவர்களுக்கும் கருவிகள் கொடுக்க வேண்டுமென்ற நல்ல திட்டத்தை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். உள்ளபடியே இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும், அமைச்சரவைக்கும், நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்

[திரு. சி. ஆர். கோலப்பா] [1973 நவம்பர் 26

இந்த சமுதாயத்தின் சார்பாக எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் இங்கே ஒதுக்கும் பணம் உள்ளபடியே அந்த மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். பல நல்ல திட்டங்கள் அடித் தளத்தில் இருக்கிற மக்களுக்காகத் திட்டப்பட்டு, அவற்றின் பலன் அம்மக்களுக்குப் போய்ச் சேராமலிருப்பது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. உள்ளபடியே, தொழில் கருவிகளை மாவட்ட நல அதிகாரிகள் வழங்கும்போது, அவை சரியான முறையில் வழங்கப்படுவதில்லை என்ற குறைபாடுகள் அதிகமாக இருக்கின்றன. இவைகளைப்பற்றி நல்ல முறையிலே நமது அமைச்சரவை தீர்மானித்து, அவற்றை அவர்களுக்குக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்ட மக்கள் நலனுக்காக கல்லூரி வசதியுடன் சலுகைகளையும் நிறைய இங்கே அளித்திருக்கிறார்கள். உள்ளபடியே அவைகளை வரவேற்று இந்த அரசுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் கருவிகள் வழங்கும் தேதியைப் பொறுத்தவரை, பல இடங்களில் தவறான முறைகளில் நடந்து கொண்டிருக்கின்றது. அவைகளைப் பரிசீலனை செய்து நல்ல முறையில் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல கல்விச் சம்பளச் சலுகை அளிப்பதில் கூட சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு நல்ல சலுகையை அளித்திருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டி உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய எதிர்க் கட்சி அருமை நண்பர் திரு. பலராமன் அவர்கள் பூம்புகார் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியைப் பற்றி தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். பொதுவாக, நான் சோவியத்திற்குச் சென்றிருந்த போது, லெனின் பிறந்து வளர்ந்த வீடு, அவர் புதைக்கப்பட்டிருக்கிற இடத்தைக் கூட மிக அழகாகவும், ஒப்பனையாகவும் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து வைத்திருக்கிறார்கள். மிக முற்போக்கான நாடு, சின்னங்கள், சடங்குகள் என்ற தத்துவங்களிலே நம்பிக்கை இல்லாத நாடு என்றாலும் கூட, ஓர் இனம் அதனுடைய கடந்த கால வரலாற்றுப் பெருமைகளும் இலக்கிய மாண்புகளும் பற்றி நினைத்தால் தான் அந்த இனத்திற்கு திரும்பி இந்த திசை நோக்கிச் செல்லவேண்டுமென்ற உந்து சக்தி உணர்வு ஏற்படும் என்பதை அன்புகூர்ந்து நம்முடைய நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் அவற்றை நினைவூட்டுவது என்பது இவ்வளவு பெரிய விழிப்புடைய சமுதாயமான ஒன்று இன்று இவ்வளவு பெரிய தொய்வுக்கு ஏன் வந்தது என்பதை

1973 நவம்பர் 26] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

எண்ணிப் பார்க்கவும், அவைகளின் மூலமாக அந்தப் புகழ் படைத்த சமுதாயத்தை, வறுமையும், ஏழ்மையும் இல்லாத ஒரு புதிய சமுதாயத்தை, கலைச் செல்வம் அமைந்த ஒரு சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்ற ஒரு உணர்வு, ஆர்வம் தோன்றவேண்டுமென்பதால் தான் இப்போது நம்முடைய சங்க கால வரலாறுகளை, காப்பிய வரலாறுகளை யெல்லாம் புதுப்பிக்கின்ற நிகழ்ச்சிகளைச் செய்கிறார்கள். அவைகளை நாம் வீண் என்று கருத முடியாது. மனிதனுக்கு வயிற்றுக்குச் சோறும் தேவை தான். அதை விட அவனுடைய ஆன்மாவிற்கு, உயிருக்கு களிப்பு, மகிழ்ச்சி தேவை தான். சோறு மட்டும் இருப்பதனாலே மனிதன் வளர்ந்து விடுவதில்லை. நாகரீகம் அடைந்துவிடுவதில்லை. எனவே சோறு போடுகிற காலத்திலேயே நாகரீகத்தையும், கல்வியையும் உடனுக்குடனே அளிக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருப்பதால், அன்பு கூர்ந்து இந்த மாதிரித் துறைகளில் நாம் அனைவருமே நம் சமுதாயத்தைத் தரமான வகையில் பண்பாடு அடையச் செய்வதற்கு, இந்த மாதிரி முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். அதைப் போலவேதான் பறம்பு மலைப் பாரி விழா. நம்முடைய அரசு இன்னும் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்து, சங்க கால அரசர்கள், வள்ளல்கள், புலவர்கள் வாழ்ந்த இடங்களில், நாம் அனைவருக்கும் நினைவுச் சின்னங்களை எழுப்புவதற்கு உரிய சக்தி இல்லாதிருப்பதனால், ஆங்காங்கேயிருக்கிற பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்குக் கூட அவர்களுடைய பெயர்களை இடுவதை அரசு ஆலோசனை செய்து பார்க்கலாம். தர்மபுரி மாவட்டத்தில் ஔவைப் பிராட்டியார் வாழ்ந்திருக்கிறார். வள்ளல் அதியமான் வாழ்ந்திருக்கிறான். அரசுக்குக் கூட அங்கிருந்து கோரிக்கை வந்திருக்கிறது. அங்கேயிருக்கிற ஆடவர் உயர் நிலைப் பள்ளிக்கு அதியமான் உயர் நிலைப் பள்ளி என்று பெயர் வைக்க வேண்டுமென்றும், ஔவை மகளிர் பள்ளி என்று பெயர் வைக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றால மலைச் சாரலில் ஆய் அண்டிரன் என்ற வள்ளல் இருந்திருக்கிறான். அவன் மிகப் பெருமை உடையவன். அங்கேயுள்ள உயர்நிலைப் பள்ளிக்கு ஆய் அண்டிரன் உயர் நிலைப் பள்ளி என்று பெயர் வைக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது. நம்முடைய முன்னோர்கள் எப்படியெல்லாம் வாழ்ந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவும், அந்தப் பெருமைகளை நாம் இழந்துவிடாமல் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற சிந்தனையை அடுத்த தலை முறைக்குத் தருவதற்கு இந்த நினைவுகள் பெரிதும் பயன்படும். அது போலத்தான் இப்போது பறம்பு மலைக் காட்டை அபிவிருத்தி செய்கிற பணியை நாம் மேற்கொள்கிறோம். பறம்பு மலையை, மலையாக இருப்பதைத்தான் மாற்ற வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் ஊர்ப் பெயரை மாற்ற வேண்டுமென்பதைப் போல கருத்து அரசுக்கு

இருப்பதாகத் தெரிகிறது. அரசினுடைய வருவாய்த் துறை அலுவலகக் கணக்கில் மலைக்கு பறம்பு மலை என்று பெயரிட்டு, அதை நல்ல வளமான காடாக வளர்க்க வேண்டும். நம்முடைய காட்டுத் துறை அமைச்சரவர்கள் இருக்கிறார்கள். அன்பு கூர்ந்து அவர்கள் ஒரு தடவை அங்கே நேரடியாகப் போய்ப் பார்த்து ஆவன செய்ய வேண்டும். அங்கே காடுகள் வளர்க்கிற திட்டம் செம்மையாக நடைபெறவில்லை, வெறிச்சோடியாக இருக்கிறது என்று மக்கள் கருதுகிறார்கள். எனக்கும் அப்படித் தோன்றுகிறது. இதை நம் அரசு கவனிக்க வேண்டும். அங்கே கடந்த 5 ஆண்டுகளாக பாரி விழா நடைபெற்று வருகிறது. இடம் பறம்பு மலையாக இருப்பதால், அதைத் திட்டமிட்டு காடாக வளர்ப்பதன் மூலம் திருப்பத்தூர் தாலுகாவைப் பொறுத்த வரையில், வளமான மழை பொழியவும், வளம் பெருகவும் வாய்ப்பு ஏற்படும். இதையும் நம்முடைய அரசு மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டும். இன்னும் கூடத் தெளிவாகச் சொல்வதானால், பூம்புகாரில் பெரிய தமிழ் பண்பாட்டுக் கலைகளுடைய இருப்பிடமாக, பல்கலைக் கழகம் போன்ற ஒன்றை அமைத்து சோழர்களுடைய தலைநகரமாக இருந்த அங்கு இன்றைக்கு தமிழ் இசை, தமிழ்க் கலை, ஓவியக் கலை, சிற்பக் கலை போன்றவைகளையெல்லாம் ஏற்படுத்த வேண்டும். நம்முடைய சமுதாயம் காலப்போக்கில் இவைகளை இழந்து விட்டதுபோல் தோன்றுகிறது. சிறிது காலமாக நம் அரசு சித்த வைத்தியத்திற்குக் கொஞ்சம் ஊக்கம் கொடுக்கிறது. ஆனால் மக்கள் சித்த வைத்திய மருந்துகளில் நம்பிக்கை இல்லாமல் ஊசி, மாத்திரை இவைகளில்தான் அதிக கவனம் செலுத்துகிறார்கள். இவைகளையெல்லாம் நம்முடைய சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னால், இந்த முயற்சிகள் தேவையானவை என்பதைச் சொல்லிக்கொள்வேன். இதிலே கருத்து வேறுபாடின்றி அனைத்துக் கட்சிகளும், சில பொதுவான பண்புகளை ஒருமித்து ஒத்துக்கொண்டால்தான், சிறந்த பண்புகளை நாட்டிலே வளர்க்க முடியும். அந்த வகையில் நம் அரசு ஈடுபடுகிறது என்பதற்காக அதைப் பாராட்டுகிறேன். நம்முடைய நாட்டிலே மருத்துவச் செலவைப் பொறுத்த வரையில், மிக அதிகமான விழுக்காடு செலவு ஏற்படுகிறது. அதுவும் குறிப்பாக நகர மருத்துவ மனைகளிலே அதிக விழுக்காடு செலவு ஆகிவிடுகிறது. கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்கு எந்த மருத்துவ வசதிகளும் சென்று எட்டுவதில்லை. நம்முடைய டாக்டர் வெங்கடசாமி நாயுடு அவர்கள் நம்முடைய மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரவர்களுக்கு சுகாதார வசதிப் பெருக்கத் திட்டம் சம்பந்தமாக ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், மருத்துவச் செலவைக் கணிசமாகக் குறைத்து நோய் வாராமலேயே மக்களைப் பாதுகாக்கின்ற பணியை அதிகமாகச்

செய்யலாம் என்று அரசுக்கு அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அரசு இதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு சுகாதார வாழ்க்கை கிராமப்புறங்களில் கிடைக்கும்படி செய்தால், மருத்துவச் செலவைக் கணிசமாகக் குறைக்கலாம். இந்த மாதிரித் துறையிலும் நாம் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும். இந்தத் துணை மதிப்பீட்டை வரவேற்று, நமது பழைய பண்புகளைப் பேணிப் பாதுகாக்கின்ற உணர்வு நம் சமுதாயத்திற்குத் தேவை, அந்த வகையில் அரசு செய்கிற முயற்சிகளுக்கு கட்சி வேறுபாடின்றி ஒருமித்த ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

* திரு. ஏ. பி. ஜனார்த்தனம்: தலைவரவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டுத் திட்டத்தில் பூம்புகார் திட்டத்தைப் பற்றி மன நிறைவு இருப்பதாக அடிகளார் பி.ப
அவர்கள் குறிப்பிட்டார்கள். இயந்திர உற்பத்தியிலும், தொழிலிலும் வேறு 4–50
நிலைமைகளிலும், பொருளீட்டும் விதத்திலும் நாம் மற்ற நாடுகளைப் போல் முடியாவிட்டாலும் நம்முடைய பண்பு, நம்முடைய கலை, நம்முடைய நாகரீகம், நம்முடைய மொழி, இவைகளிலே நாம் உலகுக்கே வழி காட்டியாக இருக்கிறோம் என்று மார் தட்டி வந்திருக்கிறோம். எந்த வகையிலே எடுத்துக்கொண்டாலும், நாம் மிகச் சிறப்பாக வாழ்ந்தோம் என்பதற்கு சேரன் செங்குட்டுவன் காலம் முதற்கொண்டு இன்றையதினம் வரையில் நாம் பல சான்றுகளைப் பெற்று வந்திருக்கிறோம். அத்தகைய வரலாற்றில், இலக்கியத்தில் தோய்ந்து வந்த காரணத்தால்தான், நாம் வள்ளுவர் வழி நின்று மற்ற இடங்களை விட நம்முடைய பண்பு, நம்முடைய வாழ்க்கை முறை செம்மையாக அமைந்திருக்கின்றன என்று குறிப்பிடுகிறேன். அமெரிக்காவில் வட அமெரிக்கப் பகுதியில் இருக்கின்ற மெக்சிக்கோ தலைசிறந்து விளங்குகிறது என்ற காரணத்தால், அவர்கள், நிமிர்ந்து அமெரிக்கர்களைப் பார்த்து, 'நாங்கள் பண்டைய நாகரீகம் படைத்தவர்கள்' என்று சொல்லிக் கொள்கிறார்கள். உலகத்தின் பல பகுதிகளில் பார்த்தால், அவர்களுடைய பழமையைத் தோண்டியெடுத்து, அவர்களுடைய பழைய ஆதாரங்களை எடுத்துக்காட்டி, நாங்கள் இப்படி இருந்தவர்கள் என்று ஒவ்வொருவராக எடுத்துக் காட்டுகிறார்கள். எனவேதான் நாம் கடந்த சில ஆண்டுகளாக தாங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பி தங்களை மறந்திருந்த மக்களைத் தட்டி எழுப்பி மூட்டை தூக்கிப் பரம்பரை என்று மாறிவிட்ட ஒரு கூட்டத்தாரைத் தட்டி எழுப்பி அவர்களையெல்லாம் மிகச் சாதாரணமாகப் பயன்படுத்தி வருகிறோம். ஆகையினால்தான் வேறு மாநிலங்களை விட தமிழகத்தில் ஒரு பண்பு இருக்கிறது. இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிகள் உள்பட சொல்கிறேன், மற்ற சராசரி மாநிலங்களில் இருக்கின்ற எதிர்க் கட்சிகளை

விட, அவர்களுக்கும் அதிகப் பண்பு இருக்கிறது என்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். இதுவே லண்டனாக இருந்தால், இதுவே கான்பூராக இருந்தால், பம்பாயாக இருந்தால், அங்கும் மற்ற இடங்களிலும் என்ன நடக்கிறது என்பதையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில், தமிழகத்தில் ஓரளவு அமைதி இருக்கிறது என்றால், ஓரளவு நெறி இருக்கிறது என்றால், இவ்வளவும் அண்மைக் காலத்தில் கேடு படுத்தப்பட்ட பிறகும் கூட நாம் தலை நிமிர்ந்து நடக்கிறோம் என்றால், இன்னும் பழைய வாசனை நமக்குப் போகவில்லை, அந்தப் பழைய பண்பு போகவில்லை என்பதைக் காட்டுகிறது. மாற்றுக் கட்சித் தோழர்கள் நல்ல மாற்றுத் திட்டங்களைத் தந்தால், நாம் என்றைக்குமே வரவேற்கத் தயாராக இருக்கிறோம். அவர்களுடைய தியாகங்களை நாம் மதிக்கிறோம், அவர்களுடைய வரலாற்றை மதிக்கிறோம், அவர்களுடைய பண்பாட்டை மதிக்கிறோம். அவர்களுடைய நாட்டிய எளிமையை மதிக்கிறோம். இவைகளில் எல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்கு வழி காட்டியிருக்கிறார்கள், ஒரு மாற்றுத் திட்டத்தைத் தாருங்கள். ஆனால் அரசியலைத் தெருக்களுக்கு எடுத்துச்சென்று நாளுக்கு நாள் ஒரு பரபரப்பு என்ற நிலைமைக்கு மாற்றி விட்டால், இங்கு யாருமே இருக்க முடியாது, எந்த அமைப்பும் இருக்க முடியாது, எந்தத் திட்டமும் இருக்க முடியாது. எனவேதான் இங்கே நாம் உயர்ந்த அரசியலைக் கடைப்பிடிக்க, நல்ல பண்பாட்டைக் கடைப்பிடிக்க பாராளுமன்ற மரபுகளை நிலைநாட்ட, நிச்சயமாக ஒவ்வொருவரும் இந்தப் பழைய நினைவுகளை வைத்து தொல்காப்பிய காலம் முதற்கொண்டு இன்றைய தினம் வரையில் நாம் எந்தெந்த வகையில் உயர்ந்த சிந்தனையில் வளர்ந்திருக்கிறோமோ அதை மேலும் வளர்த்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்திலே வெண்டல் வில்கியைப்பற்றிப் பேசுகிறார்கள். ஓர் உலகத் தத்துவத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் அந்தக் காலத்து, சங்க காலத்துப் புலவன்தான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று எழுதியிருக்கிறான். ஒவ்வொரு துறையையும் எடுத்துக் கொண்டால், உலகத்திலே உயர்ந்த தத்துவத்தை எடுத்துச் சொல்கின்றபோது, ஒவ்வொரு தத்துவத்திற்கும் பின்னணியில் அந்தக் காலத்துத் தமிழன் இருந்திருக்கிறான். இந்த மண் நல்ல சிந்தனையை உருவாக்கிய மண், இந்த மண் நல்ல பாரம்பரியத்தை உருவாக்கிய மண், இந்த மண் நல்ல மரபுகளை உருவாக்கிய மண். இந்த மண்ணுக்குரியவன் மற்றவர்களைப் போல் உயர்ந்த நிலைமைக்கு வர வேண்டுமென்று பாடுபடுகிறோம். அந்த முயற்சியில் நம்மை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறோம். இந்த நாட்டுத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உழைக்கவேண்டும். அவர்களைக் கைதூக்கிவிட வேண்டும் என்பதற்காகத்தான் பல லேபில்களில், பல தலைமையில் இன்று

டாக்டர் கலைஞர் தலைமை வரையில் நாம் இயங்கிக்கொண்டு பாடுபட்டு வருகிறோம். இது நாலாம்தர அரசுதான் * எனவே கீழ் மட்டத்தில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இந்த அரசு செய்திருக்கின்ற நன்மைகளுக்காகவும் இந்தத் துணை மதிப்பீட்டில் தரப்பட்டிருக்கின்ற நல்ல திட்டங்களுக்காகவும் நன்றி தெரிவித்து, அவைகளை வரவேற்று, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எனக்குப் பின்னால், துணைத் தலைவர் தலைமை வகிக்கவேண்டும். அவர் இப்பொழுது இங்கு இல்லை. அவர் இல்லாவிட்டால், நான்கு மாற்றுத் தலைவர்களில் ஒருவர் தலைமை வகிக்கவேண்டும். அந்த நான்கு உறுப்பினர்களும் இப்போது அவையில் இல்லை. ஆகையினால் விதியைப் படித்துக் காட்டிவிட்டு, வேறு ஒருவரை தலைமை வகிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

"…. the Chairman may nominate from amongst the members of the Council a panel of not more than four Vice-Chairmen, any one of whom may preside over the Council in the absence of the Chairman and the Deputy Chairman when so requested by the Chairman or in his absence by the Deputy Chairman or in his absence also, by the Vice-Chairman presiding. In the event of the absence of all the other members of the panel of Vice-Chairmen, the person presiding may request any member of the House to preside over the Council."

உறுப்பினர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் தலைமை வகிப்பார்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு நம் முன் வைத்திருக்கக்கூடிய துணை மானியக் கோரிக்கை அறிக்கையை வரவேற்று சில கருத்துக்களை மட்டும் நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறேன்.

மத்திய சர்க்காருடைய உதவியின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய திட்டத்தின்கீழ் சமீபத்தில் சுமார் 6,000 ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இன்னும் சில நாட்களில் சுமார் 10,000 ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கப்போவதாக முதலமைச்சர் அவர்களுடைய குறிப்பில் பார்த்து நாம் மிக மகிழ்ச்சியடைகிறோம். அதைச் செயல்படுத்துகின்ற முறையில் சில புதிய விதிகளை உருவாக்க வேண்டுமென்று

* Expunged as ordered by the Chair.

நான் கல்வி அமைச்சர் மூலமாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற மாதம் ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்த நேரத்தில் மாவட்டக் கல்வி இலாகா அலுவலர்கள் முறை தவறி சில பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டுமென்று விரும்புகிறேன். பொதுவாக சர்க்காருடைய பள்ளிகளுக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக நம்பர் வந்தால்தான் தேர்வில் கலந்துகொள்ள முடியும் என்று விதி இருக்கிறது. அந்த விதியைப் பின்பற்றித்தான் டி.ஈ.ஓ. அலுவலகங்களில் தேர்வு முறை நடைபெற்று ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பது என்பது முறையானது. இப்பொழுது ஆங்காங்கே டி.ஈ.ஓ-க்கள் அதிகமாகப் போடப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது நம்முடைய அரசாங்கம் இந்தச் சலுகையைத் திடீரென்று தனியார் பள்ளிகளுக்கும் அளித்துவர முடிவு செய்திருக்கிறார்கள். அந்த நிலைமையில் சர்க்கார் பள்ளிகளில் வேலை வாய்ப்புக் கொடுக்கின்றபோது, வேலை வாய்ப்பு தேடிக்கொடுக்கும் அலுவலகத்தின் மூலமாகத்தான் வரவேண்டுமென்ற விதி பின்பற்றப்பட்டு வருகிறது. அதே முறையை தனியார் பள்ளிகள் பின்பற்றுவதில்லை என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சாதாரணமாக சில பள்ளிகளில் ஆசிரியர் பணியை ரூ. 5,000, ரூ. 6,000 என்று ஏலம் போட்டுக் கேட்பதாக நாம் பத்திரிகையில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். தனியார் பள்ளிகளுக்கு இவ்வளவு சலுகைகள் அளிப்பதன் மூலமாக—அவைகளில் நேரடியாக சர்க்கார் தலையிட முடியாததால்—தனக்கு வேண்டியவர்களுக்குக் கொடுப்பது அல்லது பள்ளிக்கூட நிர்வாகத்திற்குப் பணம் சேர்ப்பது என்ற முறையில் ஆசிரியர் பணிகளை ஏலம் போட்டுக்கொள்வது போன்றது நடந்துகொண்டிருப்பதுதான் நமக்கு மிகுந்த கவலையாக இருக்கிறது. அதை உடனடியாக நிறுத்த—பள்ளிகளை தேசியமயமாக்க முடியாவிட்டாலும், அப்படி ஆக்குவதற்கு காலதாமதம் ஏற்பட்டாலும்—ஆசிரியர் பதவிகளை ஒதுக்குகின்றபோது, அரசாங்கப் பள்ளிகளுக்கு 75 சதவீதம் ஒதுக்கும்படியாகச் சட்டத்தைக் கல்வி அமைச்சர் அவர்கள் உடனடியாக இயற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு யூனியனுக்கு இரண்டு ஆசிரியர் வீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதே நேரத்திலே தனியார் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு 5 ஆசிரியர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த முறையை நாம் விரைவிலே மாற்றியமைக்க வேண்டும். என்னுடைய குற்றச்சாட்டு சரியாக இருக்குமானால், கோவில்பட்டியில் ஒரு டி.இ.ஓ. லீவிலே இருந்தார். அவர் லீவிலே இருந்த நேரம் பார்த்து, சர்க்கார் ஆயிரம் ஆயிரம் ஆசிரியர்களுக்கு சாங்ஷன் வழங்கியது. அப்படி வழங்கப்பட்ட நேரத்தில் கோவில்பட்டி தாலு

காவிலே லீவிலே இருந்த ஒரு டி.இ.ஓ. உடனே லீவை சரண்டர் செய்துவிட்டு வேலையிலே சேர்ந்து, தனியார் பள்ளிகளுக்கு அதிகமாகச் சலுகைகளை வழங்கிவிட்டு, மறுபடியும் லீவிலே போய்விட்டார். இதைப்பற்றி மிக விரைவிலே விசாரணை செய்யவேண்டும். இப்படிப்பட்ட நியாய விரோதமான சலுகைகளை அளிப்பதற்கு நாம் உடந்தையாக இருக்கக்கூடாது என்று நம்முடைய அரசாங்கத்தை மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசாங்கம் கல்வி இலாகாவின் மூலம் நிறைய செல்வாக்கையும், நிறைய வசதிகளையும் உருவாக்கிக்கொண்டிருக்கிறது. பள்ளிக்கூடம் இல்லாத கிராமங்களே இல்லை என்ற பெயரைப் பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட நல்ல பெயரைக் கெடுக்கின்ற தனியார் பள்ளிகளை விரைவிலே தேசியமயமாக்கி விட்டால், இந்தக் குறைபாடு இருக்காது என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டுமென்று விரும்புகின்றேன்.

பூம்புகார் பற்றி எல்லோரும் சொன்னார்கள். அதன் இலக்கிய முக்கியத்துவத்தைப்பற்றி நம்முடைய அடிகளார் அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். நான் குறிப்பிட விரும்புவது நானும் சில நண்பர்களும் பி.ப.
பூம்புகாருக்குச் சென்றபோது, அங்கே அவசரம் அவசரமாகப் பார்த்துவிட்டுத் 5-00
திரும்பவேண்டும் என்ற சூழ்நிலை இருந்ததே தவிர, தங்குவதற்கு வசதி இல்லை. நமது அரசாங்கம் இப்பொழுது சுற்றுலாத் துறையை விரிவாக்கிக் கொண்டு வருகிறது. பூம்புகார் போன்ற இடங்களில் அரசாங்கத்தின் சார்பிலே தங்கும் விடுதிகளை விரைவிலே கட்டவேண்டும்.

நண்பர் திரு. பலராமன் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். வட ஆற்காடு மாவட்டத்திற்கும் இலக்கியத்திற்கும் வெகுதூரம் என்றாலும், சரித்திரத்தில் வட ஆற்காடு மாவட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, நம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எங்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்கும் இலக்கியத்திற்கும் ஏதோ தொடர்பே இல்லையென்ற ஒரு குற்றச்சாட்டினையும், பழிச்சொல்லையும் சுமத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தொடர்பே இல்லை என்று சொல்லவில்லை, தொலைவைத்தான் குறிப்பிட்டார்கள்.

திரு. எல். பலராமன்: அந்த நிலைக்கு எங்கள் மாவட்டம் பின் தங்கியதில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு, எங்கள் மாவட்டம் வீரத்துடன் இலக்கிய வளமும் பெற்றது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[1973 நவம்பர் 26

திரு. எஸ். எஸ். தென்னரசு : வட ஆற்காடு மாவட்டம், பிற்காலத்திலே தான், வெள்ளைக்காரர்களுடன் போராடிய ஐதர் அலி, திப்பு சுல்தான் காலத்தில்தான் அதிக முக்கியத்துவம் பெற்றதே தவிர, மூவேந்தர் காலத்திலே முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பதைக் காட்டுவதற்குத்தான் நான் அதை இங்கே குறிப்பிட்டேன். வேலூரிலே பெரிய கோட்டை இருக்கிறது. அந்தக் கோட்டைக்கு முக்கியத்துவம் இருக்கிறது. எங்களைப் போன்றவர்களுக்கு ஒரு சரித்திரச் சின்னம் நம்முடைய ஊரில் இருந்தால், அதைப் பாதுகாக்க மகிழ்ச்சியும் பெருமையும் உண்டாகிறது. ஆனால் நம்முடைய நண்பர் திரு. பலராமன் அவர்களுக்கு திடீரென்று சிலப்பதிகாரத்தின்மீது கோபம் ஏற்பட்டு இவ்வளவு பணம் கூடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இன்னும் அதிகமாகச் செலவு செய்யவேண்டும் என்பது எங்களுடைய விருப்பம்.

இதைப் போலவே, சென்ற ஆறு மாதங்களுக்கு முன்பு முதலமைச்சர் அவர்கள் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்றிருந்தார்கள். பாஞ்சாலங்குறிச்சி என்று நாம் சாதாரணமாகப் படித்து நிறுத்திவிடுகிறோம். நேரிலே போய்ப் பார்த்தால்தான் அதன் முக்கியத்துவம் தெரிகிறது. சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பில் பிரம்மாண்டமான ஒரு அரண்மனையைக் கட்டபொம்மன் கட்டியிருக்கின்றான். யாரும் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு, கொஞ்சங்கூட மண் இல்லாத அளவுக்கு 40 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு அரண்மனை கட்டப்பட்டு, அது இப்பொழுது புதைபொருள் ஆராய்ச்சியாளரால் தோண்டியெடுக்கப்பட்டு, பார்ப்பதற்கே, அரண்மனை ஊர், போல் இருக்கிறது. ஆனால் அதைப் பார்க்கப் போகின்றவர்கள் நிதானமாக இருந்து பார்த்துவிட்டு வரக்கூடிய வசதி கிடையாது. பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரையே வெள்ளைக்காரன் ரெவின்யூ புத்தகத்திலேயிருந்து எடுத்துவிடவேண்டும் என்று அன்றைக்கு உத்தரவு போட்டு, அந்தப் பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரே ரெவின்யூ புத்தகத்தில் இல்லாமல், புதுப்பட்டி என்ற பெயரிலேதான் அந்த கிராமம் அழைக்கப்படுகிறது. அது போன்ற இடங்களிலே நமது அரசாங்கம் இன்னும் வசதிகளை ஏற்படுத்தி தங்கும் விடுதிகளை உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது அடிகளார் அவர்கள் பாம்பு மலைபற்றிச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒவ்வொரு ஆண்டும் பாம்பு மலைக்கு வருவது அரசாங்க ரீதியாக எங்களுக்கு லாபமாகத்தான் இருக்கிறது. எப்படியாவது ஆண்டுதோறும் அவர்களைச் சந்திக்கிறோம். அவர்கள் வருகின்றபோது, மலையடிவாரம் எந்த விதத்திலே செடிகொடியும் இல்லாத அளவுக்கு இருந்தது

1973 நவம்பர் 26] [திரு. எஸ். எஸ். தென்னரசு]

என்பதற்கு உதாரணம் சொன்னார்கள், என்னுடைய தலையைப் போல் இருக்கிறது என்று அதை எப்படியாவது வளம் பெறச் செய்து, மிக விரைவிலே எல்லோரும் பார்க்கத்தக்க அளவுக்கு சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மூன்றுந்தான் மிக முக்கியமானவை. இங்கே போக்குவரத்துச் சாலைகளைப்பற்றிச் சொன்னார்கள். அதைச் சொல்கிறபோது முதலமைச்சர் அவர்களை நாம் பெரிதும் பாராட்டவேண்டும். சென்ற மாதம் திருநெல்வேலியிலே இரண்டடுக்குப் பாலத்தை திறந்து வைத்தார்கள். அந்தப் பாலம் ஆசியாக் கண்டத்திலேயே இரண்டாவது பெரிய பாலம் என்றும், ஆசியாக் கண்டத்திலேயே பார்ப்பதற்கு மிக அழகான பாலம் என்றும் வர்ணிக்கப்படுகிறது. அந்தப் பாலம் உருவாவதற்கு எதிர்ப்புகள் ஏற்பட்டன. தி.மு.க. அரசாங்கத்தின் மூலமாகத்தான் இப்படிப்பட்ட பாலம் கட்டப்படுகின்றது. ஆகவே தி.மு.க.வைச் சார்ந்தவரைக் கொண்டே அதை எதிர்க்கவேண்டும் என்று கருதி, திராவிட முன்னேற்றக் கழகத்திலே அன்றைக்கு உறுப்பினராகவும், நகரமன்றத் தலைவராகவும் இருந்த ஒருவரைப் பார்த்து இந்தப் பாலத்தைக் கட்டக்கூடாது என்ற எதிர்ப்பைத் தெரிவிக்கச் சொன்னார்கள். இன்றைய முதலமைச்சர் அவர்கள், அன்றைக்குப் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தார்கள். கட்சியை விட்டு யார் போனாலும் பரவாயில்லை, இந்தப் பாலத்தைக் கட்டியே தீருவேன் என்று கடைசிவரைக்கும் முடிவெடுத்து, அந்தப் பாலத்தைக் கட்டுவித்து, சென்ற மாதம் திறப்புவிழா நடைபெற்றது. சுமார் இரண்டு லட்சம் பேர், அந்தப் பாலத்தின் திறப்பு விழாவிலே பங்கு பெற்று, முதலமைச்சரைப் பார்க்க வேண்டும், காரிலே போகாமல் இறங்கி பாலத்திலே நடந்து வாருங்கள் என்று கூறி மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பாலங்களைக் கட்டி பெருமை பெற்றிருக்கக்கூடிய இந்த அரசாங்கம் இன்னும் முக்கியமான பாலங்களைக் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும், நமது கல்வி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். சுமார் இருபது ஆண்டுக் காலம் திருவாடானை தாலுகாவிலே உள்ள லட்சக்கணக்கான மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய ஆர். எஸ். மங்கலம் பாலத்தைக் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு பழமொழி உண்டு. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரியும். நாரை பறக்காத நாற்பத்து எட்டு மடைகள் கொண்ட பெரிய கண்மாய் என்று அதை வர்ணிப்பார்கள். அந்தக் கண்மாயில் தண்ணீர் இருக்குமானால், ஒரு மைல் பக்கத்திலே இருக்கக்கூடிய ஆர். எஸ். மங்கலம்

[திரு. எஸ். எஸ். தென்னரசு] [1973 நவம்பர் 26

வருவதற்கு 40 மைல் சுற்றித்தான் வர வேண்டும். இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ரூ. 8 லட்சம் ஆகும் என்று பொதுப் பணித் துறை மதிப்பிட்டிருக்கிறது. இந்த எட்டு லட்ச ரூபாய் பாலத்தைக் கட்டிவிடுவோமானால், சுமார் 50 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் ஆர். எஸ். மங்கலம் என்ற பெரிய கிராமத்திற்கு வருவதற்கு மிக எளிதாகப் போய்விடும் என்பதை முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திருமங்கலம் வட்டாரத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்பது எனக்கு ஆசை. அது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் பகுதி. நான் தேர்தல் நேரத்திலே 15 நாள் அங்கே பணியாற்றிக்கொண்டிருந்தேன். பொதுவாக திருமங்கலத்தைத் தொடக்கூடிய பெரிய சாலை எதுவுமே திருமங்கலம் வட்டாரத்திலே இல்லை. ஒரு காலத்திலே அது அமைச்சரின் சட்ட சபைத் தொகுதியாக இருந்தது. திருமங்கலத்திலிருந்து ராஜபாளையம் செல்லக்கூடிய நெடுஞ்சாலை திருமங்கலத்திலிருந்து விருதுநகர் செல்லக்கூடிய நெடுஞ்சாலை திருமங்கலத்திலிருந்து மதுரை செல்லக்கூடிய நெடுஞ்சாலை—இந்த மூன்று சாலைகள்தான் பெரிய சாலைகள். ஆனால் சுற்றுப்புற கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதிகள் இன்னும் வெகுவாக அமைக்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக சில கிராமங்களை ஆறுகள் இரண்டாகப் பிரித்து, திருமங்கலத்திற்கு வரமுடியாது தடுத்துக்கொண்டிருப்பதை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறேன். உதாரணம் சொல்ல வேண்டுமானால், கிளவனேரி என்ற குக்கிராமத்தில் ஒரு மாடிபோல், ஆற்றுக்கு மேலே படிகட்டி, அந்தப் படியில் தான் ஊர்மக்கள் குடியிருக்கிறார்கள். ஆற்றிலே தண்ணீர் போகிறபோது, கிராம மக்கள் அங்கே வர முடியாது. அப்படிப்பட்ட குறைபாடுகளை மிக விரைவிலே சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த செக்ரடேரியட் பில்டிங்கைப்பற்றி இங்கே ஒரு குறிப்பு இருக்கிறது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவிலே கட்டப் போவதாகக் குறிப்பு இருக்கிறது. மறுபடியும் மத்திய சர்க்காருக்குச் சொந்தமான இடத்திற்குள்ளே கட்டப்போவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களே, இதைப் பற்றிச் சரியான விளக்கம் எங்களுக்குத் தெரியவேண்டும். மத்திய சர்க்காரின் பாதுகாப்பு உரிமை இருக்கிறது, எதை எடுத்தாலும் டெல்லியைத்தான் கேட்க வேண்டும் என்று அவர்களே சொல்கிறார்கள். அப்படியிருந்தும், மீண்டும் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து மத்திய சர்க்கார் ஆளுகைக்கு உள்ளேயே செக்ரடேரியட் கட்டவேண்டுமா, வேறு இடம் தமிழ்நாடு அரசாங்கத்திற்குக் கிடையாதா, செக்ரடேரியட் பில்டிங்கை சென்னையிலே வேறு இடத்திலே கட்ட

1973 நவம்பர் 26] [திரு. எஸ். எஸ். தென்னரசு]

முடியாதா என்று கேட்டு, இந்தக் குறிப்புக்கு முதலமைச்சர் அவர்கள் நல்ல சமாதானம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டின்மீது பேசும்போது, துணை மதிப்பீடுகளிலே கண்டிருக்கக்கூடிய சில விஷயங்களை முதலிலே நான் பாராட்ட விரும்புகிறேன். இந்த நாட்டிலே வேலையில்லாது இருக்கக்கூடிய 10,200 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்திலே வாய்ப்பு தந்திருப்பது குறித்து நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, இந்த நாட்டிலே தமிழ்ப் பெரும் புலவராக விளங்கிய மறைமலை அடிகளின் பெயரில், சென்னை நகரின் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சியிலே, ஒரு புதிய நகரம் உருவாக்கப்படுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன், பாராட்டுகின்றேன்.

அடுத்து, 1938-ஆம் ஆண்டிலிருந்து தனியார் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களின் தொல்லைகளை நீக்குவதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டு, மசோதா இந்த கூட்டத் தொடரிலேயே வரும் என்று முதல்வர் அவர்களால் ஏற்கெனவே பத்திரிகை நிருபர்களிடத்தில் திருச்சியிலே அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை அதிகாரபூர்வமாகக் கொண்டுவரக்கூடிய 'பில்' கள் என்று அறிவிக்கப்பட்டதிலே, இது இன்னும் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாகிகளால் வெளியேற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய இடம் கொடுப்பதைக் கல்வித் துறை உத்திரவிட்டும் நீண்டகாலமாக தனியார் பள்ளி நிர்வாகிகள் ஏற்றுக்கொள்ளாததால் அவர்கள் வெளியே நிற்கிறார்கள்; கண்ணீர் விட்டு தெருவில் நிற்கிறார்கள். அவர்கள் இந்தக் கூட்டத் தொடரை எதிர்பார்த்து நிற்கிறார்கள். எனவே அந்த 'பில்லை' இந்தக் கூட்டத்தில் கொண்டுவரும் அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் வழங்குவதன் மூலம் ஆசிரியர் சமுதாயத்தின் நிறைந்த நிற்கக்கூடிய பாராட்டுதல்களைப் பெறவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தப் பதிலை, இந்தத் துணை மதிப்பீட்டின்மீது கூற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கல்வித் துறையிலே பணியாற்றக்கூடிய பட்டதாரி ஆசிரியர்களுக்கு, 10 ஆண்டுக் காலம் பணி செய்தால் செலக்ஷன் கிரேடு வழங்கப்படும் என்று உத்தரவிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகிறது. 300 ரூபாய்க்கு

மேல் மாத ஊதியம் பெறுகின்ற ஆசிரியர்களுக்கு இது வழங்கப்பட்டிருக்கிறது. அதை நன்றியோடு பாராட்டுகிறேன். அவர்களின் வாக்குகளைப் பெற்று வந்தவன் நான். அவர்களுக்காக நான் வாதாடியவன். அந்தச் சமுதாயம் அந்தச் சலுகையைப் பெற்றிருப்பதற்கு நான் மன நிறைவோடு வாழ்த்துகிறேன். அந்தச் சமுதாயத்திற்குக் கீழே சம்பளம் பெறக்கூடியவர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள். நாம் எல்லாம் சிறுவர்களாக இருந்தபோது, நமது கையைப் பிடித்து 'அ', 'ஆ' சொல்லிக் கொடுத்த சமுதாயம் அது. எழுத்து அறிவித்த இறைவனாக இருக்கின்ற ஹையர் கிரேடு ஆசிரியர்கள் இன்றைக்கு 150 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, இன்றைக்கு 10 ஆண்டுக் காலம் ஆகிவிட்டால் செலக்‌ஷன் கிரேடு வழங்குகின்ற நிலையில்லை என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 210 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறவர்கள். அவர்கள் 10 ஆண்டுக் காலம் தொடக்கப் பள்ளியில் பணியாற்றினாலும், உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினாலும், அவர்களுக்கும், அந்தச் சம்பளவிகிதத்தை வாங்கக்கூடிய செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு அத்தனை ஆசிரியர்களுக்கும் 10 ஆண்டுக்காலம் பணி அனுபவம் இருந்தால், செலக்‌ஷன் கிரேடு வழங்கும் மகிழ்ச்சிகரமான செய்தியை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதே இது பரிசீலனையில் இருந்ததென்பதை அறிவேன். அதிலுள்ள சிக்கல்களையெல்லாம் பரிசீலித்து, எப்போது இதைக் கொண்டுவரலாமென்று ஆராய்ந்து அன்றைக்குப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டதென்பதை அறிவேன். பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கீழே இருக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், இதை அவர்களுக்கு வழங்க வேண்டும். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தொல்லைபட்டுக் கொண்டிருக்கிறார்களென்பதை முதலமைச்சரவர்களும், கல்வி அமைச்சரவர்களும் நன்கு அறிவார்கள். அந்தச் சமுதாயத்தின் தொல்லையை நீக்க மாண்புமிகு முதல்வரவர்கள், 10 ஆண்டுகள் அவர்களுக்குப் பணிக்காலம் இருந்தால், செலக்‌ஷன் கிரேடு வழங்க ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவ சலுகை வழங்கப்பட்டுள்ளது. நீண்ட காலத்திற்கு முன்னால்—1971 ஆம் ஆண்டிலே சம்பளங்களை மாற்றி யமைத்ததற்கு முன்னால்—300 ரூபாய்க்கு அதிகமான சம்பளம் உடையவர்களுக்கு மருத்துவ சலுகை

இல்லையென்று இருந்தது. அன்றைக்கு வரையறுக்கப்பட்ட 300 ரூபாய் இன்னும் மாற்றப்படவில்லை. அரசுத் துறையில் மாதம் 300 ரூபாய்க்கு மேலே சம்பளம் வாங்குகிறவர்களுக்கு மருத்துவச் சலுகை உண்டு. உள்ளாட்சித் துறையின் கீழும், எய்டட் பள்ளிகளிலும் பணியாற்றும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அவர்களது சம்பளம் பணிக்காலத்தின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டதால், 300 ரூபாய்க்கு மேல் பெறுகின்றனர். அவர்களுக்கு மருத்துவச் சலுகை இல்லையென்ற சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்லாமல், அரசுத் துறையினருக்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன், அதே ஆணை உள்ளாட்சித் துறையில் இருப்பவர்களுக்கும் பொருந்துமென்று உத்தரவு இருந்தால், அவர்கள் அந்தச் சலுகையைப் பெறுவார்கள். ஆனால் அவர்களுக்கு அந்தச் சலுகை கிடைக்காமல் இருக்கிறதென்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே உள்ளாட்சித் துறையில் மற்ற நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு உடனடியாக மருத்துவச் சலுகை கிடைக்க முதலமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொது ஊழியர் பட்டியல். விடுப்பு, பெறக் கூடிய சம்பளம், தகுதி, பாடத் திட்டம்—இவைகளெல்லாம் இப்போது எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஒன்றுபடுத்தப்பட்டுள்ளன. பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட நேரத்தில், கல்வியின் காவலராகப் பொறுப்பேற்ற நாவலர் அவர்கள் 1967, மே 17-ஆம் தேதி ஊட்டியில் கல்வி மாநாட்டைக் கூட்டினார்கள். அந்தக் கல்வி மாநாட்டில் பொது ஊழியர் பட்டியல் வைப்பது நியாயம்தான் என்றும், ஒரு நிர்வாகத்திலிருந்து மற்றொரு நிர்வாகத்திற்குப் போகும்போது, அதே பட்டியல் இருக்க வேண்டுமென்று 1967-ல் ஒப்புக்கொண்டு முடிவு எடுத்தார்கள். அந்த முடிவு செயல்படுத்தப்படவில்லை என்று 2 நாட்களுக்கு முன்பு நான் கேட்டபோது 'கல்வித் துறையினர் பரிந்துரை வந்து விட்டது; அரசின் ஆய்வில் இருக்கிறது' என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நீண்ட காலமாக தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குள்ள வேறுபாட்டை இந்த அரசு களைந்திருக்கிறது. எனவே இந்த முற்போக்கான திட்டத்தையும் விரைவில் கொண்டுவருவதில் எந்தச் சங்கடமும் இல்லையென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு 'காமன் சர்வீஸ் ரெஜிஸ்டர்' பொது ஊழியப் பட்டியலை வைப்பதில் அரசு உடனடியாக ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1973 நவம்பர் 26

முதல் தேதி ஊதியம் வேண்டுமென்றும், ஊராட்சி ஒன்றியங்களில் அந்த நிலை இல்லாததையும் எடுத்துச்சொன்ன போது, உடனடியாக இந்த அரசு அங்கு முதல் தேதி சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்தது. இப்போது சில நகரசபைகளில் முதல் தேதி சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கின்றது. அதற்கு இரண்டொரு நகராட்சிகளைச் சொல்ல முடியும். பெரிய நகராட்சியாக உள்ள சிங்கநல்லூர் நகராட்சி, இடப்பாடி நகராட்சி, நெல்லிக்குப்பம் நகராட்சி, திருவள்ளூர் நகராட்சி போன்ற சில நகராட்சிகளில் ஒவ்வொரு மாதமும் 1-ம் தேதி சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலைமைக்கு என்ன காரணமென்று பலமுறை கேட்டபோது, மானியம் இல்லை, பணம் இல்லை. ஆகையால் கொடுக்க முடியவில்லை' என்ற காரணத்தைக் கூறுகிறார்கள். காரணம் எப்படியிருந்தாலும், மாதம் முடிவடைந்தவுடன், சம்பளம் கொடுக்கக் கூடிய நிரந்தர ஏற்பாட்டினை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1—4—1964-க்குப் பிறகு இன்ஷ்யூரன்ஸ் செய்த ஆசிரியர்கள், அதற்கான பிரிமியத்தை பிராவிடன்ட் பண்ட் பணத்திலிருந்து கட்ட வேண்டுமென்று சொல்லி, அப்படிக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். 1970 வரை அனுமதிக்கப்பட்டிருந்தது. 1971 ஆம் ஆண்டிலே அரசு ஒரு ஆணை பிறப்பித்தது. 1—4—1964-க்குப் பிறகு இன்ஷ்யூரன்ஸ் பிரிமியத்தை பிராவிடன்ட் பண்டில் இருக்கக்கூடிய தொகையிலிருந்து ஆசிரியர்கள் கட்டக்கூடாதென்று, 7 ஆண்டுகளுக்குப் பிறகு, அரசு உத்திரவிட்டுள்ளது. 1971-ல் ஆணை வந்தது. அதற்குப் பிறகு 1973-ல் ஆடிட் அப்ஜக்ஷன் வந்தது. நாங்கள் எடுத்த பாலிசிகளுக்கு 1964-லிருந்து பிராவிடன்ட் பண்டிலிருந்து பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். 1973-ல் 'பிடிப்பது தப்பு; அவர்கள் பிராவிடன்ட் பண்டிலிருந்து கட்டக்கூடாது; கையிலிருந்துதான் கட்ட வேண்டும்' என்று ஆடிட் அப்ஜக்ஷன் கூறுகிறது. பஞ்சாயத்து யூனியனில் அதற்கான 'ரிகவரி' பண்ணியிருக்கிறார்கள். இப்போது ஆடிட் அப்ஜக்ஷன் வந்திருக்கிறது. என்ன நியாயம் என்று தெரியவில்லை. ஆசிரியர்கள் தங்களுடைய பிராவிடன்ட் பண்ட் சேமிப்பிலிருந்து 9 ஆண்டுகள் கட்டியிருக்கிறார்கள். இந்த 9 ஆண்டுகளாக இருந்த நடைமுறையை 'ரேடிபை' செய்ய வேண்டும்; இனி இருக்க வேண்டிய நடைமுறையைப் பற்றி உத்திரவிடவேண்டும். 1973-ல் அப்ஜக்ஷன் வருவதால், பிராவிடன்ட் பண்டிலிருந்து எடுத்துக் கட்டியதை லோனாக மாற்றி, மாதாமாதம் இவ்வுளவு கட்ட வேண்டுமென்று ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்தில், சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்திருக்கிறார்கள். அவர்களிடம் '2 மாதங்கள் வாய்ப்புக் கொடுங்கள், இதைப்பற்றி அரசுக்கு

1973 நவம்பர் 26] [திரு. செ. முத்துசாமி]

ரெப்ரசென்ட் செய்து, ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறோம்' என்று சொன்னோம். பிறகு அவர்கள் இந்த மாதம் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதை மாண்புமிகு முதல்வரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்கள் தங்களுடைய சம்பளத்திலிருந்து, எல்.ஐ.சி. பிரிமியத்திற்குக் கட்டுகின்ற ஏற்பாடு தயவு செய்து நீடிப்பதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இவைகளெல்லாம் சாதாரணமாக எங்களுடைய பொருளாதாரத்தில் செய்யக்கூடியவை. அரசாங்கத்தின் நடைமுறைச்சட்டங்கள் ஒத்துவராத காரணத்தால், இப்படிச் செய்யப்படுகின்றன. அதைக் கருத்தில் வைத்து, இதை நீட்டிக்குமாறு முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹையர் கிரேடு இடத்தில் பணியாற்றுகின்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 9,000 பேர்கள் என்று அறிவித்து, அவர்களுக்கு 9,000 செகண்டரி கிரேடு போஸ்டுகள் வழங்கியிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது, 9,000-க்கு மேல் இன்னும் 1,000 அல்லது 1,500 பேர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இவ்வளவு வழங்குகிற தமிழக அரசு, இதையும் வழங்கி, 'எல்லோருக்கும் வழங்கியிருக்கிறோம்' என்று இந்தத் திட்டத்தைப் பூர்த்தியாக அமலாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கும் பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்களுக்குப் படி வழங்குகிறோமென்று சென்ற கூட்டத்தில் கல்வி அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இப்போது மீதம் இருக்கக்கூடிய பள்ளிகள் 15,000 தான். ஒரு தலைமை ஆசிரியருக்கு 5 ரூபாய் மாத அலவன்ஸ் என்று சொன்னால், ஆண்டுக்கு 60 ரூபாய்தான் ஆகிறது. 15,000 பள்ளிகள் என்று அதிகப்படியாகச் சொல்கிறேன். 15,000 பள்ளிகளுக்குத் தேவைப்படுவது 9 லட்சம் ரூபாய்தான். இந்த 9 லட்சத்தை வழங்கி எல்லாத் தலைமை ஆசிரியர்களுக்கும் 'தலைமை ஆசிரியர் படி' கொடுத்தோம் என்ற நிலைமையினை இந்த ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 10,000 பள்ளிகள்தான் இருக்குமென்பது எனது நம்பிக்கை. இன்னும் 5,000 அதிகமாக இருக்குமென்று கணக்கு வைத்து, 9 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறதென்று சொன்னேன். 10,000 பள்ளிகளாக இருந்தால், 6 லட்சம் ரூபாய் தேவைப்படலாம். இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, ஆசிரியர் சமுதாயம் கேட்கின்றது. இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்து கொடுத்து ஆசிரியர் சமுதாயத்தின் பாராட்டைப் பெற வேண்டுகிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1973 நவம்பர் 26

அடுத்து, அரசு போடக்கூடிய உத்தரவுகள் ஊராட்சி ஒன்றியங்களிலே அமுலாக்கப்படுவதில்லை. இது ஒரு மிகக் கஷ்டமான சூழ்நிலையாகவே இருக்கிறது என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இந்த ஜனநாயக நாட்டிலே போடக்கூடிய உத்தரவுகள் கீழே இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளில் அமுலாக்கப்படுவதில்லை என்றால், அதன் பொருள் என்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை என்பதற்காகத்தான் சொல்கின்றேன். இன்னொன்றைச் சொல்லிக்கொள்கின்றேன். டிஸ்ட்ரிக்ட் போர்டு காலத்திலே 1—6—60-ல் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், ஹையர் கிரேட் ஆசிரியர்கள் இங்கிலீஷ் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பதற்காக 5-ம் வகுப்பு உள்ள பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக எல்லாப் பள்ளிகளுக்கும் போடப்பட்டார்கள். 1957, 1958, 1959-ஆம் ஆண்டுகளில் 'அப்பாயிண்ட்' ஆனவர்கள், ஹையர் கிரேடாக, 'அப்பாயின்ட்' ஆனவர்கள் அத்தனை பேர்களுக்கும் ஒரே தேதியில் பிரமோஷன் கொடுக்கப்பட்டது. இவர்களுடைய சீனியாரிடி எப்படிக் கணிக்கப்பட வேண்டுமென்று அப்போது எந்தவிதமான முடிவும் செய்யப்படாமலிருந்தது. அப்போது அதை அரசின் கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்தோம். அதன் பேரில் உள்ளாட்சித் துறையிலே ஒரு உத்தரவிட்டார்கள். 1—6--60-ல் ஒரே தேதியில் பிரமோஷன் ஆகியிருந்தால், அல்லது அதற்கு முன்னாலேயே பதவியில் சேர்ந்திருந்தால் பீடர் கேடிகரியிலேயே, அதாவது அதற்கு முன்னாலேயே இருக்கக்கூடிய ஹையர் கிரேடு போஸ்டிலேயே யார் முன்னால் 'அப்பாயின்ட்' ஆகியிருக்கின்றார்களோ அந்த சீனியாரிடிதான் என்று திட்டவட்டமாக அரசு உத்தரவுகளைப் பிறப்பித்தது.

சேலம் மாவட்டத்திலே, பெத்தநாய்க்கன் பாளையம் என்று ஒரு ஊராட்சி ஒன்றியம் இருக்கின்றது. அந்த ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து ஒரு 'கிளாரிபிகேஷன்' கேட்ட பிறகுதான், நாங்கள் அரசாங்கத்திலே 'ரெப்ரசண்ட்' செய்து அந்த உத்தரவு வந்தது. இன்னும் அந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், அந்த உத்தரவு வந்து 7 மாதம் ஆகியும், நான் டி.டி.சி-யில் எடுத்துச் சொல்லியும், கலெக்டர் அவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்தும், ஆர்.டி.ஓ. அவர்களிடத்தில் விண்ணப்பம் கொடுத்தும், அந்த ஆர்டரை அமுல்படுத்தவில்லை. மேலதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொல்லியும் அமுல்படுத்தவில்லை. R.D.L.A. செயலாளரிடமிருந்து கலெக்டருக்கு அனுப்பப்பட்டும் அமுல் நடத்தப்படவில்லை. இதனுடைய உண்மை அடிப்படைக் காரணம் என்ன என்பதை அறிய இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்கு, முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு

1973 நவம்பர் 26] [திரு. செ. முத்துசாமி]

வருகின்றேன். இந்த ஆட்சியில் போடக்கூடிய உத்தரவு அமுல்படுத்தப்படாததினால், ஆசிரியர்கள் மத்தியிலே அரசு உத்தரவு அமுல்படுத்தப்படுவதில்லை என்ற வேகமான உணர்ச்சியை சிலர் உருவாக்க முயலுகின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் அரசின் உடனடி கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அரசு போடக்கூடிய ஆணைகள் அமுல்படுத்த வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கின்றது. இப்போது யார் யார் அமுல்படுத்தவில்லையோ அந்த ஆணையர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆர்.டி.எல்.ஏ., டிபார்ட்மெண்டில் இதுவரையில் இல்லாத, ஒரு புதுமையான, கடுமையான உத்தரவைப் போட்டிருக்கின்றார்கள். உத்தரவு போட்டிருப்பதை நான் பாராட்டுகின்றேன். அந்த உத்தரவு வந்த பிறகுகூட, ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்கள் அதையும் வாங்கி பைலில் வைத்துவிட்டு அமுல்படுத்தாமல்தான் இருக்கின்றார்கள். இதுதான் வேதனையாக இருக்கின்றது. ஊராட்சி ஒன்றியங்கள் இந்தமாதிரி அரசு போடுகின்ற உத்தரவுகளை அமல்படுத்தாதிருக்கின்ற நிலையை, முதல்வர் அவர்கள் தயவு செய்து நேரடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எவ்வளவுதான் அரசு செய்ய நினைத்தாலும் இங்கிருந்து உத்தரவுகள் போட்டாலும் எந்த நோக்கத்திற்காக உத்தரவு போடப்பட்டதோ, யாருக்காகப் போடப்பட்டதோ அவர்களை அடையாமல் இடையில் தடைப்படுகின்றன, என்பதனை முதலமைச்சர் அவர்கள் இந்த நேரத்தில் கருத்தில் கொள்ள வேண்டும்.

கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது வந்திருக்கின்றார்கள். அவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். பஞ்சாயத்துத் துறையிலே அரசினுடைய ஆணைகளை உரியகாலத்தில் அமுலாக்காமல் வைத்திருக்கின்றார்கள். எந்த ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்றாலும், எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், எங்கெங்கு அது அமுலாகாமல் இருக்கின்றது என்று தயவு செய்து கூர்ந்து பார்த்து ஆசிரியர்களுக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்ய வேண்மென்று கேட்டுக்கொள்கின்றேன். பல கோடி ரூபாய்களை ஒதுக்கி ஆசிரியச் சமுதாயத்திற்கு ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அரசு செய்துகொண்டிருக்கிறது. ஆனால் ஆணையாளர்கள் தங்களுடைய விருப்பப்படிதான் ஆணைகளை அமுல்படுத்துகின்றார்கள். ஆணை என்பதற்கு, போட்டவுடனே அமுலாக்கப்பட வேண்டுமென்பதுதான், என்னைப் பொறுத்தவரையில். தமிழ் அகராதியிலே இருக்கக்கூடிய பொருளாகக் கருதுகிறேன். ஆணையாளர்கள், ஆர்டர் என்று சொன்னால், அதை அமுல் படுத்துவதற்கென்று ஒரு ஆர்டர். இன்னொரு தனி

ஆர்டர் வர வேண்டுமென்று எண்ணுகின்றார்கள். ஒரு ஆர்டர், அதனை அமுலாக்கவேண்டுமென்றும், அதை அமுல் நடத்தவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொல்லுகின்ற நிலைமையில் இருக்கின்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சொல்கிறேன். சொன்ன கருத்துக்களில் நான் மாறுபட்டிருப்பதாக எண்ண வேண்டாம். தான் படித்த அகராதியைப்பற்றிச் சொன்னார்கள். அவர் ஆசிரியராக இருப்பதால், மாணவர்களும் அதைப் பின்பற்றக்கூடாது என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன். ஆணை என்றால் கட்டளை என்று பொருள் சொல்லலாம். ஆணை என்றால், உடனடியாக அமுல்படுத்தப்படக்கூடிய ஒன்று என்று அகராதியில் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. அதை ஒத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் தமிழிலே என்னைவிட அதிகம் அறிந்தவர்கள். முதல்வர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்கு வேறுவிதமான கருத்தைச் சொல்வதற்கு எனக்கு ஆற்றலில்லை என்பதை முதலிலே நான் ஒத்துக்கொள்கிறேன். ஆணை என் பதைப்பற்றி நான் உணர்ந்ததைச் சொன்னேன். ஆணை என்றால் கட்டளை, அரசு இட்ட கட்டளை என்றால், அதை அமுல்படுத்தாமலிருப்பது என்ன நியாயம் என்பதுதான் பிரச்சினை என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இருக்கின்ற அந்த உண்மை நிலையை நான் ஒத்துக்கொள்கின்றேன். அப்படி இருந்தால், அதற்காக அரசு மேற்கொண்டு தீவிரமான நடவடிக்கைகளை எடுக்குமென்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். ஆணை என்பதற்குப் பொருள் உத்தரவு, கட்டளை என்று இருக்கிறதே தவிர, உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய ஒன்று என்பதல்ல என்று சொல்லிக்கொள்கின்றேன்.

திரு. செ. முத்துசாமி: கட்டளை என்பதற்கு நான் உணரக்கூடிய பொருள், அரசு கட்டளையிட்டால் அதனை உடனடியாக அமல் நடத்தவேண்டும், நிறைவேற்றவேண்டும் என்ற என் உணர்ச்சியைத்தான் நான் சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய உணர்ச்சியை உணர்ந்து கடுமையான நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதுதான் எனக்குத் தேவை. முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு கட்டளை பிறப்பித்தும் அதை அமுல்படுத்தாமலிருப்பதற்காக கீழ் மட்டத்திலே இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, என்

ஆசிரியர்களுக்கான ஆணையை நிறைவேற்றவில்லை என்று கேட்டு, எங்களுக்கு நன்மை செய்தால் போதும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வீட்டு வாடகைப்படி. எல்லா ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப் படி கொடுக்கப்பட வேண்டும். எலெக்டிரிசிடி போர்டிலே இருக்கக்கூடியவர்களுக்கும் மற்றும் எல்லா இடங்களிலும் இருக்கக்கூடியவர்களுக்கும் வீட்டு வாடகைப் படி கொடுக்கப்படுகிறது. அதைப் போலவே ஆசிரியப் பெருமக்களுக்கும் வீட்டு வாடகைப் படி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மருத்துவச் சலுகை ரூ. 300-க்கு கீழ் இருப்பவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுவருகிறது. இன்றைக்கு உள்ளாட்சித் துறையிலிருந்து உத்தரவு போடாமலிருப்பதால், எங்களுக்கு அந்தச் சலுகைகள் கொடுக்கப்படாமலிருக்கின்றன என்பதையும் கவனத்துக்கு மீண்டும் கொண்டு வருகிறேன்.

அடுத்து, இந்த டி.எ. உயர்த்தப்பட்டபோது 6 மாதத்திற்கு பி.எப்.-ல் கிரெடிட் பண்ணி, 7-வது மாதம் முதல் கையிலே கொடுப்பது என்று அரசு உத்தரவிட்டது. எல்லா எம்ப்ளாயிகளும், பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்கின்ற கடை நிலை ஊழியர்களிலிருந்து ஆணையர் வரையில் எல்லோரும் வாங்கிவிட்டார்கள். ஆனால் டீச்சர்களுக்கு மட்டும், இந்த உத்தரவு போடாததால் அது கொடுக்கப்படவில்லை என்பதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அரசுத் துறை ஊழியர்களுக்குப் போடும் போது, அந்த ஆணை இந்த ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று ஒரு வார்த்தையைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்த உத்தரவை?

திரு. செ. முத்துசாமி: அரசு ஊழியர்களுக்கு என்றுள்ள அந்த ஆணையில் ஆசிரியர்களுக்கும் என்று ஒரு வார்த்தையைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இதனாலே நாட்டிற்குக் கெடுதல் ஒன்றுமே வந்துவிடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்ன உத்தரவு ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும்?

திரு. செ. முத்துசாமி: முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு திறமையான கேள்வி கேட்கிறார்கள். நான் அப்படியே பதில் சொல்கின்றேன். அவர்களுக்கு இடக்கூடிய உத்தரவிலேயே ஆசிரியர்களுக்கும் பொருந்தும்படியாக, ஆணை போடும்படி சொல்கின்றேன். அதுதான் தொக்கி நிற்கிறது. சில பேர்

சபையிலே சொல்லும்போது, சில விஷயங்களை 'தொக்கி நிற்கிறது' என்று சொல்வதைப் போலச் சொல்வார்கள். அரசு ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய சலுகைகள் ஆசிரியர்களுக்கும் உண்டு என்று பத்திரிகையிலே வந்துவிடுகின்றது. ஆசிரியர்களுக்கு உத்தரவு போடும்போது, பைனான்ஸில் ஜி.ஓ. போட்டு அதன்பின் எஜுகேஷன் டிப்பார்ட்மெண்டில் போட்டு, பின் ஆர்.டி.எல்.ஏ.-விலிருந்து ஆணை வருவதற்கு 3, 4, 5 மாதங்கள் ஆகின்றன. இது நியாயம்தானா என்று பாருங்கள். அறிவித்தவுடனே அடுத்த மாதம் கவர்ன்மென்ட் சர்வெண்ட்ஸ் வாங்கிவிடுவார்கள். எங்களுக்குக் கிடையாது. அதை எதிர்பார்த்து கடன் வாங்கிவிடுகின்றார்கள். அந்தமாதிரி சூழ்நிலையிலேதான் அவர்கள் இருக்கின்றார்கள். எந்த உத்தரவை, எந்த அறிவிப்பைப் போட்டாலும் ஒரே ஆணையாக, அரசுக் கொள்கையாக, ஆசிரியர்களுக்கும் பொருந்தும் அரசாணையாக வர வேண்டும். பைனான்சிலிருந்து ஒரு ஜி.ஓ. வரும்போது, அந்த ஜி.ஓ.-வின் அடிப்படையில் வாங்குவதற்கு எங்களுக்குத் தகுதி இல்லாது போய்விடுமா? பைனான்ஸில் ஜி.ஓ. போடும்போது, தனியார் துறைகளிலும், உள்ளாட்சித் துறைகளிலும், அரசுத் துறைகளிலும் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று போடும்போது ஆட்டோமேடிக்காகப் பொருந்தும் என்ற ஒரு முறையை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இதெல்லாம் ஆசிரியர்களுக்கு ஒரு மகிழ்ச்சியை, திருப்தியைக் கொடுக்கும். அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும்போது, நமக்குக் கிடைக்கவில்லையே என்று சங்கடப்படுகின்றார்கள். நான் அவர்களிடம் போகும்போது அவர்கள் எங்களிடம் சண்டைக்கு வருகின்றார்கள். முதலமைச்சர் அவர்கள் இந்த செஷனிலாவது அந்த அறிவிப்புகள் இன்றைக்கோ நாளையதினமோ வருவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டால், நாளையிலிருந்தே ஆசிரிய சமுதாயம் மிக்க மகிழ்ச்சியடையும், இந்த அளவுக்கு அனுமதித்த மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

* **திரு. எம். சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, நமது அவையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கின்ற முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த மதிப்பீட்டு அறிக்கையை நுணுகி ஆராய்ந்தால், நமது சமுதாயத்தில் இருக்கக்கூடிய வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குகின்ற திட்டத்திற்கு அதில் பெரும் முக்கியத்துவம் கொடுத்து அனுமதித்திருப்பதை நாம் காண்கின்றோம். 10,200 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்து 1.56 கோடி ரூபாய் ஒதுக்கீடு

செய்யப்பட்டிருக்கிறது. சிறு தொழில் வளர்ச்சிக்கு 66 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. வேலைவாய்ப்பற்று இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்காக பல தொழில்கள் கோழிப் பண்ணைகள் மற்றும் இது போன்ற திட்டங்களுக்கும் பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இப்படி ஒதுக்கப்பட்ட தொகையினால் சமுதாயத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கின்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற புதிய திட்டங்களுக்கு இந்தத் துணை மதிப்பீடு வழிவகை செய்கிறது என்பதை நாம் பார்க்கின்றோம். இதிலிருந்து நமது அரசு சமுதாயத்தில் கீழ் மட்டத்திலுள்ள எல்லோருக்கும் வேலை வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, அதற்கான வழிவகை செய்து வருகின்றதை அறியலாம். சாதாரணமாக, துணை மானியக் கோரிக்கை என்றால், துண்டு விழுகின்றதைச் சரிக் கட்டக்கூடிய மானியக்கோரிக்கையாக இருக்குமே தவிர, அதிலே புதிய திட்டங்கள் எது ஒன்றையும் கொண்டு வருவதில்லை. ஆனாலும் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்கு நல் வாழ்வினை அளிக்கத்தக்க அளவிற்கு அதிகப் பணத்தைச் செலவு செய்து, அதைத் துணை மதிப்பீட்டின் வழியாகக் கொண்டுவரும் முயற்சியிலிருந்து, நமது அரசு இந்த நாட்டில் வேலையற்றிருப்பவர்களுடைய கவலையைப் போக்குவதற்கு எவ்வளவு அக்கறை காட்டியிருக்கின்றது என்பதைப் பார்க்கிறோம்.

இந்தக் கோரிக்கையின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் சொன்ன கருத்தினை எனக்கு முன்பு பேசிய எல்லோரும் சுட்டிக் காண்பித்தார்கள். நாட்டிலே இவ்வளவு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும்போது, பூம்புகாரில் இவ்வளவு செலவு செய்ய வேண்டுமா என்று அவர் குறிப்பிட்டார். அதை எனக்கு முன்னர் பேசிய பலரும் சுட்டிக்காண்பித்து, அதில் செலவழிக்கப்பட்ட பணம் பாழான செலவில்லை, பயனுடையது தான், அது நமது பண்பாட்டை, கலாசாரத்தை எடுத்துக்காட்டி நமது சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய திட்டம்தான் என்று பலரும் சிறப்பாகச் சுட்டிக்காட்டினார்கள். இருந்தாலும் நானும் ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நமது சமுதாயத்தில் நிலவும் நல்ல பண்பாட்டின் காரணமாக நமக்கு வழிவழியாக வந்த கலாசாரத்தின் காரணமாக நாம் இன்று சிறந்து நிற்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சென்னையிலுள்ள ஒரு பெரிய நகை மாளிகையை எடுத்துக்கொள்ளுங்கள். பல கோடி ரூபாய் பெறுமான நகைகள் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இரவு வேளைகளில் கதவைப் பூட்டி ஒரு காவல்காரரை வைத்துவிட்டுப் போகின்றார்கள். ஆனால்

[திரு. எம். சங்கரலிங்கம்] [1973 நவம்பர் 26

உண்மையிலேயே அவ்வளவு நகைகளையும் கட்டிக்காப்பது, இந்த நாட்டிலுள்ள சட்டம், ஒழுங்கு, அதைப் பாதுகாக்கும் நமது அரசு, இவற்றுக்கும் மேலாக நமது நாட்டின் பண்பு, நமக்கு வழிவழியாக வந்துள்ள நற்பண்பும் கலாசாரமும்தான், தமிழினத்தைச் சார்ந்தவர்கள் தவறான வழியில் ஈடுபடக்கூடாது என்ற உணர்வு நம் எல்லோரிடத்திலும் இருப்பதுதான். அப்படிப்பட்ட நல்ல உணர்வினை உணர்த்திடும் பழம் பெரும் கலாசாரத்தை எடுத்துக்காட்டும் பண்டைய சரித்திரச் சின்னங்கள்தான் பூம்புகார் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இப்படிப்பட்ட சீரிய சரித்திரச் சின்னங்கள் மறைந்து தேய்ந்து வரும் நேரத்திலே, அவற்றை மீண்டும் மக்களிடம் எடுத்து வைக்கும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இத்தகைய பழம்பெருஞ் சின்னங்களையெல்லாம் பாதுகாத்திடும் பணியில் நாம் சிறிது செலவழிக்கிறோம் என்பதைக் குறை கூறுவது உண்மையிலேயே தமிழ் நாட்டின் நாகரீகத்திற்கு உகந்ததில்லை என்றே நான் கருதுகின்றேன்.

நண்பர்கள் இப்போது வெளியிடப்பட்டுள்ள நீதி விசாரணை அறிக்கை பற்றியும் குறிப்பிட்டார்கள். அது அவர்களுக்குத் திருப்தியளிப்பதாக இல்லை என்ற கருத்துப்படும்படி அதுபற்றிக் குறிப்பிட்டார்கள். நான் சொல்ல விரும்புவதெல்லாம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே சிறு சிறு சம்பவங்களுக்குக்கூட நீதி விசாரணையை ஏற்படுத்தும் மாபெரும் தமிழக அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் ஏற்படுத்தியது என்பதை யாரும் மறைத்துவிட முடியாது.

1967-க்கு முன்பு நடைபெற்ற சம்பவங்களைச் சற்று திரும்பிப்பாருங்கள். பாளையங்கோட்டையில் பேராசிரியர் தாக்கப்பட்டதிலிருந்து மாணவர் ஒருவர் ஆற்றிலே இறந்தவரையில் அவ்வளவிற்கும் நீதி விசாரணையை வைக்க நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். முதலிலேயே சட்ட மன்றத்திலே நமது முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் பேரிலே நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கின்றேன் என்று அறிவித்த போதிலும், அதையும் நீதி விசாரணையிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கேட்டுக்கொண்டார்கள். அப்போது முதல்வர் அவர்கள் இதையும் நீதி விசாரணைக்குட்படுத்தினால், அரசு அவர்கள் மீது உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தடைப்படும் என்று சொல்லி, அதை ஏற்றுக்கொள்ளுகின்றீர்களா என்று அவையில் கேட்டு, எல்லோரும் ஒப்புக்கொண்ட பிறகு, அதையும் நீதி விசாரணையில் சேர்த்து, அந்த விசாரணையின் அறிக்கை வந்தபிறகு அவர்கள் பேரிலே மீண்டும் நடவடிக்கை எடுக்கின்றார் என்றால், இதைவிடச் சிறந்த ஜனநாயக மாபெரும் ஏற்றுக்

1973 நவம்பர் 26] [திரு. எம். சங்கரலிங்கம்]

கொண்டுள்ள வேறு ஒரு அரசினைச் சுட்டிக் காண்பிக்க முடியுமா இந்தியத் துணைக் கண்டத்தில் என்று நான் இந்த நேரத்தில் கேட்டால், இதைச் சவாலாக எண்ணி விடாமல் மாண்புமிகு உறுப்பினர்களுடைய சிந்தனைக்கே அர்ப்பணிப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்றைக்கு மதிப்பிற்குரிய திரு. பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில், நாகர்கோவிலிலுள்ள ஸ்காட் கிருத்துவக் கல்லூரியின் வளாவிலுள் இரு மாணவர்கள் சுட்டுவீழ்த்தப்பட்டபோது, கட்சி வேறுபாடின்றி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைவரும் அந்தச் சம்பவத்தினை ஒரு நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, அதை அன்றைய அரசு நிராகரித்துவிட்டு, ஒரு ஆர்.டி.ஓ. விசாரணையோடு நிறுத்திக்கொண்டு விட்டது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காண்பிக்க விரும்புகிறேன். எனவே இந்த அரசு எந்தச் சம்பவமானாலும் நீதி, நேர்மை தவறாமல், சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று பாராமல் நீதியின் அடிப்படையில் செயலாற்றும் ஒரு பாரம்பரியத்தினை, இந்திய நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும், சொல்லப்போனால் உலக நாடுகளுக்கே ஒரு வழிகாட்டியாக, ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அப்படிப்பட்டதொரு நல்ல பாரம்பரியத்தை நமது மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய தலைமையிலுள்ள அரசு ஏற்படுத்திவருகின்றது என்பதையும் சுட்டிக்காண்பிக்க விரும்புகிறேன்.

ஜனநாயகத்திற்கே வித்திட்ட நாடு கிரீஸ் நாடு. அதில் உள்ள ஏதென்ஸ் உலகத்திற்கே ஜனநாயகத்தை மக்களாட்சி நெறியை நேரடியாக, சிட்டி ஸ்டேட்டில் அனைத்து மக்களும் சட்டசபை கூட்டத்தில் கலந்து முடிவெடுக்கும் முறையில், உலகிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. அங்கே இன்று ஜனநாயகம் எந்த அளவிற்கு சீரழிந்து வருகின்றது என்பதை கடந்த ஒரு மாதமாகப் பத்திரிகைகளில் வருகின்றதைப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். உலகிலே இப்படி ஜனநாயகம் சிதைக்கப்பட்டு வரும் நேரத்தில் தமிழகம் எப்படிப்பட்ட முறையில் ஜனநாயகப் பண்பைப் பாதுகாத்து வருகின்றது என்பதை யாரும் மறுத்து விட முடியாது. நண்பர்கள் இதைச் சுட்டிக் காட்டியதால், இதை நானும் சொல்லவேண்டி நேரிட்டது.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, நான் நீதி விசாரணையின்பேரிலே எந்தவிதமான குறையும் சொல்லவில்லை. காவல் துறையினர் மீது முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று தான் குறிப்பிட்டேன். நீதி விசாரணை வைத்ததை வரவேற்கின்றேன், வரவேற்கின்றேன் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இந்த நீதி விசாரணைக்கு உத்தரவிடுவதற்கு முன்பே சம்பந்தப்பட்ட காவல் துறையினர் மீது அரசு நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது. பின்னர் அது நீதி விசாரணைக்கு அனுப்பப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கோரினர். இந்த நீதி விசாரணையில் காவல் துறையினர் மீது என்னென்ன சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோ அவ்வளவையும் கருத்தில் கொண்டு இதற்கு முன்பே அரசு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கிற்று. இது 'எக்ஸிக்யூடிவ்' முடிவாக இருக்கும், 'ஜுடிஷியல் டெசிஷன்' வேண்டும் என்று கோரியதை உடனே ஏற்றுக்கொண்டு நமது முதல்வர் அவர்கள் அதற்கு உத்தரவிட்டார்கள். எனவேதான் அதைச் சுட்டிக்காண்பித்தேனே தவிர, வேறில்லை.

அடுத்து ஓய்வு ஊதியம் ரூ. 25, ரூ. 30 என்று இருந்ததையெல்லாம் மாற்றி குறைந்த பட்சம் ரூ. 50 என்று அறிவிக்கப்பட்டுள்ளது உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒன்றாகும். இன்றைக்கு ஓய்வு பெற்று 60 வயது 70 வயதைத் தாண்டியவர்கள் எல்லாம் இந்த அரசினை மனமார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

நமது தலைமைச் செயலகத்திற்காக கட்டிடம் ஒன்றினைக் கூடுதலாகக் கட்ட வேண்டும் என்பதுபற்றிக் குறிப்பிட்டார்கள். இதற்காக இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கிட்டத்தட்ட ரூ. 1.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் கருத்தினைத் தெரிவித்தார்கள். அதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டியதைச் செய்வார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் நமது தலைமைச் செயலகக் கட்டிடத்தை விரிவுபடுத்தும்போது, நமது தலைமைச் செயலகத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக உள்ள நூல் நிலையத்தை மிகச் சிறப்பாக அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது காலையிலே ஏதாவது படிக்கலாம் என்று நூல் நிலையத்திற்குச் சென்றால், சட்டசபையில் பேசுவது அங்கே கேட்டுக்கொண்டிருக்கிறது. அவர்கள் ஒலி பெருக்கியைப் போட்டு விடுகிறார்கள். நாங்கள் நூல் நிலையத்திற்குப் போய் தயாரித்துக்கொண்டு வந்து இங்கே பேச வேண்டும். அந்த நிலைக்கேற்றவாறு நூல் நிலையத்தை ஒதுக்குப்புறமான இடத்தில் வைத்து எந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளும் பக்கத்திலுள்ள அறைகளில் கேட்க முடியாத அளவிற்கு, அமைதியாகப் படிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த

வேண்டும். சட்டமன்ற நிகழ்ச்சிகளைக் கேட்கவேண்டுமானால் அங்கே போய் கேட்கட்டும். அப்படி செய்தால் நூல் நிலையத்தில் அமைதியாகப் படிக்கலாம். ஏனென்றால் அறையில் இருந்தால் எத்தனை பேர் வந்து தொல்லை கொடுக்கிறார்கள் என்பது தெரியும். சரி, நூல் நிலையத்தில் போய் படிக்கலாம் என்றால், அங்கே சட்டசபையினுடைய ஒலி பெருக்கியை அங்கே பக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நூல் நிலையம் விரிவுபடுத்தப்பட வேண்டும். அமைதியாக இருந்து, மன நிம்மதியோடு படிக்கிற, ஒருமித்த கருத்தை உருவாக்குகிற அமைப்பு முறையில் நூல் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அதனுடைய வளாகத்தைச் சீரமைப்பதற்கு என்று 10 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதேபோல சென்னைப் பல்கலைக் கழகத்தில் திருச்சியில் மேல் படிப்பு சென்டர் தொடங்குவதற்கு 10 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மதுரைப் பல்கலைக் கழகம் பிறந்தே 5 ஆண்டு தான் ஆகிறது. சென்னைப் பல்கலைக் கழகம் நூற்றாண்டு விழா கொண்டாடும் அளவிற்குப் பழமையானது, தொன்மையானது. எனவே மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து அதுவும் திருநெல்வேலி, காரைக்குடி போன்ற இடங்களில் மேல் படிப்பு சென்டர்களைத் தொடங்குவதற்கு வேண்டிய வசதியைச் செய்து தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் நில அளவை சம்பந்தப்பட்ட வரை, மறு நில அளவைக்கு ஏற்பாடு செய்தார்கள். மறு நில அளவை முடிந்த பிறகு, நில அளவைக்குரிய அறிவிப்பு கொடுக்கப்பட்டு பின் எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டது. முறையாக அதிகாரிகள் வந்து அளவை செய்தார்கள். ரிகார்டுகள் கொடுக்கப்பட்ட பிறகு, பல மனுக்கள் அங்கிருந்து வந்தன, இன்ன கோளாறு இருக்கிறது, இன்ன தவறு இருக்கிறதென்று மனுக்கள் வந்தன. அதை உடனே தெரிந்து மீண்டும் அதைப் புலன் விசாரணை செய்வதற்கு அந்த இலாகாவினரையே பல மாதங்கள் அங்கே தங்கியிருக்கச் செய்வதற்கு ஒரு உத்தரவு பிறப்பித்து அதற்கு 12.5 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலை சில ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தால், ரிசெட்டில் மெண்ட் என்று தெரிவித்திருக்கிறோம், ஒரு வருஷமாக நடந்தது, அறிவிப்பு கொடுத்தாகிவிட்டது, இது தான் செட்டில்மெண்ட், போங்கள் என்று உத்தரவு வந்திருக்கும். இப்போது நாங்களெல்லாம் வந்து முறையீடு செய்த

பின் மீண்டும் 12.5 லட்ச ரூபாய் செலவு செய்து இந்த இலாகாவை இன்னும் பல மாதங்கள் செயல்படச் செய்து முறையீடுகளையெல்லாம் பெற்று பரிசிலனை செய்வதற்கு உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். இது அரசு எவ்வளவு ஜனநாயக முறையிலே செயல்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த நிலையில் பலவிதத்தில் இந்த நாட்டில் நன்மைகளையும் உயர்ந்த திட்டங்களையும் தந்துகொண்டிருக்கிற இந்த அரசு வேலையற்றிருப்பவர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புக் கொடுக்கிற முறைகளையெல்லாம் ஆராய்ந்தாலும், ஒரு புதிய திட்டத்தைக் கையாண்டாலன்றி வேலை வாய்ப்பை உருவாக்க முடியாது என்பது என்னுடைய ஆழமான கருத்து. இப்போது சில கடன்களைக் கொடுக்கிறோம், உதவிகளைச் செய்கிறோம். இதையெல்லாம் அவர்கள் முழு அளவிலே பின்பற்ற முடிகிறதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். பஞ்சாயத்து யூனியன் வாரியாக என்னென்ன தொழில்கள் செய்ய முடியும் என்பதை நாம் கண்டு அதற்காக ஒரு சர்வே செய்து அந்தப் பஞ்சாயத்து யூனியனுக்குள்ளாக பொதுத் துறையிலோ, பஞ்சாயத்து யூனியனை முன்னிறுத்தி கூட்டுறவுத் துறையிலோ அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்து, அந்த யூனியன் எல்லையிலே பயிலுகிற மாணவர்கள், அந்தத் தொழிலிலே பயிற்சி பெறுகிற முறையைப் பயிலும் காலத்திலே ஏற்பாடு செய்து பயிற்சி முடித்து, உயர்நிலைப் பள்ளி அல்லது கல்லூரி முடித்து வந்த பின் அந்த யூனியனுக்குள்ளாக வளரப்போகிற தொழில்களில் ஈடுபடச் செய்ய வேண்டும். அத்தகைய ஒரு திட்டத்தை நம் மாநிலத்தில் ஒருங்கே கொண்டுவந்தாலன்றி, நம் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்துக்கொள்ள முடியாது என்பது என்னுடைய கருத்து. எனவே நமது தொழில் துறையினர் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, நமது அமைச்சரவர்கள் கருத்தூன்றி ஒரு சர்வே செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திட்டத்தை ஆதரித்து அமைகிறேன்.

* திரு. க. அறிவழகன் : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்தத் துணை மானிய கோரிக்கைக்கான அறிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பு பெற்றதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 22-ம் தேதியன்று உண்மையிலேயே ஒரு செய்தியைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன். அது ஒரு மகிழ்ச்சியான செய்திதான். தமிழ் நாடு அரசு தமிழ் நாட்டில் இருக்கிற தனியார் பள்ளி, கல்லூரி இவைகளில் வேலை பார்க்கிற பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியது அந்தச் செய்தியாகும். இந்தச் செய்தியை சட்டமன்றத்திலே தெரிந்துகொள்ளவில்லை,

அல்லது மேலவையிலே அறிவிக்கப்பட்டு தெரிந்து கொள்ளவில்லை. 'இந்து' பத்திரிக்கையில் ஒரு சிறிய 'காலத்தில்' அந்தச் செய்தி வெளியாகியிருந்தது. தமிழ் நாடு அரசு அடக்கமாகச் செய்தியை வெளியிட்டதில், என்னைப் பொறுத்த வரையில், அடக்கத்தைக் கண்டு மகிழ்ச்சியாக இருந்தாலும், இந்தச் செய்தியை எவ்வளவு பெரிய அளவிலே வெளியிட்டிருக்க வேண்டுமென்று எண்ணிப் பார்த்தேன். கல்வித் துறையில் நாம் செய்கிற பல காரியங்கள் நம் நாட்டு ஆசிரியர்களுடைய மனதுக்கும், அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் போய்ச் சேருவதில் இன்னும் விரைந்து செயல்படவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வேன். இன்றையதினம் நாவலர் அவர்கள் கல்வித் துறையினுடைய பரச்சினைகளில் மிக முக்கியமான பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அதுவும் நம் நாட்டில் பி.டி. ஆசிரியர்கள் தங்களுடைய பிரச்சினைகளாக பலவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவற்றில் பலவற்றை இந்த அரசு மனமுவந்து தீர்த்திருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டிலுள்ள மாவட்டங்களிலுள்ள தலைமைக் கல்வி அதிகாரிகள் சிலர் 10 ஆண்டுகளில் தேர்வு நிலை ஊதியம் தரப்பட வேண்டுமென்று இன்றையதினமும், இதற்கு முன்பும் தமிழ் நாடு அரசு எடுத்துக் கூறியும், கோட்டா முறையில் தான் தரப்படும் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அந்த ஐயத்தை இன்றையதினம் கல்வி அமைச்சரவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அடுத்து, பட்டதாரி ஆசிரியர்களிலே 'பி லிங்' பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் 1—4—1970-க்குப் பின்னால் வேலைக்குச் சேர்ந்தவர்கள் தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்று அழைக்கப்படுகிற தேர்வுப் பணிக் குழுவிற்குச் செல்லாமல் அவர்கள் தொடர்ந்து வேலையில் இருக்க முடியும் என்பதை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

இதைத் தவிர, இன்றைய கல்விப் பிரச்சினையிலே, பல, வேகமாகத் தீர்ந்திருந்தும் கூட, பட்டதாரி ஆசிரியர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆண்டுக் காலத் தேர்வு ஊதியம் தரப்பட்ட பின்பும் அதே உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள இடை நிலை ஆசிரியர்கள், கைத் தொழில் ஆசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள். உடற் பயிற்சி ஆசிரியர்கள், தட்டெழுத்துப் பயிற்சி ஆசிரியர்கள் இப்படி பல்வேறு ஆசிரியர்களுக்கு இன்னும் 10 ஆண்டுக் காலத் தேர்வு நிலை ஊதியம் வழங்கப்படவில்லை. இதுவே ஆரம்பப் பள்ளிகளில் இருக்கிற இடை நிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டாகவேண்டும் என்பதை நான் சொல்வதாலும். அவர்களுக்குத் தலைமை ஆசிரியாக உள்ள பி.டி. ஆசிரியரை விட 10, 20 ரூபாய் அதிகச் சம்பளம் பெறுகிற வாய்ப்பை 5, 6 ஆண்டுகளில், 10, 12 ஆண்டுகளிலே பல ஆயிரக்கணக்கான ஆரம்ப ஆசிரியர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்க்கிற இடை நிலை ஆசிரியர்

[திரு. க. அறிவழகன்] [1973 நவம்பர் 26

தலைமை ஆசிரியராக ஆக முடியும் என்பதும் முடியாது. அவர் பி.டி. ஆசிரியர் ஆவது என்பது இயலக் கூடிய காரியமல்ல. அவர்கள் 20, 25 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு இன்றையதினம் அவர்களுக்குத் தரப்படுகிறது தேர்வு நிலை ஊதியம் என்று சொல்லப்படுகிற செலக்ஷன் கிரேடு. அவர்களைப் பொறுத்த வரையில் 4, 5 ஆண்டுகள் தொடர்ந்து வாங்கினால் 5, 10 ரூபாய் குறைகிறது என்று சொல்லத் தக்க நிலைமை இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள இந்த ஆசிரியர்கள் பல்லாயிரக்கணக்கானவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதியாகவும் இந்த மன்றத்தில் நான் இருக்கிறேன். அந்த முறையில் நான் இந்த நேரத்தில் வேண்டிக்கொள்வேன். எல்லா இடைநிலை ஆசிரியர்களுக்கும் அந்த இடைநிலை ஆசிரியர்களோடு ஒப்பிட்டு எண்ணப்படுகிற கைத்தொழில் ஆசிரியர், ஓவிய ஆசிரியர் ஆக எல்லா ஆசிரியர்களுக்கும் 10 ஆண்டுக்கால தேர்வு நிலை ஊதியத்தை எவ்வளவு விரைவில் இந்த அரசு வழங்க முடியுமோ அவ்வளவு விரைவில் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளுக்குள்ளே, ஒரு நிலை ஆசிரியர்களையும் மற்றொரு நிலை ஆசிரியர்களையும் கொஞ்சம் வேறுபாடாகக் கருதுகிற நிலை இருக்கிறது. அவர்களுக்குச் சம்பளத்தில் தாழ்வு தான், வாழ்க்கையில் தாழ்வு தான், வாழ்க்கையில் முன்னேற முடியாத நிலைமையில் தாழ்வு தான், அப்படிப்பட்ட தாழ்வு நிலையில் அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் சிக்கிக்கொண்டிருக்கிறவர்கள். பெருத்த சுமையைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் அவர்கள். ஆங்கிலப் பாட மொழியில் பாடங்களைக் கற்றுத் தருகிறார்கள். அந்த ஆசிரியர்கள் இதை மிக விரைவிலே பெற வேண்டும். அவர்கள் பெறுவதற்கான முயற்சியை உடன் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் முதலமைச்சரவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன். விரைந்து ஆசிரியர்களுக்காகச் செய்யப்பட்டிருக்கிற பல நூற்றுக்கணக்கான நல்ல காரியங்களை இப்போது நான் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வது, இதைப் பலமுறை பேசியிருக்கிற காரணத்தினால் முழுதும் பொருத்தமில்லை என்றாலும், 1960-க்கு முன்னால் 30 ரூபாய் பெற்றுக் கொண்டிருந்த பி.டி. ஆசிரியர்கள் இன்றைய தினம் ஏற்குறைய 200 ரூபாய் ஓய்வூதியம் பெறக்கூடிய நிலைமையை அடைந்திருக்கிறார்கள். 1960-க்கு முன்னால் ஒரு தலைமை ஆசிரியர் 45 ரூபாய் ஓய்வூதியம் வாங்கிக்கொண்டிருந்தார் என்றால், இன்றையதினம் 300 ரூபாய் பெறத் தக்க அளவிற்கு அவருடைய நிலைமை உயர்ந்திருக்கிறது. இந்தப் பெரு நிலை மாத்திரமல்ல, கிராச்விடி என்ற பெயரில் 14 மாதச் சம்பளத்தை கடைசி ஓய்வு நேரத்தில் பெறுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இவையெல்லாம் மிக மகிழ்ச்சிகரமான செய்திகள், ஆசிரியர் உலகத்திற்குக் கிடைத்தற்கரிய செய்திகள். இந்த மன்றத்தில் 1967 இலே நான் உறுப்பினரான நேரத்தில் தனியார்

1973 நவம்பர் 26] [திரு. க. அறிவழகன்]

பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி கிடையாது, சிட்டி காம்பன்சேடரி அலவென்ஸ் என்று சொல்லப்படுகிற நகர ஈட்டுப்படி கிடையாது, ஓய்வூதியம் இல்லை, கிராச்சுவிடியை நினைத்தும் பார்த்ததில்லை. அவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்று எண்ணியதில்லை. சம்பளம் உயரும் என்று எண்ணவில்லை. இன்றைய தினம் அவை அத்தனையும் பெற்று மகிழ்ச்சிகரமாக இருக்கிறார்கள் என்று சொன்னாலும், அவர்களிலே ஒரு சாரார்ாக உள்ள இடை நிலை ஆசிரியர்களுடைய நிலை வருத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது என்று மறுபடியும் வற்புறுத்தி தமிழ் நாடு அரசு ஆசிரியர்களுக்குச் செய்திருக்கிற நன்மைகளுக்கு நன்றி தெரிவித்து, அமைவேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் துணை மான்யக் கோரிக்கைக்கான அறிக்கையின் பேரில் சில முக்கியமான விஷயங்களைப்பற்றிப் பேசலாம் என்று எண்ணுகிறேன். துணைமான்யக் கோரிக்கையில், கல்வி மான்யத்தின் கீழ் Establishment of Post-graduate centre at Tiruchirappalli என்று சொல்லி, அதற்கு பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே மன நிறைவு தருகிறது. இது நீண்டநாள், கோரிக்கை. திருச்சியிலே ஒரு சர்வகலாசாலை அமைய வேண்டும் என்பதற்கு இது முன்னோடியாக அமைகிறது என்று எண்ணுகிறேன். ஏனெனில் மதுரையில் ஒரு போஸ்ட் கிரேஜுவேட் செண்டர் வைத்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் சர்வகலாசாலை வந்தது. அதே மாதிரி திருச்சியிலும் அமையும் என்று எண்ணுகிறேன். அதற்கான சூழ்நிலையும் இருக்கிறது. அதை அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்று நம்புகிறேன்.

இப்பொழுது ஒரு நிறைவைப்பற்றிச் சொன்னேன். அடுத்து, ஒரு குறைவைச் சொல்ல வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் நல்ல திட்டம். எந்தத் திட்டமும் போட்டவுடனேயே நிறைவேறிவிடுவதில்லை என்பதை நான் அறிவேன். கூடுமானவரையில் பிச்சைக்காரர்களை முக்கியமான இடங்களில் சேராமல் தடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். காலையில் பீச் ரோட்டில் பிச்சைகாரர்களுக்கு என்ன வருமானம் வரும் என்று தெரியவில்லை. முன்பெல்லாம் அமைச்சர்கள் வந்துகொண்டிருந்தார்கள், கல்வி அமைச்சர் அவர்கள் முன்பெல்லாம் வந்து கொண்டிருந்தவர் இப்பொழுது ஏனோ வருவதில்லை. மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. ராஜாராம் இருவரும் ஜோடியாக வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள்தான் இப்பொழுதும் வந்து கொண்டிருக்கிறார்கள். வேறு எந்த அமைச்சரும் வருவதில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சர்கள் வரவில்லை என்று சொல்லி பிச்சைக்காரர்களும் வரவில்லை என்று சொல்லி, இரண்டையும் தொடர்ப படுத்திக் காட்டுவது அவ்வளவு இங்கிதமாக இல்லை.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இப்பொழுது அவர்கள் அதிகமாக வர ஆரம்பித்து விட்டார்கள் என்றுதான் சொன்னேன். முன்பு அமைச்சர்கள் எல்லாம் வந்து கொண்டிருந்தபோது, பிச்சைக்காரர்கள் வராமல் போலீஸ்காரர்கள் கவனித்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அமைச்சர்கள் வராததால் பிச்சைக்காரர்கள் வருவது தடுக்கப்படவில்லை என்றுதான் குறிப்பிட்டேன். மவுண்ட் ரோடில் சில முக்கியமான இடங்களில் மீண்டும் பிச்சைக்காரர்கள் அதிகமாகத் தென்படுகிறார்கள். அந்த நிலையங்களிலிருந்து அவர்களை வெளியே விட்டு விட்டார்களா அல்லது அந்த நிலையங்களில் போதுமான பராமரிப்பு இல்லையா, ஏன் அவர்களை விட்டு விட்டார்கள் என்று தெரியவில்லை. ஓராண்டுக்கு முன்பு பீச் ரோட்டில் பிச்சைக்காரர் இருந்ததில்லை. இப்பொழுது வர ஆரம்பித்திருக்கிறார்கள், தொழுநோய் பிச்சைக்காரர்கள் கூட அதிலே இருக்கிறார்கள். அவர்கள் எப்படி வெளியே வந்தார்கள்? மீண்டும் அவர்களை சரி செய்து, நல்ல முறையில் கவனித்து, விடுதிக்குள் வைத்து வாழ்வதற்கு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"Creation of 40 posts of Reserve duty Assistant Surgeons" இதற்காக ரூ. 2,32,000 உப மான்யமாகக் கோரப்பட்டிருக்கிறது. ரிசர்வ் அஸிஸ்டண்ட் சர்ஜன்ஸ் நியமிக்கும்போது, புதியதாக வந்தவர்களைப் போட்டு விடக் கூடாது. ரிசர்வ் டூடியில் இருக்கின்றவர்கள் கொஞ்சம் அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஆகவே, புதியதாகப் பட்டம் பெற்றவர்களைப் போட்டுவிடாமல், 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு முன்னால் பட்டம் பெற்றவர்களாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டிமாண்ட் 30-ஏ, குடும்பக் கட்டுப்பாடு திட்டம். இதிலே ரூபாய் 4,40,000 மட்டும் இப்பொழுது உப மான்யமாகக் கோரப்பட்டிருக்கிறது. நான் இன்னும் அதிகமாக எதிர்பார்த்தேன். ஏனெனில் வரவு-செலவு திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது, ஒரு வருந்தத்தக்க விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய சர்க்கார் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்திற்காகவும், குடும்பக் கட்டுப்பாடு விஷயத்தை முறையாக மேலும் நடத்துவதற்காகவும் கொடுத்து வந்த மான்யத்தை நிறுத்தி விட்டது என்ற தகவல் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். எல்லோரும் கண்டித்துப் பேசினோம். இப்பொழுது ஒரு மாதத்திற்கு முன்னால் இந்தத் தொகை மீண்டும் கிடைத்துவிட்டது என்ற செய்தியைப் பத்திரிகையில் படித்தேன். இந்த டிமாண்டில் ரூ. 4,40,000 கோரப்பட்டிருக்கிறது. மத்திய

சர்க்கார் நிறுத்தி வைத்திருந்த தொகை வந்ததா? இப்பொழுது குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு சென்ற ஆண்டு போலவே முழுத்தொகையும் செலவழிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக 'Sanction of additional staff for execution of road works in sugar factory area" என்று ரூ. 2,93,400 செலவில் சர்க்கரை ஆலை லைஸ் பணத்திலிருந்து ரோடுகள் போடப்பட இருக்கின்றன. அந்த ரோடுகளை நல்ல முறையில் பராமரிப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் கரும்பு விவசாயிகளுக்கு விலை விஷயத்தை நல்ல முறையில் திருத்தியமைப்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் என்னை வந்து அவர்களில் சிலர் சந்தித்தார்கள். அவர்களை முதலமைச்சர் அவர்களைப் போய்ச் சந்திக்குமாறு கேட்டுக்கொண்டேன். அவர்களும் அப்படியே முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தார்கள். நேற்று நான் மதுரையில் இருந்தபோது , பெரிய கூட்டமாக வந்து என்னைச் சந்தித்தார்கள். உத்திரப் பிரதேசத்தில் கரும்பு விலை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 135 ஆக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அலங்காநல்லூர் பகுதியில் கரும்பு பயிரிடுகின்றவர்களுக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்குக் கொடுப்பது ரூ. 85. உத்திரப் பிரதேசத்தில் மட்டும் மெட்ரிக் டன்னுக்கு ரூ. 135 கொடுப்பதை நானே ரேடியோவில் கேட்டேன், பத்திரிகையில் பார்க்கவில்லை. இந்த மாதிரி இருப்பது வருந்தத்தக்க விஷயம். இதைத் தொழிலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவ்வளவு வித்தியாசம் இருப்பது, ரூபாய் 50 வித்தியாசம் இருப்பது, சகிக்க வொண்ணாததாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்தைச் சார்ந்த பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் சில பேரிடம் இதைச் சொல்லி பார்லிமெண்டில் இதைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னபோது, அங்கே, 'நாங்கள் குறைந்த பட்ச விலைதான் ரூ. 90, 85 என்று சொல்லியிருக்கிறோம். உங்களுடைய மாநில சர்க்கார் அதையே கொடுத்தால் நாங்கள் என்ன செய்வது, அவர்கள் கொடுப்பது ரூ. 100 அல்லது ரூ. 120 ஆக இருக்கலாம் என்று எண்ணினோம், எந்த அளவுக்கு உண்மை என்று எங்களுக்குத் தெரியாது' என்று சொல்லி விட்டார்கள் என்று தெரிவித்தார்கள். ஆகையினால் மாநில அரசு தம்முடைய மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்கு அவர்களுக்கு உரிய நியாயமான விலையைக் கொடுப்பதற்கு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி மெட்ரிக் டன்னுக்கு ரூபாய் 85 கொடுப்பது என்றால், அடுத்த வருஷம் கரும்புச் சாகுபடியைக் கைவிட வேண்டுமென்ற ரீதியில் அவர்கள் பேசுகிறார்கள். இது ரொம்ப முக்கியமான விஷயம், அதுவும் குறிப்பாக சர்க்கரை பற்றாக்குறையாக இருக்கும் இந்த நேரத்தில். இதுவரையில்

ரூ. 50-க்கு வாங்கப்பட்ட உரம் இப்பொழுது ரூ. 100-க்கு வாங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையை எல்லாம் உணர்ந்து கரும்புக்கு உரிய விலையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது கொடுக்கப்படும் விலை வருந்தத்தக்கது. ஆகவே அமைச்சர்கள் அவர்கள் . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கரும்புக்கு விலை நிர்ணயிக்கும் பிரச்சினை குறித்துப் பேசி, உத்திரப் பிரதேசத்தை நினைவுபடுத்தினார். உத்திரப் பிரதேசம் என்று அவர் சொன்னதாலே எனக்கு இது நினைவுக்கு வந்தது. டெல்லியிலே சர்க்கரையைப் பொறுத்த வரையில் உத்திரப் பிரதேச பாலிடிக்ஸ், யார்ன் (நூல்) பொறுத்த வரையில் பம்பாய் பாலிடிக்ஸ் பலவிதத்தில் நிர்ப்பந்தம் கொடுத்து மாநில அரசுகளைப் பாதிக்குமளவுக்கு இருக்கிறது. டெல்லியிலே ஒரு விலை நிர்ணயிக்கிறார்கள், அது மிகக் குறைந்தபட்ச விலைதான், அதிகமாகக் கொடுப்பதை யார் தடுத்தார்கள் என்று கேட்டதாகச் சொன்னார். ஆகையினால் அதிலே உள்ள பிரச்சினையை விளக்கினால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். நம்முடைய அரசைப் பொறுத்த அளவுக்கு, ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவுதான் கரும்புக்கு விலை கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றோம். சென்ற ஆண்டு செய்தோம். இந்த ஆண்டும் செய்திருக்கின்றோம். நாம் சிபாரிசு செய்வதைவிட குறைவாகத்தான் அவர்கள் நிர்ணயிக்கின்றார்கள். அது வேறு பிரச்சினை. இந்த வருடத்திலே நாம் சிபாரிசு செய்ததைவிடக் குறைவாகத்தான் நிர்ணயித்திருக்கிறார்கள். அது வேறு பிரச்சினை. ஆனால் உண்மையான கெடுதல் நமக்கு ஏற்படுவது அவர்கள் சர்க்கரையினுடைய விலையையும் நிர்ணயிக்கிறார்கள், கரும்பினுடைய விலையையும் நிர்ணயிக்கிறார்கள். இந்த இரண்டு அதிகாரமும் அவர்களிடத்திலே மாட்டிக்கொண்டிருக்கிறது. நாம் சென்ற ஆண்டு மத்திய அரசு என்ன விலை நிர்ணயித்தாலும், குறைந்தபட்சம் ரூ. 90 கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசு நிர்ணயித்ததைவிட, 5 ரூபாய் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். அதை ஒப்புக்கொண்டு பெரும்பாலான ஆலைகள் கூட்டிக் கொடுத்துச் செயல்படுத்தின. நம்முடைய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே கணக்குப் பார்க்கிறோம். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே உற்பத்தியாகிற சர்க்கரையிலே 70 சதவிகிதம் உற்பத்தியை மத்திய அரசு என்ன விலை நிர்ணயிக்கின்றதோ அதற்கு அப்படியே கொடுத்துவிடுகின்றோம். சென்ற ஆண்டு, 153 ரூபாயும் சில காசுகளும் அதாவது 154 ரூபாய் கொடுத்தார்கள். இந்த 154 ரூபாய்க்கு நாம் சர்க்கரையை விற்றாக வேண்டும். அந்த சர்க்கரை விலையை நிர்ணயிக்கும்போது, 154 ரூபாய்க்கு, எவ்வளவு கரும்புக்கு விலை கொடுக்க வேண்டுமோ அந்த விலையைத்தான் மத்திய அரசு குறைந்த பட்ச விலை என்று நம்மிடத்

திலே சொல்கின்றார்கள். இது ஒரு ஏமாற்று வேலை. ஆகவே 70 சதவிகிதம் சர்க்கரையை அவர்கள் நிர்ணயித்த 154 ரூபாய்க்குத்தான் நாம் விற்கவேண்டிய கட்டாயம் இருக்கிற காரணத்தாலே, அவர்கள் நிர்ணயிக்கிற ஸ்டாசுட்டரி பிரைசைத்தான் நாம் கொடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலையிலே இருக்கிறோம். இதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்றால், மாநில அரசை மாட்டி விடுவதற்காக, மீதி 30 சதவிகிதம் உற்பத்தி இருக்கிறது. அந்த 30 சதவிகித உற்பத்தி சர்க்கரையை நீங்கள் என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்கள். இதுவே தவறு. மக்களையும் ஏமாற்றி கரும்பு உற்பத்தியாளர்களையும் ஏமாற்றி, நாட்டையே ஏமாற்றுகின்ற பொருளாதார இரட்டைக் கொள்கையை அவர்கள் பின்பற்றுகிறார்கள். எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்யலாம் என்றால், ஆலை முதலாளிகளெல்லாம் கொள்ளையடிப்பதற்காக, சாதாரண மக்களைச் சுரண்டுவதற்காக விலை ஏறுவதற்கு வாய்ப்பாக இது அமைந்திருக்கிறது. இதை நாம் கடுமையாக எதிர்த்திருக்கிறோம். மத்திய அரசாங்கம் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்ற 30 சதவிகிதம் சர்க்கரையை ஒரு குவின்டால் 265 ரூபாய்க்கு விற்றிருக்கின்றோம். இப்படி 154 ரூபாய், 265 ரூபாய் என்று விற்கிற நம்முடைய ஆலைகளினுடைய கணக்குப்படி மத்திய அரசு போட்ட டாரிஃப் கமிஷனுடைய அறிக்கையின்படி, அவர்களுடைய உத்தரவின்படி நாம் கணக்கிட்டுப்பார்த்தால், ஒரு குவின்டாலுக்கு 165 ரூபாய் ஆகின்றது. நம்மிடமிருந்து 154 ரூபாய்க்குத்தான் அவர்களே வாங்குகிறார்கள். ஆக 11 ரூபாய் நஷ்டத்திற்கு நம்மைக் கொடுக்கச் சொல்கிறார்கள். இந்த நஷ்டத்தை ஈடு கட்டுவதற்காக 30 சதவிகிதத்திலே கொள்ளை அடி என்று மறைமுகமாகச் சொல்கிறார்கள். அந்த சர்க்கரையை ரூ. 265-க்கு விற்றோம். இப்படி ரூ. 100 அதிகமாகக் கிடைக்கின்றதை, கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் கொடுக்க வேண்டும். இதுதான் அவர்கள் சொல்கின்ற வாதம். எல்லாம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. குறைந்த விலை என்று மக்களை ஏமாற்றுகிறார்கள். கூட்டுறவு ஆலைகளிலே நாம் அதைப் பார்க்கின்றபோது, ரூ. 265-க்கு ரூ. 100 அதிக லாபத்திலே விற்றதில் சுமார் இரண்டு கோடி சொச்ச ரூபாய் கிடைத்தது. அதிலே ஒரு கோடியே நாற்பத்தி ஒரு லட்ச ரூபாய், நமக்குக் கிடைத்த பணத்திலே 54 சதவிகிதம் நாம் உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். சென்ற ஆண்டு, விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு ஏன் கொடுக்கக்கூடாது? இதுதான் கேள்வி. சென்ற ஆண்டு அலங்காநல்லூரிலே ரூ. 100 கொடுத்தோம். இந்த ஆண்டு ஏன் ரூ. 90 ஆகிவிட்டது என்றெல்லாம் கேட்கின்றார்கள். அங்குதான் பிரச்சினை இருக்கிறது. கொடுக்க மனம் இருந்தாலும், அவர்கள் சொன்னது போல் விலைவாசியெல்லாம் ஏறியிருக்கிறது, உரத்தின் விலை ஏறியிருக்கிறது. அதுவும் நாங்கள் ஏற்றவில்லை. அதுவும் டெல்லிதான், அவர்கள்

எல்லாவற்றையும் எற்றிவிட்டு கொடுத்ததை குறைக்கலாமா என்ற கேள்வி, நியாயமான கேள்வி. உற்பத்தியாளர்களின் கோரிக்கை, விவசாயிகளின் கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்கிறது. ஆனால் இன்றைக்கு 100 ரூபாய் அதிகமாக, சென்ற ஆண்டு கிடைத்ததைப் போல் இந்த ஆண்டு கிடைக்குமா? அந்த சந்தேகந்தான் நம் மனத்தை உறுத்துகின்றது. காரணம் சர்க்கரை விலை மத்திய அரசினுடைய கொள்கையின் அடிப்படையிலேதான் இன்றைக்கு வகுக்கப்படுகின்றது. அதனால்தான் இப்பொழுது சொல்ல முடியாத சூழ்நிலையிலே இருக்கிறோம். இருந்தாலும் மத்திய அரசு கொடுக்கச் சொன்னதைவிட 5 ரூபாய் கூட்டிக் கொடுக்கச் சொல்லியிருக்கின்றோம். குறிப்பாக அலங்காநல்லூர் விவசாயிகளிடத்தில் 85 ரூபாயை நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளுங்கள், சென்ற ஆண்டைவிட லாபம் வந்து, நஷ்டம் இல்லாது இருந்தால், 100 ரூபாய்க்கு மேலே கொடுப்போமே தவிர, குறைத்துக் கொடுக்கமாட்டோம், சென்ற ஆண்டு 120 ரூபாய்வரை கூட சில இடங்களிலே கொடுத்திருக்கிறோம், என்று அவர்களிடம் சொல்லி, அவர்களும் நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்த நம்பிக்கையை வைத்து, தெளிவாகவே, திட்டவட்டமாகவே சொல்கிறேன், பு.பி. பாலிடிக்ஸ், அதற்கு என்னைக் குறை சொல்லக் கூடாது.

* **திரு. கே. ராஜாராம்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, போன வருஷம் கிடைத்து வந்ததற்குக் குறையாமல், இந்த வருஷம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்கிறார்கள்; அவர்கள் டெல்லியிலேயிருந்து அந்த 100 ரூபாய்க்குமேல் 105 ரூபாயாக நிர்ணயிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதே விலை கிடைத்தால், அதிக லாபம் கிடைத்தால்—அந்த ரைடரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு சில ஊர்களிலே 120 ரூபாய் கொடுக்கக்கூடிய நிலை இருந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லா ஊரிலேயும் உரம், செலவு எல்லாம் ஒன்றாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது ஒவ்வொரு ஊருக்கும் வித்தியாசமாகக் கொடுப்பது ஏன், அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சுகர் கன்டன்ட், சுகர் ரெகவரி அளவைப் பொறுத்தது.

திரு. கே. ராஜாராம்: இனிப்புச் சத்துக்குத் தகுந்தபடி விலை வரும். ஒரு மெட்ரிக் டன் கரும்பை ஆட்டினால் எவ்வளவு கிடைக்கிறது என்பதைப் பொறுத்து இருக்கும். ஒரு ஆலையில் கிடைப்பது வேறொரு ஆலையில் கிடைப்பதில்லை. ஆலைக்குத் தகுந்தபடி கூடி, குறைந்து கிடைப்பதால் வித்தியாசம் இருக்கிறது.

அடுத்தபடியாக, தொழில் அமைச்சர் அவர்கள் சம்பந்தமாக, 'ரெக்ரூட்மெண்ட் ஆஃப் வாலன்டியர்ஸ் ஃபார் யூத் சர்விசஸ் கோர்' என்ற டிமாண்டு 71 மிசலேனியசில் இரண்டு அயிட்டங்கள் இருக்கின்றன. ஒன்று 10 லட்சம் ரூபாய் மற்றொன்று 21,91,500 ரூபாய். இரண்டு விஷயங்களைப் பற்றியும் விளக்கம் ஒன்றாகத்தான் இருக்கின்றது. ஏன் இரண்டாகப் பிரித்திருக்கின்றது என்று தெரியவில்லை. மொத்தம் 31,91,500 ரூபாய் யூத் சர்விசுக்காகப் புதிதாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு செலவழித்து வேலை கொடுக்கின்றதை நான் பாராட்டுகின்றேன். அவர்களுக்கு நல்ல வேலை கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். இளைஞர் அணியிலே அவர்களுக்குப் போதுமான வேலை கொடுக்க வேண்டும். இதற்கு ஒரு ஸ்கீம் போட்டு, ஒரு நாளைக்கு 8 மணி நேரமாவது நல்ல வேலை செய்வதற்கு வேண்டிய திட்டம் போட வேண்டும். பொதுவாக கிராமப் பகுதிகளுக்குச் செல்கிறார்கள். நோய் தடுப்பு முறைகள், சுகாதாரத்தோடு வாழும் முறைகள், முதியோர் கல்வி, இம்மாதிரி விஷயங்களிலெல்லாம், ஈடுபடுத்துவதன் மூலம் படித்த வாலிபர்களுடைய முனைப்பு கெட்டு விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்தபடி முழு நேர வேலை கொடுக்க வேண்டும். படித்தவர்கள் வேலையில்லாமலிருந்தால், அது பல கெடுதல்களுக்கு இடம் கொடுத்துவிடும். ஆகையினால் அவர்களுக்கு நல்ல வேலை கொடுக்க வேண்டும். பணமும் செலவழித்து கெட்ட வழியில் போகாமலிருப்பதற்கு, முழுநேர வேலை, ஒரு நாளைக்கு 8 மணிநேர வேலையாவது கொடுக்க வேண்டும். இதற்கு ஒரு திட்டத்தைக் கொடுக்க வேண்டும். இப்போது கொடுத்திருக்கிற வேலை போதாது என்று எண்ணுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நெடுஞ்சாலைக் கிராமப் பணிகள் துறையில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணி புரியும் தற்காலிக தொழிலாளரின் பணியை 1973 ஏப்ரல் முதல் நாளிலிருந்து முறையான அரசுப் பணியின் கீழ் அரசு கொண்டுவந்துள்ளது மிகமிக மகிழ்ச்சிக்குரிய விஷயம். நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், இந்த நெடுஞ்சாலைப் பணித் துறைக்கு மட்டும் இந்தக் கொள்கையா, அல்லது அரசாங்கத்தில் உள்ள ஏனைய எல்லாத் துறைகளிலும் 10 வருடங்களுக்குமேல் டெம்பரரி சர்விசல் என்று பணியாற்றுகிறார்களே, அவர்களுக்

[திரு. கே. ராஜாராம்] [1973 நவம்பர் 26

கெல்லாம் பொருந்துமா? இந்த முடிவு கொள்கை ரீதியான முடிவா அல்லது ஒரு துறைக்கு மட்டும், நெடுஞ்சாலைத் துறையிலுள்ள கேங்கு கூலிகளுக்கு மட்டுமா அல்லது 10 ஆண்டுகளுக்கு டெம்பாரி சர்விசாக இருந்தால், தமிழக அரசாங்கத்திலே யார் வேலை பார்த்தாலும்—வேறு துறையிலிருந்தால் ரிமார்க்ஸ், பிளாக் மார்க் மற்றும் ஏதாவது இவர்கள் பேரில் குறைபாடுகள் இல்லாமல் இருந்தால்—அவர்களுக்கெல்லாம் இது பொருந்துமா என்பதை விளக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கின்றேன். இதுதான் முக்கியமான என்னுடைய கோரிக்கைகள். அனோமானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக இந்த சந்தேகங்களை விளக்கும்படியாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

பி.ப. 6-00 *மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973–74-ம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள்பற்றி இந்த அவையிலே எதிர்க் கட்சித் தலைவர்களும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை மிக விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சிறிது நேரம் இந்த மாமன்றம் பூம்புகார் பட்டிமன்றமாகக் காட்சி அளித்தது, அதற்குப் பிறகு வேறு பல பிரச்சினைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்தி, பல்வேறு நல்ல கருத்துக்களை இங்கு வைக்கப்பட்டுள்ள துணை மதிப்பீடுகளின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கான ஆக்கபூர்வமான அறிவுரைகளையெல்லாம் தந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. பலராமன் அவர்கள் இந்தப் பூம்புகார் பிரச்சினை பற்றி முதலிலேயே தன்னுடைய மறுப்பினை எழுப்பினார்கள். தமிழ் நாட்டினுடைய கலாசாரம், கலை, பண்பாடு இவைகளெல்லாம் வளர வேண்டுமென்பதிலே தனக்கு அக்கறை உண்டென்றும், பூம்புகார் தேவையில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். பூம்புகார், அங்கு எழுந்துள்ள எழுநிலை மாடம், சிலப்பதிகாரக் கலைக் கூடம், அதிலே அமைக்கப்பட்டுள்ள சிலப்பதிகாரச் சிற்பங்கள் இவைகளெல்லாம் காலக் கண்ணாடிகளாக நீண்ட நாட்களுக்கு தமிழகத்திலே ஒளி பெறக்கூடியவை என்பதை அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கியிருக்கிறார்கள். நான் திரு. பலராமன் அவர்கள் எழுப்பிய ஒரேயொரு பிரச்சினைக்கு இங்கே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டிலே வேறு தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கும்போது, ஏழை எளிய மக்களுடைய வாழ்வில் நிம்மதி ஏற்படுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகள் ஏராளமாக இருக்கும்போது, அவைகளையெல்லாம் விட்டுவிட்டு இந்தப் பூம்புகாருக்காக 8 இலட்சம்

1973 நவம்பர் 26] [டாக்டர் மு. கருணாநிதி]

ரூபாய் செலவழிக்கப்பட்டது நியாயம்தானா என்று அவர்கள் கேட்டார்கள். இப்போது புதிதாகச் செலவழிக்கப்படுவது 8 இலட்சம் ரூபாய். நான் அவர்கள் வருந்துவதற்கு இன்னொன்றைச் சொல்கிறேன். இதுவரையில் 6 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கட்டப்பட இருக்கின்ற கட்டடத்திற்காக 8 இலட்சமென்று அவர்கள் கருதிக்கொள்ளத் தேவையில்லை. இதுவரையில் அங்கே அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கும், சிற்பங்களுக்கும் 6 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் ஆகியிருக்கிறது. இந்த ஆண்டு நாம் பூம்புகார் பட்டினத்திலே கரிகால் வளத்தானுடைய காலத்தில் என்னென்ன பகுதிகள் இருந்தனவோ அவைகளையெல்லாம் மீண்டும் அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் சிலப்பதிகாரத்திலே நமக்குக் கிடைக்கிற தகவல்களை வைத்து அந்த அடிப்படையில் சில மண்டபங்களை அங்கே எழுப்ப வேண்டுமென்ற முடிவுக்கேற்ப பல மன்றங்கள், மண்டபங்களை அங்கே உருவாக்க இருக்கின்றோம். அதிலே இந்த ஆண்டு இல்வஞ்சி மன்றம் நெடுங்கல் மன்றம், பாவை மன்றம், இளங்கோவடிகள், கரிகாலன் சிலைகள்—உலோகத்தால் அமைப்பதற்கு—இவைகள்ன்னியில் இந்த மன்றத்தை அமைக்க நில ஆர்ஜிதம்—இவைகளுக்காகத்தான் 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயை நாம் இந்த மானியக் கோரிக்கையில் கேட்டிருக்கிறோம். மற்றவர்களுடைய பிரச்சினையைக் கவனிக்காமல், அவைகளை அப்புறப்படுத்திவிட்டு இது போன்ற கலை நிர்மாணப் பணிகளிலே இந்த அரசு தன்னுடைய முழுக் கவனத்தையும் செலவிடுவதாகக் கூறுவது முற்றிலும் தவறானதாகும். இன்னும் சொல்லப்போனால், அதே காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற மீனவப் பெருங்குடி மக்களுக்கு இந்த அரசின் சார்பில் செய்திருக்கின்ற நல்ல காரியங்களை இங்கே விளக்க நான் விரும்புகிறேன். இதை நான் பூம்புகார் விழாவிலேயே அறிவித்து, அந்த விழாவிலே கலந்து கொண்டிருந்த எதிர்க் கட்சித் தலைவர்கள்கூட அதை வரவேற்றுப் பாராட்டி அங்கே பேசியிருக்கிறார்கள். அந்த அறிவிப்புகள் வெறும் வாய் அளவில் நின்றுவிடாமல், பிறகு செயல்படத் தொடங்கியிருக்கின்றன. கடற்கரை ஓரங்களில், குடிசைகளில் வாழ்ந்துகொண்டிருக்கிற மீனவ மக்களுக்கு நம்முடைய வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக 300 வீடுகளைக் கட்டித் தருவதற்கு அங்கே ஏற்பாடுகள் தொடங்கப் பெற்றுள்ளன. இந்த ஆண்டு 150 வீடுகள் அங்கே கட்டி முடிக்கப்படும். ஒவ்வொரு வீடும் 4,500 ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட இருக்கிறது. 300 வீடுகளுக்கும் 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. வீட்டு வசதி வாரியத்திற்கு தமிழ் நாடு அரசு உதவி புரிந்து அந்த வீடுகளை கட்டித் தருவதற்கான திட்டங்கள் இப்போது அமலாக்கப்படுகிற நிலையில் இருக்

கின்றன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல. அங்குள்ள மீனவர்கள் அனைவரையும் 35 குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு படகு கொடுக்க வேண்டுமென்றும் அரசாங்கம் இன்றைக்கு ஒரு முடிவினைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அப்படிக் கொடுக்க இருக்கும் 35 குழுக்களுக்கான 35 விசைப் படகுகளுக்கு மொத்தச் செலவு ரூ. 18 இலட்சமாகுமென்றும் கணக்கிடப் பட்டிருக்கிறது. இவைகளன்னியில், ஒவ்வொரு விசைப் படகிற்கும் 100 கிலோகிராம் எடையுள்ள நைலான் வலையைப் பின்னிக் கொடுப்பதென்றும், அதற்கு மொத்தம் 3,500 கிலோகிராம் நைலான் தேவைப்படுமென்றும் மதிப் பிடப்பட்டிருக்கிறது. அதனுடைய மொத்தச் செலவு ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஆகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் வெகு விரைவாக, தீவிரமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அளவில், அரசாங் கத்தின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அங்கு வாழும் மீனவ மக்களுக்காகச் செலவிடப்படும் தொகை 35 இலட்சம் ரூபாய் என்பதை நண்பர் திரு. பலராமன் அவர்கள் உணர்வார்களானால், இப்போது அங்கே செலவழிக்கப்படும் 8 இலட்சம் ரூபாயைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட மாட்டார்களென்று நான் கருதுகிறேன். ஆனால் இது போன்ற நம்முடைய பழைய சின்னங்கள், நம்முடைய இலக்கியங்கள்—அடிகளார் அவர்கள் இங்கே எடுத்துக் கூறியதைப்போல்—பழம் பெரும் புலவர்களுடைய நினைவுக் குறிப்பு கள் அவர்களுடைய ஞாபகார்த்தமாகப் பல்வேறு பகுதிகளிலும் தமிழகத்தில் இருந்திட வேண்டுமென்பதில் இந்த அரசு அசையாத நம்பிக்கை உடைய தாகும். அந்த அடிப்படையில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ கத்தில் முதலமைச்சராக இருந்தபோது உலகத் தமிழ் மாநாட்டை வேறு எங்கும் நடத்தியிராத அளவுக்கு, பெருமையோடும், புகழோடும் நடத்திக் காண்பித்தார்கள். அந்த மாநாட்டை ஒட்டித்தான் தமிழ்ப் பெரும் சான்றோர் களுடைய சிலைகளையெல்லாம் அமைக்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நண்பர் திரு. தென்னரசு அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதுபோல், நான் கடந்த 6, 7 மாதங்களுக்கு முன்பு நெல்லை மாவட்டத்தில் உள்ள பாஞ் சாலங்குறிச்சிக்குச் சென்றபோது, உள்ளபடியே கட்டபொம்மன் கட்டிய கோட்டை ஒன்று இருப்பதாக நம்முடைய நாட்டு மக்கள் பலரும் அறியா திருக்கிற நேரத்தில், நான் அதைப் பார்த்தேன். எனக்கேகூட அப்படியொரு கோட்டை அங்கே இருந்ததாகத்தான் தெரியும். எழுதப்பட்ட சரித்திரங்களில் அவைகள் விழுந்து, மண் மேடிட்டு இருக்கின்றன என்ற குறிப்புகள்தான் இருக்கின்றன. ஆனால் நேரில் போய்ப் பார்க்கின்றபோது நம்முடைய உள்ளங் களெல்லாம் உணர்ச்சி மயமாகின்ற அளவுக்கு அந்தப் பெரிய மாளிகையின்

அடித்தளத்தைப் பல்வேறு இடங்களில் காண முடிந்தது. கட்டபொம்மன் கொலு வீற்றிருந்த இடம், மாளிகையின் தளங்கள், கூட கோபுரங்கள் எப்படி அமைக்கப்பட்டிருக்கும் என்பதற்கான அடித்தளங்கள்—இவைகள் அங்கே இருக்கின்றன. அவைகளையெல்லாம் இப்போது அகழ்ந்தெடுத்து, ஒரு ஆள் உயரத்திற்கான கட்டிடத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நான் அப்போதே அறிவித்திருக்கிறேன். அந்தப் பாஞ்சாலங்குறிச்சியில் அந்த மாளிகையை நம்முடைய தொன்மைச் சின்னமாக வைத்துக்கொண்டு, அதற்குப் பக்கத்தில் அந்த அடித்தளத்திலே எப்படி ஒரு மாளிகை கட்டியிருக்க முடியுமென்பதற் கான ஒரு மாதிரிக் கட்டிடத்தை, கட்டபொம்மன் நினைவாகக் கட்டுவதென்றும் தெரிவித்தேன். இது மேலும் ஒரு வருத்தத்தை நண்பர் திரு. பலராமன் அவர்களுக்கு ஏற்படுத்தக்கூடும்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, முதல்வரவர்கள் ஏதோ நான் தமிழர் பாரம்பரியத்திற்கு எதிரி போன்று ஒரு கருத்தினை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நான் சொல்வதெல்லாம், சமுதாயத்தில் பல பிரச்சினைகள் இருக்கும்போது, இதைத் தொடர்ந்து செய்தாலும், இவ் வளவு அதிகமான தொகை தேவைதானா என்ற கேள்வியை எழுப்பினேன் தவிர, அதற்குச் செலவு செய்யக்கூடாதென்று சொல்லவில்லை என்பதை இந்த அவைக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கட்டபொம்மனுக்கும் ஒருத்தன் எதிரி யாக இருந்தான்.

*திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, நண்பர் திரு. பலராமன் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பாமல் இருந்திருந்தால், தவத்திரு குன்றக்குடி அடிகளாரிடமிருந்தும், மாண்புமிகு முதலமைச்சரவர்களிடமிருந்தும் இவ்வளவு விவரங்களும், இனிய வரலாறுகளும் இந்தச் சபை பெற்றிருக்காதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கொலை நடைபெறுமலிருந்தால், வக்கீலினுடைய வாதத்தை நாம் கேட்டிருக்க முடியாதென்று சொல்வதுபோல் இருக்கிறது. அது மாத்திரமல்ல. நம்முடைய சென்னை மாநகரத்திலே, மயிலைப் பகுதியில் வள்ளுவருக்கென்று ஓர் ஆலயம்—தமிழகத்தில் வேறு எங்கும் இல்லாமல்—சில சரித்திரக் குறிப்புகள் அதற்காக அங்கே தொகுக்கப் பெற்று,—சிறந்த நிலையில் இருக்கிறது. அந்த வள்ளுவர் ஆலயத்தைப் புதுப் பிப்பதற்காக ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, அதிலே கட்சிச் சார்பற்ற முறையிலே அனைவரும் பங்கு பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு,

அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடந்திருக்கிறது. இப்போது எடுத்துள்ள முடிவின்படி, மயிலைப் பகுதியில் உள்ள திருவள்ளுவர் ஆலயத்தை திருத்தியமைத்து, அதற்குள்ள திருப்பணி வேலைகளை மாத்திரம் செய்வது என்பதாகும். ஆலயத்தைப் புதுப்பிக்கும் பணியை, 4, 5 இலட்சம் ரூபாய் செலவில் செய்து முடிப்பதென்று இந்தக் குழு முடிவு எடுத்துள்ளது.

சென்னை மாநகரத்தில் வெளிநாட்டுக்காரர்கள் வந்து காண்கின்ற அளவில், சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற அளவுக்கு, தமிழ் நாட்டின் இலக்கியச் சிறப்பைக் கூறும் அளவில், பெரிய அளவில் தமிழ் நாடு அரசாங்கத்தின் சார்பிலே சென்னையில் ஒரு முக்கியமான பகுதியில், தமிழகத்தில் எங்கும் இப்படியொரு கட்டிட அமைப்பில்லை என்ற அளவில், திருவள்ளுவர் பெயரில் ஒரு நினைவுச் சின்னத்தை தமிழக அரசு முன் நின்று, முழுச் செலவையும் ஏற்றுக்கொண்டு முடிக்கத் திட்டமிட்டிருக்கிறது. திட்டக்கட்ட அதற்கு 20-லிருந்து 30 இலட்சம் ரூபாயாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதையும் தமிழக அரசு செய்ய இருக்கிறதென்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நண்பர் திரு. பலராமன் அவர்கள் சொன்னார்கள், இதை நான் எதிர்க்கவில்லை, மற்ற பிரச்சினைகள் இருக்கும்போது, இவ்வளவு செலவா என்றுதான் நான் ஆதங்கப்படுகின்றேன் என்று சொன்னார்கள். மற்ற பிரச்சினைகளிலே கவனம் செலுத்தாமல் இதிலே மட்டும் கவனம் செலுத்தினால், அது தவறாக இருக்கலாம். சென்னையிலே திருவள்ளுவருடைய ஆலயம் கட்டுகிறோம், அதற்காக ஒரு நினைவுச் சின்னம் எழுப்புகிறோம், அதற்காக பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்கின்றோம் என்றெல்லாம் சொன்னார்கள் ஆனால் அதே நேரத்திலே சென்னை மாநகரத்திலுள்ள குடிசைகளையெல்லாம், உயர்ந்த கோபுரங்களாக மாற்றியமைக்க, 7 ஆண்டுக் காலத்தில் 40 கோடி ரூபாயை செலவு செய்யவும் இந்த அரசு திட்டமிட்டிருக்கின்றது என்பதையும் மறந்துவிடக் கூடாது. அதை மறைத்துவிட்டு, இதை மாத்திரம் சொன்னால் பயனில்லை. நாளையதினம் அவர்களுடைய கட்சிப் பத்திரிகையிலே ஏழை மக்களுடைய பிரச்சினைகளையெல்லாம் மறந்துவிட்டு, திருவள்ளுவர் ஆலயமா, பூம்புகார் பட்டணத்திலே திருவிழாவா, சிலப்பதிகார கலைக்கூடமா என்றெல்லாம் பேசுவார்கள். பத்திரிகையிலே இதைத்தான் போடுவார்கள். இதைப் பாராட்டிவிட்டு இதைச் சரியா என்று கேட்டிருந்தால், நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன், வரவேற்றிருப்பேன்.

இந்த சமயத்திலே இன்னொன்றும் சொல்வேன், பூம்புகார் மட்டும் தானா அவர் கண்ணுக்குப் பட்டது? மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க 4 அல்லது 5 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்வதற்குத் திட்டமிட்டு அதற்கான அடிக்கல் நாட்டப்பெற்று அதற்கான வேலைகள் [illegible] பெற்றிருக்கின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தில்லையாடி வள்ளியம்மை நகரம் என்று ஒரு புது நகரை உருவாக்கி இருக்கின்றோம். நாகப்பன், நாராயணசாமி என்கின்ற அந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் உத்தமர் காந்தி அடிகள் நடத்திய தென்னாப்பிரிக்கப் போராட்டத்திலே சேர்ந்து உயிர் நீத்தவர்கள். அவர்கள் நினைவாகவும், தில்லையாடி வள்ளியம்மையின் நினைவாகவும் இந்த நினைவுச் சின்னத்தை எழுப்பியிருக்கின்றோம். அவைகளோடு மாத்திரமில்லாமல், நினைவுச் சின்னத்தின் சார்பாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் அவர்களுக்கெல்லாம் பல்வேறு வசதிகளைச் செய்வதற்கு மொத்தமாக 10 இலட்சம் ரூபாயை நாம் செலவு செய்திருக்கின்றோம். பூம்புகாரிலிருந்து சென்று பார்த்துத் திரும்புகின்றவர்களுக்கு வசதிகள் செய்துதரப்பட வேண்டும், அங்கே ஒரு சுற்றுலா மாளிகை தேவை. அதுமாத்திரமல்லாமல் அங்கே சாப்பாடு வசதிகள் எல்லாம் தேவை என்று நண்பர் திரு. தென்னரசு அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கலைக்கூடத்திற்கு அருகாமையிலேயே அறிஞர் அண்ணா அவர்கள் பெயராலே ஒரு சுற்றுலா மாளிகை எழுப்பப்படவிருக்கின்றது. அதற்கான அடிக்கல் நாட்டப்பெற்று ஆக்க வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கின்றேன். அது போலவே அங்கு செல்பவர்களுக்கு உணவு வழங்குவதற்கான வசதிகளைச் செய்வதற்கும் ஏற்பாடுகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதிலே வருமானம் இல்லாமலும் போகவில்லை. இன்றைக்கு ஒரு நாளைக்கு ஆயிரம் பேர் வரையில் அந்த பூம்புகார் கலைக்கூடத்தைச் சென்று பார்வையிட்டுவிட்டுத் திரும்புகின்றார்கள். எத்தனை பேர் வந்தார்கள் என்பதைக் கணக்கிடவும், செலவழிப்பதில் கொஞ்சமாவது கிடைத்தால் பராமரிப்புச் செலவுகளுக்கு வைத்துக்கொள்ளலாம் என்றும், 10 காசுகள் கட்டணம் என்று விதிக்கப்பட்டு, அங்கேயிருக்கின்ற சிற்பங்களைப் பற்றி விளக்குவதற்கு என்று தனி சர்க்கார் அலுவலர்களும் அங்கே நியமிக்கப்பட்டு, அவர்கள் பணியாற்றி வருகின்றார்கள். இப்படி 10 காசுகள் கட்டணம் கொடுத்து, ஒரு நாளைக்குக் குறைந்தது ஒரு ஆயிரம் பேர்களாவது அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு வருகிறார்கள். இதற்குத் தொடர்பாக நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமிழ் நாட்டிலே பெரும் புலவர்கள் பெயரால் நினைவுச் சின்னங்கள் இருந்திட வேண்டும், ஆங்காங்கு இருக்கின்ற பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் அந்தப் புலவர்களுடைய பெயரை இட வேண்டுமென்ற சீரிய, செழுமிய கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்து வரவேற்கப்பட வேண்டிய கருத்து. அதிலே இந்த அரசு கவனம் செலுத்தியிருக்கின்றது. அரசு ஏற்கனவே அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றது. இதற்கு அடையாளமாகத்தான் மறைமலை நகர் என்ற

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 நவம்பர் 26

ஒரு நகரை உருவாக்குகின்றது. அந்தப் பணியிலே இப்போது ஈடுபட்டிருக்கின்றோம். நெல்லையிலே அமைந்துள்ள மிகப் பெரிய பாலம், இந்தியாவிலேயே, ஏன் ஆசியாவிலேயே பெரிய பாலம்—அந்தப் பாலத்திற்கு 'வள்ளுவர் பாலம்' என்கின்ற பெயரை வைத்திருக்கின்றோம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நானும் நாவலர் அவர்களும் ஒரு நாள் பயணம் செய்தபோது, ஒக்கூர் என்கின்ற ஒரு ஊரினைப் பார்த்த மாத்திரத்திலே உடனடியாக அங்கேயிருந்த அலுவலர்களை அழைத்து, அதுதான் ஒக்கூர் மாசாத்தியார் என்ற புறநானூற்றுப் புலவர் பிறந்த ஊர் என்று அந்த ஊரிலே எழுதி வைக்கப்பட வேண்டுமென்று சொல்லி, அந்த ஊரிலே மிக முக்கியமான பகுதியில் ஒரு கல்வெட்டிலே ஒக்கூர் மசாத்தியார் பிறந்த ஊர் என்று எழுதி வைக்கப்பட்டிருக்கின்றது. எங்கெங்கு எந்தெந்தப் புலவர்கள் பிறந்தார்களோ அங்கு அந்தப் பகுதிகளில் அவர்களுடைய கவிதைகள் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. இது போலவே ஆங்காங்கு புலவர்கள் பிறந்த இடங்களில் அவர்களுடைய நினைவு ஒவ்வொன்றும் தங்குகின்ற அளவுக்கு நினைவுச் சின்னங்களை எழுப்புவது என்கின்ற அந்த முயற்சிகளையும் இந்த அரசு ஏற்றிருக்கின்றது.

சுற்றுலா வளர்ச்சிக்கு ஐந்து லட்சம், பத்து லட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டுமா என்ற கேள்வியையும் நண்பர் திரு. பலராமன் அவர்கள் எழுப்பினார்கள். சுற்றுலா வளர்ச்சி என்பது அவர்கள் குறிப்பிடுவது போல, ஏதோ ஒரு கவர்ச்சிகரமான காரியம் அல்ல. சுற்றுலா வளர்ச்சியால் ஒரு பொருளாதார முன்னேற்றமே ஏற்படும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. வெளிநாட்டுக்காரர்கள் இங்கே வந்து பார்த்துவிட்டுப் போவதற்கு அவர்களைக் கவர்வதற்குச் சுற்றுலாத் துறை வளர்ச்சிகள் எல்லாம் தேவைதானா என்று கேட்டார்கள். வெளிநாட்டிற்கு நம் நாட்டவர் சென்று அங்கே அந்நியச் செலாவணியை அவர்களுக்கு நாம் தந்துகொண்டிருக்கின்ற அந்த நிலைக்கு பரிமாற்ற தோரணையில் ஆக்க வேண்டுமென்றுதான், வெளிநாடுகளில் இன்னின்ன நிகழ்ச்சிகளை, பொருள்களைக் காண வேண்டுமென்று நாம் விரும்புவதைப் போல அவர்கள் இந்தியாவுக்கு வந்திடவும், குறிப்பாக நம்முடைய தமிழ் மாநிலத்திற்கு வந்திடவும், அவர்கள் நம்முடைய பழைய சிற்பங்களை வந்து கண்டிடவும், நம்முடைய நினைவுகளை அறிந்திடவும், பண்பாடு, நாகரிகம், கலாசாரம் இவைகளைக் கண்டுகொள்ளும் வகையில் சுற்றுலாத் துறை ஏற்படுமேயானால், அது பொருளாதாரத் துறையிலே ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற வகையிலேதான் ஒரு நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றோமே தவிர, வெறும் கவர்ச்சிக்காக அந்தக் காரியம் நடைபெறவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1973 நவம்பர் 26] [டாக்டர் மு. கருணாநிதி]

தலைமைச் செயலகத்திற்கு ஒரு கட்டிடம் இங்கே இந்தக் கோட்டைக்குள்ளேயே கட்டுவதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதையும், அதற்காகக் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்படவிருக்கிறது என்பதையும் துணை மதிப்பீட்டிலே குறிப்பிட்டிருக்கிறோம். அதன் அடிப்படையிலே நண்பர் திரு. தென்னரசு அவர்கள் அதை இங்கேதான் கட்ட வேண்டுமா, வெளியிலே தனியாக ஒரு இடத்திலே கட்டக்கூடாதா என்று கேட்டார்கள். வெளியிலே தனியாகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு இப்போது 7, 8 கோடி ரூபாய் செலவாகும். தலைமைச் செயலகம், பேரவை மண்டபம், மேலவை மண்டபம் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டுவதற்கான ஒரு இணைப்பான முயற்சியாகத்தான் அதைச் செய்ய வேண்டும். இப்போது அதற்கான நிதி நிலை ஆதாரங்கள் போதுமானதாக வசதியாக இல்லாத காரணத்தால் இங்கேயே அதன் தொடர்பாக அந்தக் கட்டிடத்தைக் கட்டலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கின்றோம். இப்போது சென்னை மாநகரத்திலே மட்டிலும் நம் அரசு அலுவலங்களுக்காக ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய் அளவுக்கு நாம் வாடகையாகக் கொடுத்துவருகிறோம். அது போலவே சென்னைக்கு வெளியிலே உள்ள பகுதிகளில் தமிழ் நாட்டில் பல்வேறு நகரங்களில் அரசாங்க அலுவலகங்களுக்குக் கிட்டத்தட்ட 11 இலட்சம் அல்லது 12 இலட்சம் ரூபாய் வாடகையாகக் கொடுத்துக்கொண்டு வருகின்றோம். இந்த வாடகையைக் கொடுத்துக் கொடுத்து அரசாங்கத்தினுடைய பணத்தை வீணாக ஆக்குவதிலிருந்து உடனடியாக இல்லாவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாகவாவது மீள வேண்டும் என்ற வகையிலேதான் இப்படிப்பட்ட கட்டிடங்களை அரசாங்கத்தினுடைய கட்டிடங்களாகக் கட்டிவிட வேண்டும், படிப்படியாக அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்கின்ற முறையிலேதான் இந்தக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இளைஞர் அணித் திட்டம் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். பலரும் இதைப்பற்றி பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். இளைஞர் அணித் திட்டம் நாம் எடுத்துக் கொண்ட மிகச் சிறிய முயற்சிகளிலே ஒன்று. அது நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கின்றதோ அந்த அளவுக்கு மாண்புமிகு அங்கத்தினர்கள் எந்தக் கட்சியினைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர்களுக்கு அந்த அக்கறை இருந்திடவேண்டும். இன்றைக்கு அது போதுமான அளவுக்கு பணிபுரியவில்லை என்பதை நான் உணராமலில்லை. மேலும் நல்ல வகையிலே உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் இந்தப் பணி நடைபெற வேண்டும். 1971—72-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை அறிவிக்கின்ற

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 நவம்பர் 26

நோக்கிலே இளைஞர் அணியைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட்டேன். நம் கிராமப்புறங்களிலே இருக்கின்ற சுகாதார வசதிகளைப் பேணிப் பாதுகாக்கவும், அந்த வசதிகளைப் பெருக்கிடவும், அதே நேரத்தில் முதியோர் கல்வி தந்திடவும், தீண்டாமை போன்ற தீய பழக்கங்களிலிருந்து மக்களை விடுவிக்கின்ற பிரசாரங்களைச் செய்திடவும், இன்றைக்கு கிராமப்புற மக்களோடு ஒன்றிப் பழகி அவர்களுக்கு அறிவுலகக் கருத்துக்களை எடுத்துத் தந்திடவும், உலகத்தோடு அவர்களுடைய இதயத்தை ஒட்ட வைத்திடவும் இப்படிப்பட்ட முயற்சிகளிலெல்லாம் இந்த இளைஞர்கள் ஈடுபட வேண்டும் என்பதற்காகவும் அதே நோக்கில் அவர்களுடைய படிப்புக்கு ஏற்ற ஊதியத்தைத் தர முடியாவிட்டாலும், படித்துவிட்டு வேலை வாய்ப்பற்று இருக்கின்ற அவர்களுக்கு மாதாந்திரச் சம்பளம் என்று இல்லாவிட்டாலும் அவர்களுக்குச் செலவுக்காக ஒரு குறிப்பிட்ட தொகை ரூ. 175 என்ற அளவில் தரப்படும் என்று அந்த அறிக்கையிலே தெரிவித்தேன். அதற்கு ஏற்ப 1971-72-ம் ஆண்டில் 1,800 ஆண்களும், 200 பெண்களும் ஆக மொத்தம் 2,000 பேர்கள் இளைஞர் அணியில் சேர்க்கப்பட்டார்கள். 1972-73-ல் 1,450 ஆண்களும் 150 பெண்களும், ஆக மொத்தம் 1,600 பேர்களும், 1973—74-ல் 1,525 ஆண்களும், 275 பெண்களும், மொத்தம் 1,600 பேர்களும் சேர்க்கப்பட்டார்கள். ஆக மொத்தம் 5,400 பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்களில் 1971-72-ல் சேர்க்கப்பட்டவர்களில் 991 ஆண்களும், 121 பெண்களும், 1972-73-ல் சேர்க்கப்பட்டவர்களில் 1,91 ஆண்களும், 136 பெண்களும், 1973-73-ல் சேர்க்கப்பட்டவர்களில் 1,200 ஆண்களும், 224 பெண்களும் தவிர மற்றவர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்று இளைஞர் அணியிலிருந்து வேறு வேலைகளுக்குச் சென்று விட்டார்கள். ஆகவே, தற்போதுள்ள எண்ணிக்கை, ஆண்கள் 3,382-ம்,
பி.ப. 6-30 பெண்கள் 481-ம் ஆகும். ஆக, 5,400 பேர் சேர்க்கப்பட்டதற்கு 3,863 பேர்தான் இளைஞர் அணியில் இருக்கின்றார்கள். மற்றவர்கள் வேறு வேலைகள் கிடைக்கும் போது, அவர்கள் போகலாம் என்ற நிபந்தனையோடுதான் இதில் சேர்ந்திருக்கின்றார்கள். இவர்கள் எல்லாம் அந்த நிபந்தனையின் அடிப்படையில் வேறு வேலைக்குப் போயிருக்கின்றார்கள். அப்படி அவர்கள் எல்லோருக்கும் வேறு வேலைகள் கிடைத்துச் செல்ல வேண்டும் என்பதுதான் நம்முடைய ஆசை. அப்படிச் செல்லச் செல்ல மேலும் மேலும் இளைஞர் அணியில் வேலையில்லாது இருக்கும் மாணவர்கள் அல்லது மாணவிகள், ஆண்களும் பெண்களும் நிச்சயமாகச் சேர்க்கப்பட இருக்கின்றார்கள். இப்படி வேலை வாய்ப்பினைப் பெருக்கிட வேண்டும் என்று தமிழக அரசு, இந்தியாவில் மற்ற மாநிலங்களிலே யாரும் முன் வராத நேரத்தில், தயாரித்து வெளியிட்ட திட்டமாகும் இது. இந்தத் திட்டத்தினை மற்ற மாநிலங்களும் வரவேற்றிருக்கின்றார்கள். இந்தத் திட்டம்

1973 நவம்பர் 26] [டாக்டர் மு. கருணாநிதி]

எப்படிச் செயல்படுகின்றது என்பதை அறிய அவர்கள் ஆவலோடு இருக்கின்றார்கள். மற்ற மற்ற மாநிலங்கள் எல்லாம் எந்த அளவிற்கு இந்தப் பணிகள் எல்லாம் தொடர வேண்டும் என்று கருதுகின்றார்களோ அதில் கிஞ்சித்தும் ஏமாற்றத்திற்கு இடம் தராது இதில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் தங்கள் பணியினைச் செய்திட வேண்டும் என்று இந்த மன்றத்தில் நடைபெறும் இந்த விவாதத்தின் மூலமாக அந்த இளைஞர் அணியினர் அனைவரையும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பர் திரு. முத்துசாமி அவர்களும், நண்பர் திரு. அறிவழகன் அவர்களும் பேசும் நேரத்தில் பி.டி. ஆசிரியர்களுக்கு பத்தாண்டுகாலத் தேர்வு நிலை ஊதியம் தரப்பட்டிருப்பதுபோல இடைநிலை ஆசிரியர்கள் அவர்களோடு ஒப்பிட்டு நோக்குகின்ற மற்ற ஆசிரியர்களுக்கும் பத்தாண்டுகாலத் தேர்வு நிலை ஊதியம் தரப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக திரு. அறிவழகன் அவர்கள் வேறு பிரச்சினை எதையும் எடுத்துக்கொண்டால், இது தனித்து விளங்காது என்ற எண்ணத்தினாலோ என்னவோ இதையேயென்று வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் இரண்டு பேரும் எடுத்துச் சொன்ன இந்தப் பிரச்சினைபற்றி அரசு நிச்சயம் ஆலோசிக்கும், இதைப் புறக்கணித்துவிடாது என்று எடுத்துக்கூறி, இதன் தொடர்பாக வேறு எந்தெந்தப் பிரச்சினைகள் எழக்கூடும் என்று எண்ணிப் பார்த்துத்தான் எந்தக் காரியத்தையும் நமது நிதி நிலைக்கு ஏற்றவாறு செய்திட வேண்டியிருப்பது காரணமாக அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்று நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் தொடர் கூட்டத்திலேயே ஆசிரியர் பணி பாதுகாப்புக்கான சட்டத்தினைக் கொண்டு வரவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும், அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வலியுறுத்தி நண்பர் திரு. முத்துசாமி கேட்டுக்கொண்டு வருகின்றார். ஏற்கெனவே கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் ‘இந்தத் தொடர் கூட்டத்திலேயே அதைக் கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது’ என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்கள். ஆகவே, அதிலே எந்தவிதமான சந்தேகமும் தேவையில்லை என்று நான் கூறிக்கொள்ளுகின்றேன். வேறு சில மசோதாக்கள் அறிவிக்கப்பட்டுவிட்டன என்ற காரணத்தினாலேயே, இது அறிவிக்கப்படாததால் இது வராது என்று அர்த்தமில்லை. எப்படியும் இதை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர வேண்டும் என முயற்சிகள் வெகு முனைப்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அடுத்து, ஒன்றியத்தின் தலைவர்களும் அதிகாரிகளும் ஆசிரியர்களிடம் நடந்துகொள்ளும் முறைகள்பற்றியும், அரசாங்கத்தின் ஆணைகள் நிறைவேற்றப்படாமல், நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கும் நிலைமைகள்பற்றியும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் நாங்கள் தகவல்கள் பெற்றதாக அறிந்துகொண்டு எங்கெங்கே அப்படி நடைபெறுகின்றன என்பதை ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன் இந்த நேரத்தில். அவர்களே குறிப்பிட்டது போல, ஆர்.டி.எல்.எ. இலாகா மூலமாக இவற்றை வேகமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அவை செயல்படுத்தப்படாவிட்டால், மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை இங்குள்ள நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயம் கவனிப்பார்கள் என்ற வாக்குறுதியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம்பற்றிக் குறிப்பிட்டார்கள் இங்கே. கடற்கரையில் ஏற்கெனவே காணாமற்போயிருந்த பிச்சைக்காரர்கள் எல்லாம் மறுபடியும் இப்போது வரத் தலைப்பட்டிருக்கின்றார்கள் என்றும் அவர்கள் எடுத்துக் காண்பித்தார்கள். 'தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் எல்லாம் ஒரு வேளை அங்கேயிருந்து, அவர்களுக்காக வைத்து நடத்தப்படும் இல்லங்களிலிருந்து, வெளியேறிவிட்டார்களோ' என்ற சந்தேகத்தையும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் வேறு சில உறுப்பினர்களும் இங்கே எழுப்பினார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுவேன், அவர்கள் வெளியேறிவிடும் அளவிற்கு அவ்வளவு வசதி குறைந்த இடங்கள் இல்லை அந்த இல்லங்கள். முதலில் அந்தக் கட்டிடங்களின் தோற்றத்தைப் பார்த்தாலேயே நாமும் அங்கே போய் குடியேறிவிடலாமா என்று கவரத்தக்க அளவிற்கு அந்தக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'கட்டிடங்கள் அப்படி இருக்கலாம், ஆனால் வயிற்றுக்கு அப்படிப் போடுகின்றார்களா?' என்று யாராவது கேட்டால், அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவேன், திடீரென்று எந்த நேரத்தில் வேண்டுமானாலும் போய் சோதித்துப் பார்க்கலாம். அங்கே நல்ல உணவு கொடுக்கப்படுகிறது. உணவு மட்டுமில்லை, அங்கெல்லாம் ஒரு கோழி வளர்ப்புப் பண்ணை வைக்கப்பட்டு, அதில் கிடைக்கும் முட்டைகளையெல்லாம், அங்குள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கே உணவாகக் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அங்கே உள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுடைய சிகிச்சைக்காக மருத்துவ மனையும் ஒன்று அங்கே கட்டப்பட்டிருக்கின்றது. இங்கே 'ஜெனரல் ஆஸ்பத்திரியில்' 'ஏ' கிளாஸ் வகுப்பிலே மக்கள் நல்வாழ்வுத் துறையால் தரப்படும் படுக்கைகளைவிட அழகான படுக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன,

திரு. கே. எஸ். அப்துல் வஹாப் : தலைவரவர்களே, அங்கே கொடுக்கப்படும் உணவு அசைவ உணவா அல்லது ....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தக் கவலை வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். கோழி முட்டை சைவமா அல்லது அசைவமா, எதிலே சேர்க்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்குச் சில நேரங்களிலே அசைவ உணவும் தரப்படுகின்றது, சைவ உணவும் தரப்படுகின்றது. அது மாத்திரமில்லை, அவர்கள் நோய் நீங்கி குணம்பெற்று வெளியே வரும் நேரத்தில் அவர்கள் ஏதாவது ஒரு தொழில் செய்வதற்கு உரியவர்களாக, ஒரு தொழில் செய்யத் திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், அங்கே பல தொழில்களும் கற்றுத் தரப்படுகின்றன. விரல்கள் இல்லாமல், சிலர் முன்னங்கை இல்லாமல், சிலர் முன்னங்கையாளவோடு புறங்கை இல்லாது இருக்கும் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு வேறு கருவிகளை அந்தக் கையில் சேர்த்து அதன் மூலம் சில பணிகளைச் செய்வதற்கான பயிற்சிகள் இப்போது அங்கே அளிக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கென தமிழகம் முழுவதும் பத்து கட்டிடங்கள் கட்டிய பின்னர், நாட்டிலுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைப் பிடித்து அங்கே வைப்பதற்கான சட்டத்தினை நிறைவேற்றலாம் என்று இருக்கின்றோம். அவர்களுக்கான ஏற்ற வசதியான இடம் வேண்டும் என்று தான் அந்தச் சட்டம் இப்போது நிறைவேற்றப்படாமலிருக்கின்றது. இது பற்றி சட்ட இலாகா, சட்ட அமைச்சர் அவர்கள் தலைமையில் தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்போது தமிழகத்தில் ஒன்பது பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன. இன்னும் ஒரே ஒரு இல்லம்தான் பாக்கியாக இருக்கின்றது. அந்த இல்லமும் திறக்கப்பட்ட பிறகு, அதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டு, பின்னர் வெளியே திரிந்து கொண்டிருக்கும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் அங்கே கொண்டுபோய் வைக்கப்படுவார்கள். எவ்வளவுதான் வசதிகளைச் செய்து கொடுத்தாலும், சில பிச்சைக்காரர்கள் அதிலிருந்து வரத்தான் செய்கின்றார்கள். அங்கே ஏதோ சிறையில் இருப்பது போன்ற உணர்வோடு, அங்கிருந்து எப்படியும் வெளியே வரவேண்டுமென்று கருதுகின்றார்கள். என்னதான் அவர்களை வசதியோடு உட்கார வைத்து எவ்வளவுதான் சோறு போட்டாலும், சிலர் சொல்லுகின்றார்கள், 'நாலு பேரிடத்தில் கைநீட்டிக் காசு வாங்கி அதில் சாப்பிடும் ருசி இதில் இல்லை' என்று சிலர் அங்கே சொல்லுகின்றார்கள். ஒரு சமயம் நானே அங்கே போயிருந்தபோது என்னிடத்திலேயே குறைபட்டுக்கொண்டார்கள், 'எங்களை இப்படி ஜெயிலில் போடுகிறதைப் போல போட்டிருக்கிறீர்களே', என்று, செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள பாணூர் கிராமத்தில் அமைக்கப்

பட்டுள்ள இல்லத்தில், ஆரம்பத்தில் அப்படிச் சொன்னார்கள். நான் அந்த வழியாகப் போகும்போது, திடீரென்று அங்கே உள்ளே சென்று பார்த்து, அவர்களை விசாரிப்பது வழக்கம். ஆனால், நான் கடந்த இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பு அந்த விடுதிக்குள் சென்றபோது, அவர்களே இப்போது திருந்தி, 'இப்போது நாங்கள் சுகமாக இருக்கிறோம், சந்தோஷமாக இருக்கிறோம்.' என்று சொல்லும் அளவிற்கு அங்கே காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு அவை ஸோஷல் வெல்ஃபேர் டிபார்ட்மெண்ட் மூலமாக கவனிக்கப்பட்டு வந்தாலும்கூட, இவற்றுக்காக தனியாக ஒரு 'ஸ்பெஷல் ஆஃபீஸர்'ஐ போட்டு இந்தப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற அளவிற்கு அரசு ஒரு யோசனையைச் செய்து கொண்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய பணம் வெகுவாகக் குறைக்கப்பட்டதுபற்றியும், இப்போது மறுபடியும் மத்திய அரசு ஒரு தொகையினைத் தர முன் வந்திருப்பது பற்றியும் சொல்லி அந்த நிலையிலும் ரூ. 4,40,000 தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுவேன் : மத்திய அரசு இப்போது மறுபடியும் தருவதாகச் சொல்லும்போது, முன்னர் எவ்வளவு தொகையினைக் குறைத்தார்களோ அதில் ஒரு பகுதியைத்தான் இப்போது தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அது எவ்வளவு என்று திட்டவட்டமாக என்னால் சொல்ல முடியாது. ஆனாலும் ரூ. 4,40,000 என்பது இந்தத் துணை மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள தொகை. இப்போது இதுவரையில் அறுவை சிகிச்சைக்கென இதுவரையில் கொடுத்து வந்த ரூ. 100 கூட இப்போது எங்களால் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். ரூபாய் 60 ஆவது தர வேண்டுமென்று அமைச்சரவையில் முடிவெடுத்து அதற்கேற்ப இப்போது ஏறத்தாழ ரூ. 50 லட்சம் வேண்டும் என்று அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இது அடுத்து வரும் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒப்புதலுக்கு வரும்.

அடுத்து, கரும்பு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் பதில் அளித்திருக்கின்றார்கள்.

நல்ல பல யோசனைகளை எடுத்துச் சொன்ன எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் அவர்களுக்கும் நன்றிகூறி இந்த அளவில் முடிக்கின்றேன், வணக்கம்.

3. 1968-69 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை குறித்த விவர அறிக்கையின் மீது விவாதம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1968-69 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை குறித்த விவர அறிக்கையின் மீது விவாதம்.

உறுப்பினர்கள் யாராவது பேசுகின்றார்களா ?

(ஒருவரும் இல்லை.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை (27—11—73) பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

புதன்கிழமை, 1973 நவம்பர் 28

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Teachers serving in the Corporation of Madras

*135 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that over 1,500 teachers in the service of the Corporation of Madras have not been given increment since 1965 till now;

(b) if so, the reasons therefor; and

(c) whether any steps will be taken to sanction the increments immediately ?

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்கள்

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் 1,500-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு, 1965-லிருந்து இதுவரை ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இதற்கான காரணம் என்ன ?

(உ) உடனடியாக ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அவர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களாக பணிபுரிந்தமையால் அவர்களின் பணியை முறைப்படுத்தும் வரை சம்பள உயர்வு கொடுக்கப்படவில்லை.

(உ) தற்போது 25—8—1965 நாளிலும் அதற்குப் பின்னரும் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆசிரியர்களின் பணி முறைப்படுத்தப்பட்டு விட்டது. மேலும் அவர்களுடைய சம்பள உயர்வையும் நிலுவையையும் பெற்றுக் கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த நகராட்சியில் இன்னும் மாதா மாதம் இன்கிரிமெண்ட் பெறமுடியாமலும், அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகின்ற ஆசிரியர் பதவிகளைப் போடாமலும் இருக்கக் கூடிய நிலைமையை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது பற்றி விவரக் குறிப்பு இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Extension Services Departments attached to Training Colleges

* 136 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of Thiru M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of extension services Departments attached to Training Colleges that have been permitted to continue in 1972-73 in the State;

(*b*) whether there is any variation in the number from that of 1971-72;

(*c*) if so, the reasons therefor; and

(*d*) the number of such Departments proposed to be run during 1973-74?

பயிற்சிக் கல்லூரிகளோடு இணைக்கப்பட்டுள்ள வளர்ச்சிப் பணித் துறைகள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், பயிற்சிக் கல்லூரிகளோடு இணைக்கப்பட்டுள்ள எத்தனை வளர்ச்சிப் பணித் துறைகள் 1972-73 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுமாறு அனுமதிக்கப்பட்டுள்ளன?

(இ) 1971-72 ஆம் ஆண்டில் இருந்ததற்கும், இப்போது இருப்பவற்றிற்கும் எண்ணிக்கையில் வேறுபாடு உள்ளதா?

(உ) ஆமெனில், அதன் காரணம் யாது?

(ஊ) 1973-74 ஆம் ஆண்டில், அதுபோன்ற எத்தனை துறைகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஐந்து.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

(ஊ) இதுபற்றி இன்னும் அரசு முடிவு எடுக்கவில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, பயிற்சிக் கல்லூரிகள் இன்று பயிற்சிப் பணித் துறைகள் நடத்துவதில் அதிக ஆர்வம் காட்டாததால், அதைக் கட்டாயப்படுத்த அரசிடம் திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்பொழுது 7 இடங்களில் நடைபெற்று வருகிறது. அதைக் கட்டாயப் படுத்துகின்ற அவசியம் ஏற்படுமா என்பதைப்பற்றித் தனியாக ஆராய வேண்டும்.

Teaching Staff of the Sainik School at Amaravathinagar

* 137 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of Thiru M. RAJAH IYER): Will he Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the teaching staff of the Sainik School at Amaravathinagar enjoy the same service conditions, leave and retirement benefits as other teachers in the Government Schools; and

(*b*) if not, the reasons therefor?

அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளி ஆசிரியர்கள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான அதே பணி நிபந்தனைகள், விடுப்பு, ஓய்வு நலன்கள் ஆகியவை, அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துமா?

(இ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) அப்பள்ளி இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட வாரியம் ஒன்றின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவ்வாரியம் தன்னுரிமை கொண்டது. அவ்வாசிரியர்களின் பணி நிலைமைகள் போன்றவை அனைத்தும் அவ்வாரியத்தாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது.

Jeeps for the District Educational Officers

* 138 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTHOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether all the District Educational Officers in the State have been provided with jeeps;

(*b*) if not, the number of District Educational Officers who have not been so provided; and

(*c*) the reasons therefor?

மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு ஜீப்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள மாவட்டக் கல்வி அதிகாரிகள் அனைவருக்கும் ஜீப் வழங்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில், இன்னும் ஜீப் வழங்கப்படாமலுள்ள மாவட்டக் கல்வி அதிகாரிகள் எத்தனை பேர்?

(உ) அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) 9 மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு ஜீப் கொடுக்கப்படவில்லை.

(உ) நிதி நிலைமையை முன்னிட்டு, புதிய ஜீப்கார்கள் வாங்குவது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

Contingent Staff

* 139 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to abolish the contingent staff in the erstwhile District Board Schools and Aided Schools and upgrade them as Peons as it has been done in certain Government Services; and

(*b*) if so, the details thereof?

சில்லறை நிதி ஊதியம் பெறும் பணியாளர்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னாள் மாவட்டக் கழகப் பள்ளிகளிலும், மானியம் பெறும் பள்ளிகளிலும், சில்லறை நிதி ஊதியம் பெறும் பணியாளர் பதவிகளை நீக்கி விட்டு, சில அரசுப் பணிகளில் செய்யப்பட்டிருப்பதைப் போல, அவர்களைக் கடைநிலை ஊழியர்களாகப் பதவி உயர்த்த அரசு கருதியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) அரசு (கழக) உயர்நிலைப்பள்ளி (முன்னாள் மாவட்ட மன்ற பள்ளி) களில் நாள் கூலியில் பணி புரியும் சில்லரைச் செலவின ஊழியர்களை (Contingent staff) அரசு பணியாளர் தொகுதிகளில் முறையாக அமர்த்துவது குறித்து செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது. தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரை, அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, நாள் சம்பளமில்லாமல், அடிப்படைச் சம்பளம் ரூபாய் 15-ம் பஞ்சப்படியும் பெறும் சில்லரைச் செலவின ஊழியர்களை முறையாக அமர்த்தும் திட்டம் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 நவம்பர் 28

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விதிகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்த பிறகு, இதுபற்றி முடிவு செய்ய வேண்டும். இப்பொழுது அரசாங்கப் பள்ளிகளில் பணிபுரிகின்ற பிள்ளைத் செலவின ஊழியர்களை—நாள் கூலி பெறுகின்றவர்களைப் பற்றித்தான் அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. வேறு விவரங்களுக்கு தனிக் கேள்வி போடவும்.

Clashes in Katcha Theevu

* 133 Q.—THIRU M. SANKARALINGAM (on behalf of THIRU P. THIRUGNANASAMBANDAM) Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that there was a disturbance in the festival held at the Church in the island of Katcha Theevu during 1973; and

(b) if so, the details thereof ?

கச்சத் தீவில் கலவரம்

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. பி. திருஞானசம்பந்தம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973 ஆம் ஆண்டு கச்சத் தீவில் நடைபெற்ற மாதா கோவில் திருவிழாவில் கலவரம் நடைபெற்றது உண்மையா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) சிறு மோதல்களும், திருட்டுகளும் நடைபெற்றன. 29—3—1973-ல் இராமேச்வரம் மக்களுக்கும், மதுரையிலிருந்து வந்த சிலருக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது. இது குறித்து எங்கும் புகார் செய்யப்படவில்லை. எனவே, நடவடிக்கை எதுவும் எவராலும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கச்சத் தீவுப் பிரச்சினை குறித்து கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன். ஒரு கேள்விக்கு பதில் தயாரிப்பதற்கு ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஒரு துணைக் கேள்வி கூட கேட்கப்படவில்லை. ஒரு ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டு—நிதி அமைச்சர் பொறுப்பிலும் நான் இருக்கின்ற காரணத்தால்—கஷ்டப்பட்டு இந்தக் கேள்விக்கு விவரம் சேகரித்து பதில் தயாரித்ததால், ஒரு துணைக் கேள்வியும் கேட்காததால், நான் மிகவும் வேதனைப்படுகிறேன்.

3 நவம்பர் 28]

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, we cannot spend a thousand rupees by supplementing the question.

MR. CHAIRMAN : You are asking question after question without minding the expenses.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தத் தீவு இந்திய நாட்டோடு சேர்ந்த பகுதியா, சிலோன் நாட்டைச் சேர்ந்ததா என்ற ஒரு பிரச்சினை இருந்தது. அதைப்பற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசு எழுதியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பிரதம மந்திரி அவர்கள் இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு டெல்லிக்குத் திரும்பிய பின்னர், தமிழக அரசு சார்பில் பிரதம மந்திரி அவர்களைச் சந்தித்து இந்த கச்சத் தீவு விவகாரம்பற்றிப் பேசியிருக்கிறோம். இது இந்திய அரசுடைய பட்டியலின் வெளி விவகாரத் தொடர்பான விஷயமாக இருக்கிறது. அவர்கள் இலங்கை அரசோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் அங்கே நடைபெறுகின்ற புனித அந்தோனியார் விழாவுக்கு தமிழ் நாட்டிலிருந்தும், இலங்கையிலிருந்தும் பொதுமக்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இடையூறு இல்லாமல் அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது.

திரு. C. ராஜாராம் : தலைவரவர்களே, மதுரையில் இருப்பவர்களும் ராமேஸ்வரத்திலிருப்பவர்களும் சண்டை போட்டுக்கொள்வதற்கு கச்சத் தீவைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ன? கச்சத் தீவும் தமிழ் நாட்டின் ஒரு பகுதி என்று சொல்லப்படுவதாலே, இந்தத் தீவுக்குப் போகாமலேயே, உள்நாட்டிலேயே அந்தச் சண்டையைப் போட்டிருக்கலாமே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சண்டைக்கு கச்சை கட்டிக்கொண்டு கச்சத் தீவுக்குப் போக வேண்டும் என்று போயிருக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ராமநாதபுரம் மன்னருக்கு உரிமையான பகுதி என்று சொல்லப்பட்டு வந்ததே, அது ஆராயப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அந்த அடிப்படையில்தான் தமிழ் நாட்டு மக்கள் உணர்ச்சி பூர்வமாக அந்தத் தீவுக்கு உரிமை கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீவு ராமேஸ்வரத்திலிருந்து 12 மைல் தொலைவிலும், ஸ்ரீலங்கா-தலைமன்னாரிலிருந்து 18 மைல் தூரத்திலும்

இருக்கிறது. அப்பொழுது சேதுபதி மன்னருக்குச் சொந்தமான தீவு என்ற அடிப்படையில்தான் நாம் உரிமை கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும் அதனுடைய முடிவை மேற்கொள்கின்ற பொறுப்பை மத்திய அரசிடம் மாநில அரசு விட்டு வைத்திருக்கிறது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்தக் கச்சத் தீவில் இருக்கும் இலங்கை மக்களுக்கும் நம் தமிழர்களுக்கும் ஏதோ முன்னால் சச்சரவு ஏற்பட்டது என்று கூறினார்கள். அங்கே வாழக்கூடிய மக்கள் தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அங்கே மக்கள் குறைவுதான். ஆனால் அங்கே நடைபெறுகின்ற விழாவுக்குச் செல்கின்றபோது, என்னிடம் உள்ள குறிப்பின்படி, இலங்கையைச் சேர்ந்தவர்கள் 4,000 பேர், இந்தியாவைச் சேர்ந்தவர்கள் சுமார் 10,000 பேர் இந்த ஆண்டு கூடியிருந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு இலங்கையைச் சேர்ந்தவர்கள் 5,000, இந்தியாவைச் சேர்ந்தவர்கள் 6,000 பேர் என்று தெரிகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, கச்சத் தீவின் விஸ்தீரணம் என்ன? அங்கு போக பாஸ்போர்ட் தேவையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கச்சத் தீவு சுமார் 70 ஏக்கர் பரப்பளவு உள்ள ஒரு சிறிய தீவு ஆகும். அங்கு செல்ல பாஸ்போர்ட் தேவையில்லை.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, with so many supplementaries, the price of the question has been reduced.

Complaints from the Land Owners of Vilakkudi Village to the Sub-Inspector of Police, Thiruthuraipoondi

* 134 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Sub-Inspector of Police, Thiruthuraipoondi, Thanjavur District, has received complaints from land-owners during January 1973, regarding the unlawful trespass by miscreants on their vacant sites at Vilakkudi Village; and;

(*b*) if so, the action taken thereon?

விளாக்குடி நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து திருத்துறைப்பூண்டி காவல் துறை சப்-இன்ஸ்பெக்டருக்குப் புகார்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், விளாக்குடியிலுள்ள, தங்களுக்குச் சொந்தமான காலி மனைகளில் போக்கிரிகள் சட்டத்துக்குப் புறம்பான முறையில் நுழைந்து ஆக்கிரமித்தது பற்றி, 1973 ஜனவரியில் சொந்தக்காரர்களிடமிருந்து, தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி காவல் துறை சப்-இன்ஸ்பெக்டருக்குப் புகார்கள் வந்துள்ளன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இரண்டு மனுக்கள் வரப் பெற்றன.

(இ) இவ்விரண்டு மனுக்கள் பற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பான நகரா நீதிமன்றத்தில் தீர்வு காணப்படவேண்டிய சிவில் தன்மை வாய்ந்த தகராறாகும். எனவே, இதையொட்டி காவல்துறையினர் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை. இவ்வாறு மனுதாரருக்குத் தெரிவிக்கப் பட்டது.

Research into the Pearl Oyster

* 140 *Q.*—THIRUVALARGAL V. ISVARMURTI AND S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether any research into the Pearl Oyster has been undertaken in this State; and

(*b*) if so, the details thereof?

முத்துச் சிப்பி குறித்து ஆராய்ச்சி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி & திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: மாண்புமிகு அரிஜன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் முத்துச் சிப்பி குறித்து ஆராய்ச்சி ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(ஆ) குருசடையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் கூண்டுகளில் முத்துச் சிப்பிகளை வளர்த்து செயற்கை முறையில் முத்துக்களை உருவாக்குவதன் மூலம் முத்துச் சிப்பிகள் குறித்து சில ஆராய்ச்சிப் பணிகள் நடத்தப்பட்டன. மாநில மீன்வளத் துறையின் வரையறுத்த நிதிவசதியின் காரணமாகவும் சோதனைகள் சிறு அளவில் தான் நடத்தப்பட்டதாலும் இப்பணியில் அதிக முன்னேற்றம் காணப்படவில்லை. முத்துக் குளித்தல் தமிழ்நாட்டின் சிறப்புகளில் ஒன்றாக இருந்து வருவதால், முத்துச் சிப்பிகள் குறித்து முறையான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கான தேவையும், செயற்கை முறையில் முத்து வளர்த்தலின் அவசியமும் பலராலும் உணரப்பட்டு வருகிறது. எனவே, முத்துச்சிப்பி முத்து வளர்த்தல் குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு பிரிவாகிய கடல் மீனள ஆராய்ச்சி மத்திய நிறுவனம் அடங்கல் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இது கடல் மீனள மத்திய ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை ஆகியவற்றின் கூட்டுத் திட்டமாகும். இத்திட்டத்திற்கு ஒப்பளிக்கும் தொகையும் திட்ட உச்சவரம்பிற்கு மேல் தனது பங்கை வழங்குவதாகவும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திற்கு எழுதிக் கேட்கப்பட்டது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திற்கு ரூ. 8,10,520-க்கு மேற்படாத செலவில் 1—4—1973-ம் நாளிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த அக்கழகம் தனது ஒப்பளிப்பைத் தற்போது வழங்கியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, வெளி நாடுகளிலே, அதுவும் குறிப்பாக ஜப்பான் நாட்டிலே, செயற்கை முறையிலே முத்து தயாரிக்கிற பணி மிக நல்ல முறையிலே நடைபெற்று வருகிறது. அங்கு சென்று, அதைப் போய்ப் பார்த்து, எப்படிச் செய்கிறார்கள் என்பதை அறிந்து நம்முடைய நாட்டிலே அதைப் போல், செயற்கை முத்து தயாரிக்கக்கூடிய வழி முறைகளை அரசு பின்பற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, ஜப்பான் சென்று திரும்பிய ஒருவர்தான் குருசடையில் இருந்து இந்த ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறார்.

Settlement of Burma Tamilians in Andamans

* 141 Q.—THIRU M. SANKARALINGAM (on behalf of THIRU P. THIRUGNANASAMBANDAM): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that the Hon. Minister had visited the Andamans regarding the settlement of Burma Tamilians there (Repatriates); and

(b) if so, the details thereof?

பர்மா தமிழர்களை அந்தமானில் குடியேற்றுதல்

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. பி. திருஞானசம்பந்தம் சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பர்மா தமிழர்களை (அகதிகள்) குடியேற்றுவது சம்பந்தமாக அந்தமானுக்கு அமைச்சர் சென்று வந்தது உண்மையா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அந்தமான்-நிக்கோபார் தீவுகளுக்கு 1971 நவம்பரில் சென்று வந்தது உண்மைதான். ஆனால் பர்மாவிலிருந்தும் ஸ்ரீலங்காவிலிருந்தும் வரும் அகதிகளைக் குடியேற்றும் திட்டங்களை வகுப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காகவே இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) இவ்வாறு சென்று பார்த்ததன் பிறகு, இவ்வரசு கேட்டுக் கொண்டதன் பேரில், இந்திய அரசு, அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் மலைத் தோட்டங்களிலும் வேளாண்மைத் தொழிலிலும், ஸ்ரீலங்காவிலிருந்து வரும் மேலும் பல குடும்பங்களைத் தேர்ந்தெடுத்துக் குடியமர்த்த ஒப்புக்கொண்டுள்ளது.

Code of Conduct for the Members of the Judiciary

* 142. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any code of conduct for the members of the Judiciary both at the State and District levels; and

(b) if so, the details thereof?

நீதிபதிகளுக்கு தனிப்பட்ட நடைமுறை விதிக்கோவை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உள்ள நீதிபதிகளுக்கு என்று தனிப்பட்ட நடைமுறை விதிக்கோவை ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) உயர்நீதிமன்ற நீதிபதிகள் நீங்கலாக, மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் உள்ள நீதித் துறையைச் சேர்ந்த நீதிபதிகள் முதலானவர்களுக்கு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள் பொருந்தும். உயர்நீதிமன்ற நீதிபதிகளைப் பொறுத்தவரையில், நடத்தை பற்றிய விதிமுறைக் கோவை எதுவும் எழுத்து வடிவில் இல்லை.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, if the Subordinate Judicial Officers in the district contravene even some of the salient provisions of the Tamil Nadu Government Servants' Conduct Rules, could the Government take action on the same? Suppose they contravene the provisions of the Tamil Nadu Government Servants' Conduct Rules; have the Government power to take action on it?

THE HON. THIRU S. MADHAVAN : Mr Chairman Sir, the procedure followed is that we recommend to the High Court, and after suitable action is taken by the High Court, the matter comes for the final approval of the Government.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, as matters stand today there is difficulty for the people to make things known to the Government. Even though the Subordinate Judicial Officers contravene the provisions of the Government Servants' Conduct Rules in cases where people may think of giving information either to the Hon. the Minister for Law or to the Hon. the Chief Minister, they are afraid that they may be liable for action under the Contempt of Courts Act. May I know, Sir, whether this is the correct position?

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, that is not the correct position. If anybody violates any of the Rules, it will not attract contempt proceedings. For violation of any of the rules, we will certainly take action.

V211, 32 'N73
N74-11232
63104

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, what the learned Member meant is this. Under the Contempt of Courts Act, 1971, there is a provision that any complaint or any such thing made in respect of a Judicial Officer should be made to the High Court, or even in relation to the High Court, to a higher authority; otherwise, it would be contempt. Probably, he is referring to that.

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, that is why I answered that we would always forward it to the High Court, the High Court would take action and it would come up to the Government for final approval. That is the procedure we follow now. I do not think anybody cannot take action for violation of any of the laws. Even if he be a Judicial Officer, we cannot forgo the action to be taken against him.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I bring to the knowledge of the Government the case of a Judicial Officer at Thanjavur against whom the people of that place are wanting to submit a petition to the Government— both to the Hon. the Chief Minister and also to the Hon. the Minister for Law? They are being threatened that under the Contempt of Courts Act, 1971, any petition against a Subordinate Judicial Officer can only be given to the High Court and that if it is given to the Hon. the Chief Minister or the Hon. the Law Minister, the petitioners will be hauled up under the Contempt of Courts Act. If that is the position, Sir, I think the Government would be very helpless and the people also would be very helpless in taking action in the matter.

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, the Members of the Assembly and the Council have got every right to complain against anybody and we will take action. Already, we have got petitions; we are enquiring into them; we will forward the petitions to the High Court for suitable action.

[1973 நவம்பர் 28

Workers' General Provident Fund

* 143 *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the step taken by the Government to obtain the permission of the Provident Fund Department of the Government of India to receive the unpaid advance amount requested by the labourers from their G.P.F. account in view of their irregular monthly income as a result of the power-cut; and

(*b*) the date by which the sanction for the same will be obtained?

தொழிலாளர்களின் க்ஷேம நல நிதி

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மின்வெட்டு காரணமாக, மாத வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், தங்களது க்ஷேம நல நிதியிலிருந்து திருப்பித் தரப்படாத முன்பணம் வேண்டுமென்று கேட்டிருந்த தொகை கிடைக்கப் பெறுவதற்கு மத்திய அரசின், மத்திய பிராவிடெண்ட் பண்ட் துறையின் அனுமதி பெற, அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

(இ) இதற்கான ஒப்புதல் எப்போது கிடைக்கும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இதுகுறித்து இவ்வரசு மத்திய அரசை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தில் ஏற்ற மாறுதல் செய்யும்படி கேட்டிருந்தது. ஆனால் இந்த முன்பணம் மின்வெட்டு நீக்கப்பட்ட பிறகு சம்பளத்திலிருந்து பிடிக்கப்படலாம் என்று கூறியிருந்தது.

(இ) இவ்வரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க மத்திய அரசு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தில் 68 என்ற ஒரு, புதிய பத்தியைச் சேர்த்துள்ளது. அதன்படி மின்வெட்டினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சில குறிப்பிட்ட நிபந்தனைக்குட்பட்டு ரூ. 200 திருப்பித்தரப்படாத முன்பணம் வழங்கப்படலாம்.

திரு. காட்டூர் கோபால்: தலைவர் அவர்களே, இவ்விதம் முன்பணம் பெறுவதற்கு ஆலை அதிபர்கள் நிர்வாகத்திடம் அளித்து அவர்களும் பூர்த்தி செய்து அனுப்புகிற வகையில் இதற்கான முறைகள் அமைந்துள்ளதால், தொழிலாளர்களுக்குத் தொகை கிடைப்பதில் தாமதம் ஆகிறது. இதனைத் தவிர்த்திடுவதற்கு இந்த அரசு மத்திய அரசுக்கு அறிவித்து ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்வதுடன், ஆவன செய்யுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி, மத்திய அரசுக்கு இதுபற்றி எழுதியிருக்கிறோம். அதிலேயிருந்து தகவல்கள் வந்தவுடன், அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Location of Labour Offices under one roof

* 144 *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have received representations from the Coimbatore and Madras Labour Officers requesting the Government to make arrangements for the location of the offices of the Deputy Commissioner of Labour, Labour Officers and Industrial Tribunal under one roof; and

(*b*) if so, the action taken thereon by the Government?

ஒரே கட்டிடத்தில் தொழில் துறை அலுவலகங்கள்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிலாளர் துணை ஆணையாளர் அலுவலகம், தொழில் அதிகாரிகள் அலுவலகம், தொழில் நீதிமன்றம் ஆகியவைகள் அனைத்தும் ஒரே கட்டிடத்தில் அமைகிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று, அரசுக்கு, சென்னை, கோவை ஆகிய இடங்களிலிருந்து முறையீடுகள் ஏதேனும் வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) பரிசீலனையிலுள்ளது.

திரு. காட்டூர் கோபால்: தலைவர் அவர்களே, சென்னையில் இண்டஸ்டிரியல் டிரிபியூனல் உயர்நீதி மன்றத்தில் அமைந்துள்ளது. அதே போல் தொழில் நீதி மன்றம் சேத்துப்பட்டில் அமைந்துள்ளது. இது தொழிலாளர்களுக்கு பாதகமாக உள்ளது. தொழிலாளர் துறை அலுவலகங்கள் மைலாப்பூரில்

அமைந்துள்ளன. இந்தத் தொல்லைகள் நீங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து இவற்றை ஒரே இடத்தில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இதைப் பரிசீலித்ததில், சென்னையிலே வேறு இடம் கிடைப்பது கடினமாக இருக்கிறது. கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில், ஜெயிலிலே இருக்கிற இடத்தில் இப்படி ஒரு கட்டிடம் கட்டலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மற்ற இடங்களும் அரசு பரிசீலனையில் இருக்கின்றன. சென்னையிலே தக்க இடம் கிடைத்தவுடன், இதுபற்றி ஆலோசிக்கலாம் என்று அரசு இருக்கிறது.

Bamboo for Paper Mills

*145 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the details of the paper mills to which bamboo was sold by the Forest Department during 1970–71 and 1971–72;

(*b*) the quantity supplied;

(*c*) the rates at which bamboo was supplied; and

(*d*) the amount for which it was supplied?

காகித ஆலைகளுக்கு மூங்கில்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளில் வனத் துறை, எந்தெந்த காகித ஆலைகளுக்கு மூங்கில் விற்றது என்பது குறித்த விவரங்கள் யாவை?

(இ) வழங்கப்பட்ட அளவு யாது?

(உ) மூங்கில் எந்த விலை வீதங்களில் அவற்றிற்கு வழங்கப்பட்டது?

(எ) எவ்வளவு தொகைக்கு வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) மாநில வனத் துறை மூங்கிலை, ஈரோடு பள்ளிப்பாளையத்தில் உள்ள சேஷசாயி காகிதம் மற்றும் அட்டை நிறுவனத்திற்கு விற்றுள்ளது.

(இ) 1970-71-ல் 56,000 மெட்ரிக் டன், 1971-72-ல் 54,000 மெட்ரிக் டன்.

(உ) ஒரு மெட்ரிக் டன் உலர்ந்த மூங்கிலுக்கு உரிமை வரி ரூ. 11. ஒரு மெட்ரிக் டன் மூங்கிலை வனத் துறை வெட்டித் தந்தால், வெட்டுக் கூலி வகையறு ரூ. 30.

(எ) 1970-71-ல் ரூ. 4,46,000, 1971-72-ல் ரூ. 5,24,000.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, தற்போது காகிதத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதனால், இந்தக் காகிதத்திற்கு மூலப்பொருளாக இருக்கிற மூங்கிலை அதிகமாக நாடு மாநிலக் காடுகளில் வளர்ப்பதற்கு ஒரு டெவலப்மென்ட் திட்டம் வகுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யலாம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது சேஷசாயி பேப்பர் மில்லிலே உற்பத்தியாகிற காகிதத்திலே ஒரு ஷிஃப்டிலே தயாராகிற காகிதத்தை ஒரு பத்திரிகை நிறுவனம் பெற்றுக்கொண்டு வருகிற ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும், ஆதலால் இன்னொரு ஷிஃப்டிலே உற்பத்தியாகக்கூடியதுதான் மார்க்கெட்டிற்கு வருவதாகவும், இதனால் காகிதத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் பல செய்திகள், இன்று நான் கடைகளுக்குச் சென்றபோது தெரியவந்தது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, அது தனிப்பட்ட கம்பெனியின் விவகாரம். அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ஆனால் அரசாங்கத்திற்குத் தேவையான காகிதத்தைக் கொடுக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் இருக்கிறது.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, இந்தக் காகித மில்களுக்கு சப்ளை செய்வதற்கு மரத்தை வெட்டும்போது, வேர்களையே தோண்டி விடுவதால், இந்த மூங்கில் மரமே அழிந்துவிடும் நிலை வட ஆற்காடு மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதை டன் ஒன்றுக்கு என்ன விலைக்கு அரசாங்கம் கொடுக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, பேசுகின்றபோது வேலையைச் சேர்த்து சொல்லக்கூடாது. மேலே இருக்கும் சுங்கிலத்தான் வெட்ட வேண்டும். அரசுக்கு ஒரு டன்னுக்கு ரூ. 11 என்று வைத்திருக்கிறோம். முன்பு ரூ. 6½ ஆக இருந்ததை சமீபத்திலேதான் ரூ. 11 என்று ஆக்கியிருக்கிறோம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, இது எவ்வளவோ அதிகம். அங்கெல்லாம் டன் ஒன்றுக்கு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. வி. வெங்கா : தலைவர் அவர்களே, காகிதத் தட்டுப்பாடு நாட்டிலே இருக்கிற காரணத்தாலே, அரசுத் துறையிலே காகிதத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இதற்கான தீவிர முயற்சியை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

Lac

* 146 *Q.*—THIRU V. ISWARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government have taken any steps to boost the export market for Lac produced in the State; and

(*b*) if so, the details thereof?

அரக்கு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிற அரக்கின் ஏற்றுமதியைப் பெருக்க நடவடிக்கைகள் ஏதாவது அரசு மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) நம் மாநிலத்தில் வனத் துறையால் மட்டுமே அரக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் அரக்கு நம் மாநிலத் தேவைகளுக்குச் சரியாக இருக்கிறது. மேலும், அரக்கு உற்பத்தி செய்வதற்குப் போதுமான இடவசதியும் சீதோஷ்ண வசதியும் நமது மாநிலத்தில் இல்லை என கூறப்படுகிறது.

(ஆ) இதற்கு இடமில்லை.

Coal for the Tamil Nadu Electricity Board

* 147 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Electricity Board have come to any agreement with the Ministry of Shipping of the Union Government for transporting coal from other States to this State; and

(*b*) if so, the details thereof?

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலக்கரி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேறு மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்திற்கு நிலக்கரியைக் கொண்டு வர, இந்திய அரசின் கப்பல் போக்குவரத்து அமைச்சகத்துடன், தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்பந்தம் ஏதும் செய்து கொண்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(ஆ) நிலக்கரியைப் பிற மாநிலங்களிலிருந்து எடுத்துவர எந்தெந்த கப்பல் நிறுவனங்களிடமிருந்து கப்பல்களைப் பெறவேண்டும் எனக் குறிப்பிட்டுக் கப்பல் நிறுவனங்களை பம்பாயில் உள்ள கப்பற் போக்குவரத்துத் துறை இயக்குநர் தலைவர் ஒதுக்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட கம்பெனிக்கும் மாநிலத்திற்கும் ஒப்பந்தம் ஏற்படவேண்டும்.

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, may I know, Sir, whether there is any proposal before the Tamil Nadu Government to purchase collieries to bring coal from West Bengal to Tamil Nadu for the thermal plants?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, சமீபத்திலே நமக்கு கப்பல் போக்குவரத்துக் கார்ப்பரேஷன் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இப்பொழுது பெண்ட்-ஹைன் ஸ்டீம் ஷிப்ஸ் கம்பெனி என்ற தனியார் கம்பெனி மூலமாக ஏற்றி வருவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு மூலமாகவே கப்பல் வாங்குவதற்கான முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, may I know what is the annual requirement of coal at the Ennore Thermal Station?

[1973 நவம்பர் 28

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆந்திராவிலிருந்து நமக்கு 75,000 டன் வரவேண்டியிருக்கிறது. அதிலேயே 60 அல்லது 65 ஆயிரம் டன்தான் வருகிறது. ஒரு நாளைக்கு 25,000 டன் நிலக்கரி தேவைப்படுகிறது. எந்த அளவுக்குத் தேவைப்படுகிறதோ அந்த அளவைத் தான் கொடுக்கிறார்கள் என்றில்லை. கிடைக்கிற அளவைப் பொறுத்து எல்லா பாகங்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடம்பெற்றிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(1) ஆளுநரிடமிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have received messages from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1973 and the Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1973.

(2) பேரவையிலிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly transmitting copies of the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1973 (L.A. Bill No. 35 of 1973) and the Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1973 (L.A. Bill No. 36 of 1973), as passed by the Legislative Assembly, and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India.

3. அரசின் சட்ட முன்வடிவுகள்

(1) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1973)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1973) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 222-224 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 நவம்பர் 28]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1973) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, not having been able to participate in the debate on the Supplementary Demands, I am grateful to you, Sir, for giving me a few minutes to speak on this occasion, on the Appropriation Bill.

Sir, our country is passing through a very critical stage and especially during the past eight or nine months, due to the drought 4-20 பி.ப.
in the northern parts of India, which has had very severe repercussions on the availability of commodities and prices all over India, and in certain cases in our State also. Sir, though the drought was not so pronounced in Tamil Nadu because we had a very good monsoon last year, unfortunately, because the reservoirs of our hydro-electric projects as well as the reservoirs of the hydro-electric projects in the neighbouring States did not receive their full supply of water, there was a very serious power shortage and Tamil Nadu was particularly hard hit by a 75 per cent cut in the availability of power. That has had a disastrous effect, as some of us anticipated, on the availability not only of agricultural raw materials but also of finished goods, industrial raw materials, machinery and other things. Therefore, we find that during the past one year, the inflation that has overtaken our country has reached such proportions that the very existence of our economy is in danger. Not many, Sir, have realised or perhaps those who have realised have not found it necessary to stress, that far more disastrous than the shortages that have overtaken us because of the disastrous drought and power-cut, has been the inflationary policy followed by the Government of India and more particularly by the Finance Ministry, when it has resorted to deficit financing amounting to over Rs. 1400 crores during the past 14 months. I am sorry, Sir, that the public are often being misguided as to the real reasons for the disturbing economic situation in our country today, and I would like to take this opportunity of requesting our Government, to the extent that it is possible within their power,

to contain this wretched inflation which, if it is allowed to continue, will not only mean the imposition of fresh taxes in the Budget for 1974-75—I suppose the Hon. the Finance Minister is already working on such a proposal—but will also result in the entire Five-Year Plan being thrown out of gear. Though this is not a matter over which the Government of Tamil Nadu have full control, I would still like to take this opportunity of stressing that it is vitally necessary.

Sir, it is necessary that in our State, more attention must be paid to dry farming and particularly to the production of agricultural commodities, although we are in a very happy position in so far as paddy production in terms of rice is concerned. Looking at the figures that have been published in this excellent pamphlet that has been brought out by the Finance Department—the Statistical Review as well as the Statistical tables—, there can be little doubt that if there is one State in our country which has countered the serious inflation that has taken place in the prices of foodgrains, it is Tamil Nadu which has registered a phenomenal growth in the production of paddy referred in terms of rice production. The production in 1964-65 was as low as 33.5 lakhs tonnes, while today it is of the order of 53 lakh tonnes and if today, Sir, our people are still able to buy rice at very much cheaper rates than what they are in Kerala, West Bengal and even Andhra Pradesh, not a little of it is due to the tremendous efforts that have been put in by the Government of Tamil Nadu, the Electricity Department, the Agricultural Department, as well as our farmers, in seeing that paddy production at least registers a very considerable increase. Unfortunately, while it is true that Government have devoted a great deal of attention to this particular aspect, I am afraid, the same degree of attention has not been paid to another very important sector of the agricultural economy, namely, the production of oilseeds. Sir, almost 60 per cent to 65 per cent of our State consists of dry lands. If we set our mind to it, we can produce enough oilseeds, particularly groundnut and gingelly. While the production of groundnut in 1962-63 was of the order of one million tonnes, it is less than a million tonnes in the year 1971-72, the year for which the statistical tables have been given. Similarly, in the case of

gingelly, the production was 42,000 tonnes in 1962-63 and it still remains at the same 42,000 tonnes in 1971-72. I have read, Sir, in the Budget proposals of many ambitious schemes and I am only stressing this aspect to say that edible oils play a very important part in the household budget of any person earning less than Rs. 500 a month. In fact, his average consumption in terms of money is over 75 per cent of the salary, in purchase of foodgrains, edible oils and other articles required for food such as vegetables, etc. I would, therefore, like to take this opportunity of stressing on the Government and particularly the Hon. the Minister for Agriculture who is not here at the present moment, the vital need to take active interest not merely in the production of paddy where we have achieved very good success, but also in such fields which have been neglected in the past and which should not continue to be neglected in the future.

Sir, referring to District Administration, may I refer to a subject which is directly within the purview of our Hon. Chief Minister? I think he is in charge of District Administration also. May I refer to some difficulties that all of us are experiencing in the functioning of our District Treasuries? Sir, the Treasury Code was, I suppose, formulated almost 70 or 80 years ago and when the Treasury Code was formulated, it was done so with a view to keeping a very strict control over Government expenditure and seeing that there was no fraud or defalcation from the Government Treasuries. But, in my opinion, the Madras Treasury Code is today an out-dated document and requires a complete and thorough overhaul of its entire rules and regulations. I have received complaints, Sir, not only from businessmen and traders in vast numbers, but even from Government officials themselves, that when they have to draw their own salary bills and travelling allowance bills, the District Treasury Officers, unftrunately, interpret the rules in such a way that these contingent bills are returned more than once to the officers concerned. Not only are they not able to draw their salaries in time but they are also unable to draw their travelling allowance and what is far worse is that the rules seem to be so water-tight and strict that I have heard of cases where even Government officers have had to grease the palms of Treasury Officers to get their bills passed. The matter has

reached such a staage where many of us have refused to receive contingent bills for payment—I have to confess, though it is not a nice thing to say of one's Government. The way in which our Treasuries are functioning, I think, requires review and I would request the Hon. the Chief Minister to consider this, especially in view of the changed conditions that exist today. Forty or fifty years ago the Treasuries were possibly handling only about one-hundredth of the money they are handling now. Today, our State Budget is of the order of Rs. 450 crores and transactions run to thousands of crores of rupees. The Treasuries are now ill-equipped or possibly they are under-staffed. We have many commercial banks which have now been nationalised. Perhaps, Sir, if the workload is so heavy that it could not be handled by the Treasuries, the Finance Ministry may consider the transfer of workload to the Nationalised Banks, so that some efficiency could be brought about in the financial administration.

பி.ப.
4-30 There is another matter also to which I would like to refer briefly and that is in respect of Tourism which subject is handled by the Hon. the Education Minister, if I am not incorrect. Very recently I was in Kodaikanal and I was happy to find that our Government had acquired a very nice property for the development of tourism, namely, the former Y.M.C.A. Hill at a comparatively inexpensive price and they are doing everything possible to develop tourist cottages for the benefit of the middle class tourists. It is very essential because in these days of difficult air travel, we will have to develop tourism within the country to a greater extent than tourism from abroad. These steps are in the proper direction. I would, however, make a request through the Hon. Minister to the Tourism Development Corporation that in putting up such structures, there is a vital necessity for blending the natural habitat of these tourist resorts and not bringing in cement concrete structures which are entirely unsuited to such places. Even if cement concrete structures have to be put up, I would like to suggest that even if the Government do not have proper Town Planners and Architects under their employment, they might perhaps have an advisory council of architects and town planners to advise them on the construction of tourist resorts, so that they might blend with the natural atmosphere of a hill statitn. One sees in the structures that have been

put up in Kodaikanal open balconies, verandahs where people will never sit because it is very cold and such types of structures will be suitable to the climate in plains. I can only say that the stereotyped designs that are being prepared by our Public Works Department are totally unsuited to the hill station and tourist cottages. On the other hand, the huts at Mahabalipuram have been designed with great architectural skill. I, therefore, think that it would be worth while to have architects who have some knowledge of such things so that the aesthetic value would not be lost and we will not be faced with terrible structures which are totally unsuited to tourist resorts. Going round the lake in Kodaikanal, I think, the one that strikes at one's eyes is a public lavatory that has been constructed in front of or very near Jawaharlal Nehru's statue. This public toilet could have been constructed in a way that it would blend with the hill-side so that it would not be visible to the persons who are going round the lake. Unfortunately, it is not so and I canno understand why it was so constructed, because I have always believed in the cultural appreciation of such things by the Tamilians. These things that have been done in Tourist Resorts are incongruous and completely out of place and I would request the Hon. the Minister for Tourism to see that especially in such places where we have a lot of tourists, care is taken to see that aesthetic harmony also prevails.

Sir, one more word and I have done, and that is in relation to the supersession of the Madras Corporation. I did not participate in the discussion on that Bill. One thing that struck me during that discussion was the smile on the face of the Minister when he introduced that Bill. I was surprised, because such a Bill should have been introduced with tears. For 110 years, the Madras Corporation has been in existence; for the first time in the history of Tamil Nadu and for the first time in the history of our Corporation, the Corporation has been superseded. All that the Minister had to say yesterday was that this had been done and he did not explain the reason for that. But, we are able to read between the lines. I do not want to refer to any charge, excepting to say that what has happened is a grievous matter which has brought bad reputation not only to the Corporation of Madras but also to every Tamilian in our State. There

are Corporations where bigger swindles are taking place even today. I was Chairman of my own town—Cuddalore Municipality, and the muster roll scandal is not a new thing. It has been in existence in all the Municipalities. I think the Hon. Thiru Shanmugham who was Chairman of Tiruvannamalai Municipality would have faced the same situation. I had been often told by the Councillors of my Municipality about that. We did not have an Electricity Department to play humbug. But we had our Sanitary Department which was equal to that department in such matters and it was an established fact that when the muster roll of the conservancy workers was taken at 5-30 in the morning in every sanitary division, 20 or 30 conservancy workers would be asked to go on leave and, these 20 or 30 workers would be put on a muster roll and the amount that was paid as wages would be drawn by the Sanitary Staff although fortunately not shared with the Municipal Councillors. I am sorry to refer to all these things of the past. I am very much shocked that this premier Corporation should have been brought to such a situation. The only thing I want to say is that we are not bothered about having elections to the Madras Corporation at the present moment. I would not mind, Sir, although I was a member of a local authority, of a local body and I am proud of my civic administration, even if the Madras Corporation is superseded for two years, if it is necessary, because we must get to the bottom of the fraud, the huge fraud that has taken place in this institution. I do not wish to mention the names of individuals and I am not aware of them. But I understand from reliable quarters that a number of people entirely unconnected with the official administration of the Corporation are involved in this racket. My only fear is that if we have an election to the Corporation, these people who are involved in the racket will frighten the Corporation employees and we will not be able to get any tangible evidence of the huge fraud that has possibly taken place. That is not the only thing. Sir, I would request the Government, especially in the conditions that prevail today, to realise that the Government are giving large amounts to the Corporation for the improvement of roads, for town planning work and for the running of primary schools and, therefore, it may be necessary for the State Government to have an officer of their own from the Finance Department to act as an Audit Officer in the Corporation so that such malpractices may

be prevented in the future. I would only like to add that so far as I am concerned, although I am vitally interested in the local administration, no election should be held to the Corporation now. I know political parties may try to bring home the advantage and say that this Government are afraid of facing the election. I cannot understand such a charge against this Government, because I have recorded very few instances of a party-Government superseding its own party administration in a local body. It requires courage to do it openly and I congratulate the Government on their courage and at the same time, I would like to request the Government to see that the entire fraud is brought out, so that the tax-payers' money need not be unnecessarily wasted in this sort of huge scandal which has not only brought loss to the Corporation but has brought shame and loss of prestige to every Tamilian in our State. Thank you, Sir.

திரு. க. அறிவழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1973-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது ஓரிரண்டு கருத்துக்களைச் சொல்லுவதற்கு அனுமதி தந்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ் நாடு அரசு விரைந்து பல நன்மைகளைச் செய்துகொண்டிருக்கின்றது. அந்த நன்மைகளை சில துறையினருக்கு மிக வேகமாகவும் வேறு சில துறையினருக்குக் கொஞ்சம் காலம் தாழ்த்தும் கொடுக்கின்ற காரணத்தால், பொதுவாக அரசுத் துறையிலிருந்து தொடர்ந்து பல்வேறு துறைகளிலும் பணியாற்றுகின்ற ஊழியர்களிடத்தில் கருத்து மாறுபாடுகள் ஏற்படுகின்றன. நமது அரசுத் துறையில் வேலை செய்கின்ற, பள்ளிகளில், பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கின்ற அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள், விவசாயத் துறை அலுவலர்கள், கல்லூரி துணைப் பேராசிரியர்கள் ஆகியவர்கள் அரசிதழ் பதிவு உரிமை அளிக்கப்பட்டோர்கள், அதாவது கெஜட்டட் அதிகாரிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும். ஆனால் நமது அரசு பள்ளிகளில் உள்ள எல்லாத் தலைமையாசிரியர்களுக்கும் அந்த உரிமையை அளிக்க வேண்டும். அவர்கள் அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் சில நேரங்களிலே தங்களுக்குக் கீழ் பணி புரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யக்கூடிய அதிகாரத்தையும் கூட 'கெஜட்டட் தலைமையாசிரியர்' என்று சொல்லுவதன் மூலம் அவர்கள் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே அரசுத் துறையில் பணியாற்றும் எல்லாத் தலைமை ஆசிரியர்களையும் 'கெஜட்டட்' தலைமை ஆசிரியர்கள் என்று ஆக்குவதன்

மூலம், இப்போது ஒரு மாவட்டத்திற்கு 10 அல்லது 15 பேர் கெஜடெட் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்ற நிலை மாறி, எல்லோரும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களிடம் தொடர்பு கொண்டு நல்ல முறையில் பணியாற்றி வருவதாலும் நல்ல மதிப்பினைப் பெறத்தக்க வாய்ப்பினைப் பெறுவார்களாதலால், அரசு
4—40 பி.ப. உயர் நிலைப் பள்ளிகள், பி-விங் பள்ளிகள் இவற்றிலுள்ள தலைமை ஆசிரியர்களை கெஜடெட் பதவிக்கு உயர்த்திட வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே அரசுக்கு அதிகப்படியான கஷ்டம் ஏதும் இல்லை. ஹெட் மாஸ்டர் என்று நீண்டகாலம் பணியாற்றியவர்கள் 500 ரூபாய் சம்பளம் பெற்றாலும், முதல் நிலை இரண்டாம் நிலையில் உள்ளவர்கள் 450 ரூபாய் சம்பளம் பெற்றாலும், இந்த 450 ரூபாய்கூட மற்ற கெஜடெட் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்தைவிட உயர்வானதுதான். எனவே சம்பளத்தில் வேறுபாடு கூட வேண்டியதில்லை. பெரும்பாலான தலைமை ஆசிரியர்கள், அதிலும் பல பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் பல்வேறுவிதமான தகுதி பெற்றவர்களாக இருக்கின்றார்கள். இப்படி இருந்தால், பஞ்சாயத்து யூனியனில் தலைமையகத்தில் உள்ளவர்கள் பலர் எஸ்.எஸ்.எல்.சி. தகுதி பெற்றவர்களாக இருந்தும், அவர்களுக்குக் கூட கெஜடெட் அந்தஸ்து கொடுக்கப்படுகின்றது. அவர்களுக்குக் கீழ் பணிபுரியும் நிலையிலுள்ள தலைமை ஆசிரியர்கள், பல்வேறு பட்டங்களைப் பெற்ற ஆசிரியர்கள், கெஜடெட் அந்தஸ்து பெறுவது தான் நியாயம். எனவே இந்த நியாயமான கோரிக்கையை அரசு கவனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது போன்று நமது கல்வித் துறையில் பல்வேறு முரண்பாடுகள் நிலவி இருக்கின்றன. இவர்களுடைய ஊதியங்களை நிர்ணயிப்பதில் பல்வேறு முரண்பாடான காரியங்கள் இருக்கின்றன. இந்த முரண்பாடுகளையெல்லாம் விரைந்து மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, தேகப் பயிற்சி ஆசிரியர்கள், அதிலும் ஹையர் கிரேடு பிஸிகல் எஜுகேஷன் டீச்சர்களுக்கு நமது சம்பளக் கமிஷன் ஒரு தேர்வு நிலை ஊதியத்தை வழங்க மறந்துவிட்டது. அப்படி செலெக்ஷன் கிரேடு வழங்காத காரணத்தினால், அவர்கள் 1973 பிப்ரவரி மாதத்தில், பின்னர் நியமிக்கப்பட்ட தனி நபர் குழுவின் முன்னால் 'எங்களுக்கும் அந்தத் தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த 'ஒன் மேன் கமிஷன்' தீர்ப்பு அளித்ததில் இவர்களை மறந்து விட்டார்கள். எனவே பிஸிகல் எஜுகேஷன் டீச்சர்ஸ் என்று சொல்லப்படும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை ஊதியம் வழங்கப்படுவது மிகவும் அவசியமாகும். இன்னும் எதிர்காலத்தில் நமது உயர்நிலைப் படிப்பினைப் பத்தாண்டு காலக் கல்வியாக மாற்றும் நிலையில் தேகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு உயர் நிலைப் பள்ளிகளில் இருக்க வாய்ப்புவரும் சூழ்நிலை இருக்கின்றது. எனவே பி. டி. ஆசிரியர்களுக்குப் பத்தாண்டு காலத் தேர்வு

நிலையினைத் தந்ததைப் போல தலைமை ஆசிரியர்களுக்கும் பத்தாண்டு காலத் தேர்வு நிலை தருவது நியாயமாகும் என்று சொல்லி நன்றி கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இன்று ஆசிரியப் பெருமக்கள் மத்தியிலே புதிதாக தமிழகத்திலே கொடுக்கப்பட்டுள்ளது 'செலெக்ஷன் கிரேடு' ஆகும். கொடுத்திருந்தும் பல இடங்களிலே இதை அமுல்படுத்தாத சூழ்நிலையையும் அப்படியே அமுல்படுத்தினாலும் ஊதிய வேறுபாடு இன்றி அமுல்படுத்தும் நிலைமையையும் தான் பார்க்கிறோம். அமுல் படுத்தாத இடம் ஏராளமாக இருக்கின்றது. அமுல்படுத்திய இடங்களிலே ஊதியம் முறையாகத் திருத்தியமைக்கப்படவில்லை. 'டைரெக்டர் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷன்' கீழுள்ள 'ஏ' விங் பள்ளிகளில்கூட செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு இன்னும் செலெக்ஷன் கிரேடு வழங்கப்படாத சூழ்நிலை இருக்கின்றது. இது ஏன் இன்னும் கொடுக்கப்படவில்லை என்று தெரியவில்லை. 'டைரெக்டர் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷன்' உத்தரவு போடாத சூழ்நிலையில் 'ஏ' விங் பள்ளி பி. டி. ஆசிரியர்களுக்கும் 'ஏ' விங் பள்ளி செகண்டரி ஆசிரியர்களுக்கும் இன்னும் செலெக்ஷன் கிரேடு வழங்கப்படாத காரணம் என்னவென்று தெரியவில்லை. இது உடனடியாக வழங்கப்பட வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பத்து சதவிகிதம் என்றால், இதில் 20 ஆண்டு கால சர்வீஸுக்கு மேல் இருப்பவர்கள்தான் இருக்கின்றார்கள். அவர்கள் ஏற்கனவே ரூ. 195 சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தார்கள், சம்பளத்தை 'ரீ-பிக்ஸ்' பண்ணியபோது. ஆனால் 1—1—1971-ல் அவர்கள் செலெக்ஷன் கிரேடு பெற்றார்கள். அப்போது ரூ. 195 அப்படியேதான் இருக்கின்றது. பஞ்சாயத்து யூனியனில் முறையாக ரீஃபிக்ஸ் செய்யவில்லை. அவர்களுக்கு ஹையர் ஸ்டார்ட் கொடுக்க வேண்டும். எஃப்.ஆர். படிக்கு, பிரமோஷன் 'கேடிகரி' ஆயிற்றே என்று கேட்டால், இப்படி செலெக்ஷன் கிரேடு பெறும் ஆசிரியர்களுக்கு 'அடிஷனல் ரெஸ்பான்ஸிபிலிடி' ஒன்றுமில்லை, எனவே எஃப்.ஆர். படிக்கு அவர்களுக்கு ஹையர் ஸ்டார்ட் கொடுக்கப்பட வேண்டியதில்லை என்று சொல்லப்பட்டு, அதன் காரணமாக 1—1—71-ல் செலெக்ஷன் கிரேடுக்கு வந்த ஹையர் கிரேடு ஆசிரியர்கள் மீண்டும் 1—1—72-ல் தான் சம்பள உயர்வினைப் பெறுகின்றார்கள். ஆனால் செலெக்ஷன் கிரேடு இல்லாதவர்கள் 1—10—71-லேயே இன்க்ரிமெண்ட் பெற்று விடுகின்றார்கள் என்ற நிலை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவர்களுக்கு செலெக்ஷன் கிரேடு கொடுக்கப்பட்ட காரணத்தினால், செலெக்ஷன் கிரேடு ஆசிரியர்கள் மூன்று மாதம் கழித்துத்தான் இன்கிரிமெண்ட் பெறும் நிலைமை இருக்கின்றது என்பதை

[திரு. செ. முத்துசாமி] [1973 நவம்பர் 28

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். செலெக்ஷன் கிரேடு என்று வந்தால், கூடுதலாக ரூ. 30 பெறு கின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அப்படி சர்வீஸில் உள்ள ஆசிரியர்களுக்கு எந்தவிதமான உயர்வும் இல்லாத நிலைதான் இருக்கின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதை உடனடி யாக அரசு பரிசீலித்து, குறைந்தது அவர்களுக்கு நான்கு இன்கிரிமெண்ட் களாவது கொடுக்க வேண்டும். அல்லது அரசு தன் சக்திக்கு ஏற்றவாறு, இரண்டிற்குக் குறையாமல் உடனடியாக உத்தரவிட்டு, எம்.ஆர்-ல் குறிப்பிட்டுள்ளது போல தந்து திர வேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்து, செலெக்ஷன் கிரேடுகளில் உள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் விஷயத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சேலம்-தருமபுரி மாவட்டங் களுக்கான டி.இ.ஓ. அலுவலகம் சேலத்தில் இருக்கின்றது. தருமபுரி மாவட் டத்தில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் விஷயத்தில் செலெக்ஷன் கிரேடு இன்னும் அமுல்படுத்தப்படாமலிருக்கின்றது. காரணம் அந்த செகண்டரி ஆசிரியர்கள் நடுநிலைத் தொடக்கப் பள்ளியிலிருந்து உயர் நிலைப் பள்ளிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். இப்படி எடுத்துக்கொள்ளப்படும் போது, அவர்களுடைய முழு சர்வீஸோடுதான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக் கின்றார்கள். உயர்நிலைப் பள்ளிகளுக்கு வந்த செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அங்கேயே இருந்திருந்தால், இப்போது செலெக்ஷன் கிரேடு பெற்றிருப்பார்கள். ஆனால் இங்கே வந்துவிட்ட நிலையில், அவர்களைவிடக் குறைந்த கால ஊழியம் செய்தவர்களுக்கு செலெக்ஷன் கிரேடு கிடைக்கின்றது. ஆனால் அதிக சர்வீஸ் உள்ளவர்களுக்கு இல்லை. அன்றைக்கு எடுக்கப்பட்டவர்களுக்கு எல்லா சர்வீஸையும் சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைமைக்கு வந்திருக் கின்றார்கள். ஆனால் எலிமெண்டரி ஸ்கூல் சர்வீஸ் சேர்த்துக் கொள்ளப்படுவதா இல்லையா என்பது இன்னும் பரிசீலனையில் இருக்கின்றது. அதில் இன்னும் முடிவெடுக்காத காரணத்தினால், இது இன்னும் தற்போது பிரச்சினையாக இருக்கின்றது. ஆகவே செலெக்ஷன் கிரேடு வழங்கப்படவில்லை. இவர்களுக்கு செலெக்ஷன் கிரேடு கொடுப்பதா இல்லையா என்று இன்னும் அரசு குழப்பமான நிலையில் சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இப்படி ஒவ்வொரு வருஷமும் கழித்து எலிமெண்டரி ஆசிரியர்கள் மேலே வரும்போது, அந்த ஒவ்வொரு ஆண்டும் 'சீனியாரிட்டி லிஸ்டையும்' 'ரிவைஸ்' பண்ண வேண்டிய அவசியம் வந்தால் என்ன பண்ணுவது என்பது இப்போது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். பப்ளிக் டிபார்ட் மெண்டில் இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆசிரியப் பெருமக்கள் ஏற்கெனவே இந்த உயர் நிலைப் பள்ளிக்கு வரும்போது, சர்வீஸ்

1973 நவம்பர் 28] [திரு. செ. முத்துசாமி]

அத்தனையும் பாதிக்கப்படாது என்ற நம்பிக்கையோடு, அவர்களுக்கு அந்த நம்பிக்கையை உண்டாக்கி, அவர்களை வரவழைத்திருக்கிறோம். இப்படி வந்த வர்கள் பிரச்சினையில் ஒரு முடிவு ஏற்படுத்தி விட்டு, இனி வரக்கூடியவர்களிடம் வந்தால், நீ ஜூனியர்மோஸ்டாகத்தான் இருப்பாய், பிரமோஷனுக்கு ஜூனியர் மோஸ்டாகத்தான் கருதப்படுவாய் என்று முன்னரே எழுதி வாங்கிக் கொண்டால், பிரச்சினை எழப் போவதில்லை. வருஷா வருஷம் அந்த சீனியாரிடி லிஸ்டை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதைத் தெரிவித்து, ஏற் கெனவே வந்திருக்கிற ஆசிரியர் சீனியாரிட்டி பாதிக்கப்படாமலிருக்க வகை செய்ய வேண்டும். இவர்கள் உயர்நிலைப் பள்ளிகளை உருவாக்குவதற்கும், கட்டிடங்களைக் கட்டுவதற்கும், பொதுமக்களைத் திரட்டி பணத்தைச் சேர்த்த வர்கள், இப்படி உழைப்பைத் தந்தவர்கள், தொடக்கப் பள்ளிகளில் இவர்கள் இருந்திருந்தால் செலக்ஷன் கிரேடு பெற்றிருப்பவர்கள் என்பதை அமைச்சரவர்கள் கருத்தில் கொண்டு இவர்களுடைய ஊழிய காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பி.டி. பட்டம் பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நிறையப் பேர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள், தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள். ஆனால் தமிழ் ஆசிரியப் பெருமக்கள் சம்பந்தமாக, இந்த அரசு, அவர்கள் எந்த வகுப்பிற்குப் பாடம் சொல்லிக் கொடுத்தாலும், பர்ஸ்ட் கிரேடு க்வாலிபிகேஷன் உள்ள தமிழ் ஆசிரியர்களுக்கு பர்ஸ்ட் கிரேடு சம்பளம் தர வேண்டுமென்று ஒரு நல்ல முடிவை எடுத்திருக்கிறது. அதை அமுல்படுத்தி வருகிறது. அதை நான் பாராட்டுகிறேன். பி.டி. ஆசிரியர்கள் இப்போது எட்டாவது வகுப்பிற்குச் சொல்லிக் கொடுப்பதற்காக இந்த நடு நிலைப் பள்ளிகளில் போடப்படுகிறார்கள். இந்தத் திட்டத்தை நான் வரவேற் கிறேன். ஆனால் உயர்நிலைப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கும் பி.டி. ஆசிரியர் கள் இப்போது எட்டாவது வகுப்பிற்குச் சொல்லிக் கொடுப்பதற்காக இந்த நடு நிலைப் பள்ளிகளில் போடப்படுகிறார்கள். இந்தத் திட்டத்தை நான் வர வேற்கிறேன். ஆனால் உயர்நிலைப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கும் பி.டி. ஆசிரியர்களை அந்தப் பதவிக்குப் போடாவிட்டாலும் கூட, இந்த 6, 7, 8-வது வகுப்புகளில் சொல்லித் தரக்கூடிய ஆசிரியர்கள் பி.டி. தேர்வு எழுதி அவர்கள் தேறும் போது அவர்களுக்கு பி.டி. தகுதிக்குரிய ஊதியத்தை வழங்கு வதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். புதிய கல்வித் திட்டத்தில் 6-வது வகுப்பிலிருந்து பட்டதாரி ஆசிரியர்களைப் போடுவதை இந்தியா பூராவும் ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில், அரசும் 8-வது வகுப்பிற்கு பட்டதாரி ஆசிரியர்களைப் போடுவது, தொடக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியராக பி.டி.

ஆசிரியர்களைப் போடுவது என்ற கொள்கையை அமுல்படுத்தி வரக்கூடிய இந்த நேரத்தில், பி.டி. பட்டம் பெற்றவர்களுக்கு அந்தத் தகுதிக்குரிய சம்பளத்தைக் கொடுக்க, தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்குவது போல திட்டமிட்டு, உடனடியாக இவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. க. அறிவழகன் தலைமை.)

அடுத்து, இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர் பிரச்சினையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இவர்கள் இரண்டு வகை, ஒன்று எஸ்.எஸ்.எல்.சி. பெயில் ஆனவர்கள், மற்றொன்று எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள். எஸ்.எஸ்.எல்.சி. பெயில் ஆனவர்களும் 4 ஆண்டு தமிழ் ஆசிரியராகத் தேர்வு பெறுகிறார்கள், பயிற்சி பெறுகிறார்கள். இவர்கள் இருவரிடையே, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு ஆகாதவர்கள், தேர்வு ஆனவர்கள் என்ற நிலையில்தான் வித்தியாசம் இருக்கிறது. இவர்களுக்கும் நான்கு ஆண்டு கல்வித் தகுதி இருக்கிறது என்பதைப் பார்த்து அரசு பரிசிலனையில் வைத்துள்ள நிலையில், இந்த இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களை, முதல் நிலை ஆசிரியர்களைப் போலவே ஆக்க வேண்டும். இந்தப் பிரச்சினையைப் பரிசீலித்து வருவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இதைப்பற்றி விரைவிலே முடிவெடுத்து இவர்களையும் அந்தத் தகுதிக்கு உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வேண்டுமானால் இவர்களுக்குக் கால வரம்பை உயர்த்தி வைக்கலாம். அதற்கு வரையறை வைத்து 5, 10 ஆண்டுகள் வைத்து செய்யலாம். இப்போது இருக்கக் கூடியவர்கள் அத்தனை பேர்களையுமே முதல் நிலை ஆசிரியர்களோடு வைக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு மத்திய அரசு ஊதியக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டதால், மாநில அரசாங்க ஊழியர்களுக்கும், மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும் பெருத்த வேறுபாடான ஊதிய உயர்வை உருவாக்கியிருக்கிறது. அந்த மத்திய ஊதியக் குழு குறைந்த மாதச் சம்பளம் 198 ரூபாய் என்று வழங்கியிருக்கிறது. இன்றைக்குப் பார்க்கும்போது, 198 பிளஸ் 15 ஆக, ரூபாய் 213 வழங்கியிருக்கிறார்கள். இப்படி 198 ரூபாய் என்று சொல்லும்போது, இங்கே உள்ள கடைநிலை ஊழியர்களுக்கு மாதச் சம்பளமாக நம் மாநிலத்தில் 130 ரூபாய் தருகிறோம். 10 ரூபாய் சேர்த்து அட்டெண்டருக்குத் தருகிறோம். இன்னும் ஒரு 10 ரூபாய் கூட்டி ஹையர் கிரேடு ஆசிரியருக்கு நாம் தருகிறோம். இப்படி 20 ரூபாயைச் சேர்த்தால் கூட 170 ரூபாய்தான் வருகிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில், மத்திய அரசு குறைந்த பட்டச ஊதியம் இவ்வளவுதான்

என்று 198 ரூபாய் கொடுத்திருக்கிறது. ஆனால் இதுவே குறைந்த வாழ்க்கைத் தேவை அடிப்படையில் இல்லையென்ற வாதம் இன்றைக்கு மத்திய அரசு ஊழியர்கள் மத்தியில் இருக்கிறது. இன்றைக்கு ஜெயிலில் இருக்கக் கூடிய ஒருவருக்கு மூன்றாம் வகுப்பில் இருக்கிற ஒருவருக்கு, அதாவது அசைவமாக இருக்கக் கூடியவருக்கு, என்ன தரப்படுகிறதோ, அதை ஒரு யூனிட் 4-50 பி.ப.
என்று கொண்டால், 3 யூனிட் கணக்கு அடிப்படை கொண்ட குடும்பத்திற்கு, ஹையர் கிரேடு ஆசிரியர் குடும்பத்திற்கு, அந்த அளவிற்குச் சம்பளம் வரவில்லை என்ற நிலை இருக்கிறது. மத்திய அரசு பே கமிஷன் ஏற்படுத்தி 198 ரூபாய் குறைந்த சம்பளம் என்று சொல்லப்பட்டு, இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மத்திய அரசு சம்பள விகிதத்தை அறிவித்த நேரத்தில், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஒரு பெரிய இடைவெளி இருக்கிறது. ஆசிரியர்கள் மத்திய அரசிடத்திலும் பணியாற்றுகிறார்கள், மாநில அரசிடத்திலும் பணியாற்றுகிறார்கள். மத்திய அரசிடத்தில் குறைவான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதையும் நான் அறிவேன். இருந்தாலும் கூட, இன்றைய ஏற்றத்தாழ்வுகளை நீக்கக் கூடிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும். தொடக்கப் பள்ளிகளில் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் குறைந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். 150 ரூபாய் தான் சம்பளம். இதை உயர்த்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே இருந்த இடைவெளி நீக்கப்பட்டிருக்கிறது. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இரண்டு ஊதிய உயர்வுகளை எஸ்.எஸ்.எல்.சி.-க்குப் பிறகு இரண்டு ஆண்டுக் காலம் பயிற்சி பெற்றதை, நடைமுறையிலே ஊதியக் கமிஷன் ஏற்றுக்கொண்டதை, ஒன் மேன் கமிஷன் நீக்கியிருக்கிறது. ஊதியக் கமிஷன் ஏற்றுக்கொண்டதை நிலை நிறுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பி.ஏ., பி.டி. படித்து ஸ்பெஷல் கேட்டிகரியில் இருக்கக்கூடிய உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு இன்னும் செலெக்ஷன் கிரேடு வழங்கப்படவில்லை. பி.டி.-க்காக எலிமெண்டரி ஸ்கூலில் வேலை செய்கிறவர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் இன்னும் எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லையென்ற காரணத்தினால், அவர்களுக்கு செலெக்ஷன் கிரேடு கிடைக்கவில்லை. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உடன் பேரில் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு புதிய திட்டத்தை இந்த அரசு 'இண்ட்ரட்யூஸ்' செய்திருக்கிறது. இந்தப் புதிய திட்டம் 1971-ம் ஆண்டிலிருந்து இதுவரை இன்னும் சீராக்கப்படவில்லையென்று

தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் சீராக்குவதற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்களையும், மாண்புமிகு முதலமைச்சரவர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இண்டக்ரேஷன் பற்றியது. இது நீண்டகாலமாக இருந்து வரக் கூடிய பிரச்சினை. அதாவது ஏ-விங், பி-விங் என்று சொல்லப்படுகிறதே தவிர, பி.விங்கில் இருக்கக் கூடியவர்களுக்குப் பல்வேறு சலுகைகள் இன்னும் உத்தரவு பூர்வமாக இல்லை. ஆனால் பி. விங் ஆசிரியர்களுக்கு ஒரு சலுகை 1973-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் தேதியிலிருந்து வழங்கப்பட்டது. பி.-விங் பள்ளியில் பி.டி. அப்பாயிண்ட்மென்ட் ஆகியிருந்தால், அவர்கள் இந்தத் தேதிக்கு முன்னால் ஆகியிருந்தால், அவர்கள் அத்தனை பேர்களும் சர்வீஸ் கமிஷனுக்குச் செல்ல வேண்டியதில்லை என்று 'எக்ஸம்ப்ட்' செய்யப்படுகிறார்கள் என்று உத்தரவு வந்தது. இதுவும் ஏ.விங் போஸ்ட்தான். பி. விங் ஸ்கூலில் இருந்தாலும் ஏ. விங் போஸ்ட்தான். ஏ. விங் ஸ்கூலில் பணியாற்றினாலும் ஏ. விங் போஸ்ட்தான். ஆனால் இவர்கள் இதில் சேர்க்கப்படவில்லை. பி. விங் பள்ளியில் இருப்பவர்களுக்கு எக்ஸம்ப்ஷன் என்று சொல்லப்படுகிற அதே தேதியில் ஏ. விங்கில் பணியாற்றுகிற பி.டி. ஆசிரியர்கள் மீண்டும் பழைய நிலையில் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்க இலாகாவில் ஒரே போஸ்ட், டெசிக்னேஷன் என்று கொடுக்கப்பட்டு, ஒரே விங் போஸ்ட் என்று சொல்லப்பட்டு, இந்தப் பள்ளியில் இருந்தால் அவர்களுக்கு எக்ஸம்ப்ஷன் கொடுக்கப்படும், அந்தப் பள்ளியில் இருந்தால் எக்ஸம்ப்ஷன் இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏ. விங்கில் பணியாற்றக் கூடியவர்கள் சர்வீஸ் கமிஷனில் 'அன்செலக்ட்' என்று சொன்னவுடனே எல்லோரையும் 'ஊஸ்ட்' செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்களிடம் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருப்பார்கள். ஒரு பகுதிக்குக் கொடுத்திருக்கக்கூடிய சலுகையை இன்னொரு பகுதிக்குக் கொடுக்காமலிருப்பது ஒரு டிஸ்க்ரிமினேஷன் போல, வேறுபாட்டைக் காட்டுவதைப் போல இருக்கிறது. அவர்கள் குறைந்த எண்ணிக்கையாக இருக்கிற காரணத்தினால், இது அவர்களுக்கும் பொருந்தும், ஆகவே செய்துதர வேண்டுமென்று நான் கல்வியமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது)

ஒரு இரண்டு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன்.

இந்த இண்டக்ரேஷனைப் பொறுத்தவரை 1—4—1970-க்குப் பின்னால் மீண்டும் ஒரு உத்தரவு வந்தது. இன்னும் அதன் பேரில் முடிவு எடுக்கப்படாமலிருக்கிறது. கல்வியமைச்சரவர்கள் அடிக்கடி சங்கடமான நிலை என்று சொல்கிறார்கள். நானும் அதை உணர்கிறேன். சங்கடங்களுக்கு நிச்சயமாக தீர்வு காணப்படாத வரை அவை நீடித்துக் கொண்டேயிருக்கும். துணிச்சலோடு முடிவு எடுங்கள் என்று அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு பகுதியில் இருக்கிறவர்களும் இது வேண்டும், அது வேண்டும், இவர்கள் ஜூனியராக இருக்க வேண்டும், அவர்கள் ஜூனியராக இருக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். ஒரு பெரிய இலாகாவாக இருக்கக்கூடிய பி. விங்கை இணைக்கிறோம். ஆனால் ஏ. விங்கை பழைய சட்டங்களை வைத்துக்கொண்டு அப்படி இவர்களை இணைக்கும்போது, இவர்கள் அத்தனை பேர்களும் ஜூனியர்களாக இருக்க வேண்டுமென்று ஏ. விங்கில் இருக்கிறவர்கள் சொல்லுகிறார்கள். பி. விங்கில் இருப்பவர்கள் தங்களை இணைக்க வேண்டுமென்று எப்போதும் சொல்லவில்லை. அரசே முடிவெடுத்திருக்கிறது. இப்படி அரசே முடிவெடுக்கும்போது, பி.விங்கில் உள்ளவர்கள் ஏற்கெனவே தங்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் பாதிக்கப்படாமல் இணைக்கப்பட வேண்டுமென்று கேட்கிறார்கள். இது நியாயமான கோரிக்கையாகும். இப்படி ஒரு பெரிய பகுதியை இணைக்கும்போது, அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள உரிமைகள் நீக்கப்படாமல் அவர்களைச் சேர்ப்பதற்கான முயற்சிகளில் கல்வியமைச்சரவர்கள் உறுதியோடு முடிவெடுத்து, விரைவாகக் காரியங்கள் செய்து, தீர்வு காணவிட்டால், எதையாவது அவர்கள் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். இதிலே மாற்றத்தை உருவாக்குவதற்கு உடனடியாக முடிவெடுத்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் பேரில் துணிவோடு முடிவெடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே சில சங்கடங்கள் இருந்தாலும் நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு ஆசிரியப் பெருமக்களிடத்தில் சில வேறுபாடுகள் இருந்தாலும் கூட, அதைப் பெரிதுபடுத்திக்கொண்டு எந்த சங்கடங்களையும் உருவாக்கத் தயாராக மாட்டோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதிரி இணைப்புகள் செய்யும்போது, சில சங்கடங்கள் இருக்கத்தான் செய்யும். அந்த நேரத்தில் இதைக் கொஞ்சம் ஜீரணம் செய்ய வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமையாகும் என்று உணர்கிறேன். கல்வியமைச்சர் அவர்கள் உடனடியாக தக்க நியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, தலைமை ஆசிரியர்களை கெஜட்டட் ஆபீசர்களாக ஆக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இது நியாயமானது. இவர்களை விடக் குறைந்த சம்பளம் வாங்குபவர்கள் கெஜட்டட் ஆகிவிட்டார்கள். ஆனால் கல்வித் துறையில்

இருக்கிறவர்களுக்கு அந்த கௌரவம் அளிக்கக் கூடாதா? இதில் கௌரவம் மட்டுமல்ல. அங்கே இருக்கக்கூடிய 30, 40 ஆசிரியர்களுக்கு சேங்ஷன் செய்ய வேண்டிய அதாரிட்டியாகவும், இன்க்ரிமெண்ட் மற்றவைகளை எந்தவிதச் சங்கடம் இல்லாமல் அவர் அளிக்க, தலைமை ஆசிரியருக்கே கெஜட்ட் பதவி கொடுத்து விட்டால், அவர்கள் இவைகளைச் செய்ய உரிமை பெற்று விடுகிறார்கள். இந்த ஆசிரியர்கள் கௌரவமானவர்கள். அந்தப் பகுதியில் இவர்களைவிடக் குறைந்த சம்பளம் பெறக் கூடிய கெஜட்ட் ஆபீசர் என்று பக்கத்தில் இருக்கக்கூடிய பிளாக் டெவலப்மெண்டு ஆபீசில் பணியாற்றும்போது, கல்வித் துறையில் கூடுதலான சம்பளம் வாங்கிக்கொண்டுள்ள இவர்களுக்கு இந்தப் புதிய அந்தஸ்தைத் தருவதை இந்த அரசு நிச்சயமாக கௌரவப் பிரச்சினையாக நினைக்காமல் தலைமை ஆசிரியர்களுக்கு கெஜட்ட் பதவி உயர்வு தர வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். இதன் மூலமாக கல்வித் துறையில் ஏராளமான கெஜெடெட் அதிகாரிகள் இருக்கின்றார்கள் என்ற பெருமையை கல்வி அமைச்சர் அவர்கள் பெறவேண்டும். மற்ற துறைகளில் இருக்கின்றவர்களுக்குக் கிடைக்கின்றபோது, கல்வித் துறையில் உள்ளவர்களுக்கு இல்லையென்ற ஒரு நிலைமை இருக்கக் கூடாது, அவர்களை தமிழக அரசு மறந்துவிடவில்லை என்று எடுத்துக்காட்டி அவர்களை கெஜெட்ட் பதவிக்கு உயர்த்த முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹையர் கிரேட், செகண்டரி கிரேட் ஆசிரியர்களுடைய ஊதிய விகிதம், இன்றைய தினம் உயர்த்தப்பட்டிருக்கின்ற நிலையில் மறு பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு நிதித் துறையில் பல்வேறான சங்கடங்கள் இருந்தாலும்கூட மற்றவர்களுக்குக் கிடைத்
௫-00 இருக்கும் சலுகைகள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற மனக் கிளர்ச்சி இருக்
பி.ப. கிறது. அந்தச் சமுதாயத்தில் இருக்கக்கூடிய உணர்ச்சியைப் பிரதிபலிக்க வேண்டியது எங்களுடைய கடமையாக இருக்கிறது. அந்தக் கடமையைச் செய்கிறோம். அதைச் செய்யக்கூடிய நிலையில் எவ்வளவு கொடுத்தாலும் இல்லை. இல்லை என்று சொல்கிறார்களே என்று எங்களைக் குறை சொல்லக் கூடாது. பல்வேறு கேட்டிகெரியில் இருக்கக்கூடியவர்களைப் பற்றி அவர்கள் சிந்திக்கிறார்கள், நினைத்துப் பார்க்கிறார்கள், மற்றவர்களுக்குக் கிடைக்கும் போது தங்களுக்குக் கொடுக்கக்கூடாதா என்று சிந்திக்கிறார்கள். அந்தச் சிந்தனை வருகின்ற காரணத்தால் எங்களிடம் சொல்லப்படுகின்ற நிலையில் நாங்கள் வற்புறுத்திக் கேட்கின்றோம். ஆகவே அரசு அவர்கள் விஷயத்தில் உடனடி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

* **திரு. எஸ். ஏ. ராஜுமாணிக்கம்:** தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டு மசோதாவின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்து, என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன். 1973-ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க திட்டமாக கோவை மாவட்டத்தில், இருபது ஆண்டுக்காலம் இந்தியா பூராவும் ஒரே கட்சி ஆட்சி செய்தும்கூட, அவர்களால் முடிக்கப்படாமலிருந்த கோவை சிறுவாணி திட்டத்தை, நம்முடைய முதலமைச்சர் சட்டசபை எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த நாளிலிருந்து கடுமையான முயற்சியை மேற்கொண்டு, பத்து கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றியதற்கு கோவை நகர மக்களின் சார்பிலும், சிங்காநல்லூர் நகர மக்களின் சார்பிலும், கோவை வட்டத்தில் இதனால் பயன் பெறும் கிராம மக்களின் சார்பிலும் நன்றியறிதலையும் பாராட்டுதல்களையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சிறுவாணி திட்ட ஒப்பந்தத்தை எப்படி நாம் மிகச் சுமுகமான முறையில் கலந்து பேசி, சிறிது நாள் ஆனாலும்கூட, நல்லபடியாக முடித்திருக்கிறோமோ, அதைப் போலவே கேரளத்திலிருந்து நமக்குத் தேவையான தண்ணீரைப் பெறுவது சம்பந்தமாக நேற்றைய தினம் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை இங்கே சுட்டிக்காட்டினார்கள். கேரளத்தில் மின்சாரத் திட்டங்களை அமைக்க நிதி உதவி வேண்டுமானாலும் செய்யலாம், நமக்குத் தேவையான மின்சாரத்தைக் கொடுக்கட்டும் என்ற அளவில் பேசி வருகிறோம் என்று சொன்னார்கள். அதைப்போலவே கேரளத்திலிருந்து தண்ணீரை இந்தப் பக்கம் திருப்பி, மின்சாரம் அவர்கள் உற்பத்தி செய்து கொள்ளவும், நமக்கு, பாசனத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெற்றுக் கொள்ளவும், ஆக ஒன்றிரண்டு திட்டங்களுக்கு நம்முடைய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாநகராட்சியாக விரைவில் உயர்த்தப்பட இருக்கிறது என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு இங்கே ஒரு கேள்விக்குப் பதிலளிக்கின்ற நேரத்தில் கூறியிருக்கிறார்கள். முதன் முதலில் கோவை கார்ப்பரேஷனாக உயர்த்தப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு, அப்படி கார்ப்பரேஷனாக உயர்த்துவதை, கோவை தொழிலாளர்கள் மிகுந்த நகரமாகவிருக்கின்ற காரணத்தால், வருகின்ற 'மே' தினத்திற்குள் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்பொழுது திருச்சி மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டையையும் தஞ்சாவூரிலுள்ள சில பகுதிகளையும் சேர்த்து புதுக்கோட்டை என்ற மாவட்டத்தை உருவாக்க அரசு முயற்சி மேற்கொண்டு மிக விரைவில் உருவாக்கக் கூடிய நிலைமை இருப்பதற்காகப் பாராட்டுகிறேன். தமிழகத்தில் மிகப் பெரிய மாவட்டம், கிட்டத்தட்ட 125 மைல் நெடுகப் பரவியுள்ளதும், 47 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டதுமான மாவட்டம், கோவை மாவட்டம். தமிழகத்தின் மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கு அந்த மாவட்டத்திலிருக்கின்ற காரணத்தால், அதை மிக விரைவில் இரண்டு மாவட்டங்களாகப் பிரிப்பதற்கு அரசு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்ற மாவட்டங்களிலாவது, இவ்வொரு மாவட்டத்திற்கு எதைத் தலைநகராக வைப்பது என்ற பிரச்சினை எழலாம். கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இப்படிப்பட்ட பிரச்சினை எழுவதற்கு நியாயமில்லை. ஏற்கெனவே கோவை, கிழக்கு மாவட்டம், மேற்கு மாவட்டம் என்று இரு பகுதிகளாக நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டு மாவட்டங்களாக எல்லா வசதிகளுடனும், அமைப்புகளுடனும் ஒழுங்காகவே இயங்கிக்கொண்டிருக்கிறது. சமீபத்தில்கூட கோவை மாவட்ட மருத்துவ அதிகாரியை ஈரோட்டிலிருந்து செயல்பட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே மாவட்டத் தலைநகரைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினையில் சிக்கல் ஏதும் ஏற்படாது. புதியதாக கலெக்டர் ஒருவரைப் போட்டால் போதும், இரண்டு மாவட்டங்களும் செயல்பட வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

அடுத்து, ஒரு பிரச்சினை. இன்றையதினம் கூட விலைவாசிகள் எல்லாம் உயர்ந்துவிட்டன, இந்த அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை என்று பேரவையில் பேசப்பட்டது. நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் சாட்டியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு இங்கேயே விலை நிர்ணயித்து அவைகளை விநியோகிக்கின்ற அதிகாரம் இதுவரையில் நமக்குக் கொடுக்கப்படவில்லை. இதுவரையில் மத்திய அரசு நெல்லுக்குத்தான் விலை நிர்ணயித்துக்கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டு அரிசிக்கும் சேர்த்து அவர்களே விலை நிர்ணயித்து அனுப்பும் நிலைமைக்குப் போயிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நெசவாளர்களுடைய பிரச்சினை மிகப் பெரிய கொந்தளிப்புக்கு உள்ளாகிக்கொண்டு வருகிறது. அவர்களுக்குத் தேவையான நூல்கள் கொடுக்கப்படவில்லை. அந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டும். நம்முடைய தேவைக்கு மேல் உற்பத்தி இருந்தும்கூட, அவர்கள் நூல் பெற முடியாத

நிலைமை இருந்து வருகிறது. நம்முடைய அரசு குறைந்தபட்சம் நம்முடைய மாநிலத்திலுள்ள நெசவாளர்களுக்குத் தேவையான நூலை வைத்துக்கொண்டு மீதி நூலைத்தான் வேறு மாநிலங்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டு, நம் மாநிலத்தின் பற்றுக்குறையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவை வரவேற்று எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. வ. ஆர். தாமோதரன் அவர்கள் சற்று முன்னால் குறிப்பிட்ட மாதிரி, துணை மானியக் கோரிக்கை மீது பேசக்கூடிய வாய்ப்பு எனக்கும் கிடைக்கவில்லை. ஆகவே இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதா மீது சில வார்த்தைகளை, தங்களுடைய அனுமதி பெற்று, நான் இன்றைய தினம் பேசுகிறேன்.

முதல் முதலில் நான் இங்கு குறிப்பிட விரும்புவது, தற்சமயம் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கிளர்ச்சியைப் பற்றியது. அப்படி ஒரு கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். பாளையங்கோட்டை நிகழ்ச்சிகளைப் பொருத்தும், திருச்சி கிளைவ் ஹாஸ்டல் சம்பவங்கள் குறித்தும் கமிஷன்களின் அறிக்கைகள் வந்த பிறகு தமிழ் நாட்டில் பல இடங்களில் கிளர்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டு வருவதை நாம் எல்லோரும் அறிவோம். அந்தக் கிளர்ச்சிகள் நாளாவட்டத்தில் அதிகமாகிக்கொண்டிருக்கின்ற நிலைமையையும் நாம் காண முடிகிறது. நேற்றையதினம் மாணவர்கள் சிலர் பேரவையில், அவை நடந்துகொண்டிருக்கும்போது துண்டுப் பிரசுரங்களை வீசியதானது அவர்கள் எந்த அளவுக்கு உணர்ச்சி கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. அவர்கள் அவ்வளவு கிளர்ச்சி எண்ணம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வேலை நிறுத்தம் செய்துகொண்டிருக்கும் நிகழ்ச்சியையும் பார்க்கின்றோம். நேற்றையதினம் நான் தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருக்கும்போது பூண்டி புஷ்பம் கல்லூரி மாணவர்கள் அன்றையதினம் வேலைநிறுத்தம் செய்ததாகவும் நாளையதினம் முதற்கொண்டு ராஜா சரபோஜி கல்லூரி மாணவர்கள் செய்யப் போவதாகவும் நான் செய்திகள் கேள்விப்பட்டேன். தமிழ் நாட்டில் மாணவர்களுடைய கிளர்ச்சிகள், அதுவும் கல்லூரி மாணவர்களுடைய கிளர்ச்சிகள் மிகவும் அதிகமாகிக்கொண்டு வருகின்றன என்பது நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இன்று காலை நான் தங்கியிருக்கும் அமைந்தகரைப் பகுதியிலிருந்து சுமார் 10½ மணிக்குக் கிளம்பிவந்தபோது பச்சையப்பன் கல்லூரி அருகில் சுமார் 400, 500 மாணவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ஓரளவு போலீஸ் பந்தோபஸ்தும் இருந்தது. 12½ மணி அளவுக்கு அந்த வழியாக, பூந்தமல்லி சாலை வழியாக,

செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கண்ணீர்ப் புகை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. சாலை பூராவும் கற்கள் கிடந்து அவைகளைக் கூட்டிக்கொண்டிருந்தார்கள். அங்கேயிருந்த போலீஸ் அதிகாரி ஒருவரைப் பார்த்து என்ன விவகாரம் என்று கேட்டேன். முதலமைச்சருக்கு இந்த நிகழ்ச்சிகள் தெரிவிக்கப்பட்டுவிட்டன என்ற கருத்தை மட்டும் எனக்குச் சொன்னார். இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தால், இந்த மாதிரி வன்முறைகள் தமிழ் நாட்டில் ஒழுங்கீனத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தை உண்டாக்குகின்றன.

இன்றைய தினம் சென்னையிலே உள்ள லயோலா கல்லூரிக்கு ஜனவரி மாதம் வரையிலே விடுமுறை அளித்துவிட்டதாகவும், ஜனவரி மாதத்திற்குப் பிறகு தான் கல்லூரி திறக்கப்படும் என்றும், இரண்டு மாதம் விடுமுறை அளித்துள்ளார்கள் என்றும் சொன்னார்கள். இது உண்மை இல்லை என்கிறார்கள். இது உண்மையாகவும் இருக்கலாம். உண்மை இல்லாமலும் இருக்கலாம். இந்தக் கருத்தை எதற்காகச் சொல்கிறேன் என்றால், உண்மையாகவே இந்தக் கல்லூரிகளுக்கு ஓரிரு மாதங்கள் விடுமுறை அளித்து, ஜனவரி மாத அளவிலே கல்லூரிகளைத் திறப்பதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்தால் நன்றாக இருக்கும். இந்தக் கிளர்ச்சியும் அடங்குவதற்கு அது உதவியாக இருக்கும் என்ற கருத்தை இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பெட்ரோல் விலை கடுமையாக ஆனதன் காரணமாக
5-10 பி.ப. அநேகமாக சென்னையிலே டாக்சிகளே ஓடாத நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று டாக்சிக்காரர்கள் சொல்கிறார்கள். பேருந்துகளுக்கும் இன்னும் அதிகமான கட்டணம் வரும் என்று தோன்றுகிறது. இப்பொழுது சென்னையிலுள்ள பேருந்துகளில் இடநெருக்கடி அதிகமாக இருக்கிறது. முன்பு கார்களிலே சென்றுகொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்று பேருந்துகளிலே ஏறிச் செல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனக்குத் தெரியும், ஒரு பாங்கிலே ரூ. 1,800 பெறுகிறவர்களும், ரூ. 1,000 பெறுகிறவர்களும்கூட பேருந்துகளிலே போகக் கூடிய நிலைமை வந்திருக்கிறது. அமிஞ்சிக்கரையிலிருந்து வருவதற்கு ரூ. 7 டாக்சிக்கு ஆகிறது. திரும்பிப் போக ரூ. 7 ஆகிறது. கொடுக்கிற பேட்டா ரூ. 20-லே, 14 ரூபாய் டாக்சிக்குக் கொடுக்கும் நிலையிலே இருக்கிறோம். அரசாங்கத்திலே வேலை செய்பவர்களுள், வேறு வழியிலே பணம் சம்பாதிக்க முடியாத நிலையிலே இருக்கின்றவர்கள், ஆயிரம் ரூபாய், அல்லது ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள் ஒரு கார் வைத்துக்கொள்ள முடியாத அளவுக்கு, ரூ. 500 வரை பெட்ரோலுக்குச் செலவாகக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். இப்படியே போய்க்கொண்டிருந்தால், பத்தாயிரக்கணக்கான டாக்சி டிரைவர்களுக்கு வேலை இல்லாமல் போகும். சாதாரண மக்கள்

டாக்சியே உபயோகிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமை வரும். தனிப்பட்டவர்கள் காரையே வைத்துக்கொள்ள முடியாத நிலைமை வரும். மத்திய அரசு பெட்ரோலுக்கு ரேஷன் முறை கொண்டு வருவதற்காக எத்தனை கார்கள் இருக்கின்றன என்ற விவரங்களை மாநில அரசிடம் கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்தியாவிலே இப்பொழுது ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் 11 பைசா அதிகப்படுத்தியிருக்கிறார்கள். மேற்கொண்டு ஒரு லிட்டருக்கு 25 பைசாவோ, 50 பைசாவோ அதிகமாகும் என்றால் இனிமேல் யாருமே காரிலே வரக்கூடிய நிலைமை இருக்காது என்பதை மனதிலே வைத்துக்கொண்டு ரேஷன் முறை அமலுக்கு வருவது நல்லது, டாக்சிகளுக்கும் நல்லது, சொந்தக் கார்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் நல்லது. எனவே அத்தகைய யோசனைகளை மாநில அரசு மத்திய அரசுக்குச் சொல்லி, அதற்கான விவரங்களையெல்லாம் மிகவும் சீக்கிரமாகவே எடுத்துக்கொடுக்க வேண்டும் என்று இந்த அவையின் மூலம் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, டாக்சியிலே போக முடியவில்லை, பஸ்களிலே போக முடியவில்லை என்று புகைவண்டியிலாவது போகலாம் என்றால், புகைவண்டிக் கட்டணத்தையும் அதிகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் பத்திரிகையிலே பார்த்தபோது, புகைவண்டிக் கட்டணத்திலே, சர்சார்ஜ் என்று ஐந்து பைசா முதல் 150 பைசா வரையிலே அதிகமாகப் போடுவது என்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது என்று தெரிகிறது. இதற்கு முன்னாலே பாசஞ்சர் டாக்ஸ் என்று போட்டு, அந்த பாசஞ்சர் டாக்ஸ் முழுவதையும் மாநில அரசுக்கு வசூலித்துக் கொடுத்து வந்தது. அதைத்தான் சர்சார்ஜ் என்ற பெயரிலே வசூலிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த உரிமையை மாநில அரசிடத்திலேயிருந்து மத்திய அரசு எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். ஆகவே அந்த சர்சார்ஜிலே மாநில அரசுக்குக் கிடைத்துவந்த பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு கேட்டுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே அரசு கையாள வேண்டிய சிக்கன நடவடிக்கைகளைப்பற்றி ஒரு கேள்வியைக் கேட்டிருந்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் பதில் சொன்னார்கள். அதற்காக நம்முடைய சீஃப் செக்ரடரி அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டது என்று சொன்னார்கள். மூன்று நான்கு ஆண்டுகள் ஆகியும், நமது மாநில அரசைப் பொறுத்தவரையிலே எந்தவிதமான சிக்கன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பது தெரியவில்லை. இருக்கிற ஊழியர்களே அதிகமாக இருக்கும்போது, வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக, இன்னும் அதிகமான ஊழியர்களை வேலைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படி அதிக

மான பேர் இருந்தால், நடந்துகொண்டிருக்கக்கூடிய வேலையும் கெடுவதற்குத் தான் அது உதவி செய்யுமே தவிர, அதனால் எந்தவிதமான பயனும் ஏற்படாது. "Too many cooks spoil the broth" என்பார்கள். நான்கு பேர் வேலை செய்கிற இடத்திலே இருபது பேர் இருந்தால், நான்கு பேர் செய்கிற வேலையைக் கெடுத்துக்கொண்டிருப்பார்களே தவிர, வேறு ஒன்றும் வேலை நடக்காது. நமது அலுவலகங்களைப் பொறுத்த வரையிலே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நமது வீட்டிலே பெண்கள்தானே சமைக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : பெண்கள்தான் சமைக்கவேண்டியது அவசியம். அப்படி இல்லாவிட்டால், சமைப்பதற்கு ஆள் கிடைக்காத நிலைமைதான் வரும். மாநில அரசின் அதிகாரிகளுடைய வீடுகளுக்கோ அல்லது அலுவலகங்களுக்கோ நான் சென்றபோது எனக்குச் சில அனுபவங்கள் அங்கே ஏற்பட்டன. முன்பு பேசுகிறபோதுகூட, சொன்னேன். இப்பொழுது திருச்சி, கோயம்புத்தூர், பெங்களூர், பம்பாய், டெல்லி முதலிய இடங்களுக்கு ஃபோனிலே நேராகப் பேசலாம் என்ற நிலை வந்தபோது, உங்கள் வீட்டிலே என்ன சமைத்திருக்கிறீர்கள் ; சாப்பிட்டாகிவிட்டதா என்பதற்குக்கூட அதிகாரிகள் எல்லாம் டைரக்ட் டையலிங் கால் போடுகிறார்கள். டிரங்க் காலாக போட வேண்டுமென்றால் அதற்கு என்று ஒரு புத்தகம் இருக்கிறது. அதிலே எழுதி வைக்க வேண்டும். இப்பொழுது டைரக்ட் டையலிங் கால் என்று வந்துவிட்ட பிறகு, அது லோகல் கால் என்ற அளவிலே சார்ஜ் ஆகிற காரணத்தாலே, யாரும் போடுகிறார்கள். நான் ஒரு அதிகாரியின் அலுவலகத்திற்குச் சென்றிருந்த போது, அங்கே லைட்னிங் கால் போட்டு 15 நிமிட நேரம் மதுரையிலே ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தார். அதற்கு எவ்வளவு செலவாகியிருக்கும் என்று கருதி, அங்கே இருக்கிற தொலைபேசி நிலையத்திலே லைட்னிங் கால் என்றால் எவ்வளவு செலவாகும் என்று கேட்டேன். சாதாரணமாகப் பேசுவதற்கு ஆகும் செலவைப்போல் எட்டு மடங்கு ஆகும் என்றார்கள். மதுரைக்கு சாதாரண காலுக்கு எவ்வளவு என்றேன். எட்டு ரூபாய் என்றார்கள். மூன்று நிமிடத்திற்கு 64 ரூபாய் ஆகிறது. அப்படியென்றால் 15 நிமிடங்களுக்கு பேசியிருக்கிறார் என்றால் 300 ரூபாய்க்கு அந்த அதிகாரி பேசியிருக்கிறார் என்று பார்க்கிறோம். இப்படி அரசாங்க அதிகாரிகள் ஃபோனிலே பேசுவதற்கு 300 ரூபாய், 400 ரூபாய் என்று செலவு செய்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்த அதிகாரியின் பெயரை. இந்த அவையிலே சொல்லாவிட்டாலும், தயவுசெய்து தனியாகவாவது என்னிடத்திலே சொல்ல வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அப்படி தொலைபேசி மூலமாக பேசுவதைப்போன்றே, அதிகாரிகளிடத்திலே இருக்கிற ஜீப்புகள், லாரிகள் எதற்கு உபயோகப்படுகின்றன என்றால், வீட்டிலே பூ வாங்க வேண்டுமென்றால், இங்கேயிருந்து ஜீப் போகிறது. கறிகாய் வாங்குவதற்கு சென்னையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளின் ஜீப்கள் போகின்றன. அதிலும் போலீஸ் துறையிலே இருக்கக்கூடிய ஜீப்புகளும், லாரிகளும், வேறு இடங்களுக்கு இங்கேயிருந்து சாமான்களை ஏற்றிக்கொண்டு, பெட்ரோல் போட்டுக்கொண்டு போகின்றன. இப்படி அரசாங்க அதிகாரிகள் நடந்துகொண்டால், நிச்சயமாக அது சிக்கன நடவடிக்கையாக இருக்காது என்பதை நான் அறிவுறுத்த விரும்புகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே, கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கின்ற காரணத்தாலே, சிலவற்றைச் சொல்கின்றேன். பட்டதாரி ஆசிரியர்களின் போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது, அவர்கள்மீது எந்தவிதப் பழிவாங்கும் நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று கல்வி அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் வாக்குறுதி தந்தார்கள். ஆனால் சென்ற முறை தேர்வு நடந்தபோது, யார் யார் போராட்டத்திலே கலந்துகொண்டார்களோ, அவர்களை அசிஸ்டெண்ட் சூப்பரின்டென்டென்டாக நியமிக்காமல் ஒதுக்கினார்கள். இந்த முறையும், அக்டோபர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வின் போது, அந்தப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மறுபடியும் அசிஸ்டெண்ட் சூப்பரின்டென்டெண்ட் பதவி கொடுக்காமல், சில பேருக்குக் கொடுத்ததையும் கேன்சல் செய்து அவர்களுக்கு தண்டனை வழங்குகின்ற முறையிலே பல இடங்களிலே பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முன்பு போராட்டத்திலே ஈடுபட்ட ஆசிரியர்கள், கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், மன்னிப்புக் கடிதமும் எழுதிக் கொடுத்துவிட்டார்கள். எனவே இனிவரும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளுக்கு இவர்களை அசிஸ்டெண்ட் சூப்பரின்டென்டென்டாக தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கும் பழிவாங்கும் நடவடிக்கையை எடுக்கக்கூடாது, எடுக்க வேண்டாம் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தற்சமயம் பட்டதாரிகள் தொகுதி தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. யார் யார் பட்டதாரிகள் என்ற விவரத்தை அந்த அதிகாரிகள் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். பட்டதாரிகள் தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றால்,

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 நவம்பர் 28

தாங்கள் பாஸ் செய்த சர்டிபிகேட்டின் ஒரிஜினலேயோ அல்லது டூப்ளி கேட்டையோ வைத்து, அதில் ஒரு கெஜட் பதிவு அதிகாரியின் கையெழுத்து வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். தஞ்சாவூர், திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் 12,000 பட்டதாரிகள் இந்தத் தேர்தலில் தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யவேண்டும் என்று விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். இந்த 12,000 பேர்களில் 3,000 பேரைத் தவிர, 9,000 பேரை வாக்காளர்களாகச் சேர்க்க முடியாது என்ற நிலைமை தஞ்சாவூர் மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அதுபற்றி ஏதாவது செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக நான் குறிப்பிட விரும்புவது பூம்புகார்பற்றி. இந்தப் பூம்புகாரை வளமடையச் செய்வதற்கு எட்டே முக்கால் அல்லது ஒன்பது லட்ச ரூபாய் செலவு செய்ய அரசு நினைத்திருக்கிறது. இதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பூம்புகார் மிகவும் வளர்ச்சி அடையவேண்டிய ஒன்று. அங்கு சென்ற ஆண்டு நல்ல முறையிலே விழா கொண்டாடியபோது, அந்த விழாவை நானும் சென்று நேரடியாகப் பார்த்தேன். சிறந்த முறையிலே அந்த விழா கொண்டாடப்பட்டது. நாம் சென்னைக்கு அருகிலே உள்ள மகாபலிபுரத்தை எப்படி சிறப்பான முறையிலே வளமாக அமைக்கின்றோமோ, அதே போல, தஞ்சாவூர் மாவட்டத்திலே உள்ள பூம்புகாரையும் சிறந்த முறையிலே வளமாக்க நமது அரசு அதிகப் பணத்தை ஒதுக்கிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மகாபலிபுரத்திலே ஒலி-ஒளி-காட்சி அமைக்கப் போவதாக சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்த ஒலி-ஒளி காட்சியை பூம்புகாரிலே அமைத்தால், தமிழர்களுடைய பெருமையையும் நாகரிகத்தையும் சிறப்பான முறையிலே காட்டலாம் என்று தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

* திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தலைவரவர்களே, நிதி ஒதுக்கீட்டு மசோதா மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்

பி.ப. -20 கிறேன். இந்த அரசு ஆற்றியுள்ள பல்வேறு பணிகளும் பாராட்டத்தக்கவையாகும். கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும், ஏனைய ஆசிரியப் பெரு மக்களுக்கும் வழங்கப்பட்ட நல்ல பலன்கள் குறித்து ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களல்லாத ஏனைய ஊழியர்களுக்கு பல ஆண்டுகளாகவே எவ்விதமான பரிகாரமும் கிடைத்திடவில்லை. அரசாங்கம் ஒரு ஊதியத்தை நிர்ணயம்

1973 நவம்பர் 28] [திரு. காட்டூர் கோபால்]

செய்து, அதை அமுலாக்க வேண்டுமென்று அறிவித்தால்கூட, தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகிற ஊழியர்கள் அந்தத் தொகையைப் பெறுவதற்கான வழி கூட இப்போது அமைந்திராத நிலையிருக்கிறது. தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களல்லாத ஏனைய ஊழியர்களுக்கு எவ்விதமான பாதுகாப்பும் இப்போது நிச்சயமாக இல்லை. ஒருமுறை இந்தக் கல்லூரி ஊழியர்களுடைய கோரிக்கைகள் மீது, பல்கலைக் கழகத் துணை வேந்தரிடம் சென்று, அவர்களுக்குத் தக்க பரிகாரம் செய்திட வேண்டுமென்று கேட்டபோது, அவர் தனியார் துறையில் இருக்கிற கல்லூரி நிர்வாகத்தினிடத்திலே கேட்டுக்கொள்ள முடியுமே தவிர, கட்டுப்படுத்த முடியாதென்று அறிவித்தார்கள். அதேபோல் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களிடத்தில் கேட்டபோது, சர்க்கார் கட்டுப்படுத்துகிற அதிகாரத்தை வைத்திராத காரணத்தால், தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகிற அந்த ஊழியர்கள் இன்னும் கடும் தொல்லைகளில் இருக்கிறார்களென்று கூறினார்கள். எனவே சட்டபூர்வமாக அவர்களைக் கட்டுப்பாட்டிற்குக் கொணரத்தக்க வகையில் இப்போதைய அரசு ஆவன செய்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவையில் ஒரு தனியார் கல்லூரியில் பல தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்த 26 ஆண்டுகளுக்குப் பிறகும், அந்த வேலை இழந்த தொழிலாளர்கள் தங்களுக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்வதற்கும், வாழ்வைத் தேடிக்கொள்வதற்கும் வழி பிறக்கவில்லை. இந்த அரசிலேதான், கலைஞர் அவர்களது அரசிலேதான், வழி பிறக்க வேண்டும். எனவே அந்தக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்துகிற ஒரு சீரிய சட்டம் வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான கேங் மஸ்தூர் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டது மிகவும் பாராட்டத்தக்க பணியாகும். ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் உள்ள கேங் மஸ்தூர் தொழிலாளர்கள், இதுபோல தங்களையும் நிரந்தரம் ஆக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். செய்யப்படுமென்று எதிர்பார்க்கும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அதனைச் செய்திட வேண்டிய அவசியத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நெடுஞ்சாலை ஆய்வகத் துறையிலுள்ள தொழிலாளர்கள் தங்களையும் நிரந்தரம் ஆக்க வேண்டுமென்றும், ஏனைய கோரிக்கைகளுக்கு பரிகாரம் வேண்டுமென்றும் கேட்டுள்ளார்கள். அவர்களது கோரிக்கைகளுக்கு இப்போதுதான் பரிகாரம் கிடைக்கும்; முன்பெல்லாம் கிடைக்கவே முடியாத நிலைமைகள் இருந்தன; எனவே இந்தச் சந்தர்ப்பத்திலே அவர்கள் கேட்டதற்கு வழி ஏற்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் நிலங்களை திருத்தி வைக்கின்ற நிலைமைகள் இருப்பதால், டிசம்பர் மாதத்திலிருந்து அங்கே இருக்கிற தினக் கூலித் தொழிலாளர்களுக்கு, கடந்த காலங்களில் இருந்த நிலைபோல வேலை இருக்காதோ என்று அஞ்சுகிறார்கள். எனவே ஏனைய மின் வாரியத் திட்டங்களிலேயும், பொதுப்பணித் துறையிலேயும் பல பணிகளிலே பணியாற்றுகிறவர்களுக்கு இந்த அரசு தக்க பரிகாரம் செய்ததுபோல, இங்கேயும் அவர்களுடைய வேலை வாய்ப்பிற்கு நல்ல பரிகாரத்தைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு, சுதந்திரம் கிடைத்த 26 ஆண்டுகளுக்குப் பின்னால், இப்போதாவது, இந்த அரசுக் காலத்திலாவது சட்டபூர்வமாகக் குறைந்தபட்சக் கூலி கிடைக்குமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிற வழி அமைத்துள்ளதானது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது. கைத்தறித் தொழிலாளர்கள் கடுமையான தொல்லைகளுக்கு ஆளானவர்கள். இப்போது மட்டுமல்லாமல், 15 ஆண்டுகளுக்கு முன்னால்கூட இந்தச் சோதனை வந்தது. அப்போதெல்லாம் கஞ்சித் தொட்டியைக் கட்டிக் கொடுக்கின்ற அந்தப் பரிகாரத்தோடு அரசாங்கத்தினுடைய ஆதரவு இருந்துவிட்டது. ஆனால் இப்போது இருக்கிற கலைஞர் அரசு தொழிலாளர்களுடன் தோழமையாக இருக்கிற காரணத்தால், ஒரு கோடி ரூபாயைத் தக்க தருணத்தில் அவர்களுக்குக் கடனாகத் தந்திருக்கிறது. தற்போது மேலும் 6 மாத காலத்திற்கு அந்தக் கடன் வசூலை ஒத்தி வைத்து, பின்னால் வசூல் செய்யும் முடிவை அறிவித்துள்ளது. இங்கே உற்பத்தி செய்யப்படுகிற நூலை, இந்த அரசு விரும்பினாலும்கூட, சட்டமன்றம் ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியும்கூட, மத்திய அரசு அனுமதியைத் தராததால் கைத்தறித் தொழிலாளர்களுக்கு தொல்லையும் போகவில்லை, துயரமும் முழுமையாக நீங்கவில்லை. கொடுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயை, 6 மாதம் கழித்ததும் அவர்களிடத்திலிருந்து வசூலிப்பதென்ற அந்தக் கட்டத்திலிருந்து, அவர்களுக்கே அதை அளித்துவிடுகிற வகையிலே அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இருக்கிற சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் தொழிற்சாலையில் 1,200 குடும்பங்களுக்கு நல்வாழ்வு கொடுத்ததைப்போல, கோயம்பத்தூர் டெக்ஸ்டூல் தொழிற்சாலையில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கும் நல்வாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் 6,000 தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். தென்னிந்தியாவில் மிகப் பெரிய அந்த இன்ஜினியரிங் தொழிற்சாலையில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பகுதியினர்தான் தற்பொழுது முழுமையான வேலை வாய்ப்பு பெற்றிருக்கின்றனர். அதுவே இந்த அரசு செய்த பெரிய பரிகாரம்

தான் என்றாலும் மேலும், மத்திய அரசிடத்தில் வற்புறுத்தி, அங்கே ஜீப்புகள், கார்கள் செய்தல், பாதுகாப்புச் சாதனங்களைச் செய்தல் போன்ற தொழில்களைப் பெற்று, அந்த இன்ஜினியரிங் தொழிற்சாலையில் இருக்கிற தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு கொடுக்கும் வாய்ப்பினை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்..

கோவையைச் சுற்றிலும் 160-க்கு மேற்பட்ட இன்ஜினியரிங் தொழிற்சாலைகள்—பம்ப், மோட்டார் செய்கிற தொழிற்சாலைகள் இருக்கின்றன. அப்படி இருக்கின்ற தொழிற்சாலைகளிலும் மாற்று உற்பத்திக்கான வழிகள் செய்திட ஏற்பாடு அமைந்திட வேண்டுமென்றும், அரசு அதற்கு ஆவன செய்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆளியாறு பகுதியில் இருக்கிற மத்திய பட்டறையை, போக்குவரத்துத் துறை ஏற்றுக்கொண்டு, மோட்டார் வாகனங்களுக்கான பாடி கட்டுதல், பழுது பார்த்தல் ஆகிய காரியங்களுக்காகப் பயன்படுத்தும் வகையில் விரிவாக்கப்படுகிற திட்டம், அமுலாக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்கள் சார்பிலே, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைச் சங்கங்களுக்கு நம்முடைய அரசு தனி ஆதரவு தெரிவிப்பதாக ஒரு குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் இந்த நேரத்தில் ஒன்றை வேதனையோடு தெரிவித்துக்கொள்வேன். தமிழகத்திலுள்ள எல்லாச் சர்க்கரை ஆலைகளிலும் உள்ள தொழிலாளர்களில், மிகப் பெரும்பான்மையோர் முன்னேற்றச் சங்கங்களில் இருக்கிறார்கள். 27-ம் தேதி, நேற்று இதுபற்றி டில்லியில் முத்தரப்புப் பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது. தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையை அழைக்க வேண்டுமென்று சொன்னோம். அரசின் மூலம் நாங்கள் முறையிட்டுக்கொண்டோம். அதற்கு ஒரு பரிகாரமும் காணோம். திரும்பவும் 6-ம் தேதி முத்தரப்புப் பேச்சு வார்த்தை உள்ளது என்று சொல்லுகிறார்கள். பெரும்பான்மையாக உள்ளவர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை. இதே போன்று சிமின்ட் தொழிலாளர்கள் பிரச்சினையில் மேலும் மத்திய அரசு அரசியல் ரீதியில், பேரவையைப் புறக்கணித்திருக்கிறது. அப்போதும் பிரதிநிதித்துவம் தரப்படவில்லை. இதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய அரசு இதற்கு ஆவன செய்திட வேண்டிக்கொள்வதுடன், நமது அரசு ஏற்கெனவே செய்துள்ள பணிகளைப் பாராட்டி, மேலும் தொழிலாளர்களுக்கு நல்ல பணிகளையாற்ற வேண்டிக்கொண்டு, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை வரவேற்கிறேன்.

*** திரு. கே. எஸ். கணபதி:** தலைவரவர்களே, தமிழ்நாடு அரசு தனது வருமானத்தில் ஒரு பெரும் பகுதியைக் கல்விக்கு ஒதுக்குவது போலவே, இந்த மேலவையின் நேரத்தில் பெரும் பகுதியும் கல்விக்காக ஒதுக்கப்படுகிறது,

ஆசிரியர்களுக்காக ஒதுக்கப்படுகிறதென்ற ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகிறது. இருப்பினும் எதிர்காலச் சமுதாயத்தை அமைக்க வேண்டிய அடிப்படையில் கல்வியைப் பற்றியும், அதை அமைக்கும் சிற்பிகளாக அமைந்த ஆசிரியர்கள் பற்றியும் பேசுவது முறையே என்று ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: யாரும் சொல்வதில்லை. கல்விக்கு ரூ. 110 கோடி செலவாகிறது. ஆதலால் கொஞ்சம் நேரம் அதிகமாகும்.

திரு. கே. எஸ். கணபதி: அதே நேரத்தில் கல்வியின் தரம் குறைந்து வருகிறதென்ற குற்றச்சாட்டும் நம்மிடையே இருந்து வருகிறது. அதற்குக் காரணம் கூறுபவர்கள் 'மாஸ் எஜுகேஷன்', 'ப்ரீ எஜுகேஷன்' என்ற இரண்டைக் கூறுவார்கள். ஆனால் அதைக் களைய நமது அரசு திட்டமிட்டுச் செயல்படவேண்டும். கல்வித் திட்டத்தை மாற்றியமைப்பதாலே, இது முழுமை பெறுமாவென்றால், அப்படிச் சொல்ல முடியாது. ஏனென்றால் அப்படிப்பட்ட முற்போக்குள்ள கல்வித் திட்டத்தை நிறைவேற்ற, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கட்டாயம் நியமிக்கப்பட வேண்டும். அதற்காக இங்குள்ள ஆசிரியர்கள் அனைவரையும் வெளியே அனுப்பிவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களுக்குச் சிறந்த முறையில் மறு பயிற்சி அளிக்க வேண்டும். இதற்கு கல்வி அமைச்சரவர்கள், அவர்களுக்கு 'இன்சர்வீஸ் ட்ரெயினிங்' அளிக்கப்படுகிறதென்று சொல்லுவார்கள். எட்டு நாட்களுக்கும், பதினைந்து நாட்களுக்கும் அளிக்கப்படும் அந்த மறு பயிற்சி போதாதென்று நான் கருதுகிறேன். பல அறிஞர்களிடம் கேட்டால், அந்த 8 நாள் பயிற்சி போதவே போதாது, புதிய கல்வித் திட்டங்கள் கடுமையானவையென்று கூறுகிறார்கள். எனவே அதை மாற்றியமைக்க வேண்டும். அதற்காக 4 அல்லது 5 ஆரம்பப் பள்ளிகளை 'ஸ்கூல் காம்ப்ளெக்ஸ்' என்று ஏற்படுத்தி, ஒரு அறிவியல் வல்லுநரையும், கணித வல்லுநரையும் அமைத்து அவர்களது முழு நேரத்தை அதில் செலவிட்டு, பயன் பெறலாமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, ஓய்வு பெற்றவர்களுடைய நிலை மிகவும் வருந்தத்தக்கது. இரண்டாவது ஊதியக் குழு அளிக்கப்படும் டியர்னஸ் அலவன்சில் பாதியை ஓய்வு பெற்றவர்களுக்குக் கொடுக்கும்படி அறிவித்துள்ளது. அதன்படி இரு முறை அளித்துள்ளது. இன்று 1—10—1973-ல் அதிகப்படி ரூ. 10 கொடுக்கப்பட்டதில் பாதியான ரூ. 5 இன்னும் வழங்கப்படவில்லை என்பதை இந்த அரசு அறிந்து அதை அளிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

டி.ஏ. அதிகப்படுத்திய அந்த உத்தரவுடனே சேர்த்து இந்தப் பாதியை ஏற்கனவே ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கிட உத்தரவிடவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நண்பர் அவர்கள் பேசும்போது இடைநிலை ஆசிரியர்களின் நிலை உயர்த்தப்பட வேண்டுமென்று கூறினார்கள். இடைநிலை ஆசிரியர்களில் பலர் பி.ஏ., பி.டி. பட்டம் பெற்றவர்களுக்கு, 'ஹையர் எலிஜிபிள் ஜாப் ஸ்கீம்' வந்தபோது, அந்த வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டது. அப்போது மதிப்பிற்குரிய கல்விச் செயலாளர் அவர்கள் அதற்கான உத்தரவையும் பிறப்பித்தார்கள். ஆனால் அந்த உத்தரவு டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீசுக்கோ, சீப் எஜுகேஷனல் ஆபீசர் அலுவலகத்திற்கோ போய்ச் சேரவேயில்லை. அந்த அடிப்படையில் இடை நிலை ஆசிரியராகப் பணி செய்யும் பி.ஏ., பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களில் ஒருவருக்குக்கூட இந்த "ஹையர் எலிஜிபிள் ஜாப் ஸ்கீமில்" பயன் கிடைக்கவில்லை. அது மிகவும் வருத்தத்திற்கு உரியதாகும். இப்படி அரசு பிறப்பித்த ஆணைகள் கல்வி இயக்குநர் அலுவலகத்தினை விட்டே கிளம்புவதில்லை. எனவே இது போன்ற தயக்கங்கள் ஏற்படாமல் உடனடியாகச் செயல்பட வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். பி.ப. 5-3

நேரம் ஆகிவிட்டபடியால், கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்கின்றேன். மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியதுபோல, முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் இந்த அவையில் உறுதி கூறியும், வேண்டுமென்றே பட்டதாரி ஆசிரியர்கள் பழி வாங்கப்படுகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. உண்மை என்ன? கும்பகோணத்திலே ஒரு தலைமை ஆசிரியர் போராட்ட காலத்திலே உதவித் தலைமையாசிரியராகப் பணியாற்றி இருக்கின்றார். அவர்கள் இந்தப் போராட்டத்திலே பங்கு கொண்டிருக்கின்றார்கள். தலைமை ஆசிரியராக அவர் பதவி உயர்த்தப்பட்டது. பொதுவாக பள்ளிகளிலே அக்டோபர் பரிட்சை நடக்கும்போது, பள்ளித் தலைமையாசிரியர்கள் அதற்கு சீப் சூப்பிரண்டுகளாக நியமிக்கப்படுகின்றார்கள். அந்தத் தலைமையாசிரியர் சீப் சூப்பிரண்டாக நியமிக்கப்பட்டதும் உடனடியாக இரவோடு இரவாக டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷன் ஆபீஸுக்கு அழைக்கப்பட்டு அங்கு அவர் சென்றார். அவரிடம் உங்களுக்கு உடல்நலம் இல்லை என்று எழுதிக் கொடுங்கள். நீங்கள் இதிலே பணியாற்றக்கூடாது என்று கூறியிருக்கிறார்கள். அந்த தலைமையாசிரியர் பயந்து அப்படியே எழுதிக் கொடுத்திருக்கின்றார். அன்றைக்கு ஏ பிரிவு அரசுப் பள்ளித் தலைமையாசிரியர் ஒருவரை அங்கே அதற்காக நியமித்திருக்கின்றார்கள். இது மற்றொரு தவறு. ஒரு தலைமை

யாசிரியருக்கு அடுத்தாற்போலிருக்கும் உதவித் தலைமையாசிரியர் அல்லது ஆசிரியரை அந்தப் பணியில் போடுவதுதான் முறை. மற்றொரு பள்ளித் தலைமையாசிரியரை நியமித்தது ஒரு வருந்தத்தக்க செய்தியாகும். இது போன்ற நடவடிக்கைகளை இனியும் செய்யாத அளவுக்கு அரசு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு அமர்கின்றேன். வணக்கம்.

*புலவர் ஓ. அறிவுடைநம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே வழங்கியிருக்கின்ற தமிழ் நாடு 1973-வது ஆண்டின் நிதி ஒதுக்கச் சட்ட வரைவின் மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதி ஒதுக்கத்தில் ரூ. 1,36,800 கல்விக்காக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எதிர்காலச் சமுதாயத்தின் ஒளி மயமான நல்வாழ்விற்கு வழி வகுக்க இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கக்கூடிய சிற்பிகளான ஆசிரியர்கள் அவர்கள் உருவாக்கும் மாணவர்கள் இன்றையதினம் எப்படிப்பட்ட சூழ்நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இந்த அவை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எதிர்க் கட்சிக்காரர்கள் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கத் தொடங்கியுள்ளார்கள். இன்றையதினம் மாணவர்களைப் பொறுத்த வரையில், மாணவர்களுடைய நிலை மிக மோசமான ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றது. அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நேரத்திலே சொன்னார்கள்: "இந்த ஆட்சி இன்றையதினம் இருக்கும். நாளை போகும். இருந்தாலும், இந்த ஆட்சியிலே இருக்கக்கூடிய நாங்கள் மாணவர்களைப் பொறுத்த வரையிலும், அவர்களை எங்களுடைய மனதிலே வைத்திருக்கிறோம். அவர்கள் உணர்வுக்கு நாங்கள் மதிப்பு அளிக்கின்றவர்கள்." அது மட்டுமல்ல. இன்னொரு நேரத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், எங்களுடைய ரத்தத்தின் ரத்தம், சதையின் சதை மாணவர்கள் என்று. அந்த உணர்வின் வழி வந்தவர், அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னால் அவர்களுடைய இடத்தைப் பெற்றிருக்கூடியவர், எங்களுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அந்த உணர்விலேயே இன்றையதினம் செயல்பட்டுக்கொண்டுவரக்கூடியவர்கள் தமிழகத்தில் ஒரு நேரத்தில் மொழி உணர்வு இடரப்பட்ட நேரத்தில், மொழி உணர்வு காக்கப்படுவதற்காகவும், இந்தி மொழி தேவையில்லை என்பதற்காகவும், மாணவர்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் இரண்டு திங்களுக்கும் மேல் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் இருந்தவர்கள்

நமது டாக்டர் கலைஞர் அவர்கள், மாணவர்களுடைய எதிர்காலத்தை உருவாக்குகின்ற நல்ல இடத்தில் இன்றையதினம் டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற காரணத்தால், அவர்களிடத்திலே தங்களுடைய பொறுப்பை விட்டு விட்டு, மாணவர்கள் இன்றையதினம் கல்லூரிக்குச் செல்லவேண்டும். என்றும், நல்ல பிள்ளைகளாக தங்கள் படிப்பின் மீது ஆர்வம் செலுத்துகின்ற ஒரு ஆக்கபூர்வமான வேலையில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றையதினம் மாணவர்களைப் பொறுத்த வரையிலே, அவர்கள் எந்தச் சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்! நான் இங்கே ஒரு நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக இப்போது கல்லூரி மாணவர்கள் மத்தியிலே தேசிய ஒருமைப்பாடு வளர்ந்து வருகிறதா என்று கேட்டால், மிக வருந்தத்தக்கதாக அது இருக்கிறது. * மாணவர்களுக்கு நல்வழி காட்டக்கூடிய ஒரு தலைமையை இன்றையதினம் நாம் பெற்றிருக்கிறோமா என்பதனை அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நேற்றையதினம் மாணவர்கள் உணர்ச்சி வயப்பட்டு சட்டப் பேரவையில் துண்டு அறிக்கைகளை எடுத்து வீசிய நேரத்தில்கூட, மாணவர்கள் மன்னிக்கப்படவேண்டியவர்கள் என்ற விதத்தில் மாணவர்களை மன்னித்த பெருமை டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். எனவே மாணவர்கள் டாக்டர் கலைஞர் அவர்களிடத்தில் தங்கள் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக இன்றையதினம் ஆசிரியப் பெருமக்களைப் பொறுத்த வரையில், நானும் ஆசிரியர்களின் பிரதிநிதி என்ற விதத்தில் சிலபல கருத்துக்களை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சில கருத்துக்களைச் சொல்லத்தான் உறுப்பினர் அவர்களுக்கு நேரம் இருக்கின்றது.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: P.E.T. ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும், உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு ஹையர் கிரேட் என்ற தகுதியிருக்கின்றது. அவர்களுக்கு செலெக்ஷன் கிரேடு உண்டா என்று கேட்டால், அது மிகுந்த வேதனையைத் தரத்தக்க செய்தி. டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். அவர்களுக்கு செலெக்ஷன் கிரேட் தரப்படவில்லை. குறிப்பாக இரண்டாவது ஊதியக்குழு அதைப்பற்றிக் கவனிக்கவில்லை. தனி மனிதர் குழுவிலேயும் அதைப்பற்றி எண்ணப்படவில்லை. தயவுசெய்து நான் மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். P.E.T.

* Expunged as ordered by the Chair.

ஆசிரியர்களும், அதாவது உடற்பயிற்சி ஆசிரியர்களும் ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்தவர்கள். எனவே அவர்களுக்கும் செலெக்ஷன் கிரேட் தரப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு முன்னாலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. அறிவழகன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள் தலைமையாசிரியர்களைப்பற்றி. தலைமையாசிரியர்கள் இன்றையதினம் பெறுகின்ற ஊதியம் உயர்ந்த ஊதியமாக இருக்கின்றது. அவர்கள் ஊதியத்தைக் கூட்டித் தரவேண்டுமென்று கேட்க விரும்பவில்லை. அதே நேரத்திலே இவர்களுடைய ஊதியத்தைவிடக் குறைந்த ஊதியம் பெறும் வட்டாட்சியாளர், பி.டி.ஓ-க்கள் எல்லாம் அரசிதழ் பதவி பெற்ற அதிகாரிகள் என்ற முறையில் அழைக்கப்படுகின்றார்கள். ஆனால் தலைமையாசிரியப் பெருமக்கள் அப்படிப்பட்ட அந்தஸ்துக்கு உயர்த்தப்படவில்லை.
பி.ப. 5-40 அவர்கள் 'கூடுதலான ஊதியம் தர வேண்டும்' என்றுகூடக் கேட்கவில்லை. தங்களையும் அப்படிப்பட்ட இடத்தில் நியமிக்க வேண்டும் என்றுதான் அவர்கள் வலியுறுத்தி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றார்கள். இதை தயவு செய்து நமது முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து ஆவன செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். பத்தாண்டுகாலம் பணியாற்றிய பி.டி. ஆசிரியர்கள் ஆனாலும் முதல் நிலை தமிழாசிரியர்களானாலும் அவர்களெல்லாம் தேர்வு நிலை ஆசிரியர்கள் என்ற தகுதிக்கு உயர்த்தப்படுகின்றார்கள். அதே விதத்தில் இடைநிலை ஆசிரியர்களுக்கும் உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதே நேரத்திலே இந்த நாட்டில் பெரு மதிப்பிற்குரிய தமிழ்ப் பேராசிரியப் பெருமக்களாக உள்ளவர்கள், தமிழகத்தில் ஏறத்தாழ ஒன்பது தமிழ்க் கல்லூரிகளிலே 65, 70 அல்லது 75 பேருக்குக் குறைவாகவே இருக்கக் கூடியவர்கள். அவர்களுக்கு இன்றைக்குக் கிடைக்கும் ஊதியம் கலைக் கல்லூரிகளிலே இருப்பவர்களுக்குக் கிடைக்கும் ஊதியமாக இருக்கின்றதா என்றால், இல்லை. அவர்கள் தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களாக மதிக்கப்படுகின்றார்களே தவிர, கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்குள்ளது போல மதிக்கப்படவில்லை. எனவே இவர்கள் விஷயத்தில் அந்த ஊதியத்தினை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக, திருவையாற்றில் ஒரு இசைக் கல்லூரி இருக்கின்றது. இயல் கல்லூரியும் இருக்கின்றது. இயல் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்திற்குச் சமம். ஆனால் இசைக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கலைக் கல்லூரியில் இருக்கும்

ஆசிரியர்கள் ஊதியத்திற்குச் சமமான ஊதியம் வழங்கப்படுகின்றது. எனவே தயவுசெய்து எங்களையெல்லாம் தமிழ்ப் புலவர்களாகிய எங்கள் ஆசான்களாகிய அந்தப் பேராசிரியர்களுக்கு முறையான சம்பளத்தை நிர்ணயிக்கும்படி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இறுதியாக ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் திட்டத்தின்கீழ் பல மாவட்டங்களிலே பல்வேறு இடங்களிலே ஆசிரியர்களுக்காக 150 இடங்களை ஒதுக்கியிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தென் ஆற்காடு மாவட்டத்தில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இடைநிலை ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் 60. ஆனால் பூர்த்தி செய்யப்பட்ட இடம் 45 தான். மிச்சமுள்ள 15 இடங்களை மாவட்டக் கல்வி அதிகாரி சரண் செய்திருக்கின்றார்கள். இது போன்றே புலவர்களுக்கு என முதல் கிரேடுக்கு ஒதுக்கப்பட்ட இடம் 30. ஆனால் பூர்த்தி செய்யப்பட்ட இடங்கள் மூன்றுதான். மிச்சமுள்ள 27 இடங்களைச் சரண் செய்துவிட்டார்கள். இந்த நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுவேன். தயவு செய்து இப்படி விடுபட்டுப்போன இடங்கள் அவ்வளவிலும்—இப்போதுள்ள ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் 45 என்று இருக்கின்றது அல்லவா, அதைக் கொஞ்சம் குறைத்து—இந்த 27 தமிழ் ஆசிரியர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக பாரதி தன் இந்த கருத்தினை தனது நூலின் மூலம் வெளியிட்டிருக்கின்றார் "எதிர்காலத்தில் தமிழனின் புகழ் பரவத்தான் போகிறது. இன்று பரவாமல் இருப்பதை அறிவேன். ஆனால் எதிர் காலத்தில் பரவத்தான் போகின்றது. சென்ற நிமிஷம் தீர்ந்துவிட்டது, இந்த நிமிஷமும் சத்தியமில்லை. ஆனால் நாளை வரப்போவது சத்தியம். அந்த அளவிற்கு தமிழனின் பெருமை உலகில் பரவாவிட்டால் என் பெயரை மாற்றிக்கொள்ளுவேன்' என்று சொன்னான். அந்தப் பாரதி சொன்ன மாதிரி, இனி வரும் நிமிஷமாகிய இந்தக் காலம் கலைஞரின் கையில்தான் இருக்கின்றது. அது நிச்சயம் சத்தியமான காலம். தமிழனுடைய புகழ் உலகம் முழுதும் பரவும் காலம் இதுதான் என்பதை மாணவ மாணவிகளுக்கு நினைவுபடுத்தி, தமிழகத்தின் எதிர்காலம் அவரது கையிலே பொன்னொளி வீசிப்பரவ இருக்கிறது என்று சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டின் மீது நானும் சில கருத்துக்களைக் கூற முன் வருகின்றேன். நமது மாநிலத்தின் அரசுடைய வருவாய் கிட்டத்தட்ட 480 கோடியிலிருந்து

500 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வந்துள்ளது. எல்லாத் துறையிலும் குறைபாடுகள் இருந்துகொண்டே வருகின்றன. முக்கியமாக நான் ஒரு குறையை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன்.

சிறைச்சாலையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் அக்டோபர் 3-ம் தேதியிலிருந்து 12-ம் தேதிவரையில் எங்கள் கட்சி சார்பிலே நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு முப்பத்தாறுயிரம் பேருக்கு மேல் நாங்கள் கைதாகி சிறையில் வைக்கப்பட்டோம். நானும் திருச்சி மத்திய சிறையில் பத்து தினங்களுக்கு மேலே இருந்தேன். காந்திய வழியில் நடைபெற்ற அந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறையில் அடைக்கப்பட்டேன். அதில் உள்ள சில அனுபவங்களைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, காந்திய வழியில் போராடியதாகச் சொன்னார்கள், அதன் காரணமாகச் சிறையில் அடைக்கப் பட்டதாகச் சொன்னார்கள். சிறையில் காங்கிரஸ் கட்சிக் கொடியை ஏற்றியதும் அதன் தொடர்பாக அமளி நடந்ததும் காந்தியடிகள் காட்டிய வழிதானா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அந்தக் கொடியே காந்தியடிகள் நாட்டுக்குக் கொடுத்த கொடிதான். இது போகட்டும். சிறைச்சாலையில் பலவிதமான குறைபாடுகள். ஒரு 500 பேர் இருக்க வேண்டிய இடத்திலே பல்லாயிரக்கணக்கான அரசியல் கைதிகளைக் கொண்டுபோய் வைத்தார்கள். அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் கொடுக்கப்பட்டதா என்றால், இல்லை. காற்றிலும் மழையிலும் பல்லாயிரக்கணக்கான கைதிகளைக் கொண்டுபோய் வைத்துவிட்டார்கள். ஆடுமாடுகளை அடைப்பதைப் போல அடைத்தார்கள். அதையெல்லாம் பார்த்த பிறகுதான் ஜெயில் நிர்வாகத்தைப்பற்றிச் சொல்ல வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. ஐந்நூறு பேர்தான் பிடிக்கும் என்று தெரிந்தும், அந்த இடத்தில் 2,000 பேரைக் கொண்டுபோய் வைத்தால், ஜெயில் நிர்வாகம் எப்படி இருக்கும்? சிந்தித்துப் பார்க்க வேண்டும். மழை பெய்தால் அவ்வளவும் அவர்கள் பேரிலேதான். சுகாதாரம் என்பது சிறிதுகூட இல்லை. நகரசபைத் தலைவாக இருப்பதால், அதைப்பற்றியும் சற்று கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எங்கே பார்த்தாலும்—சொல்லக்கூடாது, நாகல் தான். ஒரே நாற்றம். பிரம்மாவினுடைய சிருஷ்டியில் எவ்வளவோ ஜீவராசிகள் இருக்கின்றன. அதில் புழுக்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவும் அங்கே இருந்தன. அவ்வளவு சுகாதாரக் கேடுகள். இவற்றைத் தீர்ப்பதற்கு எந்த விதமான முயற்சியும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தக் குறைகள் எல்லாம் நிர்வாகத்தால் நிவர்த்தி செய்யக்கூடிய குறைகள் தான். உணவு

பரிமாறும்போது சாம்பார் என்று போட்டார்கள். அதை என்ன என்று சொல்லுவது என்றே தெரியவில்லை. ரஸம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு பகுதியில் சாம்பாரில் ஈக்கள் இருப்பதாகச் சொன்னார்கள். போய்ப் பார்த்தோம். அப்படியே மொய்த்துக் கொண்டு இருந்தது மட்டும் இல்லாமல், ஆயிரக்கணக்கில் செத்துப்போய் அதில் மிதந்துகொண்டு இருந்தன. ஒருவேளை ஈக்களையே போட்டு தாளித்துவிட்டார்களோ என்று சொல்லத்தக்க விதத்தில் இருந்தது அது. அவ்வளவும் சுகாதாரக் கேடுகள். அங்கே உள்ள 'ஷெல்டர்களைப்' பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. பல வருஷங்களுக்கு முன்னால் கட்டப்பட்டது. எப்போது கட்டினார்களோ அப்போதுதான் சுத்தம் செய்திருப்பார்கள் போலிருக்கின்றது. அவ்வளவு மண்ணும் புழுதியும் இருந்தது. இரண்டு வருஷமாவது ஆகியிருக்கும் சுத்தம் பண்ணி. கைதிகளுக்குக் கொடுக்கப்பட்ட ஜமக்காளம் துப்பட்டிகள் இன்னும் தட்டுகள், குவளைகளைப் பற்றிச் சொல்லவே முடியாது. எதுவும் சரியான முறையில் இல்லை. ஆயிரக் கணக்கான பேர்களுக்கு தட்டுகளையும் குவளைகளையும் கொடுக்க முடியவில்லை. எதை எடுத்தாலும் ஓட்டை. தட்டு ஓட்டை அல்லது குவளை ஓட்டை. அந்த அளவில் அங்கே இருந்தது. இதற்கு மேல் சொல்லப்போனால், இந்த ஜமக் காளத்தை பவானியிலிருந்து அல்லது வேறு இடத்திலிருந்து எப்போது 'இன்டென்ட்' பண்ணியிருப்பார்களோ தெரியாது, அவைகள் எப்போது தண்ணீர் கண்டிருக்கும் என்று கூடச் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நிலையில் அவைகள் இருந்தன.

பி.ப. 5–50

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் : தலைவரவர்களே, ஒரு சின்ன விளக்கம். நாங்கள் சிறையில் இருந்தபோது சாக்கில் தான் படுத்தோம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இப்படி அடிக்கடி குறுக்கிடுவது சரியல்ல. எங்கள் கொள்கைகளைக் கேளுங்கள். நாங்கள் இருக்கிற குறை களைச் சொல்கிறோம். பிறகு வேண்டுமானால் பதில் சொல்லுங்கள். இந்த ஜமக்காளம் இருந்த தரத்திலேயே குவளைகளும் இருந்தன. சிறையில் ஆஸ்பத்திரி எப்படி நடக்கிறது என்று உள்ளே போய்ப் பார்த்தோம். வியாதிக் குத் தகுந்த மருந்துகள் அங்கே இல்லை. மருந்துக்குத் தகுந்த வியாதி இருந் தால் தான், வியாதி குணமாகும். அங்கே மருந்துக்குத் தகுந்த வியாதி தான் வர வேண்டும். இந்த ஆஸ்பத்திரி நிர்வாகம் அந்த நிலையில் இருந்தது. தண்ணீர்ப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், சிறையில் அவர்களால் குடிக்கக் கூட சப்ளை செய்ய முடியவில்லை. கைதிகள் அதிகமாக இருந்தபோது கஷ்டமான நிலை இருந்ததை ஒத்துக்கொள்கிறேன். ஆனாலும் அங்கே 3 கிணறு கள் இருக்கின்றன. ஒரு கிணற்று நீரைச் சாப்பிட்டால் மஞ்சள் காமாலை

வரும் என்று பயமுறுத்துகிறார்கள். இன்னொரு கிணற்றில் தண்ணீர் இல்லை. இன்னொரு கிணற்றில் 5 நிமிஷம் பம்புசெட்டு வேலை செய்தால், அதன் பிறகு கிணற்றில் பார்த்தால் தண்ணீர் இல்லை, பாறை தான் தெரிகிறது. ஒரு பாட்டு பாடுவார்கள். ஊசி முனையில் 3 கிணறு வெட்டினேம், இரண்டு கிணறு பாழ், ஒரு கிணற்றில் தண்ணீர் இல்லை என்று சொல்வார்கள். அங்கே சிறையில் எங்கள் தோழர் உள்ளிக்கோட்டை ராஜாங்கம் என்பவர் இறந்து போனார். கல்யாணமாகி 5 மாதத்திற்குள்ளாக அவர் உயிர் பறிக்கப்பட்டு விட்டது. அவருக்குச் சரியான முறையில் தாமதமில்லாமல் வைத்திய உதவி கொடுத்திருந்தால், அவர் தப்பித்துக்கொண்டிருப்பார். அவருக்கு கால தாமதமில்லாமல் வைத்திய வசதி கிடைத்திருந்தால் அவர் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அங்கே வெல்பேர் ஆபீசர் என்று இருக்கிறார், அவர் கைதிகளுக்கு வெல்பேர் ஆபீசரா அல்லது அங்கேயிருக்கிற டிபார்ட்மெண்ட் அதிகாரிகளுக்கு வெல்பேர் ஆபீசரா அல்லது ஜெயில் காம்பவுண்டுக்கு வெல்பேர் ஆபீசரா என்று தெரியவில்லை. அவர் வெல்பேரைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. ஜெயில் விசிட்டர்ஸ் என்று 5, 6 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் குறை இருப்பதாகச் சொல்லவில்லை. நான் உள்ளே போனதால் அங்கேயுள்ள பல குறைகளைப் பார்த்தேன் பார்க்கப்போனால் வீணாய்ப் போன காய்கறிகள் சிறைக்கு வருகின்றன. இப்படி ஜெயில் நிர்வாகம் இருந்தால், கைதிகள் எப்படி இருக்க முடியும்? எங்களுக்காக நான் பேசவில்லை. நாங்கள் கஷ்டப்படத் தயாராக இருக்கிறோம். நாங்கள் கஷ்டப்படுவது என்று சங்கல்பம் செய்துகொண்டு சிறைக்கு வந்தவர்கள். நாங்கள் எந்த விதமான கஷ்டத்தையும் அனுபவிக்க வந்தவர்கள். ஆனால் எத்தனையோ கைதிகள் 10 ஆண்டுகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தை நினைக்கும்போது, மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது. இது மாதிரி பல துறைகள் இருக்கின்றன. ஒரு துறையைப்பற்றிச் சொல்லி முடித்து விட்டேன். கலைஞர் அவர்கள் குறைகளைச் சொன்னால், அவைகளைத் திருத்தத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் திருத்துவார்கள்.

அடுத்தபடியாக, மாநகராட்சியைப்பற்றி திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவி இழந்திருக்கிறார்கள், ஸ்பெஷல் ஆபீசரைப் போட இருக்கிறார்கள். இப்படி பல ஆண்டுகளாக தவறு நடந்திருக்கும்போது, இவ்வளவு ஊழல் இருக்கிறபோது, ஸ்பெஷல் ஆபீசர் போடும்போது, எல்லாக் கட்சிகளையும் கூட்டி, ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒருவரைப் போட்டு ஒரு அட்வைசரி கமிட்டி ஏற்பாடு செய்து, அந்த ஸ்பெஷல்

ஆபீசருக்கு உதவி செய்வதற்காக, நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காகப் போடலாம். நிர்வாக அதிகாரிகள் இருந்தும் உறுப்பினர்கள் இருந்தும் பல கோடி ரூபாய் சோரம் போயிருக்கிறது. தனிப்பட்ட முறையில் ஸ்பெஷல் ஆபீசரைப் போடுவோமானால், அவர் சர்வாதிகாரித் தன்மையில் செயல்படுவார். ஒரே அதிகாரி நியமிக்கப்பட்டு அவர் ஸ்பெஷல் ஆபீசராக இருந்தால், பல கோடி ரூபாய் நிர்வாகம் செய்ய வேண்டிய மாநகராட்சியை நடத்தலாம். ஆனால் அவரால் எல்லாத் துறைகளையும் கண்காணிக்க முடியுமாவென்றால், முடியாது. இந்த மின்சாரத் துறை மட்டுமல்ல. அங்கேயுள்ள ரோடு பராமரிப்புத் துறையில் 'காங்க்' வேலையில் கூட ஆட்களைப் போடுவார்கள். சுகாதாரப் பிரிவில் கூட ஆட்களைப் போடுவார்கள். இப்படி சோரம் நடந்திருக்கிறது. மாநகராட்சி இப்படி கோடிக்கணக்கான ரூபாய் பறி கொடுத்திருக்கிறதென்றால், ஆச்சரியமாக இருக்கிறது. பணம் சம்பாதிப்பது பெரிதல்ல. பணத்தைப் பாதுகாப்பதுதான் முக்கியமானது. இந்த மாநகராட்சி நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால் சர்வ கட்சிகளைக் கொண்ட 'அட்வைசரி பாடி' அமைக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், நிச்சயமாகப் பாதுகாப்பு இருக்காது என்று தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, அப்ரோப்ரியேஷன் பில்லில் பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய ஆட்சியிலே எவ்வளவோ முன்னேற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை விரிவாக இதற்கு முன்னாலே பேசிய அங்கத்தினர்களும், மாற்றுக் கட்சித் தோழர்களும் பேசியிருக்கிறார்கள். இந்த அரசு காஞ்சிபுரத்திலே ஜரிகை உற்பத்திக்கு, நூலுக்க வேண்டிய சாயத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள், இப்படி எத்தனையோ செயல்களைச் செய்துகொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இப்படி கால வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலே நம்முடைய ஆட்சியிலே பல முன்னேற்றங்களை இந்த அரசு செய்திருக்கிறது. விவசாயத்தைப் பொறுத்தவரை, அகில இந்தியாவில் யாரும் போட்டி போட்டு செய்யக் கூடிய அளவிற்கு மேல் நாம் செய்திருக்கிறோம். அதிக உணவு உற்பத்தி செய்திருக்கிறோம்.

எனக்கு முன்னால் பேசிய திரு. தீக்ஷிதர் அவர்கள், அவருக்கே உரிய பாணியில், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுகிற தன்மையில் பேசினார்கள். அவர்கள் தமக்குத் தெரிந்ததை, அறிந்ததை ஒரு பக்கம் வைத்து

விட்டுப் பேசினார்கள். அவர்கள் நான் சிறைக்குள்ளே போனேன், என்றார்கள், எப்போது போனார்களோ தெரியாது. இதற்கு முன்னாலே பல லட்சக்கணக்கான அரசியல்வாதிகள் சிறைக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் சிறைக்குப் போனதை நான் தாழ்வாகச் சொல்லவில்லை, அதைப் பாராட்டுகிறேன். அவர் சிறையில் இருப்பதையும், இல்லாததையும் பற்றிப் பேசும்போது, இல்லாததைப்பற்றிச் சற்று மிகைப்படுத்திப் பேசினார்கள். இந்த அவையில் பேசும்போது சில தன்மைகளை ஒட்டிப் பேச வேண்டுமென்ற நிலைமைகள் இருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சர்க்காரை எதிர்த்துப் பேசுகிற உரிமை அவர்களுக்கு இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவைகளுக்கு அமைச்சரவர்கள் பேசுகிறபோது பதில் சொல்வார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால்: உண்மையைத் திரித்துப் பேசக்கூடாது என்று தான் சொன்னேன். உரிமை என்பது, உண்மைக்குப் புறம்பாக இருப்பதைச் சொல்லலாம் என்றால் நான் அதை ஒத்துக்கொள்ள வேண்டுமென்றால், அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்பதை, தலைவரவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 'நான் சிறைக்குப் போனேன்' என்றார்கள், ஏதோ நாங்களெல்லாம் சிறைக்கூடமே பார்க்காதவர்களைப் போல. அவர், நான் சிறைக்குப் போனேன், வெறும் புழு, பூச்சி இருந்தது. மனிதனே அங்கு இல்லை என்று சொல்வது தவறு. சிறை நம்முடைய சர்க்காரால் நடத்தப்படுகிறது. சிறைக்கு என்று சில விதி முறைகள் இருக்கின்றன. அங்கு எல்லாமே இருக்கிறபோது ஒன்றுமே அங்கில்லை என்று அந்த சிறைக்குள்ள தன்மைகளையெல்லாம் கூட மறந்துவிட்டுச் சொல்வது தவறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தயவு செய்து உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்கள் சிறையிலிருந்து வெளியே வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: சிறையிலிருந்து வெளியே வருகிறேன். சிறையில் அவ்வளவு பெரிய கொடுமைகள் இந்தக் காலத்தில் இல்லை. நாம் சிறையில் இருக்கிறபோது களி போட்டார்கள், இரும்புக் கடயம் வைத்துச் சோறுக்கிப் போட்டார்கள். ஆனால் இந்த ஆட்சி வந்த பிறகு, அலுமினியக் கடயம் வைத்து சோறுக்கிப் போடுகிறார்கள், காலையில் இட்லி தருகிறார்கள். உப்புமா

தருகிறார்கள். நாங்கள் சிறைக்கு போனபோது நம்முடைய சுதந்திர நாட்டினுடைய ஆட்சிதான் இருந்தது. அப்போது சோளக் கஞ்சிதான் சாப்பிட்டோம். கூழ்தான் சாப்பிட்டோம். களி சாப்பிட்டோம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, இப்பொழுதும் அதே கஞ்சிதான், அதே சோளம் தான். இட்லி கிடையாது. பட்டினி இருக்கும் அளவுக்குத்தான் போடப்படுகிறது. சில நாட்களில் 4 மணிக்குக் கிடைக்கும், சில நாட்களில் 12 மணிக்குக் கிடைக்கும். ஒரு சில நாட்களில் 6 மணிக்குத் தான் கிடைக்கும். என்னமோ எதிர்பாராத முன்னேற்றம் நடந்திருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. 6-00 பி.ப

திரு. சி. வி. ராஜகோப்பால்: தலைவர்வர்களே, தீக்ஷிதர் வேண்டுமானால் பாதாம் அல்வா வீட்டில் சாப்பிட்டிருக்கலாம். ஜெயிலுக்குள் அவைகள் கிடைப்பது கஷ்டம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, மனிதாபிமானக் குறைகளைத்தான் எடுத்துச் சொன்னேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, சிறையிலிருந்து வெளியே வந்து விடுகிறேன். ஜெயில் என்பது மாமியார் வீடு அல்ல. சங்கடங்கள் இருக்கத்தான் இருக்கும். சில காரியங்களுக்காகச் சிறைக்குப் போகிறோம். சிறையில் இவர்கள் கேட்பதையெல்லாம் கொடுக்க வேண்டும் என்பதில்லை. ஆகவே சிறை, சிறை என்று குறை சொல்லிக்கொண்டே இருக்கக்கூடாது என்று திரு. தீக்ஷிதர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்களைப்பற்றி திரு. தீக்ஷிதர் அவர்கள் சொன்னார்கள். நான் பரிதாபத்தோடு உள் உணர்வோடு இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன். மாணவர்கள் நல்லவர்கள், அவர்கள் கேட்பதையெல்லாம் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டை, திருச்சி விவகாரங்கள் குறித்து கமிஷன் போட்டு விசாரணை செய்யச் சொன்னார். சிதம்பரத்தில் நடந்தது தவறாகக்கூட இருக்கலாம். நாங்களும் எண்ண முடியாமல் தவறுகள் ஏற்பட்டு விடலாம். கமிஷன் போடப்பட்டு, அதன் அறிக்கை வந்த பிறகு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றபோது, கிளர்ச்சிகள் செய்வது அவ்வளவு நல்லதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். மாணவர்களுக்கு எவ்வளவோ சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. 110 கோடி ரூபாயை இந்த அரசு அவர்களுக்காகச் செலவு செய்து வருகிறது. இவ்வளவும்

செய்த பிறகு சென்ற மூன்று, நான்கு நாட்களாக அறிந்தோ ,அறியாமலோ கிளர்ச்சிகள் செய்து வருகிறார்கள், பஸ்கள் மீது கல் எறிகிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கின்ற 4½ கோடி மக்களுக்கும் இதனால் வேதனை கொடுக்கிறார் கள். மாணவர்களைக் கண்டு பெரியவர்கள் வேதனைப்படுகிறார்கள். 'நீங்கள் சொல்வதையெல்லாம் செய்திருக்கிறார்களே, அதற்குப் பிறகும் இந்தக் கலவரம் எதற்காக?' என்று கேட்கிறார்கள். கமிஷன் அறிக்கை வந்த பிறகு, அரசு உத்தரவு போட்டு செயலாளர்கள், ஆட்சியில் இருக்கின்றவர்கள் நடவடிக்கை கள் எடுத்துக்கொண்டிருக்கின்றபோது, இப்படி ரகளை பண்ணுவது நாட்டு மக்களுக்கு வேதனையைக் கொடுப்பதாகும். நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையில் எல்லாக் கட்சி சார்பிலும் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்திரா அம்மையார் கட்சி உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இருக்கின்றார்கள். எல்லோருமாகச் சேர்ந்து இந்த விஷயத்தில் ஒரு தீர்மானம் போட்டிருக்க வேண்டாமா? மாணவர் களுக்காக இத்தனை கோடி ரூபாய் செலவு செய்த ஆட்சிக்கு வேதனை கொடுக்க லாமா என்று அவர்களைக் கேட்க வேண்டாமா? ஆட்சி அவர்களுக்கு இவ் வளவு சாதகமாகவிருந்தும்கூட, கிளர்ச்சிகள் செய்யலாமா? நாட்டைப் பாழ் படுத்துகின்ற இந்தக் காரியத்தைக் கண்டு, நாட்டை அல்லோலகல்லோலப் படுத்துகின்ற இந்தக் காரியத்தை கண்டு, தாய்மார்கள் கலங்குகின்றார்கள், பெற்ற தந்தையர்கள் வேதனைப்படுகிறார்கள். ஆகவே எல்லாக் கட்சிகளும் கொஞ்சம் கொஞ்சமாக மாணவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் அழுத்தந்திருத்தமாகக் கேட்டுக்கொள்கிறேன். எல்லாக் கட்சிகளும் சேர்ந்து மாணவர்களுக்கு புத்திமதி சொல்ல வேண்டும். எதிர்காலத்தில் ஜனநாயகம் அழிந்துபோய் இந்த நாடே போய்விடும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அத்தனைபேரையும் பேசுவதற்கு அழைத்து, முதலமைச்சர் அவர்கள் அழைப்பு அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். இப்பொழுது இருக்கின்ற நிலைமையில் எல்லாக் கட்சிக்காரர்களும் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து தாராளமாகத் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவின் மீது நான் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்க ளுக்கு நன்றி கூறி, என்னுடைய சில கருத்துக்களை, இந்த அவையின் முன் வைக்கிறேன். தமிழக அரசு பொறுப்பேற்ற காலத்திலிருந்து இந்த நாட்டு மக்களுக்கும், மக்கள் சம்பந்தப்பட்ட துறைகள் அத்தனைக்கும் செய்திருக்கின்ற சாதனைகளுக்கெல்லாம் பட்டியல் கொடுப்பது என்பது இயலாத காரியம். அவைகள் அனைத்தும் பட்டியலைக் கடந்தவை. இந்த நிதி ஒதுக்கீடு மசோதா சம்பந்தப்பட்ட வரையில் பேசுகின்றபோது, மதுரை மாவட்டத்தைக் குறித்து சில கோரிக்கைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டில் சென்னைக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய நகரம் மதுரையாகும். அது தென்பாண்டி நாட்டில் சரித்திராதிக்கம் பெற்ற நகரமாக இருக்கிறது. இந்தியாவின் தென் முனையில் இருக்கக்கூடிய பெரிய நகரமாகும். அங்கு சட்டக் கல்லூரி ஒன்று இல்லாதது நீண்டகாலமாக இருந்து வருகின்ற பெரிய குறையாகும். தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னையில் சட்டக் கல்லூரி இருக்கின்றது என்றாலும், இன்று இருக்கின்ற செலவினங்களையும் மக்களுக்கு இருக்கின்ற தொல்லைகளையும் பார்க்கின்றபோது, மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை நிர்மாணித்தால், மக்களுக்கு நலமாகவிருக்கும் என்பதோடு சென்னையிலிருக்கின்ற பாரமும் குறையும். நம்மை விட மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகையையும் நிலப்பரப்பையும் கொண்ட கேரளத்தில் இரண்டு சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன, ஒன்று திருவனந்தபுரத்திலும் மற்றொன்று எர்ணாகுளத்திலும் இருக்கிறது. அந்த மாதிரி தமிழ் நாட்டில் இரண்டு சட்டக் கல்லூரிகளை, ஒன்றை சென்னையிலும் மற்றொன்றை மதுரையிலும் அமைப்பதில், எந்தவிதமான தவறுதலும் இல்லை. மதுரையில் அவசியம் தேவை என்பதைக் கருதி அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஹைகோர்ட் குறித்து ஒரு கோரிக்கையை வைக்கிறேன். இப் பொழுது ஹைகோர்ட் சென்னையில் மட்டும் இருக்கிறது. மதுரையில் புல் பெஞ்ச் என்று இல்லாது போனாலும் ஒரே ஒரு நீதிபதி கொண்ட பெஞ்ச் வைத்தால் கட்சிக்காரர்களுக்கு இன்று இருக்கின்ற சூழ்நிலையில் போக்கு வரத்துக்கு ஏராளமான செலவு ஏற்படாமலிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஹைகோர்ட்டில் ஒரு வழக்கு தொடர்வது என்றால், மதுரை யில் இருக்கக்கூடிய அவருடைய வக்கீலை அழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்து போவதன் மூலமாக ஏற்படுகின்ற செலவுகள் ஏராளமாக இருப்பதால், அப்படிப்பட்ட தொல்லைகளை நிவர்த்திக்கும் பொருட்டு, மதுரையில் ஒரு நீதிபதி கொண்ட ஒரு ஹைகோர்ட்டு பெஞ்ச் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, கொற்கைத் துறைமுகம் சம்பந்தப்பட்டது. பாண்டிய நாட்டில் தூத்துக்குடி துறைமுகம் இருக்கிறது. அதைத் தொடர்ந்து சரித்திரப் பெருமை வாய்ந்த கொற்கைத் துறைமுகத்தை அமைத்து தென்பாண்டி மண்டலத்திற்குள்ள பெருமையை நிலைநாட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவேகானந்தர் பாறையில், விவேகானந்த பெருமகனாரின் பெருமைகளை உலகிற்கு அறிமுகப்படுத்த பெருங்காரணமாக இருந்த இராமநாதபுரம் அரசர் சேதுபதியின் சிலையை பாறைக்கு முன்னால் வைக்க வேண்டுமென்று அந்தச் சமயத்தில் ஏற்பட்ட மக்களுடைய எழுச்சி முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். விவேகானந்தர் பாறை திறப்பு விழா கூட்டத்தில், காலப்போக்கில் சேதுபதி அரசர் சிலையை அங்கே நிர்மாணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை இப்பொழுது நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இந்திய தேசியத்திற்கும், இந்திய சுதந்திரத்திற்கும் அரும்பாடுபட்ட முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய சமாதியை, பசும்பொன்னில் இருக்கின்ற அந்தச் சமாதியை அரசாங்கப் பொறுப்பில் எடுத்துக்கொண்டு பராமரிக்க வேண்டுகிறேன். தேசியப் பாரம்பரையில் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர் என்பதற்காக தென்பாண்டி மண்டல மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, எங்களையெல்லாம் சுதந்திரத்திற்காகப் போராட வைத்த பெருந் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் என்று போற்றுபவர்கள், ஏற்பார்கள் என்பதோடு எல்லோருக்கும் உரிய தலைவர் என்ற வகையில், அவர் அடங்கியுள்ள அந்தச் சமாதியை இராஜாஜி அவர்களுக்கு மணி மண்டபம் அரசாங்கப் பொறுப்பில் அமைக்கப்படுவதுபோல், தமிழ்நாடு அரசாங்கம் தமது பொறுப்பில் அமைத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, பொதுவாக நிதி ஒதுக்கீடு மசோதாவில் இந்த சபையில் யாருமே பேசுவது வழக்கமில்லை. பேரவையிலும் கூடத்தான். ஆனால் இந்த வருஷம் துணை மானியக் கோரிக்கைக்கு எவ்வளவு பேச்சுக்கள் நடக்குமோ அவ்வளவு தூரம் பல உறுப்பினர்
6-10 பி.ப. கள் இதில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. இந்த சபைக்கு இரண்டு வருஷத்திற்கு ஒரு தரம் சபையில் மூன்றில் ஒருபங்கினருக்குத் தேர்தல் வருகிறது. வரும் பிப்ரவரி மாதத்தில் அந்தத் தேர்தல் வர இருப்பதால், தேர்தலை மனதிலே வைத்து பல பேர் பேசவேண்டிய அவசியத்தை முன்னிட்டு, இந்த சந்தர்ப்பத்தையும் இழந்துவிடக்கூடாது என்று

கருதிக்கொண்டு பேசினார்களே தவிர வேறொன்றும் இல்லை. என்னைப் பொறுத்த வரையில், நான் இன்று பேசுவதாக இல்லை. ஆனால் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரலாம் என்று தங்களை அறையிலே வந்து கலந்தேன். இன்று நடக்கப்போகும் இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவில் சந்தர்ப்பம் இருப்பதால், அதிலேயே நீங்கள் பேசிவிடுங்கள் என்று சொன்னதோடு, முதலமைச்சர் அவர்களும் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு வேறு பல அலுவல்கள் இருப்பினும் இந்த நேரம் வரைக்கும் இங்கிருந்து, முக்கியமான இந்தப் பிரச்சினையை விவாதித்து பதில் சொல்வதற்கு அவர்கள் ஏற்றுக் கொண்டதற்காக முதலில் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு விஷயத்தைக் கூற முன் வருகின்றேன்.

கடந்த ஒரு வாரமாக சென்னையிலும், தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களிலும் மாணவர்கள் மத்தியில் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கிளர்ச்சிக்குக் காரணம் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நடந்த சில சம்பவங்களைப்பற்றி காவல் துறையினர் சொன்னதை மட்டும் அப்படியே ஏற்றுக்கொண்டு, அரசாங்கம் இங்கே வாதித்தது. முதலமைச்சர் அவர்கள் காவல் துறையினர் சொன்னதையே சொன்னார்கள். ஆனால் மாணவர்கள் வேறு விதமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அரசாங்கம் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு காவல் துறையினர் செய்ததும், அவர்கள் சொன்னதும் சரியல்ல என்பது நீதி விசாரணை ரிப்போர்ட்டில் இருப்பது தெரிந்தவுடன் ஒரு பெரிய கிளர்ச்சி மாணவர்கள் மத்தியிலே ஏற்பட்டது. அதை அரசாங்கம் ஒருவிதமாகச் சமாளித்துக்கொண்டு வருகிறது. அதையெல்லாம் நான் குறையாகச் சொல்லத் தயாராயில்லை. இன்றையதினம் எந்த விதமான கிளர்ச்சியும் இல்லாதபோது, இன்று காலையில் பச்சையப்பன் கல்லூரியிலும், ஜெயின் கல்லூரியிலும், நந்தனம் கல்லூரியிலும், வெளியார்கள் திடீரென்று கல்லூரிக்குள் நுழைந்து, மாணவர்களை அடித்ததாகவும், கலவரம் செய்ததாகவும், காயப்படுத்தியதாகவும் எனக்குத் தகவல், 3½ மணிக்குத்தான் கிடைத்தது. இது 11 மணிக்கு நடந்திருக்கிறது. வெகு நேரங்கழித்துத் தகவல் கிடைத்தது. உடனே இது என்னவென்று விசாரிக்க முடியவில்லை. முதலமைச்சர் அவர்களிடத்திலேயே நான் வந்து கேட்டேன். இது முக்கிய பிரச்சினையாக இருப்பதால், என்ன நடந்தது என்பதையாவது அறிய இந்த சபை விரும்புகிறது. கல்லூரி மாணவர்கள் மத்தியிலே இந்தக் கிளர்ச்சி இருக்கிறது. இளைஞர்கள் நமது பிள்ளைகள் தான். சில சமயம் விரல் கண்ணைக் குத்திற்று என்றால், விரலைக் களைந்துவிட முடியாது. மாணவர்கள் தவறு செய்வது என்பது கொஞ்ச காலமாக இயற்கையாகப் போய்விட்டது. வெளியார் தூண்டிவிட்டோ

[திரு. கே. ராஜாராம்] [1973 நவம்பர் 28

அல்லது அவர்களாகவோ ஒரு கிளர்ச்சி செய்வது நடந்துகொண்டு வந்திருக்கிறது. அதை நிறுத்துவதற்கு அரசாங்கத்தால் மட்டும் முடியாது. எல்லோரும் சேர்ந்துதான் அதை நேர் வழிக்குக் கொண்டுவர வேண்டும். மாணவர்களுக்கு நல்ல வழி காட்ட வேண்டிய கடமை இருக்கிறது. ஆனால் அதற்காக வேண்டி, கல்லூரியில் சம்பந்தப் படாதவர்கள், வெளியார்கள்—அந்த வார்த்தையைச் சொல்வதில் எனக்குப் பழக்கம் இல்லை, குண்டர்கள் என்றோ அல்லது காலிகள் என்றோ சொல்வதற்கு விருப்பம் இல்லை—வெளியில் இருந்து கல்லூரிக்குள் நுழைந்து, திடீரென்று மாணவர்களை அடிப்பதும், பயமுறுத்துவதும் சகிக்க முடியாத விஷயம். கல்லூரிகளில் அமைச்சர்கள் வீட்டுப் பிள்ளைகளும் படிக்கலாம், எங்கள் வீட்டுப் பிள்ளைகளும் படிக்கலாம். வெளியார்கள் சென்று பிள்ளைகளை அடிப்பதை காவலர் தடுத்திருக்க வேண்டும். போலீசார் அங்கிருந்தும் தடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. கடைசியில், பெரிய அதிகாரிகள் வந்த பிறகுதான், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து, வெளியிலிருந்து வந்தவர்களையெல்லாம் கலைத்து வெளியேற்றியிருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே இதனுடைய உண்மை தெரிய வேண்டும். இனி மேல் இம்மாதிரி கல்லூரிக்குள் வெளியார்கள் நுழைந்து இப்படிக் கலவரங்கள் ஏற்படுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதுமாதிரி ஏற்படாமல் செய்ய வேண்டும். கல்லூரி அதிகாரிகளும் சரி, அரசும் சரி, இதிலே சரியான கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களைச் சமாளிப்பதற்கு அரசாங்கத்திற்கு சக்தி இருக்கிறது. அண்மையில் முதலமைச்சர் அவர்கள் மாணவர்களை ஒரு வகையில் சமாதானப்படுத்தக்கூடிய அளவில் நல்ல பேச்சுக்கள்தான் பேசி வருகிறார்கள். இன்னும் அவர்களை அழைத்து, நேரில் பேசி, திருப்திப் படுத்தியிருக்க முடியும். அப்படிப் பண்ணுவதற்கான யோசனையையும் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அதற்கிடையே இம்மாதிரி கலவரங்கள் செய்து, பள்ளிக்கூடங்களுக்குள்ளும், கல்லூரிகளுக்குள்ளும் வெளியார்கள் சென்று பிள்ளைகளை அடிப்பது என்றால், இது சகிக்க முடியாத விஷயம். இதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். வெளியார்கள் உள்ளே செல்லாமல் தடுத்து நிறுத்த வேண்டும். பல பிள்ளைகள் அடிபட்டு, ரத்தக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல். ஆகவே இவைகளையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இதற்கு என்ன செய்ய உத்தேசித்துள்ளனர், இனிமேல் இம்மாதிரி ஏற்படாமலிருப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்ய முற்பட்டிருக்கிறது என்பதை அறிய [illegible]றேன்.

1973 நவம்பர் 28]

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியவாறு, நிதி ஒதுக்கீட்டில், அதிலும் குறிப்பாக துணை மதிப்பீடுகளின் நிதி ஒதுக்கீட்டில், இவ்வளவு நேரம் மேலவையிலே விவாதம் நடைபெற்றது கிடையாது என்றாலும், இன்று சட்டப் பேரவையிலிருந்து வேறு மசோதாக்கள் இந்த அவைக்கு வாராதது நீண்ட நேரம் நிதி ஒதுக்கீட்டிலே பேசுவதற்கான வாய்ப்பை நமக்கெல்லாம் அளித்திருக்கின்றது. அதுவும் ஒரு வகையிலே நல்லதாக முடிந்தது என்ற நிலையிலே பல்வேறு சீரிய கருத்துக்களையெல்லாம் நாம் பரிமாறிக்கொள்வதற்கு இடம் தந்தது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் துணை மதிப்பீட்டிலே தான் பேசுவதற்கான வாய்ப்புப் பெறாத காரணத்தினால், அதிலே எடுத்துச் சொல்ல வேண்டிய நல்ல கருத்துக்கள் பலவற்றை இன்றையதினம் எடுத்துக்கூறியிருக்கின்றார்கள். குறிப்பாக அவர்கள் மாவட்ட நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிட்டு ட்ரெஷரி ஆஃபீஸ்கள் எப்படி இன்னும் வேகமாகவும், செம்மையாகவும் நடைபெற வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு அங்கே புழக்கத்திலே இருந்த பணத்திற்கும், இன்றைக்கு அங்கு பட்டுவாடா செய்யப்படவேண்டிய பணத்திற்கும் உள்ள பெரிய வித்தியாசத்தையும் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். இவைகளையெல்லாம் மனதிலே வைத்து அரசும் அங்கு நடவடிக்கைகள் விரைவாக நடைபெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதையும், எடுத்துச் சொல்லப்பட்ட நல்ல கருத்துக்களின் அடிப்படையில் மேலும் முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்வேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில், அவர்கள் வழங்கிய நல்ல யோசனைகளும் வரவேற்கத்தக்க யோசனைகளாகும். இயன்ற வரையிலே நம்முடைய கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் அவைகளிலே நிச்சயமாக நாட்டம் செலுத்துவார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டதையும், மாநகராட்சி மன்றத்திலே கண்டுபிடிக்கப்பட்ட தவறுகளுக்கு யார் யார் காரண கர்த்தாக்களாக இருக்கிறார்களோ அவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் வரவேற்றதோடு, காலாகாலமாக பல நகராட்சி மன்றங்களில் இந்த மண்டர் சோல் விவகாரம் நடைபெற்றுக்கொண்டு வருகிற

ஒன்றுதான் என்றும் குறிப்பிட்டார்கள். ஆனாலும், சென்னை மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையிலே, தவறு சுட்டிக்காட்டப்பட்டதும், உடனடியாக நாட்டை ஆளுகின்ற கட்சியும், நகரத்தை ஆளுகின்ற கட்சியும் ஒன்றாக இருந்தாலும், எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், நியாயம்
பி.ப. 6-20 நிலைக்க வேண்டும் என்கின்ற ஒரே குறிக்கோளோடு மாநகராட்சி மன்றத்தைக் கலைத்துவிட்டு இன்றைக்கு விசாரணையிலே தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். எனக்குள்ள வருத்தமெல்லாம், இப்படி ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகும், இன்னும் ஊழல் ஊழல் என்று மாற்றார் சிலர், பத்திரிகைக்காரர்கள், அதைப் பெரிது படுத்திக்கொண்டிருப்பதைப் பார்த்தால், ஒருவேளை நடவடிக்கை எடுத்ததே ஊழலோ, அதையும் அவர்கள் கண்டிக்கிறார்களோ என்று நாங்கள் சந்தேகப்பட வேண்டிய அளவுக்கு அது பெருகிக்கொண்டே போகிறது. வேறு மாநிலங்களிலே இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகிறபோது, அவைகளை இங்கே இருக்கின்ற மாற்றுக் கட்சிக்காரர்கள் மாத்திரமல்ல, அந்த மாநிலங்களிலே உள்ளவர்கள்கூட ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்திலே அதைப் பாராட்டி, தொடர்ந்து நடவடிக்கைக்கு ஆதரவாக, துணையாக இருந்து வருகின்ற காட்சியினைக் காண்கின்றோம். ஆனால் இங்கே ஒரு தவறு கண்டுபிடிக்கப்பட்டு, அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டால், அந்த நடவடிக்கை வெற்றிகரமாவதற்கான வகையில் உறுதுணையாக இருப்பதற்கு பலாக, அந்த நடவடிக்கையும் நாசமுறுகின்ற அளவுக்க வேறு பல பிரசாரங்கள் நடைபெறுவது நான் உள்ளபடியே வேதனையளிப்பதாக இருக்கிறது. இன்று காலையிலேகூட ஒரு பத்திரிகையிலே பார்த்தேன். கர்நாடக மாநிலத்தில், ஹூப்ளி மாநகராட்சி மன்றத்திலே ஊழலைக் கண்டுபிடிப்பதற்காக அங்குள்ள 16 அல்லது 17 கௌன்சிலர்கள், மேயரை வழி மறித்து மறியல் செய்திருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களென்ற செய்தியும் வந்திருக்கிறது. பத்திரிகைகளிலே பார்த்தேன். இப்படி ஆங்காங்கே சமுதாயத்திலே ஒரு சில மனிதர்களுடைய உள்ளங்களிலே இப்படிப்பட்ட ஆசாபாசங்கள் இருக்கின்றன. தாங்கள், தங்களுடைய கடமைக்கும், தங்களுடைய தகுதிக்கும் ஏற்ப ஊதியம் பெற வேண்டும், சம்பாதிக்க வேண்டும், அதுதான் முறை, நெறி என்பதை மீறி எப்படியாவது நாம் பணத்தைத் திரட்ட வேண்டும் என்ற அளவுக்குப் பேராசை படைத்த சிலர் மனித சமுதாயத்திலே இருந்திடத்தான் செய்கிறார்கள். அவர்கள் எந்த மட்டத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் அதிகாரிகளாகவும் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு தயங்கினாலோ, அல்லது நடைபெறுகின்ற காரியங்கள் தவறானவையென்று தெரிந்தும் அவைகளை மூடி மறைக்க அரசு முயன்றாலோ, அந்த அரசு நிச்சயமாகக் கண்டிக்கப்பட

வேண்டிய ஒன்றுதான். அதற்கு மாறாக, வேகம் வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகும், அரசு மீது தொடர்ந்து குற்றச்சாட்டைச் சுமத்துவது நல்லதல்ல என்பதை நான் இந்த மாமன்றத்தின் மூலமாக மாற்றுக் கட்சியிலுள்ள ஏடுகளுக்கும், தலைவர்களுக்கும், மற்ற அரசியல் வாதிகளுக்கும் நான் தெரிவித்துக்கொள்வதை என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

தேர்தலைப்பற்றிச் சொன்னார்கள். இரண்டு ஆண்டுகள் கழித்துக்கூட தேர்தலை வைத்துக்கொள்ளலாம்; அதிகாரிகளுடைய தலைமையிலே மாநகராட்சியினுடைய நிர்வாகத்தை ஒழுங்குற நடத்தலாமென்று சொன்னார்கள். ஒரு ஜனநாயக அமைப்பில், ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டுள்ள நாம், தேர்தலைத் தள்ளிப் போட்டுக்கொண்டு போவது முறையானதல்ல. ஆகவேதான், 6 மாத காலத்திற்கு மாநகராட்சி மன்றக் காரியங்களை தனி அதிகாரி நிர்வகிப்பாரென்றும், அதற்குள் வேறு பல சங்கடங்கள் காரணமாக நாம் தேர்தலை நடத்த முடியாவிட்டால்தான், மேலும் 6 மாதங்கள் நீடிப்பதற்கான வாய்ப்பை நேற்று நிறைவேற்றிய மசோதாவில் பெற்றிருக்கிறோம் என்பதையும் இந்த மாமன்றம் நன்றாக அறியும்.

இந்த மன்றத்தில் வழக்கமாகப் பேசப்படும் ஆசிரியர் பிரச்சினை, கல்விப் பிரச்சினை ஆகியவைபற்றியெல்லாம் பேசப்பட்டது. நான்கூட கல்வி அமைச்சரவர்களிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தேன். "குறிப்பாக இங்கே நடைபெறுகிற விவாதங்களிலே பதிலளிக்கும் பொறுப்பை எனக்குப் பதிலாக நீங்களே ஏற்றுக்கொண்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் இங்கே பேசப்படுகிற விஷயங்களிலே முக்கால் பகுதி ஆசிரியர்கள்பற்றிய விஷயமாக இருக்கிறது" என்று சொன்னேன். அதிலும் இன்றைக்கு நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னதுபோல, விரைவிலே தேர்தல் வருகிற காரணத்தாலோ—எனக்குத் தெரியாது, அவர்கள் சொல்கிறார்கள்—என்னவோ ஆசிரியர் பிரச்சினைக்கு இன்றைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. துணை மதிப்பீட்டில் ஆசிரியர் பிரச்சினைக்கு இடமில்லையா என்று கேட்டு, 10,200 ஆசிரியர்களை புதிதாக நியமித்திருக்கிறார்கள்; அதிலிருந்து ஆசிரியர் பிரச்சினையைப்பற்றி பேசுகிறோமென்று வாதாடக்கூடும். ஆனாலும் துணை நிதி ஒதுக்கீட்டிலே பேசுகிற நேரத்திலும், அல்லது நிதி ஒதுக்கீட்டிலே பேசுகிற நேரத்திலும் எடுத்துச் சொல்லப்படுகின்ற விஷயங்களை நல்லமுறையிலே ஆராய்ந்து, அதிலே இன்னின்ன நிவாரணங்கள் தேவை, இன்னின்ன திருத்தங்கள் தேவை என்ற அறிவுரையை அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்குவார்களானால், நாங்களும் அந்த வகையில் அரசை நடத்துவதற்கு

இலாக்காக்களை நடத்துவதற்கு பயனுள்ளதாக இருக்கும். அதை நாங்கள் பின்பற்றுவதற்கு நிச்சயமாக முடியும். ஆகவே ஆசிரியர் பிரச்சினைக்காகப் பேசி, தங்களுடைய முழு நேரத்தை எடுத்துக்கொள்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமியானாலும் சரி அல்லது அவருக்குப் பக்கத்தில் இருக்கின்ற நண்பர் திரு. கணபதியானாலும் சரி, இந்தப் பக்கத்திலிருக்கிற திரு. அறிவழகன் அவர்களானாலும், திரு. அறிவுடைநம்பியானாலும், திரு. சங்கரலிங்கம் அவர்களானாலும் பேசுகின்ற நேரத்திலே—ஆசிரியர்களை அறவே ஒதுக்கிவிட வேண்டாம், அதற்காக ஒரு பகுதி நேரத்தை வைத்துக்கொண்டு—அவர்களுக்கு அரசியலிலே தெரிந்த விஷயங்களை, அரசு இலாக்காக்களில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களை அவர்கள் எடுத்துச் சொல்வார்களானால், மெத்தவும் பயனுடையதாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்வேன். நண்பர் திரு. முத்துச்சாமி அவர்கள் 'ஏ' விங், 'பி' விங் பற்றி எடுத்துச் சொன்னார்கள். எப்போதும் 'விங்' என்றாலே, இறக்கைகள் என்று பொருள்படும். இரண்டு இறக்கைகளை ஒன்றாக ஆக்குவது கொஞ்சம் கஷ்டமான காரியம்தான். இரண்டு இறக்கைகள் தனித்தனியாக இருந்தால்தான் பறக்க இயலுமென்கின்ற வகையிலும் சில வாதங்கள் எடுத்து வைக்கப்பட்டன. இந்த இரண்டு இறக்கைகளையும் ஒன்றாக்கி வைப்பது பற்றி நம்முடைய நாவலர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துவருகிறார்கள். இதிலே கூடிப் பேசி ஒருமித்த கருத்து உருவாகிற வகையிலே காத்திருக்கிறோமேயல்லாமல், இதிலே அரசுக்கு எந்தவிதமான மறுப்புமில்லை என்பதையும், ஒருமித்த கருத்தாக வெளிவர வேண்டிய விஷயம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுத் துறைத் தலைமையாசிரியர்களுக்கு அரசிதழ் பதிவு உரிமை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நண்பர் திரு. அறிவழகன் அவர்களும், திரு. அறிவுடைநம்பி அவர்களும், மற்றும் நண்பர் திரு. சுவாமிநாதன், திரு. முத்துசாமி, திரு. கணபதி எல்லோரும் சொன்னார்கள். யாரையும் விட்டு விட்டு, ஆசிரியர்களிடத்தில் காட்டிக் கொடுக்க நான் விரும்பவில்லை. எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றியும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறதென்பதை அவர்கள் தேர்தல் நேரத்திலே சொல்லலாமென்ற உறுதியை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்களுடைய பிரச்சினைபற்றி இங்கே பேசப்பட்டிருக்கிறது. நான் பேரவையிலும், மேலவையிலும் அதுபற்றி மிக அதிகமான விளக்கங்களை எடுத்துக் கூறியிருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே மாணவர்களுடைய உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிற மனக் கிளர்ச்சியின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் நம்முடைய

தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். நண்பர் திரு. ராஜகோபால் அவர்கள் பேசுகிற நேரத்தில் கேட்டதைப்போல், இந்த 2, 3 ஆண்டுக்கால நிலவரத்தில் இந்த ஆட்சியினர் மாணவர்களுக்கு என்ன சலுகைகளைச் செய்து தரவில்லை? கல்லூரிகளாகட்டும், உயர்நிலைப் பள்ளிகளாகட்டும், அவர்கள் கேட்ட வசதிகள் எவை வழங்கப்படவில்லை என்பது ஒரு புறமிருந்தாலும், சில நேரங்களில் ஏற்பட்டுவிட்ட அசம்பாவிதங்களில் இந்த அரசு எவ்வளவு அக்கறையோடு தன்னுடைய வேதனையைத் தெரிவித்தது என்பது மாத்திரமல்ல, நடவடிக்கைகளை எடுத்திருக்கிறதென்பதையும் யாரும் மறந்துவிடக் கூடாது. பொதுவாக, அருமை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, தங்களுடைய வாழ்வை, எதிர்காலத்தைப் பாழாக்கிக்கொள்ளும் காரியங்களில், ஒன்று தாங்களாக ஈடுபடுகிறார்கள் அல்லது தூண்டிவிடப்பட்டு, ஈடுபடுத்தப்படுகிறார்கள். மாணவர்கள் அறப் போராட்டங்களில் கலந்துகொள்ளலாமென்ற அழைப்பினை இந்திய நாட்டினுடைய விடுதலைக்காக உத்தமர் காந்தியடிகள் விடுத்ததுண்டு. அதிலே நாட்டினுடைய விடுதலைக்காக மாணவர்கள் கலந்துகொண்டனர். மொழிப் போராட்டத்தில், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அண்ணா அவர்கள் ஈடுபட்டார்கள். மூதறிஞர் ராஜாஜியானாலும், பேரறிஞர் அண்ணாவானாலும் சரி, அந்தப் போராட்டத்தில் மாணவர்கள் அமைதியான முறையில் ஈடுபட்ட வரையில் ஆதரித்தார்கள். ஆனால் கிளர்ச்சி வேறு வடிவம் கொண்டபோது, வன்முறைக்குத் தூக்கிச் செல்லப்பட்டபோது அண்ணா அவர்கள் காலையிலே ஒரு அறிக்கையும், மாலையிலே ஒரு அறிக்கையும் விடுத்தார்கள். மாணவர்கள் உடனடியாக தங்கள் போராட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்ற வகையிலும், வன்முறைகளில் யாரும் ஈடுபடக்கூடாதென்ற அளவிலும். வன்முறை இரு புறமும் கூருள்ள கத்தி, தாக்கினால் திரும்பவும் தாக்கியவனையே தாக்கும் என்ற அருமையான உதாரணங்களை எடுத்துக்காட்டினார்கள். அதற்கும் கேளாத நிலையிலே, அண்ணா அவர்கள், "இதையும் மீறிக் கிளர்ச்சியில் ஈடுபடுகிற மாணவர்கள் என்னுடைய தம்பிகளாகமாட்டார்கள், நான் அவர்களை ஆதரிப்பதற்குத் தயாராகயில்லை" என்ற அளவுக்குச் சொல்லி, அன்றையதினம் வன்முறையிலே ஈடுபட்ட மாணவர்கள், வேலை நிறுத்தம், வேறு பல கிளர்ச்சிகளிலே ஈடுபட்ட மாணவர்களையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கான ஒரு வழி முறையை, தான் விடுத்த அறிக்கையின் மூலமாகக் கையாண்டார்கள். அதை நாம் மறந்துவிடக் கூடாது. நான் இப்போது கேட்பதெல்லாம்—நான் தோழமைக் கட்சிகளை விட்டுவிடுகிறேன். ஏனென்றால் தோழமைக் கட்சிகளிலுள்ள தலைவர்கள் எந்த அறிக்கையை விடுத்தாலும் அவர்கள் ஆளும் கட்சியின் சார்பாக வரும் அறிக்கைகள்; ஆளும் கட்சிக்குச் சார்பாக வரும் அறிக்கைகள் என்பதால் அவற்றை விட்டுவிடுகிறேன்—

இன்றைக்கு இருக்கிற எதிர்க் கட்சித் தலைவர்கள், இன்றைக்கு மாணவர் மத்தியிலே, அவர்கள் எவ்வளவு அடக்கம், ஒடுக்கமாக தங்களுடைய கல்வியைப் பூர்த்தி செய்கிற வகையிலே, இப்படிப்பட்ட போராட்டங்களில் ஈடுபடாமல், தங்களுடைய வாழ்வைப் பாழாக்கிக்கொள்ளாமல் இருந்திட வேண்டுமென்ற அறிவுரையை ஏன் தரக் கூடாதென்பதுதான் என்னுடைய கேள்வியாகும். அந்தக் கேள்வி ஏதோ ஒரு அறைகூவல் தோரணையிலே

பி.ப. 5-30 கேட்கப்படுகின்ற கேள்வியல்லவா? நாட்டு நன்மைக்காக எல்லா தலைவர்களையும் அழைத்து முதலமைச்சர் பேசுவாரா என்று நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கேட்கிறார்கள். நான் என்றைக்கு இப்படிப்பட்ட பிரச்சினைகளில் எல்லாத் தலைவர்களின் கருத்துக்களை அறியத் தயங்கினேன்? அதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். என்றைக்காவது நானோ, இந்த அரசாங்கமோ, இந்த அமைச்சரவையோ அப்படித் தயங்கியது கிடையாது. ஆனால் எந்தத் தலைவர்களாவது, இந்த அசம்பாவிதங்கள் எல்லாம் கூடாது, மாணவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை பேச்சுவார்த்தைகளின் மூலமாக எடுத்து வைத்து நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்ற வகையிலே அறிக்கைகளை விடுவார்களானால், அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி என்ன நிவாரணம் காணலாம் என்பதுபற்றி அரசு முடிவு எடுக்க இயலும். அதற்கு மாறாக இன்றைக்கு மாணவர்களைத் தூண்டிவிட்டு விடுகின்ற அளவுக்கு சில தலைவர்கள் அறிக்கைகள் வெளியிட்டிருக்கின்றார்கள். பத்திரிகைகளிலே பார்த்திருக்கலாம். மாணவர்களுடைய போராட்டம் நியாயமானது என்கின்ற வகையிலேயெல்லாம் இன்றைக்கு அறிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. ஒரு சில தலைவர்களுடைய எண்ணம், இரண்டு மூன்று மாதத்திற்குள்ளேயே, அதாவது பிப்ரவரி மாத பட்ஜெட்டுக்குள்ளேயே எதையெதையோ புதிதாக தேசியமயமாக்கப் போவதாக அறிவித்திருக்கின்றார்களே, அப்படி அதை அறிவிக்காமலிருப்பதற்கு, தான் காப்பாற்றப்படுவதற்கு இது ஒரு வழியாக இருக்காதா என்று இருக்கின்றது. நான் சுருக்கமாகச் சொல்கின்றேன். ஸ்டுடியோ, தியேட்டர்களை எங்கே தேசியமயமாக ஆக்கிவிடுவார்களோ, அந்த பட்ஜெட் வரை இவர்களை விட்டால் என்றுகூட, இன்னும் 2, 3 மாதத்திற்குள்ளாக இந்த அரசைக் கவிழ்த்துவிட வேண்டும் என்கின்ற அளவிலே இன்றைக்கு சில பேர்கள் அறிக்கைகளை விட்டு தயார் செய்துகொண்டு மாணவர்களைத் தூண்டிவிடுகின்ற அளவிலே இருக்கின்றார்கள். சில பேர் கிளர்ச்சி வேண்டாமென்றும் அறிக்கை விடவில்லை, வேண்டுமென்றும் அறிக்கை விடவில்லை. ஒரு சில தலைவர்கள் வெளிப்படையாகவே வெளிவந்து, இன்றைக்கு இந்த மாணவர்களுடைய கிளர்ச்சி நியாயமானதுதான், "பணி முடி" என்கிற வகையிலே, எந்தப் பணியை முடிப்பது என்று அவர்கள்

சூசகமாக எழுதி, அந்த முறையிலே இன்றைக்கு இழுத்துவிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதை இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் மனதார உணர்ந்திருக்கின்ற காரணத்தாலேதான் இப்போது கிளர்ச்சியைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே மிகுந்த ஆதங்க உணர்ச்சியுடன் நாடு எங்கெங்கே போய்க் கொண்டிருக்கிறதோ என்கின்ற வேதனையோடு கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்கள். நான் இன்னும் சொல்வேன். நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்திலே மாணவர்கள் வன்முறையில் ஈடுபடக்கூடாது என்பதிலே மிகுந்த அக்கறை செலுத்தினோம். அதைப் போலவே ஆளும் கட்சியாக வந்தபிறகும்கூட அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சென்னை மாநகரத்திலே பேருந்துத் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் யாரும் மறந்துவிடக்கூடிய ஒன்று அல்ல. அந்த மோதலின் போது இரவு 2 அல்லது 3 மணி சுமாருக்கு மாணவர்களால் தாக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட பேருந்துத் தொழிலாளர்கள் சட்டக்கல்லூரி வாசலிலே கைகளிலே கம்புகளோடு நின்றுகொண்டிருந்தபோதும், கல்லூரியில் இருக்கின்ற மாணவர்களை அவர்கள் தாக்க முயன்றபோதும் இரவு 2 மணி முதல் விடியற்காலை 5 மணி வரையிலே இந்த இரண்டு அணிகளுக்கு நடுவிலே நின்று, —அப்போது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த நான்—விடிய விடிய அங்கே நின்றுகொண்டு இரண்டு பகுதியினரையும் சமாதானப்படுத்துகின்ற முயற்சியிலேதான் ஈடுபட்டேன் என்பதையும் அப்போது பத்திரிகைகளிலே அறிக்கையாக வெளியிட்டிருக்கின்றார்கள். அப்போதே சட்டப் பேரவையில் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். நாடு அதை மறந்திருக்க முடியாது.

அன்றைக்கு 1968-ஆம் ஆண்டிலே நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலேகூட மாணவர்களில் சில பேர்கள் பெரம்பூரிலே ரெயில்வே பெட்டியைக் கொளுத்தி விட்டார்கள். பிறகு அங்கிருந்து சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு மாணவர்கள் ரெயில்பெட்டிகளைக் கொளுத்துவதற்கு வருகிறார்கள் என்று கேள்விப்பட்டதும், அப்போது பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நான் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குச் சென்று ஆயிரக்கணக்காக அங்கு கூடியிருந்த மாணவர்களுக்கு மத்தியிலே நின்று அவர்கள் கலைந்து போக வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை கூறி ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அதைத் தடுத்திருக்கிறோம்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 நவம்பர் 28

1938-ம் ஆண்டு தமிழை வளர்க்க தமிழ் மொழியைக் காப்பாற்ற, மாணவர் மன்றம் என்கின்ற அந்த தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்றைத் தொடங்கி, அந்தக் காலத்திலிருந்தே மாணவர்களிடத்திலே நெருங்கிய தொடர்பு கொண்ட ஒருவன்தான் நான். ஆனால் இன்றைக்கு மாணவர்கள் தேவையில்லாமல் தூண்டப்படுகிறார்கள். பாளையங்கோட்டை சம்பவம், அண்ணாமலை நகர் சம்பவம், கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள்கூட இங்கே சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் தவறான தகவலைக் கொடுத்த காரணத்தாலேதான் நீதி விசாரணை தேவைப் பட்டது என்று. போலீஸார் தருகின்ற தகவலை இந்த அவை நம்ப வேண்டு மென்று நான் என்றைக்கும் அறுதியிட்டுக் கூறியது கிடையாது. எங்களுக்கு வந்த தகவலைக் கூறுகிறேன், இது தவறானால் நான் திருத்திக்கொள்கிறேன் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். இறந்தது உதயகுமார் அல்ல என்று நான் என்றைக்குமே சாதித்தது கிடையாது. அது சந்தேகமாக இருக்கிறது என்று தான் சொல்லியிருக்கின்றேன். உதயகுமார் என்றோ, உதயகுமார் அல்ல என்றோ என்னால் சொல்ல இயலாது என்றுதான் நான் குறிப்பிட்டிருக் கின்றேன். அதைப்போலவே, பாளையங்கோட்டையில் இராதநாதன் என்ற மாணவன் இறந்தபோதும், இப்படிப்பட்ட சந்தேகம் கிளப்பப்பட்டது. இப்ப டிப்பட்ட சந்தேகங்கள் கிளப்பப்பட்ட காரணத்தினாலேதான், கிளைவ் ஹாஸ்ட லிலே போலீஸார் அத்துமீறி நடந்துகொண்டிருக்கிறார்களா இல்லையா என்ற சந்தேகம் அரசாங்கத்துக்கு போக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசாங்கம் எந்தச் சம்பவமானாலும், அது அண்ணாமலை நகர் சம்பவ மானாலும், பாளையங்கோட்டை சம்பவமானாலும், கிளைவ் ஹாஸ்டல், சம்பவமானாலும் நீதி விசாரணை செய்ய உத்தரவிட்டது. அந்த நீதி விசாரணை யில் நிர்வாகத் தலையீடு எதுவும் இல்லாமல் நடைபெற்றது என்பதை இந்த நீதி விசாரணை அறிக்கைகளைப் படித்துப்பார்த்தவர்கள் நன்றாக அறிந்து கொள்ளலாம். போலீஸார் கிளைவ் ஹாஸ்டலிலே அத்துமீறி நடந்து கொண்டார்கள் என்று நீதி விசாரணை அறிக்கை கூறுகிறது. அதைப்போலவே பாளையங்கோட்டையிலே போலீஸார் தாக்கியது தவறு என்று கூறுகிறது. பதினான்காம் தேதி இந்த அமைச்சரவை கூட்டத்திலே இந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கான உத்தரவுகளை, ஆணைகளை அரசு பிறப்பித்தது. அதற்குப் பிறகு அறிக்கை சட்டப் பேரவையிலே, மேலவையிலே வைக்கப்பட்டது. அடுத்து நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.ஜி. அவர்களும், ஒரு போர்டு மெம்பர் அவர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். ரெவின்யு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க போர்டு மெம்பரும், போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஐ.ஜி. அவர்களும் நியமிக்கப்பட்டிருக் கின்றார்கள். அவர்களும் வாளா இருந்திடவில்லை. உடனடியாக திருச்சி கிளைவ்

1973 நவம்பர் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

ஹாஸ்டலில் நடந்த சம்பவத்திற்குக் காரணமாக இருந்த டி.எஸ்.பி. ஸஸ்பெண்ட் செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றார். அதைப் போலவே ஆர்.டி.ஓ. ராமசாமி ஸஸ்பெண்ட் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார். பாளையங் கோட்டையிலே பேராசிரியரை அடித்ததாகச் சொல்லப்படுகிற அந்த போலீஸ் அதிகாரி ராஜசேகரன் என்பவர் சஸ்பெண்ட் செய்து வைக்கப்பட்டிருக்கின்றார். அவர் விசாரிக்கப்படுகின்றார். அவருடைய மகன்மீதும் வேறு இரண்டு போலீஸ் காரர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு அரசாங்கம் அவர்கள் மீது வழக்கு நடத்த, சார்ஜ்-ஷீட்டும் போட்டிருக்கின்றது. அதற்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது. சட்டம் படித்தவர்கள் இந்த அவையிலே ஏராளமாக இருக்கின்ற காரணத்தால், நான் சொல்ல விரும்புவதெல்லாம், உள்ளபடியே இப்படி வழக்குகள் போட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நேரத்தில், நான் பேரவையிலே காலையிலே குறிப்பிட்டதைப் போல், ராஜ தர்பாரில் மகாராஜா உட்கார்ந்துகொண்டு ஆணையிடுவது போல அவரைக் கொண்டுபோய்ச் சிரச்சேதம் செய், அவரைக் கொண்டுபோய் சிறையிலே போடு என்று ஆணை யிட்டுவிட முடியாது. சட்டப்படி ஒரு சம்பிரதாயம் இருக்கின்றது. அந்த சம்பிரதாயங்களை மீறி நான் நியாயத்தை மட்டும் மனதிலே வைத்து நடவடிக்கை எடுத்துவிட்டால், அவர்களே சட்டத்தின் சந்துபொந்துகளிலே புகுந்துகொண்டு நடவடிக்கை எடுக்கின்ற அளவிலேகூட தப்பித்துவிடுகிறார்கள். ஆகவேதான் சட்ட சம்பிரதாயங்களுக்கு ஏற்ற வகையிலே இந்த ஒழுங்கான முறையை, முறையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்கின்றது. அவ்வகையிலே அதிகாரிகள் நியமிக்கப்பட்டது மீண்டும் ஒரு நீதி விசாரணை என்பதற்கல்ல. தரப்பட்ட நீதி விசாரணை முடிவின் அடிப்படையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காகச் செய்த ஏற்பாடுகளே. அவைகளை இந்த இரண்டு அதிகாரிகளும் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். இதற்கும் மேலாக ஏதாவது செய்ய வேண்டுமென்றால், மாணவர்களே என்னை வந்து சந்திக்கலாம் அல்லது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைச் சந்திக்கலாம். அவர்கள் எங்களைச் சந்திக்க வேண்டுமென்று கேட்டதே கிடையாது. நாங்கள் வருவோம், தடையை மீறுவோம் என்று வருகின்றார்கள் அல்லது பேருந்துகள் மீது கல்லெறிவோம் என்று வருகிறார்கள் அல்லது பேருந்துகளைக் கொளுத்துவோம் என்று வருகிறார்கள். இப்படி மாணவர்கள் சமுதாயத்தை நாம், அவர்களே அறியாத அளவுக்கு, இங்கே மாறச் செய்கின்றோம் என்பதைச் சொல்லிக் கொள்கின்றேன். எந்த ஒரு காரியத்தில் ஈடுபடுகிறார்களோ அந்தக் காரியத்தை நாம் அனுமதித்துக்கொண்டேபோனால் எப்படியாகும்? இன்றைக்கு ஒரு ஆட்சி இருக்கலாம், நாளை வேறு ஒரு ஆட்சி வரலாம். ஜனநாயகத்திலே அது மாற்ற முடியாத ஒரு இலக்கணமாகும். ஆகவே இதையே தொடர்ந்து ஒவ்வொரு எதிர்க் கட்சியும் தூண்டிவிட்டுச் செய்து கொண்டே போனால், நம் நாடும், நம்

சமுதாயமும் எதிர்காலத்திலே கெட்டுவிடும் என்பதை நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு நடைபெற்ற சம்பவத்தைப்பற்றிக்கூட எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அதை எடுத்துச் சொன்னார்கள். அவர்களே காலையிலே பார்த்ததாகச் சொன்னார்கள். பச்சையப்பன் கல்லூரியின் வாசலில் 400 அல்லது 500 மாணவர்கள் நின்று கொண்டிருந்த காட்சியைத் தான் பார்த்ததாகச் சொன்னார்கள். பள்ளிக்கோ, கல்லூரிக்கோ செல்வதில்லை என்று முடிவு எடுத்த
பி.ப 6-3 பிறகு, கல்லூரி வாசலிலேயே நின்றுகொண்டு கல்லூரிக்கு வருகின்ற மாணவர்களைத் தடுக்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட வன்முறைகள் தலைகாட்டி விடுகின்றன.

நான் இப்போது எனக்கு வந்த தகவலைச் சொல்லுகின்றேன். வெளியிலிருந்து கொண்டிருந்த மாணவர்கள், உள்ளே செல்லுகின்ற மாணவர்களைத் தடுத்ததாகவும் அதற்குப் பிறகு அந்த வழியே செல்லும் பேருந்துகள் அல்லது கார்கள்மீது கற்கள் எறிந்து தடுத்ததாகவும், அதனால் பாதிக்கப்பட்ட பொது
பி.ப 6-40 மக்கள் அந்த மாணவர்களை எதிர்த்து, அவர்களிடையே கைகலப்பு ஏற்பட்டதாகவும், பின்னர் இரண்டு பேரும் மாறி மாறி கற்களை எறிந்ததாகவும், இப்படி பொது மக்களுக்கும் கல்லூரிக்கு வெளியே இருந்த மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒரு ஐந்து பேரை—அந்த ஐந்து பேருடைய பெயர்களைக்கூட அதிகாரிகள் தந்திருக்கின்றார்கள்---மாணிக்கம், விஜயகுமார், ஆறுமுகம், ராமகிருஷ்ணன், சுந்தரம் என்ற பொதுமக்களைச் சார்ந்த ஐந்து பேரை கல்லூரிக்குள்ளே இருந்த மாணவர்கள் இழுத்துச் சென்று விட்டதாகவும் பின்னர் வெளியே இருந்த மாணவர்கள் வெளியிலிருந்து கல்லூரிக்குள் கற்களை வீசியதாகவும் இதனால் பொது மக்கள் பாதிக்கப்பட்டு, பின்னர் அவர்களும் சேர்ந்து கற்களை வீசியதாகவும், பிறகு போலீஸார் பொது மக்களைக் கலைப்பதற்கு—மாணவர்களை அல்ல--கண்ணீர்ப் புகை வீசியதாகவும் பிறகு பொது மக்கள் கலைந்து சென்றதாகவும் தகவல்கள் வந்திருக்கின்றன. மிகக் குறுகிய காலத்தில் எதிர்க் கட்சித் தலைவரவர்களும் மற்றவர்களும் இந்தப் பிரச்சினையை எடுத்த காரணத்தினாலேயே எனக்கு இதுவரையில் கிடைத்துள்ள தகவல்களைக் கொண்டு இவற்றைச் சொல்ல முடிந்தது. 'உள்ளே இருந்த ஐந்து பேரும் காயத்தோடு இருந்து மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டிருக்கிறார்கள். கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தினால் ஒரு சிலர் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற செய்தியும் வந்திருக்கின்றது. கல் எறிதல் போன்ற காரியங்களில் மாணவர்களில் சிலரும் காயமுற்று இருக்கின்றார்கள் என்ற செய்தியும் கிடைத்திருக்கின்றது.

நான் சொல்லுவது, இந்த அளவிற்கு நிகழ்ச்சிகள் தேவைதானா? நடந்து போன நிகழ்ச்சிகள் பற்றி நான் கவலைப்படாமல் இல்லை. ஆனால் இந்த அளவிற்கு நிகழ்ச்சிகள் தேவைதானா என்று தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்களுடைய கோரிக்கை என்ன? முதலமைச்சர் அல்லது இந்த அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டும். இதைத்தான் கோரிக்கையாக வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் இதை ஏற்றுக்கொண்டு இராஜினாமா செய்துவிடுவதாக வைத்துக்கொள்ளுங்கள்? அடுத்து, இது வாடிக்கையாக ஆகிவிடும் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு நான்கு போலீஸ்காரர்கள் அல்லது இரண்டு போலீஸ் அதிகாரிகள் நினைத்தால், ஒரு அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடலாம். இன்னொரு அரசாங்கம் வருவதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த அரசாங்கத்தையும் கவிழ்த்துவிட வேண்டும் என்று போலீஸ் அதிகாரிகள் நினைத்தால், எங்கேயாவது மாணவர்களை அல்லது தொழிலாளர்களைப் பிடித்து அடிக்க வேண்டியது, துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியது, பிறகு இப்படி ஒரு நீதி விசாரணை. அதில் ஒரு நீதிபதி போலீஸார் மீதுதான் குற்றம் என்று சொல்ல வேண்டியது. உடனே மாணவர்களும் தொழிலாளர்களும் 'இந்த அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டும்' என்று சொல்லுவது என்று இப்படியே போய்க்கொண்டிருந்தால் அதற்கு ஒரு முடிவே எல்லையே இல்லாது போய்விடும். ஆகவே எந்த அதிகாரி தவறு செய்திருந்தாலும், அவர்கள் மாணவர்கள் மீதோ அல்லது மற்றவர்கள் மீதோ அத்துமீறி நடந்திருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு தயாராகி நடவடிக்கை எடுப்பது என்று மேற்கொண்ட பிறகு, எந்தக் கோரிக்கையும் இல்லாமல் வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லுவது பொருந்தாததாக இருக்கின்றது. ஆகவே அப்படிப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளத்தக்க நிலைமையில் இல்லை என்பதையும், மாணவர்கள் தங்கள் எதிர் காலத்தை எண்ணி, தங்கள் படிப்பைப் பாழாக்கிக்கொள்ளாமல் அவர்கள் தொடர்ந்து நல்ல முறையில் கல்லூரிகளுக்குச் சென்று படித்திட வேண்டும் என்று நான் இரண்டொரு நாட்களாக, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே கூறியதைப் போல, மிக உருக்கமான முறையில் பணிவன்புடன் வேண்டுகோள் விடுத்து வருகின்றேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசியதிலிருந்து பொதுவாக எதிர்க் கட்சிக்காரர்கள் மாணவர்களுக்குத் தவறான வழிகளைக் காண்பித்து பலாத்காரத்தில் அவர்கள் இறங்கும் படியான முறையில் தூண்டிவிடுகின்றார்கள் என்று சொல்லுவதில் நான் என் மனவேதனையையும் மறுப்பையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்களைப் பொறுத்த வரையில், அண்மையில் அக்டோபர் 3 ஆம் தேதியன்று ஆரம்பித்த அறப்போராட்டத்தில்கூட, மாணவர்கள் யாராக இருந்தாலும், அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லியிருந்தோம். காரணம், அவர்கள் இப்படிப்பட்ட போராட்டங்களிலே கலந்துகொண்டால், அது அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையை மட்டுமின்றி, எங்கேயோ, அவர்களைக் கொண்டுபோய்விடும் என்று தெரியும். எனவே மாணவர்களை இதில் இழுக்கக்கூடாது என்று ஒதுக்கி வைத்திருந்தோம்.

இரண்டாவது, எந்தக் காரணத்தைக் கொண்டும் மாணவர்கள்—அவர்களுடைய கிளர்ச்சிகளை, கோரிக்கைகளைக்கூட நாம் புரிந்து கொள்ளலாம்—பலாத்காரத்தில் ஈடுபடுகின்றதை நாங்கள் என்றைக்கும் ஆதரித்ததில்லை. எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், எங்கள் கட்சியைச் சேர்ந்த மாணவர்கள் பலாத்காரத்தில் நிச்சயமாக இறங்கமாட்டார்கள். வன்முறைகளில் அவர்கள் இறங்கக்கூடாது என்று வற்புறுத்தியிருக்கின்றோம். அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே எங்களைப் பொறுத்த வரையில், வன்முறையைத் தூண்டிவிடுவதாக அல்லது வன்முறைக்கு நாங்கள் ஆதரவு தருவதாக அவர்கள் நினைத்துக்கொண்டால், அது தவறு. இப்போதுள்ள பிரச்சினை, வெளியே உள்ளவர்கள் உள்ளே சென்று மாணவர்களை அடிப்பதிலிருந்து பாதுகாப்பதுடன் மாணவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தலைவர்கள் யாரும் தூண்டிவிடுவதில்லை என்று சொன்னார்கள். ஆனால் பழைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நடைபெறும் 'நவசக்தி' பத்திரிகையில் தலையங்கமே எழுதப்படுகின்றது. மாணவர்களுடைய போராட்டங்களை ஆதரித்து. போடப்படும் செய்திகள் அனைத்தும், எங்கேயாவது மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் தகராறு என்றால்கூட, 'திராவிட முன்னேற்றக் கழகக் குண்டர்களுக்கும் மாணவர்களுக்கும்' என்றுதான் போடுகின்றார்கள். எங்கேயாவது கொலை நடந்திருக்கும். ஒருவன் கொலை செய்யப்பட்டிருப்பான், செய்தவன் திராவிட முன்னேற்றக் கழகத்தான் என்று தெரிகிறது என்றுதான் போடப்படுகிறது. இப்படிப் பத்திரிகைகளும் தலைவர்களுமே தூண்டிவிடும் நிலைமை இருக்கின்றது. இதை மறந்துவிடக் கூடாது. எதிர்க் கட்சித் தலைவரவர்களைக் கேட்டால், 'அது எங்கள் அதிகார பூர்வமான பத்திரிகை இல்லை' என்று அவர்கள் கூறிவிடக்கூடும். பல முறை கூறியும் இருக்கின்றார்கள். ஆனாலும் இப்படிப்பட்ட பத்திரிகைகள் தூண்டி

விடும் நேரத்தில், 500 பேர் கைது செய்யப்பட்டால், 5,000 பேர் என்றும் 50,000 பேர் என்றும், 'மாணவர்கள் அடிக்கப்பட்டார்கள், கொல்லப் பட்டார்கள்' என்றும் தவறான செய்திகளை வெளியிடும் நிலைமைகளைப் பார்க்கும்போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் 'காங்கிரஸ் சார்பிலே யாரும் நாங்கள் தூண்டிவிடவில்லை' என்று கூறிவிட்டபிறகு, தவறான செய்திகளை வெளியிட்டு மாணவர்களைத் தூண்டிவிடும் பத்திரிகைகள் ஆனாலும் சரி, ஆசிரியர்களானாலும் சரி, அல்லது அந்தப் பத்திரிகைகளை அச்சடித்து வெளியிடும் அச்சுக்கூடங்களானாலும் சரி, தலைவர்களானாலும், வேறு யாரானாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கலாமா என்பது பற்றிக் கூட இந்த அரசு ஆலோசித்து வருகின்றது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுவேன். ஏனென்றால், 'பொது மக்கள்' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். எவ்வளவு நாளைக்கு இப்படியே போவது? பொதுமக்களுக்கு உள்ள சங்கடத்தையும் பார்க்க வேண்டும். பஸ்ஸில் அல்லது காரில் போய்க் கொண்டிருக்கின்றார்கள் அல்லது நடைபாதையில் போய்கொண்டிருக் கின்றார்கள். அப்படிச் செல்லும் நேரத்தில் மாணவர்களுடைய கல்லெறிதல் அல்லது வன்முறைகள் இவற்றின் காரணமாக பொது மக்கள் பாதிக்கப்படும் நேரத்தில், அந்தப் பொது மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் போலீஸாருக்கு இருக்கின்றது. போலீஸார் அந்தப் பொது மக்களைக் காப்பாற்றாமல் மாணவர்கள் பக்கம் இருந்துவிடுவார்களானால், பிறகு பொது மக்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கு யார் துணையை நாடுவார்கள்? அந்தக் கேள்விக்கும் நாம் பதிலளித்தாக வேண்டும். ஒரு அரசு எப்படி மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமோ, எப்படி தொழிலாளர் களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமோ, அதேபோல பொது மக்களுக்கும் பாதுகாப்பு அளித்தாக வேண்டும். 'நீங்கள் பாதுகாப்பளிக்காவிட்டால், நாங்களே எங்களைப் பாதுகாத்துக்கொள்ளவா'? என்று பொது மக்களிட மிருந்து எழுகின்ற கேள்வியினை எங்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. ஆகவேதான் அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற கருத்தும் இந்த மாமன்றத்திலே எடுத்துக்காட்டப்பட்டது.

நமது நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள், 'கல்லூரிகளை யெல்லாம் ஒரு மாத காலத்திற்கு மூடிவைத்து விடுங்கள்' என்று. ஒரு மாதத்திற்கு என்ன, ஒரு ஆண்டு காலத்திற்குக்கூட மூடிவைப்பது பற்றி நாங்கள் உள்ளபடியே கவலை கொள்ளவில்லை. ஏனென்றால் மாணவர்கள் சமுதாயத்தில் ஒரு உயிர் அல்லது இரண்டு உயிர்கள் இப்படி இழந்துவிடுவது என்றால், நாங்கள் உள்ளபடியே அதைத் தாங்கிக்கொள்ளமுடியாத நிலைமையில் தான் இருக்கின்றோம். யாரோ தூண்டிவிட்டு, யார் வீட்டுப் பிள்ளையோ

இறந்து, அதன் காரணமாக மறுபடியும் கிளர்ச்சிகள் நடைபெற்று, பின்னர் இரத்தக் களறிகள் ஏற்படுவது விரும்பத்தக்கதல்ல. இன்றைக்கு கல்லூரிகளுக்கு அல்லது பள்ளிகளுக்கு மாணவர்களை அனுப்பும்போது அந்தப் பெற்றோர்கள் என்ன கருதிக்கொண்டு அனுப்புகின்றார்கள்? ஊர்துநாதன் இறந்துவிட்டான். ஒரு மாணவன். ஆனால் அந்த மாணவனுடைய தந்தை எனக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் கடிதங்களை எழுதி அனுப்பியிருக்கின்றார்கள். அந்த மாணவருடைய தந்தை சவரிமுத்து என்பவர் சேலத்திலிருந்து எழுதியிருக்கின்றார். அதைப் பார்த்தால் நமக்கே கண்ணீர் வருகின்றது. அதைப் படிக்கின்றேன்:

"மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய சமூகத்திற்கு சேலம், சவரிமுத்து வணக்கத்தோடு எழுதியது. இப்பவும் எனது மூத்த குமாரன் ஊர்துநாதன் சென்ற வருஷம் நவம்பர் மாதம் 21-ம் தேதி பாளையங்கோட்டையில் இறந்துபோன விஷயம் தங்களுக்கு நன்றாகத் தெரியும்."

இந்தக் கடிதம் எழுதப்பட்டது 24—11—1973 அன்று. அவர் எழுதுகிறார்,

"நான் ஒரு குடி மகன், தகப்பனிடம் பிள்ளை முறையிட்டுக்கொள்ளுவதைப் போல தங்களிடம் முறையிட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு ஆதரவு தர வேண்டும். என் குடும்பம், ஐந்து ஆண் குழந்தைகளும் ஆறு பெண் குழந்தைகளும் கொண்டது. இதில் மூத்த மகன்தான் ஊர்துநாதன். அவனுக்குப் பிறகு மூன்று பெண்கள். மூன்று பெண்களும் கல்யாணம் செய்யக்கூடிய நிலைமையில் இருக்கின்றார்கள். மூன்று பெண்களும் மூன்று பையன்களும் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஊர்துநாதனுக்கு அடுத்த பையன் அவன் இறந்தவுடன், அவன் திருச்சி புனித ஜோசையப்பர் பள்ளியில் படித்துக்கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு ஒரு கடையில் சம்பளத்திற்கு அனுப்பி மாதம் ரூ. 60 சம்பாதிக்கிறான்."

என்று இப்படி ஒரு வேதனையான குடும்பக்கதையை எழுதியிருக்கின்றார் அவர். இப்படியெல்லாம் நடைபெற்றது இது. பேராசிரியர் ஒருவர் அடிக்கப்பட்டார். உடனடியாக அவரை அடித்த போலீஸார் மீதும் அந்தப் போலீஸ் அதிகாரியுடைய இரண்டு மகன்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது. அப்போது திருநெல்வேலியில்தான் கல்வி அமைச்சர் அவர்களும் இருந்திருக்கின்றார்கள். அவரும் உறுதியாக உத்தரவிட்டிருக்கின்றார். இவ்வளவிற்கும் பிறகு 'கலெக்டர் அலுவலகத்திற்கு மனு கொடுக்கப் போகிறோம்' என்று சொல்லி, அங்கே கலவரத்தில் ஈடுபட்டு அதன் காரணமாக அங்கே கொளுத்தப்பட இருந்த பஸ்களை மீட்க போலீஸார் சென்ற போது பயந்து ஓடிய மாணவன் ஆற்றிலே விழுந்து இறந்தான். அந்த மாணவன் தான் ஊர்த்துநாதன். இறந்த மாணவர் அந்தக் குடுபத்திற்கு மூத்த மகன். அவரை நம்பித்தான் அந்தக் குடும்பம் இருந்திருக்கின்றது. அந்தக் குடும்பம் இன்றைக்கு நிர்கதியாக ஆகியிருக்கும் நிலைமையில் அவரது தந்தை கடிதம் எழுதி தங்கள் குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று எனக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் எழுதியிருக்கின்றார். இன்று காலையிலே தான் அந்தக் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் முதலமைச்சர் நிதியிலிருந்து நான் தருவதாக ஆணை பிறப்பித்திருக்கிறேன். (கையொலி) பத்தாயிரம் ரூபாய் தருவது பெரிதல்ல. ஒரு உயிர் போயிருக்கிறது. அந்தக் குடும்பத்தைப் பாதுகாக்கவேண்டிய ஒரு காவலன் இன்றைக்கு மறைந்திருக்கிறான் என்றால், இப்படிப்பட்ட செயல்களின் மூலமாக எவ்வளவு பெரிய இழப்பிற்கு குடும்பங்கள் ஆளாகின்றன என்பதையும், இது போன்ற காரியங்களை தூண்டிவிடாமலிருப்பதற்கும், இப்படிப்பட்ட கிளர்ச்சிகள் ஏற்படுகிற நேரத்திலே தணிப்பதற்கும் என்னென்ன வழி வகைகள் உண்டோ அவைகளைச் செய்வதற்கு நாம் போராட வேண்டும். , எதிர்க் கட்சிகள் எதிர்த்துப் பேசுவதற்கு உரிமை உடையவை. நான் இல்லையென்று சொல்லவில்லை. பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ள பார்லிமெண்ட் முறையிலே இந்தப் பிரச்சினைகளிலே வெற்றி காணுவதுதான் ஜனநாயக முறையில் கடைபிடிக்கக்கூடியதாக இருக்கும். அறப் போராட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி நடத்திய அறப் போராட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நாங்கள் அதைத் தாக்கிப் பேசினோமா? நான் கேட்கிறேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு நீண்ட கால அரசியல் அனுபவம் உண்டு. எந்த முதலமைச்சராவது ஆட்சிக்கு எதிராக நடத்தப்படுகிற போராட்டத்தை ஆதரித்து, வரவேற்று அறிக்கை விட்டதுண்டா? அமைதியாகப் போராட்டம் நடத்தப்பட்டது என்ற வகையில், அந்த அறப் போராட்டத்தை வரவேற்றே கூட அறிக்கை விட்டிருக்கிறேன். அதைப் போல . . .

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, எங்கும் நடைபெறாத அந்தச் சம்பவம், முதலமைச்சரவர்களே அரசாங்கத்திற்கு விரோதமாக நடத்தப்பட்ட அறப் போராட்டத்தை அவர்களே ஆதரித்து, அறிக்கை விட, கடைசியில்

அரசாங்கமும், போராட்டம் நடத்துபவர்களும் ஏதோ சதி செய்துகொண்டு, ஒத்துழைத்துக்கொண்டு போராட்டம் நடத்தியதாக மற்ற அரசியல் கட்சிகள் விமரிசித்ததை அவர்கள் அறிவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் அவர்கள் அப்படிப் பேச வேண்டுமென்பதற்காக வரவேற்கவில்லை. எல்லாக் கட்சிக்காரர்களும், பொதுவாக ஆளும் கட்சிக்கு இப்படி ஒரு சங்கடம் வரட்டும் என்று கருதாமல் நாட்டில் அமைதி இருக்க வேண்டுமென்று கருத வேண்டும். வேறு பல பிரச்சினைகளில் அரசியல் கட்சிகள் சந்திக்கலாம். தேர்தல்களில் சந்திக்கலாம். வாக்காளர்கள் மூலமாகச் சந்திக்கலாம். அதுவரையில் பொறுத்திருக்கலாம் என்ற எண்ணத்தைக் கொள்ளவேண்டும். மாணவர்கள் கிளர்ச்சியால், தொழிலாளர்கள் கிளர்ச்சியால், வேறு பல கிளர்ச்சிகளால் ஒரு அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவது என்பதிலே அவர்கள் வெற்றி காண்பார்களானால், அதே முறை தொடர்ந்து பின்பற்றக்கூடிய ஒரு மரபு ஆகிவிடும். இது முடியக் கூடிய முறையும் அல்ல. இதை எதிர்க் கட்சியில் உள்ளவர்களுக்கு எடுத்துக் காட்டி, மாணவச் சமுதாயம் அமைதியான முறையில் தங்களுடைய கல்விப் பயிற்சியைப் பெற வேண்டுமென்ற வேண்டுகோளையும் விடுக்கிறேன். இப்படிப்பட்ட நல்ல விளக்கங்களைத் தருவதற்கு, இன்றைக்கு நிதி ஒதுக்கீட்டிலே விவாதிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்காக, என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்லுரை பகன்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் திரு. சக்திமோகன் அவர்கள் தேவர் சமாதி பற்றிக் குறிப்பிட்டார்கள். இதுபற்றி 'அரசாங்கமே மண்டபம் கட்டலாம்' என்று அனைவருமே ஒற்றுமையாக விண்ணப்பம் தருவார்களானால், இது பற்றி அரசாங்கம் கவனிக்கும் என்பதையும் எடுத்துக் கூறி இந்த அளவில் அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1973) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

(பரிந்துரை ஏதும் இல்லை.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1973) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1973) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1973).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்5) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1973) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1973) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதும் இல்லை.

@ 225-226 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1973) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1973) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

101. Notification issued with G.O. Ms. No. 307, Co-operation, dated the 28th August 1973 in regard to the date of coming into force of the Tamil Nadu Money-Lenders Act, 1957 in certain areas. [Laid on the table of the House under section 22 (3) of the Tamil Nadu Money-Lenders Act, 1957 (Tamil Nadu Act XXVI of 1957).]

102. Notification issued with G.O. Ms. No. 569, Labour and Employment, dated 4th September 1973 read with Government Memorandum No. 67520/F-3/72-28, dated 8th October 1973, making the Tamil Nadu Labour Welfare Fund Rules, 1973. [Laid on the table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).]

103. Notification issued with Roc. No. 208192/72-F1, dated the 12th July 1973, in regard to exclusion of the entire area of Iyangunam and Vetraputhur revenue villages from the existing Ganalapadi Panchayat of North Arcot district for constitution of a separate Panchayat. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. Reports, Notifications and other Papers.

34. Notifications issued with G.O. Ms. No. 748, Labour and Employment, dated the 22nd November 1973 in regard to Minimum rate of wages for employment in agriculture and employment ancillary to Agriculture.

35. Report of the Committee for the Revision of Minimum Wages for Agricultural workers in Tamil Nadu, 1973.

36. Report of the Estimates Committee on Civil Supplies Department (Part I—Tamil).

37. Returns of assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on 31st March 1973 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969 :—

1. Pulavar O. Arivudai Nambi.
2. Thiru A. R. Damodaran.
3. Thiru P. Thirugnanasambandham.
4. Thiru S. C. Sengottuvelappa Gounder.

இணைப்பு I

[158 ஆம் பக்கத்திலுள்ள இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 35 OF 1973.

(As passed by the Assembly)

A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which ctmmenced on the 1st April 1973.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 4) Act, 1973.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April 1973.*—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1973, a further sum not exceeding, seven crores sixty-seven lakhs and thirty-seven thousand rupees being moneys required to meet—

(*a*) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDULE.

(*See* Section 2.)

Demand number.	*Services and purposes.*	*Sums not exceeding.*		
		Voted by the Legislative Assembly,	*Charged on the Consolidated Fund of the State.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
1	Land Revenue Department..	18,20,400	..	18,20,400
4	General Sales Tax and other tanes and Duties—Administration.	2,66,600	..	2,66,600
9	Head of State, Ministers and Headquarters staff.	12,52,000	200	12,52,200
11	District Administration and Miscellaneous.	27,83,500	9,000	27,92,500
12	Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.	100,000	..	1,00,000
13	Administration of Justice.	96,800	..	96,800
14	Jails	2,00,000	..	2,00,000
15	Police	65,00,700	..	65,00,700
16	Education	1,00,34,500	2,300	1,00,36,800
17	Medical	12,49,500	..	12,49,500
18	Public Health	8,72,000	..	8,72,000
19	Agriculture	18,42,200	8,800	18,51,000
21	Animal Husbandry ..	20,49,800	..	20,49,800
22	Co-operation	62,500	..	62,500
23	Industries	8,60,100	3,400	8,63,500
25	Handloom and Textiles.	2,27,200	..	2,27,200
27	Community Development Projects, etc.	100	..	100
29	Welfare of the Scheduled Tribes, Castes, etc.	60,45,800	..	60,45,800
30	Welfare of the Backward Class, etc.	7,81,100	..	7,81,00

Demand number.	Services and purposes.	Sums not exceeding. Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
32	Public Works—Establishment and Tools and Plant.	35,96,600	..	35,96,600
36	Famine Relief	45,50,100	..	45,50,100
37	Pensions	36,00,100	..	36,00,100
38	Miscellaneous	5,00f400	4,70,000	9,70,400
44	Capital Outlay on Agriculture.	..	1,12,900	1,12,900
45	Capital Outlay on Industrial Development.	1,07,01,600	6,50,100	1,13,51,700
46	Capital Outlay on irrigation.	70,800	..	70,800
47	Capital Outlay on Public Works.	29,16,100	3,48,000	32,64,100
52	Loans and Advances by the State Government.	1,21,51,800	..	1,21,51,800
	Grand Total ..	7,51,32.300	16,04,700	7,67,37,000

I certify that this is a Money Bill.

FORT ST. GEORGE,
MADRAS-9,
28th November 1973.

K. GOVINDAN,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

இணைப்பு II

[219 ஆம் பக்கத்திலுள்ள இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 36 OF 1973.

(As passed by the Assembly.)

A Bill to provide for the authorisation of appropriation of moneys out of the Consolidated Fund of the State to meet the amounts spent on certain services during the financial year ended on the 31st day of March 1969, in excess of the amounts authorised or granted for the said services.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 5) Act, 1973.

2. *Issue of Rs. 5,52,52,234 out of the Consolidated Fund of the State for the financial year ended on the 31st March 1969.*—The sums specified in column (5) of the Schedule amounting in the aggregate to the sum of five crores fifty-two lakhs, fifty-two thousand, two hundred and thirty-four rupees shall be deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State to meet the amounts spent for defraying the charges in respect of the services and purposes specified in column (2) of the Schedule during the financial year ended on the 31st day of March 1969, in excess of the amounts authorised or granted for those services and purposes for that year.

3. *Appropriation.*—The sums deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State under this Act shall be appropriated and shall be deemed to have been appropriated for the services and purposes specified in the Schedule in relation to the financial year ended on the 31st day of March 1969.

THE SCHEDUDE.

(*See sections* 2 and 3.)

Demand Number. (1)	Services and purposes. (2)	Sums. Voted by the Legislative Assembly. (3)	Charged on the Consolidated Fund of the State. (4)	Total. (5)
		RS.	RS.	RS.
1	Land Revenue Department	75,328	..	75,328
3	General Sales Tax and Other Taxes and Duties—Administration.	..	4,321	4,321
7	Elections	89,536	..	89,536
10	Administration of Justice	3,04,508	33,727	3,38,235
12	Police	13,77,249	..	13,77,249
23	Community Development Projects, etc.	12,32,876	..	12,32,876
28	Public Works—Establishment and Tools and Plant.	27,451	..	27,451
30	Road Transport Scheme ..	22,41,081	..	22,41,081
32	Pensions	..	5,33,516	5,33,516
33	Miscellaneous	6,84,148	14,884	6,99,032
34	Stationery and Printing ..	3,82,472	14,484	3,96,956
35	Forest Department ..	9,83,351	..	9,83,351
36	Other Miscellaneous compensations and assignments.	17,46,277	..	17,46,277
38	Capital Outlay on Public Health.	89,107		89,107
39	Capital Outlay on Agriculture.	..	10,401	10,401
45	Commuted Value of Pensions.	1,39,571	3,757	1,43,328
46	Capital Outlay on Schemes of Government Trading.	..	247	247
	Public Debt—Repayment.	..	4,52,63,942	4,52,63,942
	Grand Total ..	93,72,955	4,58,79,279	5,52,52,234

I certify that this is a Money Bill.

FORT ST. GEORGE,
MADRAS-9,
28th November 1973.

K. GOVINDAN,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1973 நவம்பர் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Inclusion of Agnikula Kshatriya Community in the list of Backward Classes

*154 Q.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether any representations have been received by the Government requesting that 'Agnikula Kshatriya' Community should be included in the list of Backward Classes; and

(b) if so, the action taken thereon by the Government?

அக்கினிகுல க்ஷத்திரியர் சமூகத்தினரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

திரு. க. அறிவழகன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அக்கினி குல க்ஷத்திரியர் சமூகத்தினரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்ததா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ) இல்லை. இருப்பினும், அக்கினிகுல க்ஷத்திரியரை "வன்னிய குல க்ஷத்திரியர்" எனக் கருதி பின்தங்கிய வகுப்பினருக்குத் தரப்படும் சலுகைகளைத் தொடர்ந்து அளிக்கலாமா என்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Handicrafts Corporation

*155 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that a Handicrafts Corporation has been started; and

(b) if so, the names of the Chairman and the Managing Director of the above Corporation?

[1973 நவம்பர் 29

கைத்திறத் தொழில் கழகம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கைத்தறித் தொழில் கழகம் தொடங்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், மேற்சொன்ன கழகத்தின் தலைவர், நிர்வாக இயக்குநர் யாவர் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தொழில் வணிக இயக்குநர் திரு. எச். பி. என். ஷெட்டி, பதவி வழித் தலைவராகவும், திரு. எ. பி. பட்டீகர் நிர்வாக இயக்குநராகவும் உள்ளனர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தக் கைத்திறத் தொழில் கழகம் என்ன பணி செய்துகொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்பொழுதுதான் துவங்கப்பட்டிருக்கிறது. அதனுடைய நோக்கமே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வாரியம் வரவேண்டும் என்பதாகும். இப்பொழுது டிபார்ட்மெண்ட்—இலாகாவில் இருந்து வருகின்ற பணியை கார்ப்பரேஷனிடம் கொடுத்து, அது இந்த மாநிலத்தில் கிராமங்களிலுள்ள ஆர்டிஸான்களுக்கு மூலப் பொருள்கள் கொடுத்து, உற்பத்திப் பொருள்களை வாங்கி, விற்றுக் கொடுக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். நம்முடைய கைவண்ணப் பொருள்களை வெளிநாடுகளுக்கும், மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பி வைத்து விற்பனை செய்ய உதவ வேண்டும் என்பதும் நோக்கமாகும். இப்பொழுது ஒரு சொசைட்டி வைத்திருக்கிறோம். அந்த சொசைட்டி சரியாக நடத்தப்படவில்லை. அதனுடைய பணிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தக் கழகம் கைவண்ணப் பொருள்களை உற்பத்தி செய்ய ஆரம்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், இந்தத் தொழில் துறையில் உற்பத்தி செய்வதற்காக பல கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. 'டான்ஸி' தோற்றுவிக்கப்பட்டது. அதிலே உற்பத்தி செய்து மற்றவர்களுக்குப் போட்டியாகக் கொடுக்கும் அளவுக்கு அது உருவாகியிருக்கிறது. இந்தக் கைத்திறத் தொழில் துறையில் கூட அம்மாதிரிப் போட்டியாக உற்பத்தி தொடங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொண்டு இதிலே உள்ள தலைவர், நிர்வாக இயக்குநர் ஆகியோருக்கு கைத்திறத் தொழில் சம்பந்தமாக அனுபவம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 29]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு நேரடியாக உற்பத்தி செய்ய வாய்ப்பு இல்லை என்று கருதுகிறேன். 'டான்ஸி' யைப் பொறுத்தவரையில், இங்கே அதை ஒரு இண்டஸ்டிரியல் யூனிட்டாக ஆரம்பித்தோம். அதையெல்லாம் சேர்த்து ஒரு கார்ப்பரேஷனாக வைத்தோம். ஆங்காங்கே உள்ள சிறு சிறு ஆர்டிஸான்களுக்கு உதவுகின்ற வகையில்தான் சில பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறோம். அதற்குக் காரணம் மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை, உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய முடியவில்லை. ஆகவே அந்தப் பணிகளை மேற்கொள்கிறோம். அங்கே நிர்வாகத்தில் உள்ளவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கின்ற காரணத்தால், உறுப்பினர் கருதுகின்ற அனுபவம் இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, இந்தக் கழகத்தைத் துவக்குவதற்கு பட்ஜெட் தொகை எவ்வளவு ஒதுக்கப்பட்டது ? அது வைக்கப்பட்டு எவ்வளவு காலமாக இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, 1—8—1973-ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால்தான் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இது தவிர வேறு விவரங்கள் தற்பொழுது என்னிடம் இல்லை.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தக் கைத்தறித் தொழிலில் தற்பொழுது செய்யப்படும் பொருள்கள் என்னென்ன ? மேலும் புதிய பொருள்கள் உற்பத்தி செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். அதிலே உள்ள நிர்வாகிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிகாரப் பற்றற்றவர்கள் எத்தனை பேரை அதிலே அரசு நியமிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதிகாரப் பற்றற்றவர்கள்—

(1) a representative of Handicrafts Industrial Co-operative Societies,

(2) a representative of artisans and

(3) a representative of the Legislative Assembly.

இந்த வாரியத்தைப் பொறுத்த வரையில் உற்பத்தி செய்வதில்லை என்று ஏற்கனவே சொன்னேன். இப்பொழுது இலாகாவிலே சிறு, சிறு, தொழில்கள் செய்கிறார்கள். உதாரணத்திற்கு, கும்பகோணத்தில் பிளேட் உற்பத்தி செய்கின்றார்கள், கும்பகோணத்தில் சிலை செய்கின்றார்கள். இவற்றையெல்லாம் கழகத்தின்கீழ் கொண்டுவந்து, அவர்களுக்கு விற்பனை செய்கின்ற வாய்ப்பை இந்த வாரியம் உருவாக்கும்.

[1973 நவம்பர் 29

State Seminar on Pulses

* 156 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any State Seminar on pulses was held at Thanjavur during January 1973; and

(b) if so, the details thereof?

பருப்புகள் குறித்து மாநிலக் கருத்தரங்கு

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ம் ஆண்டு ஜனவரித் திங்களில், தஞ்சாவூரில் பருப்புகள் குறித்து, மாநிலக் கருத்தரங்கு ஏதும் நடைபெற்றதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவாவர்களே, பருப்பு வகைகளைப் பற்றிய கருத்தரங்கு ஒன்று தஞ்சை சங்கீத மஹாலில், 8—1—1973 அன்று நடைபெற்றது. தமிழ்நாட்டில், பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்பு பற்றி ஆய்வு நடந்தது.

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, may I know whether any conclusions have been arrived at after the Seminar was held?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Mr. Chairman, Sir, there are various recommendations. I can only state more or less the headings under which these recommendations were made—about plant-breeding, the bacteriological method of manuring, plant protection and raising of pulses as inter-crop. I am prepared to send to the hon. Member a full list of the recommendations.

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, apart from the technical matters that were discussed in the Seminar, may I know, Sir, whether any specific plans have been prepared by the Agriculture Department to step up the production of pulses in our State since we are importing nearly 40 per cent to 50 per cent of our requirements from some other States?

1973 நவம்பர் 29]

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Mr. Chairman, Sir, I would be thankful to the hon. Member if a separate question is put, because there are quite a good number of steps taken and it will take a long time to reply.

திரு. கே. ராஜாராம்: தலைவாவர்களே, நம்முடைய மாநிலத்தில் பருப்பு வகைகள் மிகவும் பற்றாக்குறையாக இருப்பதால், அந்தக் கருத்தரங்கு நடத்தியதன் மூலம் கிடைக்கும் பலன் ஏதேனும் உண்டா? பருப்பு வகைகளை அதிகமாக உற்பத்தி செய்ய வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? நமது மாநிலத்தில் எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த விதமான பருப்புகளை விளைவிக்க வழி இருக்கிறது? உதாரணமாக துவரை, உளுந்து, மொச்சை இவைகளை எந்தெந்தப் பகுதிகளில் அதிகமாக விளைவிக்க முடியும் என்று அந்தக் கருத்தரங்கு ஆராய்ந்ததா? அதற்கு அரசாங்கம் உதவி செய்ய முடியுமா, எந்த விதமான உதவி செய்ய முடியும் என்று ஏதாவது முடிவு ஏற்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவாவர்களே, பொதுவாக அந்தக் கருத்தரங்கில் முடிவுகள் எதுவும் உருவாக்கப்படவில்லை. சில சிபார்சுகள், பரிந்துரைகள் செய்யப்பட்டன. பருப்பு வகைகள் தமிழ்நாட்டில் மிகவும் பற்றாக்குறையாக இருக்கின்றன என்பது அரசுக்கு மிக நன்றாகத் தெரியும். ஆகையினால்தான் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

முதலில் பிளேண்ட் பிரீடிங், தரம் உயர்த்தப்பட வேண்டும். குறைந்த இடத்தில் அதிகமாக விளைச்சல் செய்வதற்கு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்று ஆராய்ந்து, அதற்காக 5, 6 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு மிக முக்கியமான ஒன்று, பருப்பு வகைகளில் வேரில் இருக்கின்ற முடிச்சுகளை அகற்றி, காற்றிலிருக்கின்ற நைட்ரஜனை பயிர்களுக்கு ஊட்டுகின்ற வகையில் சில முறைகள் ஆராயப்பட்டன. இதனால் பயிர்களுக்குத் தேவைப்படுகின்ற யூரியா, அதுவும் இப்பொழுது பற்றாக்குறையாக இருக்கின்ற நிலைமையில், குறைவாக உபயோகப்படுத்த வாய்ப்பு உள்ளது. அம்மோனியம் சல்பேட்டும் அதிகம் தேவைப்படாது. இம்மாதிரியான பேக்டீரியா முறை தமிழ்நாட்டில் வெகு காலமாக நல்ல முறையில் நடைபெற வாய்ப்பு உள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அதற்குப் பிறகு பயிர்ப் பாதுகாப்பு முறைகளும் ஆராயப்பட்டன. 15 நாட்கள் ஆனவுடனே என்ன செய்ய வேண்டும், 30 நாட்கள் ஆனவுடனே என்ன செய்ய வேண்டும் என்ற விவரங்களை ஒரு புத்தகமாக வெளியிட்டு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ஊடுபயிர் விளைவிப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, may know whether there had been any follow-up action after th Seminar?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Mr. Chairman, Si I could not straightway, answer on all the follow-up actio taken. . . .

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, my ques tion is whether there had been any follow-up action.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Mr. Chairman, Sir I cannot straightway say. I am prepared to give the entire lis if a separate question is put. But, I can point out one thing in which I took a good deal of interest, namely, the Rhizobia culture One great scarcity which we are feeling is fertiliser, particularly the nitrogen fertiliser. Our forefathers did not depend upon these chemical fertilisers. They used the bacteriological method of having the nodules in the roots. We have found ways and means of increasing the nodules which retain the bacteria to fix the nitrogen. In some cases some of the pulses give as much as 40 Kgs. per acre of nitrogen, which amounts to 4 bags of urea. We have taken up the production of this Rhizobia on a very large scale and we are familiarising the cultivators with the use of this. I am glad to say, it is producing very good results.

திரு. அ. அய்யணன் அம்பலம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழ் நாட்டில் விவசாயத்தில் நெற்பயிரில் அதிகமான மகசூல் கிடைக்கக்கூடிய நெல் வித்துக்கள் கண்டுபிடித்த மாதிரி, புன்செய்ப் பயிர் தானியங்களுக்கும் வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படிக் கண்டுபிடிப்பதை தீவிரப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது மானியம் கொடுக்க உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நமது வேளாண்மைத் துறையானது, இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலேயே, புதிய புதிய முறைகளைக் கண்டுபிடிப்பதிலே, புதிய வித்துக்கள் கண்டுபிடிப்பதிலே, மிகப் பேர்போன ஒன்று. நெல் வித்துக்கள் மட்டுமல்ல, பருப்பு வித்துக்கள் கூட பல கண்டுபிடிக்கப்படுகின்றன. அவ்வப்பொழுது அவை விவசாயிகளுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, இந்தக் கருத்தரங்கு ஆராய்ச்சிக் கருத்தரங்கா அல்லது அபிவிருத்திக் கருத்தரங்கா? தஞ்சை நிலங்கள் அதிகமாக உள்ள இடத்திலே பருப்பு வகைகளைப்பற்றி கருத்தரங்கு நடத்தியதன் நோக்கம் என்ன? இந்தக் கருத்தரங்கிலே யார் யார் கலந்து கொண்டார்கள் என்ற விவரம் அரசினிடத்தில் இருக்கிறதா, அதையும் அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இது ஆராய்ச்சியும் நடைமுறையும் சேர்ந்தது. முதலிலே ஆராய்ச்சி. அதைப் பின்பற்றி நடைமுறை. அப்படித்தான் செய்தாக வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்திலே ஏன் மகாநாடு கூட்டப்பட்டது என்றால், அங்கே ஊடுபயிராகப் போடுவதற்கு இப்போது வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலமாக பருப்பு வகைகளை அதிகமாகப் பெருக்க முடியும். வெயில் காலத்திலே தண்ணீர் இல்லாத இடங்களிலே போடுவதைவிட, ஊடுபயிராகப் போடுவது சிறந்த விளைச்சலைக் கொடுக்கும் என்று பார்த்து, அதன் காரணமாகத்தான் தஞ்சாவூரிலே கருத்தரங்கு கூட்டப்பட்டது.

Cashew Development

* 157 Q.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THAVA-THIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the extent of land in which cashew development has been made in Thiruppattur and Sivagangai taluks of Ramanathapuram; and

(b) out of this, the extent which has begun to yield?

முந்திரி அபிவிருத்தி

திரு. க. அறிவழகன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர், சிவகங்கை தாலுக்காக்களில் முந்திரி அபிவிருத்தி செய்திருக்கும் பரப்பளவு எவ்வளவு?

(ஆ) இதில் காய்ப்புக்கு வந்திருக்கும் பரப்பளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: திருப்பத்தூர் தாலுக்காவில் முந்திரி சாகுபடி செய்துள்ள மொத்தப் பரப்பளவு—11,703 ஏக்கர்.

திருப்பத்தூர் தாலுக்காவில் காய்ப்பிற்கு வந்துள்ள முந்திரி சாகுபடியின் பரப்பளவு—9,032 ஏக்கர்.

சிவகங்கை தாலுக்காவில் முந்திரி சாகுபடி செய்துள்ள மொத்தப் பரப்பளவு—14,998 ஏக்கர்.

சிவகங்கை தாலுக்காவில் காய்ப்பிற்கு வந்துள்ள முந்திரி சாகுபடியின் பரப்பளவு—7,665 ஏக்கர்.

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, may I know whether this is being cultivated on forest land or on private individual lands?

THE HON. THIRU S. PA. ADITANAR: Mr. Chairman, Sir, this particular figure, I believe, relates to the entire taluk. It includes both the areas.

Sculpture Academy

* 148 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to constitute a "Sculpture Academy" in the College of Arts and Crafts, Madras, as suggested by the State Backward Classes Advisory Committee; and

(b) if so, the details thereof?

சிற்பக் கலைக் கழகம்

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பின்தங்கிய வகுப்பினர் நல மாநில ஆலோசனைக் குழு கருத்து தெரிவித்ததைப் போல், சென்னை, கலை-கைத்தொழில் கல்லூரியில் "சிற்பக் கலைக் கழகத்தை" அமைப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

Educated Unemployment Scheme

* 149 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government of India have sanctioned any B.T. Assistants' posts under the Educated Unemployment Scheme in the State;

(b) if so, the details thereof;

(c) whether any such post has been sanctioned to the Batlagundu Panchayat Union;

(d) whether it has not yet been utilised by the Batlagundu Panchayat Union; and

(e) if so, the reasons therefor?

படித்து வேலையற்றிருப்போருக்கு உதவுக் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) படித்து வேலையற்றிருப்போருக்கு உதவும் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் பி.டி. ஆசிரியர் பதவிகள் எவையேனும் ஏற்படுத்த இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அத்தகைய பதவி எதையேனும் ஏற்படுத்த வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதா?

(எ) வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியம் அந்த ஒப்பளிப்பை இன்னும் பயன்படுத்திக் கொள்ளாமலுள்ளதா?

(ஐ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 1971-72-ல் 900 பதவிகளும், 1972-73-ல் 900 பதவிகளும் அளிக்கப்பட்டன.

(உ) ஆம். ஒரு பதவி அளிக்கப்பட்டது.

(எ) அப்பதவியை வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியம் பயன்படுத்தவில்லை.

(ஐ) வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியக் குழுப் பெருந்தலைவர் தேர்தல் சம்பந்தமாக தலைமை நீதி மன்றத்தில் நடைபெற்றுவந்த வழக்குத் தொடர்பாக புதிய நியமனங்களைச் செய்வதற்கு அதிகாரம் படைத்த நியமனக் குழு அமைக்கப்படாமல் இருந்தது. ஆகவே, அக்குழுவின் ஒப்புதலைப் பெற இயலாத நிலைமை இருந்ததால், 1972-73-க்கு ஒதுக்கப்பட்ட ஒரு பி.டி. பட்டதாரி ஆசிரியர் பதவியை ஒன்றியம் பயன்படுத்த இயலவில்லை என்று தெரிகிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, பி.டி. ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது போலவே, இடைநிலை ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும், மற்ற ஆசிரியர்களுக்கும் பதவிகள் வழங்கப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்கள் போட்டதிலே, அவ்வாறு அளிக்கப்படவில்லை. இந்த ஆண்டு 10,200 ஆசிரியர்கள் போட்டதிலே எல்லா வகையான ஆசிரியர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியம் செயல்படவில்லை என்றால், இந்த ஒன்றியத்தின் வேலைகளை கமிஷனர் பார்க்கலாமே? இம்மாதிரிப் பிரச்சினைகள் எழுகின்றபோது, அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன? கவுன்சில் கலைக்கப்பட்டு அல்லது கோர்ட் மூலம் 'ஸ்டே ஆர்டர்' வாங்கப்பட்டு செயலற்றுப் போய்விட்டால், அதற்காக கவுன்சிலின் வேலையே நடக்காமலிருப்பதைக் காட்டிலும், கமிஷனருக்கு, ஸ்பெஷல் ஆபீசருக்குக் கொடுக்கின்ற மாதிரி, அதிகாரம் கொடுத்து கொஞ்ச காலத்திற்கு அவரே அந்த வேலைகளைச் செய்யும்படி செய்திருந்தால், ஆசிரியர்களையும் நியமனம் செய்திருக்கலாம். நமது மாநிலத்திற்கும் நஷ்டம் ஏற்பட்டிருக்காது. ஒரு ஆசிரியரும் அந்த யூனியனுக்குக் கிடைத்திருக்கலாம். இதே மாதிரி வேறு சில யூனியன்களும் இருக்கின்றன. கள்ளிக்குடி யூனியன் இதுமாதிரி செயலற்றிருந்தது. இதுமாதிரி செயலற்றிருக்கும்போது ஏதாவது வேலைகள் நடக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் யோசித்திருக்கிறதா? என்ன ஏற்பாடுகள் செய்ய எண்ணியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போன்று, இந்தச் சங்கடங்களைத் தீர்க்க வேறு வழி காண வேண்டும். இதுபற்றி அரசாங்கம் இதுவரை எண்ணவில்லை. ஆகவே, பதவியை இழப்பதைவிட, அதை ஒப்படைப்பது பற்றி யோசிக்கலாம். அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

Payment of Pension and Gratuity to the Retired Employees of Former District Board High Schools

*150 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that neither pension nor gratuity was sanctioned to the peons who retired from service from the former District Board High Schools;

(b) whether it is also a fact that the Government have not paid their share to their provident fund contributions; and

(c) if so, the action proposed to be taken by the Government in respect thereof?

முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை வழங்குதல்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகளில் குற்றேவலர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வு ஊதியமோ, கிராசுவிட்டியோ வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) அவர்களது பணிக்கால சேமிப்பு நிதிக்கு அரசுப் பங்குத் தொகையும் வழங்கப்படவில்லை என்பதும் உண்மையா?

(உ) ஆமெனில், இவற்றின் பொருட்டு அரசு என்ன நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இக்குற்றேவலர்கள் சில்லரைச் செலவின ஊழியர்களாதலால் (employees paid, from Contingencies) நாட்கூலி பெற்று ஊழியம் செய்து வந்தவர்கள். அத்தகையோருக்கு ஓய்வூதியம், பணிக்கொடை முதலிய சலுகைகள் அளிக்கப்படுவதில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, அவர்களுக்கு இனிமேலும் ஓய்வு ஊதியம், ஓய்வு ஊதியப் பணம் என்ற கிராசுவிட்டி அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அவர்களுக்கும் அளிக்க செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

Government Arts College for Women, Thanjavur

* 151 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the hostel of Government Arts College for Women, Thanjavur was closed just before the commencement of examinations this year; and

(*b*) if so, the reasons therefor?

அரசினர் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரிலுள்ள அரசினர் மகளிர் கல்லூரி மாணவியரில்லம் இவ்வாண்டு தேர்வுகள் தொடங்குவதற்குச் சற்று முன்னதாகவே மூடப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தஞ்சாவூர் அரசினர் மகளிர் கல்லூரிக்கு புதிய மாணவியர் இல்லம் கட்டுவதற்கான ஆலோசனை ஏதாவது அரசுக்கு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுசெழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

Starting of a Women's College in Madurai City

* 152 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any request has been received from any private agency for starting one more Women's College in Madurai City;

(*b*) if so, the details thereof; and

(*c*) the stage at which the matter now stands?

மதுரை மாநகரில் மகளிர் கல்லூரி தொடங்குதல்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாநகரில் மேலும் ஒரு மகளிர் கல்லூரி தொடங்குவதற்கு அனுமதி கோரி தனியார் அமைப்பு எதனிடமிருந்தேனும் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இவ்விஷயம் இப்போது எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலே தேர்ச்சி பெறும் எண்ணிக்கை அதிகமாவதால், மேற்கொண்டு கல்லூரிகளைத் திறப்பதிலே அரசு அதிக ஆர்வம் காட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கிற தேவைகளுக்கேற்ப, அவ்வப்பொழுது அவ்வவ்வாண்டு நாம் முடிவு செய்கிறோம். இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு பி.யு.சி.-யிலே சேர்வதற்கு அதிகச் சங்கடங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. பெரும் நகரமாக இல்லாமல் வேறு பல இடங்களிலே அமைந்திருக்கிற கல்லூரிகளிலே புகுமுக வகுப்பிலே பல இடங்கள் காலியாகத்தான் இருக்கின்றன.

திரு. அ. அய்யணன் அம்பலம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் மதுரை வந்திருந்தபோது, மகளிர் கல்லூரி அமைப்பதற்காக அவரிடம் அனுமதி கேட்டு மனு கொடுத்ததாக பத்திரிகையிலே வந்திருந்தது. அதில் எந்த அளவில் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மனு கொடுத்ததைப்பற்றி எனக்கு நினைவு இல்லை. ஒருகால் அந்தத் துறைக்குப் போயிருக்கக்கூடும். அதுபற்றி ஆய்வு செய்து முடிவெடுத்ததற்குப் பிறகுதான் எனக்கு அதுபற்றித் தகவல் வரும். அப்படி இருந்தால், அது ஆராயப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தக் கேள்வியிலே, மகளிர் கல்லூரி ஒன்று தொடங்குவதற்காக அனுமதி கோரி தனியார் அமைப்பு கோரிக்கை உள்ளதா என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி வந்ததாக என் கவனத்தில் இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் கொடுத்து, அது அலுவலகத்தாரிடம் சென்றால், அது வந்ததாக அர்த்தமா, அல்லது வராததாக அர்த்தமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது எந்த இடத்திற்குப் போயிருக்கிறது என்று கவனிக்க வேண்டும்.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, அமைச்சரவர்களிடம் மனு கொடுப்பதை, பத்திரிகையில்கூட போட்டோவுடன் போட்டிருந்தார்கள். அமைச்சரவர்கள் ஞாபகம் இல்லையென்று கூறுகிறார்கள். எனவே அதைப் பரிசிலனை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல இடங்களில் பல விண்ணப்பங்கள் கொடுக்கிறார்கள். சிலபல விண்ணப்பங்களைக் கொடுக்கும்போது, 'நீங்களே பெரிய அதிகாரிக்கு அனுப்பி விடுங்கள்' என்று அவர்களிடம் சொல்கிறேன். நானும் அவைகளைக் கவனிக்கிறேன் என்று சொல்கிறேன். அவர்கள் கல்வித் துறைச் செயலாளருக்கோ அல்லது கல்லூரிக் கல்வி இயக்குநருக்கோ அனுப்பக்கூடும். எப்போதும் இருக்கின்ற கல்லூரி களில் உள்ள பாடங்களையே புதிய கல்லூரிகளில் துவக்காமல், பெண்களுக்குப் பயன்படும்படியாகத் திட்டம் போட்டு அனுப்புங்கள் என்று கூறியதாக ஞாபகம் இருக்கிறது. அவர்கள் முறைப்படி கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும். அவர்கள் அதைப் பரிசீலித்த பிறகு, அமைச்சர் என்ற முறையில் என்னிடம் வரும். எனவே அது கல்லூரிக் கல்வி இயக்குநருக்குப் போயிருக்க வேண்டும் அல்லது செயலாளருக்குப் போயிருக்க வேண்டும்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் மனு செய்தால்தான், கல்லூரிக்கு அனுமதி கொடுக்கப்படுமென்று இருக்கிறது. எனவே அந்த மனு குறிப்பிட்ட தேதிக்குள் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன். பின்னால் கொடுக்கப்பட்டால் செயல்படுத்தப்படாமல் இருக்கிறதாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அக்டோபர் இறுதிக்குள்ளாக வந்து சேர வேண்டுமென்று விதி இருக்கிறது. அதற்குள் அவர்கள் அனுப்பியிருக்க வேண்டும். அதுவும் ஆராயப்பட வேண்டும்.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, இன்னும்கூட விளக்கமாகச் சொல்கிறேன். திரு. கோபாலகிருஷ்ண கோனார் டிரஸ்டிலிருந்து யாதவர் பெண்கள் கல்லூரி அமைப்பதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். அதற்காக அங்கே நிதி வசூல் கூட நடந்து கொண்டிருக்கிறது. அது அமைச்சரவர்களது கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, போகிற ஊர்களிலெல்லாம், தங்கள் ஊருக்கு கல்லூரி வேண்டுமென்று விண்ணப்பம் தருகிறார்கள். இந்த 6 மாத காலத்தில் 50, 60 விண்ணப்பங்களை, தமிழகம் பூராவும் நான் பெற்றிருக்கக்கூடும். ஆனால் சிலவற்றில்தான் காரண காரிய விளக்கம் இருந்தது. வெறும் கல்லூரி வேண்டுமென்று சொல்லிவிட்டால் மட்டும், அது விண்ணப்பம் ஆகாது. அது பற்றிய முழு விவரங்கள் இருக்க வேண்டும். பணம் இருக்கிறதா, இடம் இருக்கிறதா என்பதுபற்றி விவரம் இருக்க வேண்டும். என்ன கோர்ஸ் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்பதுபற்றியும் தெளிவாக இருக்க வேண்டும். அந்தக் கட்டத்திலே தான் அவர்களுக்கு நான் சொன்னேன். எல்லாக் கல்லூரிகளிலும் இருப்பது போன்ற அதே பாடங்களில்லாமல், பெண்களுக்குப் பயன்படுகிற வகையிலும், வேலை வாய்ப்பு தேடித் தருகின்ற வகையிலும், பாடங்களைப் போதிக்கக்கூடிய கல்லூரியைத் துவங்குவது நல்லது; அப்படிப்பட்ட வகையில் விண்ணப்பியுங்கள் என்று சொன்னேன். அப்படிக் கூறியதாகத்தான் நினைவிருக்கிறது. அதுபற்றி ஆராயப்படும்.

Thevaram and Thiruvoi Mozhi Songs in Tamil Text Books

* 153 Q.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that songs from Thevaram, Thiruvoi Mozhi, etc., which have so far found a place in the Tamil Text Books for V and VI Standards are not found in the books for the current academic year; and

(*b*) if so, whether the Government will take steps to include those songs in the Tamil Text Books again?

[1973 நவம்பர் 29

தமிழ்ப் பாடப்புத்தகங்களில் தேவாரம், திருவாய்மொழி பாடல்கள்

திரு. க. அறிவழகன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்தக் கல்வியாண்டில், ஐந்து, ஆறும் வகுப்புகளுக்குரிய தமிழ்ப் பாடப் புத்தகங்களில் இதுவரை இருந்து வந்த தேவாரம், திருவாய்மொழி முதலிய பாடல்கள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், மேற்படி பாடல்களை மீண்டும் தமிழ்ப் பாடப் புத்தகங்களில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பாடநூல்களில் செய்யப்படும் மாறுதல்கள் அனைத்தும் பாடத்திட்டத்தில் செய்யப்படும் மாறுதல்களை அடிப்படையாகக் கொண்டே செய்யப்படுவதால், தமிழ்ப் பாடப் புத்தகங்களில் எந்தப் பாடல்கள் பாடத்திட்டத்திற்கு ஏற்ப உள்ளனவோ அவை சேர்க்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, ஏற்புடையதாக இருக்கக்கூடிய பாடல்கள் சேர்க்கப்படுமென்று சொன்னார்கள். தேவாரம், திருவாய்மொழி போன்ற பாடல்கள் எந்த முறையில் ஏற்பில்லாமல் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏற்கெனவே பழைய 6 ஆம் வகுப்பு தமிழ் பாடங்களில் தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம், தேம்பாவணி, சீறாபுராணம் ஆகியவற்றிலிருந்து 20 அடிகள்—5 பாக்கள் 'வாழ்த்துப் பகுதி' என்ற தலைப்பில் தரப்பட்டிருந்தன. பழைய 5-வது வகுப்பு தமிழ் பாட நூல்களிலும், தேவாரம், தேம்பாவணி, சீறாப் புராணம் ஆகியவற்றிலிருந்து 16 அடிகள்—4 பாக்கள் 'வாழ்த்துப் பகுதி' என்ற தலைப்பில் தரப்பட்டிருந்தன. ஆனால் புதிய திட்டப்படி 6 ஆம் வகுப்பு தமிழ் பாட நூலில் வாழ்த்துப் பகுதியில் புதிய நோக்குடைய ஒரு செய்யுள் மட்டுமே தரப்பட வேண்டும்; அந்தச் செய்யுளும் 4 அடிகள் மட்டுமே இருக்க வேண்டுமென்று பாடத் திட்டங்களை வகுப்பவர்கள் வகுத்திருக்கிறார்கள். ஆகவே ஒரு பாட்டைத் தேட வேண்டும்; அது பொது நோக்குடையதாக இருக்க வேண்டும்; அந்தப் பாட்டும் 4 அடிகளுக்கு மேல் போகக்கூடாது. இந்த அடிப்படையில் தேடிப் பார்த்ததில், திருவருட்பாவிலே ஒரு பொது நோக்குடைய பாடலைத் தேர்ந்தெடுத்துச் சேர்த்திருக்கிறார்கள். அந்த

1973 நவம்பர் 29]

அடிப்படையிலேதான் அந்த நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகவே பாட நூல்களிலே, திட்டப்படி எதை வகுத்திருக்கிறார்களோ அதை நூலில் சேர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ராஜாராம்: தலைவரவர்களே, தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி ஆகியவையெல்லாம் ஒழுக்கத்தையும், நல்ல பழக்க வழக்கங்களையும் கற்பிக்கக் கூடிய நூல்களாக, பாக்களாக இருக்கின்றன. எனவே பாடப் புத்தகங்களில் ஒரு பக்கம் அல்லது 2 பக்கங்கள் பாடல்கள் இருப்பதற்கு அரசு ஏன் குறுக்கே இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புத்தகத்தில் 1 பக்கம் அல்லது 2 பக்கங்கள் அதிகப்படுத்தி, 2 அல்லது 3 பாக்கள் இருக்கும்படிச் செய்வது மிகவும் நல்லது. அந்தப் பாடல்கள் ஒழுக்கத்தையும், நேர்மை யையும், நல்ல பழக்க வழக்கங்களையும் கற்பிப்பதற்காகவே இருப்பவை. அதை மறுக்கக் காரணம் என்னவென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தப் பாடத் திட்டங்களை வகுக்க அமைக்கப்படுகின்ற குழுக்களில் வல்லுநர்கள் பலரும், கல்வி அறிந்தவர்கள் பலரும், புலமை மிக்கவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட பாடத் திட்டத்தை வகுத்து ஒரு செய்யுள் இருக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். அந்தச் செய்யுளும் பொது நோக்குடையதாக இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிற கருத்துக்கள், அந்தப் பாட நூல் குழுவிற்கு அனுப்பப் பட்டு, மறுபடியும் திருத்தும்போது இந்தக் கருத்துக்களை உள்ளடக்கி வைத்து வேண்டுமானால் ஆராயும்படிச் செய்யலாம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, சில பாட நூல்களில் ரட்சண்ய யாத்ரிகம், தேம்பாவணி, சீறாப்புராணம் பாடல்கள் இடம் பெற்றிருக் கின்றன. அதே பொது நோக்குடைய தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் பாடல்கள் இடம் பெறவில்லை. இந்த மாதிரி அமையாமலிருக்கும் படி பார்த்துக்கொள்ள அரசு கவனம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதையும் அதற்கென்று அமைக்கப்பட்ட வல்லுநர் குழுதான் ஆராயவேண்டும். ஆகவே எல்லாவிதமான சமயங்களின் செய்யுள் ஒன்றைப் போடுவதென்று ஆரம்பித் தால், அதற்குப் பல பக்கங்கள், பல ஏடுகள் வேண்டியிருக்கும். ஆனால் இதைத் தான் வைக்கவேண்டும், அதைத்தான் வைக்கவேண்டும் என்று இல்லாமல், அந்தக் குழுவினர் ஆராய்ந்து, அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே,

பாடல்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, பயனுடையதாக இருக்குமானால், அதை வெளியிடும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது. இத்தகைய கருத்துக்களை வேண்டுமானால் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, Syllabus -ஐ நிர்ணயிக்கிறவர்கள் 5-வது வகுப்பிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கும், 6-வது வகுப்பிலே படிக்ககக்கூடிய மாணவர்களுக்கும் எந்த அளவுக்கு கிரகித்துக் கொள்ளும் சக்தி இருக்கிறதென்று அடிப்படையில் வகுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அந்த அடிப்படையிலே இந்த அரசு இனிமேல் திட்டத்தை வகுக்குமா அல்லது பக்கங்களை வைத்துக்கொண்டு திட்டமிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்களே ஒரு முறை வைத்திருக்கிறார்கள். 4, 5, 6, 7, 8-வது வகுப்பில் படிக்கும் மாணவர்கள் எந்தெந்த தரம் உடையவர்களாக இருக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். அதிலே அவர்கள் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளமுடியும்; கருத்துக்களை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும்; அதிலே வருகின்ற சொற்களை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும் என்பதையெல்லாம் நிர்ணயித்திருக்கிறார்கள். பாடலிலேகூட, எந்தெந்தப் பாடலை எந்தெந்த வகுப்புகளுக்கு வைப்பது என்பதையும் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்களை எந்த வகுப்பிற்கு வைப்பது; நீதி நெறி விளக்கத்தை எந்த வகுப்புக்கு வைப்பது; கம்ப ராமாயணம் முதலியவைகளை எந்தெந்த வகுப்புகளுக்கு வைப்பது; அகநானூற்றை எந்த வகுப்பிற்கு வைப்பது என்ற முறைகளையெல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படிதான் வல்லுநர்கள் பாடல்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு அரசின் கொள்கை காரணமா அல்லது அரசியல் காரணமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதில் அரசியலும் கிடையாது; அரசியலுக்குக் கொள்கையும் கிடையாது. இதற்கென்று வல்லுநர் குழு அமைக்கிறார்கள். அவர்கள் பார்த்து பொருத்தமான பாடல்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

உடுக்குறியிடாத வினாக்கள்.

Private Race Bets

11 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of persons have been taken into Police custody for accepting race bets privately in Madras City around the 9th July 1973;

(*b*) if so, the details thereof; and

(*c*) the steps taken to prevent this?

A.—(*a*) and (*b*) Six persons were taken into custody for accepting race bets privately in Madras City from 8th July 1973 to 22nd July 1973 and four cases were registered against them. Two cases are pending before the IX Presidency Magistrate and the remaining two are under investigation.

(*c*) Informants have been set up to detect such offences

Sale of Monsoon Grass

12 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any measurement is made for the sale of (i) Head load; and (ii) Cart load of monsoon grass sold by the Forest lands; and

(*b*) if so, the details thereof?

A.—(*a*) No measurement is being made for the sale of monsoon grass. The carrying capacity of a person or the cart, as the case may be, is the unit of sale on permits of nominal value of Rs. 2 per cart load and 10 paise per head load. The above rate is operative for a period of one year from 1st April 1972 to 31st March 1973.

(*b*) Does not arise in view of the reasons stated under (*a*) above.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. ஒழுங்குப் பிரச்சினை—வினா நேரம் குறித்து.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I rise on a point of order. According to rule 22, the first hour is for questions. According to rule 35, after 42 days, any question that has been filed by a Member and admitted by the Chairman should be put on the list of questions. I have already field a lot of questions which have crossed not even the 42 days' limit but even 60 days and they should have found a place in the list of questions. During the last few days, I find that there are only about 9 or 10 questions every day and we are even finishing the business of the Council by 6 p.m. or 6-30 p.m. I do not know, Sir, why only about ten questions are being put on the list instead of about 30 questions. It was the usual practice in the Council. Because of this, the Members are denied the privilege of asking questions. Further, the questions are not brought before the House in a short time and it takes a long time.

MR. CHAIRMAN : There is no question of Members being denied the privilege. Sometimes, the answers are not ready and so only the questions for which the answers are ready are put up.

THIRU G. SWAMINATHAN : Sir, the answers should be ready.........

MR. CHAIRMAN : The Hon. Ministers should speed up the concerned departments and see that the answers are ready at the earliest possible time. That is what I have said before.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, according to rule 35, after the questions are admitted, on the forty-second day, they should be listed in the question list. Whether the answer has come or not is not to be seen by the department; they should have been listed in the list of questions. Then, naturally, if the Ministers are not able to answer, let them say that they have not received the answer. That is how we have framed the rule. If the questions are held up for years together, I think we can as well delete rule 35 and say that the Ministers can take four years or five years or whatever it is, to answer the questions and the Members need not unnecessarily put questions, without any purpose. That is why, Sir, I request that at least 30 questions may be put in the list for a day.

MR. CHAIRMAN : Now we take that much number of questions on three or four days.

திரு. கே. ராஜாராம் : தங்கள் அனுமதியின் பேரில் கேட்கிறேன். பதில்கள் தயாராக இல்லையென்றால், இன்னும் சில தினங்கள் ஆகும் என்று சம்பந்தப் பி.ப.
பட்ட இலாக்காவின் காரியதரிசி அவர்களிடமிருந்து தகவல் சட்ட மேலவைத் 4-30
துறைக்கு பதில் வர வேண்டும். அந்த பதில்கள்கூட வருவதில்லை என்று நான் அறிகிறேன். ஆகையினால் விதிகளைப் பின்பற்றி சர்க்கார் சம்பந்தப்பட்ட இலாக்காக்களுக்குத் தாக்கீது கொடுத்து பதில்கள் வருவதற்கு இத்தனை நாட்கள் ஆகும் என்றாவது பதில் வருவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த மேலவையைப் பொறுத்த வரையிலும், சட்டவிதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு சீர் திருத்தப்பட்டு இப்போதுதான் நடைமுறைப்படுத்துவதற்குக் கொண்டு வந்தி ருக்கின்றோம். ஏற்கெனவே இதற்கு ஒரு வரைமுறையில்லாமல் இருந்தது. இப்போதுதான் 42 நாட்களுக்குள் பதில்கள் வராவிட்டால், மேலும் இரண்டு வார காலத்திற்குள்ளே அனுமதி கேட்டுக்கொண்டு வரலாம் என்று வைத்திருக் கின்றோம். அதை உள்ளபடியே நடைமுறைப்படுத்த வேண்டியதுதான். இந்த விதியை எல்லா இலாகாவினருக்கும் தெரிவித்துக் கேட்டால், பதில்கள் சேகரித்துக்கொண்டிருக்கின்றோம் என்றுதான் பதில் வரும். அதைத்தான் சொல்ல வேண்டிவரும். இப்போதுதான் விதிகள் தமிழாக்கம் செய்யப்பட் டிருக்கின்றன. எல்லாத் துறையினருக்கும் இந்த விதிகளில் கூறப்பட்டுள்ள 42 நாட்களுக்குள்ளாக பதிகள் வந்து சேர வேண்டுமென்று சொல்லி, அமைச்சர் களின் மூலமாக மாண்புமிகு தலைவரவர்கள் அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். அந்த விதிகளில் உள்ள நடைமுறைகளை நாளடைவில் நாம் கையாளலாம் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மேலவையின் விதிகள் மாற்றப்படும்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் அந்தக் குழுவில் இருந்தார்கள். விதிகள் திருத்தப்பட்டு முடிவு செய்யப்பட்டது 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் ஆகும். விதிகள் அமுலுக்கு வந்தது ஏப்ரல், 1972 ஆகும். இப்போது நவம்பர் 1973-ல் இருக்கின்றோம். கிட்டத்தட்ட 1½ ஆண்டுகள் ஆகிவிட்டது. இனியும் அமுல்படுத்தவில்லை. இனிமேலாவது அமுல்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, may I suggest that, just as we have a Committee on Assurances, we may have a Committee for Questions, because the matter has been pending for a long time?

3. கவன ஈர்ப்பு

தஞ்சாவூர் ராஜா சரபோஜி அரசினர் கல்லூரிப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்காதது குறித்து.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I beg to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the non-payment of house rent allowance to the staff of the Rajah Serfoji Government College, Thanjavur with effect from 1st April 1973 and the consequent distress caused to those persons.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தஞ்சாவூரில் உள்ள சரபோஜி மன்னர் அரசு கல்லூரி, "தஞ்சாவூர் நகராட்சி" எல்லைக்குச் சற்று அப்பாற்பட்டு இருப்பதால், அக்கல்லூரியில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி அரசின் தனிப்பட்ட ஆணையின் பேரில்தான் கொடுக்க முடியும்.

சரபோஜி மன்னர் அரசு கல்லூரியைச் சுற்றி மக்கள் வாழ்வதற்கு தற்சமயம் வசதியில்லாத காரணத்தால், அக்கல்லூரியைச் சார்ந்த எல்லா அரசு ஊழியர்களும், தஞ்சாவூர் நகராட்சி எல்லையினுள் தான் குடியிருக்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கும் தஞ்சை நகராட்சி எல்லைகளுக்குள் உள்ள அலுவலகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் விகிதத்தில் வீட்டு வாடகைப்படி அரசு கொடுக்கலாம் என்ற கருத்தை கல்லூரிக் கல்வி இயக்குநரும் தஞ்சை மாவட்ட ஆட்சியாளரும் தெரிவித்துள்ளார்கள்.

இதே போன்ற வேண்டுகோள்கள் ஆத்தூர், (சேலம் மாவட்டம்) கிருஷ்ணகிரி மற்றும் வேலூரில் உள்ள அரசு கல்லூரிகளிடமிருந்தும் வந்துள்ளன.

இவைகள் அனைத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளன. தகுந்த ஆணைகள் வெகு விரைவில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தஞ்சை சரபோஜி மன்னர் அரசு கல்லூரியிலே பணிபுரியக்கூடிய விரிவுரையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மற்ற இடங்களில் பணிபுரிகின்றவர்களுக்கும் சேர்த்து ஒருமிக்க அரசு ஆராய்ந்துகொண்டிருக்கின்றது என்று சொன்னார்கள். ராஜா சரபோஜி கல்லூரியைப் பொறுத்த வரையில், அது கடந்த 8 ஆண்டுகளாக அரசால் எடுக்கப்பட்டு, இந்த 8 ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. அது அப்படிக் கொடுக்கப்பட்டு வந்த இடம். மற்ற இடங்களில் அது மாதிரி கொடுக்கப்பட்டு வந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே 8 ஆண்டுகளாக

அது போன்று வாடகை வழங்கிவிட்டு, இந்த 7 மாதங்களுக்கு மேல் கொடுக்காமல் நிறுத்தி வைத்திருக்கக்கூடிய தொகையையும், இனிமேல கொடுக்கக்கூடியதையும் சேர்த்து வைத்துக் கொடுக்கவேண்டுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன். 8 ஆண்டுகளாக நடைமுறையில் கொடுத்திருந்ததை நீட்டிக் கொடுப்பது நல்லது என்ற என் அபிப்பிராயத்தைச் சொல்லி அதைப் பற்றி அரசு புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதோடு சேர்த்துத்தான் அது பரிசீலனையில் இருக்கின்றது என்பதைச் சொன்னேன். ஆகவே எல்லாவற்றையும் சேர்த்து, ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதையும் தனியாகவே ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இதைப்பற்றி விரைவிலே அரசு ஆணை வெளியிடப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தனி உறுப்பினர் தீர்மானங்கள்

(1) மத்திய அல்லது மாநில நீதித் துறைக்கு நியமனங்கள் செய்வது

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. ஜி. வசந்த பாய் அவர்களும் இரண்டு தீர்மானங்களைக் கொண்டுவந்திருக்கின்றார்கள். வரிசை முறைப்படி திரு. தாமோதரன் அவர்களின் தீர்மானம் முதலில் வருகிறது. அந்த வரிசை முறையை மாற்றிக் கொள்ளலாம் என்பதற்கு இரண்டு மெம்பர்களும் ஒப்புக்கொண்டாலும்கூட, இங்கே விதியில் இருப்பது :

'The order of business as arranged in the list cannot be changed except on a motion accepted by the House'.

So, it has to be decided which resolution is to be taken up first—Thiru Damodaran's or Thiru Vasantha Pai's.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I know for what purpose it is being changed?

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, the resolution relating to the Judiciary may be taken up first for this reason, Sir. I was the first to give notice of this resolution, nearly two months ago. Last time, we had no time. Then only, Thiru Damodaran gave it. Another reason for my request to take up this resolution first is that a number of appointments to the Judiciary are being made almost every day and this is a matter of national importance. I have got the consent of my hon. Friend, Thiru Damodaran, for this change.

[1973 நவம்பர் 30

THIRU A. R. DAMODARAN : Sir, I have no objection if the House so wants.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த 'லாட்' போடுகிறதே எதற்கு? யாருடைய தீர்மானத்தை முதலிலே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் 'லாட்' வருகிறது. லாட்-க்குப் பிறகு தான் முதலில் இந்தத் தீர்மானம், இரண்டாவது இந்தத் தீர்மானம் என்று எடுத்துக்கொள்ளப்படும். இதிலே மாற்றங்கள் இப்போது ஏற்படு மானால், அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படவேண்டியிருக்கும். ஆகவே முதலிலே உள்ளதை முதலிலே எடுத்துக்கொண்டு, இரண்டாவது உள்ளதை இரண்டாவதாக எடுத்துக்கொண்டு வரிசை முறைப்படி போக வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். அது தான் சரி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நிரலில் உள்ள வரிசைப்படி திரு. தாமோதரன் அவர்களின் தீர்மானம் முதலில் இருக்கின்றது. இந்தத் தீர்மானத்தை விட்டுவிட்டு, திரு. வசந்த பாய் அவர்களின் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொள்வதில் என்ன கெட்டுவிடப்போகிறது?

* THIRU G. VASANTHA PAI : Sir, I request the Hon. Minister to agree because I have given notice of the resolution long back. The matter is of much importance and judicial appointments are made every day. I request that.........

MR. CHAIRMAN : I think we are not picking up a quarrel with the Judiciary.

Before I permit the hon. Member to move the resolution, I wish to draw the attention of the Members of the Hon. House to the limitations and the restraints that they may have to impose upon themselves while discussing the Resolution.

Rule 142 provides that subject to the restrictions contained in the Constitution and the rules, any Member may move a resolution relating to a matter of general public interest within the cognizance of the State Government. The appointment of Judges of the Supreme Court under Article 124 is not within the cognizance of the State Government though it may have an interest in the independence of the Supreme Court in a federal set-up. Article 217 provides for the appointment of a Judge of the High Court by the President. Both the Articles provide for the qualifications for appointment. Hence, I request the Members to confine their remarks to the subject-matter of the Resolution without commenting upon the recent events.

1973 நவம்பர் 30] [Mr. Chairman]

Under rule 67 (v), a member while speaking must not reflect upon the conduct of the President or any Governor or any Court of Justice or irregularly use the Governor's or President's name for the purpose of influencing a debate. Hence, I request the Members to offer their remarks within the restricted scope of discussion.

THIRU G. SWAMINATHAN : On a point of order, Sir. Does the term " conduct of a High Court Judge " refer to his judicial conduct or to his private conduct also?

MR. CHAIRMAN : It refers to his private conduct also. While speaking, a Member should not refer to it.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I am fully aware of my responsibilities in moving this resolution. But, since this has an effect on the appointment to the Judiciary in the State and as the State Government have a voice in this matter, I will confine myself, while speaking on this resolution, to a philosophy which has been adumbrated by a Member in Parliament. I shall also so conduct myself, Sir, that I do not impinge upon or talk about either the President or the Governor and bring their names while discussing this.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த முறையை மாற்றுவதற்கு சபையினுடைய அனுமதி வேண்டும்.

4-40 பி.ப.

THIRU G. VASANTHA PAI : I beg to move, Sir, that my Resolution No. 2 may be taken up before Thiru Damodaran's resolution and I do so with the consent of Thiru A. R. Damodaran.

MR. CHAIRMAN : Yes.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I have your consent to move—

" That this House recommends to the Government to convey to the Union Government its most considered opinion that the super-imposition of the qualification of " having the most suitable philosophy or outlook, to occupy the highest judicial office in the country in the eyes of the Union Government " on the existing qualifications enumerated in Articles 124 and 217 of the Constitution of India, relating to appointments to the Union and State Judiciary, is detrimental to the independence

[Thiru G. Vasantha Pai] [1973 நவம்பர் 20

of the Judiciary and opposed to Article 50 and other provisions of the Constitution of India and to urge upon the Union Government to desist from making any further appointments to the State or Union Judiciary on the basis of this super-imposed qualification."?

Sir, by moving this Resolution, I am primarily concerned, as a Member who has taken an oath to the effect that I will bear true faith and allegiance to the Constitution in accordance with Schedule III to the Constitution. I have a feeling that...

* திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, ஒரு 'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்'. நான் குறுக்கிட விரும்பவில்லை. நமது சபைக்கு என்று ஒரு மரபு இருக்கின்றது, பாரம்பரியம் இருக்கின்றது. நாம் எப்போதும் விதிகளுக்குப் புறம்பாகப் போவதில்லை. நண்பர் திரு. வசந்த பாய் அவர்கள் தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்ளுவதில் ஆட்சேபணை ஒன்றுமில்லை. ஆனால் சபையின் இன்றைய நிகழ்ச்சி நிரலில் அவரது தீர்மானம் இரண்டாவதாக இருக்கின்றது. இதை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவரும், மாண்புமிகு திரு. தாமோதரன் அவர்களும் ஒப்புக்கொண்டு, நண்பர் திரு. வசந்த பாய் அவர்கள் தங்களுடைய தீர்மானத்தைப் பிரேரேபித்தார். இதற்கு அவர்கள் முறையாக இந்தச் சபையின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அனுமதியைப் பெற்று, பிறகு அவர் தமது தீர்மானத்தைப் பிரேரேபித்தால், நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : The point of order is too late, Sir. The resolution has been introduced.

THIRU G. VASANTHA PAI : Sir, I move—

"That under rule 21 (3) of the Council Rules, Resolution No. (2) under item III 'Private Members' Resolutions' be taken up before Resolution No. (1)".

The motion was duly seconded.

MR. CHAIRMAN : The question is—

"That under rule 21 (3) of the Council Rules, Resolution No. (2) under item III "Private Members' Resolutions" be taken up before Resolution No. (1)".

The motion was put and carried.

1973 நவம்பர் 20]

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, shall I read out the resolution again or shall I take it as having been read?

MR. CHAIRMAN : It has to be moved and seconded.

THIRU G. VASANTHA PAI : Sir, I beg to move—

"That this House recommends to the Government to convey to the Union Government its most considered opinion that the super-imposition of the qualification of 'having the most suitable philosophy or outlook, to occupy the highest judicial office in the country in the eyes of the Union Government' on the existing qualifications enumerated in Articles 124 and 217 of the Constitution of India, relating to appointments to the Union and State Judiciary, is detrimental to the independence of the judiciary and opposed to Article 50 and other provisions of the Constitution of India and to urge upon the Union Government to desist from making any further appointments to the State or Union Judiciary on the basis of this super-imposed qualification."

THIRU A. R. DAMODARAN : Sir, I second it.

MR. CHAIRMAN : Resolution moved—

"That this House recommends to the Government to convey to the Union Government its most considered opinion that the super-imposition of the qualification of 'having the most suitable philosophy or outlook, to occupy the highest judicial office in the country in the eyes of the Union Government' on the existing qualifications enumerated in Articles 124 and 217 of the Constitution of India, relating to appointments to the Union and State Judiciary is detrimental to the independence of the judiciary and opposed to Article 50 and other provisions of the Constitution of India and to urge upon the Union Government to desist from making any further appointments to the State or Union Judiciary on the basis of this super-imposed qualification."

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, a book has been published on 5th May 1973 by Shri Mohan Kumaramangalam, entitled "An Analysis of the recent controversy over the appointment of the Chief Justice of India and Judicial appointments". This book purports to be one for guidance, for

all future, on the considerations that should weigh in appointments to the Judiciary in this country. The foreword to the book written by Shri Mohan Kumaramangalam on 5th May 1973 says: "It is my conviction that much of this opposition flows from a lack of understanding of the motives that led the Government to appoint the Chief Justice as well as of the fundamental considerations that should govern appointments to such high office. My aim in writing this booklet is to provide the material for a proper understanding of both matters." Then, Sir, just before the epilogue, while concluding the book, the late Minister says as one of the considerations which should weigh in these appointments "fourthly, that it is entirely within the discretion of the Government of the day to appoint the person considered in its eyes as most suitable to occupy the highest judicial office in the country, and to take into consideration his philosophy and outlook on life".

Sir, at the outset, I want to submit to you and to the Members of this House that our Constitution contains three main arms of Government, namely, the Executive, the Legislatu[re] and the Judiciary. The Judiciary is enjoined to hold the balan[ce] between the Executive and the Legislature and the people. [It] is with this form of Government which is of fundament[al] importance that we have adopted a Republican Federal Con[s]titution, to which we have all avowed to conform. Before comin[g] to the Legislature, we have taken oath avowing that we sha[ll] abide by this Constitution bear true faith or allegiance to i[t]. I want to point out that this judiciary has got a three-fol[d] function. First, it stands for the citizens' rights and sees th[at] the State or the Executive does not impinge on them. Secondl[y] in matters concerning the State versus the Union under Artic[le] 131 of the Constitution, the Judiciary plays a very importa[nt] part and the Supreme Court is vested with jurisdiction. If [it] should be considered that the person who is to appoint th[e] future Judges, the Chief Justice of India who has to be co[n]sulted for every appointment not only to the High Courts bu[t] also to the Supreme Court—should be a person who is onl[y] wedded to one philosophy, the philosophy of the Government o[f] the day in the Union, then what would happen to those sever[al] States which do not have or subscribe to that particular philo[so]sophy?

Sir, I do not want to say things in my own words. I will only read some passages in this respect, from the speeches of Shri M. C. Setalvad, one of the great jurists of our time and Justice Hidayatullah who was Chief Justice of the Supreme Court in 1970 and I would also like to refer to one observation by Chief Justice Sikri. I am reading them out because they expose the hollowness of this resort to philosophy. Shri Setalvao said—he spoke in Bombay and the speech has been published in a book entitled "A Judiciary made to measure"—"However, now the Government is not making any bones about its true intentions in bringing out this change. Mr. Kumaramangalam, a senior member of the Bar, evidently had a good deal to do with this change. I have no inside information, but I am judging from the vehemence and the candour with which he defended the action in the Lok Sabha. And he boldly and categorically asserted in the Lok Sabha that it was the Government's right and privilege under the Constitution to select for the office of the Chief Justice a person who is, in his words forward-looking and not backward-looking, a person who according to him, shares the philosophy of the Government and not any other philosophy. That really is the reason for the supersession of the three senior Judges and not the reason which the Law Commission gave; and I am glad the true reason has now been honestly owned by the spokesman of the Government. Let us analyse what the philosophy of the Government would in ordinary practice, mean. The philosophy of the Government would mean the philosophy of the ruling party. Today, it may be the philosophy of the ruling Congress, tomorrow it may be the philosophy of another party—it may be the Jan Sangh, it may be the Swatantra. Therefore, the judge or the Chief Justice has to keep track, when he is sitting on the Bench, in interpreting the Constitution, not of the language and the words of the Constitution, but of the philosophy of the ruling party which may change from time to time. So, you have not to have an impartial Chief Justice but a judge or a Chief Justice who will bear in mind what, in effect, the Government thinks the Constitution means. If the judge thinks the contrary, he is not sufficiently forward-looking; he is backward-looking and must be discarded for the office of the Chief Justice. And the mischief does not end there."

MR. CHAIRMAN : The hon. Member may take some hints from the books. He need not read out entire passages.

THIRU G. VASANTHA PAI : Sir, Shri H. R. Ghokale and Shri Mohan Kumaramangalam had read extensively in the Lok Sabha from many of the speeches which had been delivered by their predecessos, from speeches of Sir Winston Churchill and from speeches of the Members of the American House of Representatives. I do not see the reason why it should not be permitted here. I am only making a similar reference.........

Sir, I am only reading the important portions and passing over the others. Mr. Setalvad has stated—

4-50 பி.ப. " And the mischief does not end there. It goes further. Though the observations which were made in the Lok Sabha by Mr. Kumaramangalam refer to the office of the Chief Justice, they would apply all the way down to all judicial appointments. Every judge of the Supreme Court when making a decision in which Government policy is in question will have to think of his prospects of being appointed the Chief Justice and bear in mind what the philosophy of the Government of the day is, if he wants to be in good favour with the Government in order to earn his appointment as the Chief Justice. Nay, it will travel down further. Take the judges of the High Court. Naturally and rightly, they all aspire, as soon as they grow senior, to be selected for the highest Court in the land. But they must bear in mind that in order to be so selected they must also interpret the Constitution, not as they think it requires to be interpreted, but according to the philosophy of the Government in power at the Centre for the time being."

Sir, I was referring to the speech of Mr. Setalvad and I shall now quote one sentence from the speech of Mr. M. Hidayatullah :

" Then comes the last of the things, which has come out in the papers from Mr. Kumaramangalam. That has certainly let the cat out of the bag—the bag must be of red colour, I think! He said that we chose a Chief Justice who is not a "backward-looking " man, but a " forward-looking " man. Well, I am afraid that if this goes on, the men who will be chosen will be people not forward-looking but looking [illegible]

It used to be said in the olden days that a puisne judge was very anxious to trip up the heels of the puisne judge before him. And, in England, the judges were so much after the king and his patronage that they were known as " judges under the throne " or " lions under the throne ". Well, if " lions under the throne " are to be made Chief Justices, then of course, there will be great justification for what has been done."

Sir, I shall only refer to one sentence of Chief Justice Sikri.

MR. CHAIRMAN : The hon. Member should not read out from the books extensively. I would not allow the hon. Member to read out from books. The hon. Member may talk in his own way.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I am only reading important passages. On a number of occasions, passages from books had been read out. I am reading from the book only to avoid the chance of misquoting them.

MR. CHAIRMAN : As an eminent lawyer, the hon. Member might as well speak about the points from his memory.

* THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, eminent lawyers will not quote off-hand without looking into the books. I am referring to the books and reading the important passages to avoid any possible mis-quotation.

Mr. Kuldip Nayar says in his book ' Supersession of Judges'—

" Sikri told me that if the social philosophy theory were to be accepted, a Judge in Tamil Nadu would decide a case according to the D.M.K. philosophy and a Judge in another State would decide the same case according to the philosophy of the ruling party there. ' Where would the law be? '. "

Sir, I have referred to the statements of three eminent people whom I have quoted to support my argument. Hereafter I shall deal with the subject in my own way.

Sir, the three eminent persons, whose statements I have quoted, cannot be charged with having any selfish interest in the future appointments to the Judiciary. They have clearly stated what would be the effect of accepting the philosophy of the Central Government as a super-imposed qualification to those mentioned in Articles 124 and 217 of the Constitution of India.

Article 124 clearly says that a man must have been a lawyer for ten years, or a Judge of a High Court for at least five years or a distinguished jurist, for being appointed as a Judge of the Supreme Court. It has never been stated in the Constitution that such a man should hold the view which is in consonance with the views of the party in power. It has never been stated that such a qualification should be super-imposed on the other qualifications mentioned in the Constitution. If we accept that, we will not be abiding by the provisions of the Constitution. A person who had been at the Bar as a competent lawyer for about 23 years and who then became a Minister came to think that because the judgments of the Supreme Court in two or three cases went against him, he should bring a person there who would subscribe to the view of the party in power. If everyone thinks in the same way, what would happen ? When a judgment goes against the party in power, are we to send the concerned Judge away and put somebody else in his place ? What would happen then ? Somebody else who comes to power tomorrow would equally try to send another one away and put his own man there. At the time of oath-taking, Mr. Kumaramangalam had gone to Mr. Ray and remarked something grossly out of taste. It is on record and in page 32 of the book "Supersession of Judges" by Kuldip Nayar, it is stated thus:

"At the oath-taking ceremony, Kumaramangalam went to Ray and told him jocularly: "Such posts are a reward for political services rendered.' Ray replied: 'I don't recall rendering any political service to anybody except to truth and justice'."

Sir, why I am reading this is this: In pages 43 to 45 of the booklet "Judicial Appointments" by Thiru S. Mohan Kumaramangalam, the circumstances relating to appointment of Lord Trevethin as Chief Justice have been elaborately dealt with when he was appointed as a stop-gap Chief Justice of England by Lloyd George. Lloyd George wanted Sir Gordon Hewart who was a learned lawyer and Attorney-General to be the next Chief Justice of England. So, what he did was: He took a resignation letter from Lord Trevethin and kept it in his pocket, so that Lord Trevethin could be in the post till such time as he chose to use the resignation letter. Lord Trevethin was the Chief Justice for one year. At the end of one year, Lord

parents to have any degree of control over their children. It is an unfortunate state of affairs and it does not augur well for the future set-up of our State or even our country, if we allow our educational system to run on the lines on which it is being run today. I would earnestly plead that in any reforms that we have in education, the Education Minister will bear in mind that because of the introduction of the semester system of education, some institutions in our State today are still free from agitations and the students of such institutions have not been able to join the agitation that is being carried on today. We all know, Sir, that students of the Engineering and Medical Colleges were always in the forefront in the past in such agitations; but now due to a re-shaping of the syllabi and the introduction of semester system in such colleges, better discipline, better appreciation of the educational facilities is evident in the attitude of the boys and I request the Hon. the Minister for Education to find out whether the semester system could not be introduced in the B.A. and B.Sc. courses also. I realise that there is a lot of difficulty. It is difficult to redraft the syllabi. We have to compress a 11-year syllabi into 10-year syllabi and I am sure the Government can do it. I am not asking for a change in the period of education from the 5th to 10th. I am only asking for reshaping the period of primary education. Even the Secondary Education Commission has recommended that instead of five years, we may compress them into four years, that during the first five years much of the time is being wasted and we can have three years of middle school education and three years of high school education, I am sure, Sir, from the financial aspect also, the Government will welcome the compression of the school course. The present rate of expenditure on primary and secondary education is increasing at such a rapid pace that almost 70 to 75 per cent is spent on the primary and secondary sectors. One argument that will be used against this is that a boy who comes out of the school after a ten-year course will be comparatively immature or suitable for better employment. Even after 11-year education, we must accept the fact that a boy who comes out of the High School will be 15½ or 16 years of age and is ill-equipped for any job and definitely a training of two years will be required before he is considered for any job. In fact we have to think of boys of 18

before we think of employment either in Government service or non-Government service. Therefore, this argument will not hold good. The only thing required while reshaping the curricula of our school education, is to have—and this has often been stressed by educational experts—a vocational basis so that the boys may be able to go into trades. At present boys having S.S.L.C. qualification join I.T.I.'s and polytechnics and, therefore, the compression of the school course from 11 to 10 years should not have any effect on the admission of these boys into these institutes or professional colleges.

One more thing I would like to stress in this regard. Although we have electives such as Physics, Chemistry, etc., the boys do not enjoy the laboratory facilities because they do not exist in many of the rural schools. I think it is very unfair to the boys from the backward areas although we are genuinely interested in seeing that children coming from all regions of our State, belonging to all communities and castes, are given proper education. With the best of intentions, Sir, we have not been able to achieve this, because there is a lopsided development in the urban areas and there is no development at all in the rural parts. The urban schools have better facilities. They have better libraries. They have better laboratories. The rural boys do not know what a retort or a simple conical glass is. This places our rural community at a serious disadvantage. Sir, even from the point of view of social justice, this imbalance must be rectified. I would strongly recommend that wherever possible at least one out of ten schools in an area should be selected and equipped with a proper laboratory and the boys from the adjoining areas could use this laboratory on a shift pattern or on a changing programme so that one day in a week the boys from the adjoining schools will be able to use the laboratory. In fact, I would recommend some provision in our urban areas where many of our schools do not have these facilities, the colleges which are being run by the Government or even by private bodies, if they are agreeable to it, should be utilised by the students from the schools. There is a tremendous wastage of resources. Constructing a laboratory in a way, will cost between 2 and 3 lakhs of rupees and these laboratories are being used only for five hours or 10 hours a week. Can we afford this wastage? Can our

country afford to waste its money? It may be all righ for persons in affluent circumstances who may be able to invest money in buildings and allow them to remain idle. I would strongly plead that not only for laboratories, but also for library facilities, some scheme should be drawn up so that all the students in the respective areas may be able to fully utilise the facilities and there may be no wastage at all. There has been a great deal of talk—of course, this is germane to the issue since we are talking of an explosive school-leaving population—whether our colleges should be run on a shift pattern, whether we could have morning or evening colleges. I am in full agreement that where it is not possible to have buildings for want of financial resources, we must certainly think in terms of fixing hours of work between 8 o' clock in the morning and 5 o' clock in the evening so that two sets of college boys may be able to go to the same college and use the same facilities and this would be a great saving in building expenditure. There would be no need for confusion. In fact, when I was in Germany a few years ago, I found that the boys were going to school at 8 o' clock in the morning in the winter when the temperature was minus 10 degree Centigrade. I do not see why in Tamil Nadu, where we have always such a temperate climate, we should not make some sacrifices. We must be prepared to make some sacrifices instead of insisting on following the time pattern which our forefathers had—going at 10 o' clock after taking the morning meals, with break at one, returning to school at 2 and breaking at 4 o' clock. I think our system should change because it is necessary considering the fact that we are in great need of buildings. It has to be on a phased pattern. I would, therefore, plead that all these facilities should be properly utilised. I am fully aware of the fact that all sorts of associations will have to be consulted; educational authorities will have to be consulted and I hope, Sir, that delaying processes would not be adopted and attempts made to scuttle the reform. I am aware, Sir, that the Government are fully aware of the problems involved.

I brought this resolution only with the express hope that the Government would make up their mind, after consultation with all shades of opinion, so that the present uncertainty in the educational pattern might not continue. Andhra has adopted 10 years. Kerala has adopted 10 years. Karnataka has adopted 10

years and we are the only State in the Southern region which still operates on the 11 year pattern. I think, Sir, this adds to the problem of mobility of the students from one area to another also and this causes serious difficulties. We should, as far as possible, try to have a uniform pattern, at least the time pattern, even though there may be difference in syllabi and curricula so that mobility may not be affected. Otherwise, the students of Tamil Nadu will always be tied down to Tamil Nadu. They cannot go to other Universities afresh for research work and from this point of view this reform is badly required. I am sure the Government will take to it, consider the matter and arrive at a definite conclusion at an early date. Thank you. 6 பி.ப.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி தந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பத்து ஆண்டுகால இடைநிலைக் கல்வி என்பது தமிழ் நாட்டில் நாம் செய்ய விரும்புகின்ற கல்விச் சீர்திருத்தங்களுக்கு அடிப்படையாக இருக்கும் என்று கருதுகிறேன். முதலாவதாக வளர்ந்த நாடுகளில், மேலை நாடுகளில்—இங்கிலாந்து மற்ற நாடுகளிலும்கூட 15 வயது வரையில் இவ்வாறு இடைநிலைக் கல்வி அமைத்திருந்தார்கள். அதை 16 ஆண்டுக் கல்வியாக அமுலாக்க யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பத்து ஆண்டு கால கல்வித் திட்டத்தில் நம்முடைய இடைநிலைக் கல்வியில், எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருக்கிற இடையூறுகளை நீக்க முடியும். முதலாவதாக நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகச் சொல்லி வருகின்ற, தேர்வு முறைகளில் இருக்கின்ற பல்வேறான சங்கடங்களை நீக்குவதற்கு வழி இருக்கிறது. கல்வி ஒரு சிலருக்குத்தான் என்ற நிலை மாறி கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற தத்துவத் [illegible]படியும், அப்படிக் கொடுப்பதுதான் ஜனநாயக இலக்கணமாக இருக்கும் என்ற அடிப்படையிலும் இந்தப் பத்து ஆண்டுகால கல்வித் திட்டம் பொருத்தமாக இருக்கும். இதன்படி கல்வி எல்லா மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாக அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நாம் 11-வது ஆண்டையும் [illegible] 10-வது ஆண்டையும் வைத்துக்கொண்டு அந்த இரண்டு ஆண்டு கல்வித் திட்டத்திற்கு நிதி இருக்கிறதா என்பதைப்பற்றி மட்டும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். நாம் அந்த இரண்டு ஆண்டில் கல்வித் திட்டத்திற்கு கூட நிதி [illegible] இருக்கிறதா என்று யோசிப்பதைவிட ஏறக்குறைய 80 லட்சம் பேர் [illegible] ஆரம்ப வகுப்பில் சேர்ந்து [illegible] லட்சம் பேர்தான் 11-வது [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] லட்சம்

[திரு. க. அறிவழகன்] [1973 நவம்பர் 29

மாணவர்கள் இடையிலேயே நீங்கிவிடுகிறார்கள் என்ற நிலைமை இருக்கின்ற போது, நாம் இந்தப் பத்து ஆண்டுகாலத்திற்கு எல்லோருக்கும் தேவையான ஒரு இனிய கல்வியைத் தருவது விரும்பத்தக்கது. அந்தக் கல்வி எவ்வாறு இருக்க வேண்டும் என்றால், இங்கிலாந்து நாட்டில் சமீபத்தில் அங்கே இருக்கின்ற நடுநிலைக் கல்வியைக் குறித்தும், 15, 16 வயதுள்ள சிறுவர்களைப் பற்றியும் 'of our future' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் முதல் பகுதியில் 'Education for all' என்ற கேள்வி துவக்கப்பட்டிருக்கிறது

Boredom everything that schools stand for or enthusiasm; conflict between school and home or mutual support, tongue tied inadequacy or social competency. What is the true picture of the educational system of hundreds of thousands of young people today?

என்று இங்கிலாந்து நாட்டுக் கல்வித் துறையினுடைய அறிக்கை துவங்குகிறது. நான் இங்கிலாந்து நாட்டுக்குச் சென்றபோது அங்கேயுள்ள மாணவர்களையும், மாணவியர்களையும் பல்வேறான கேள்விகளைக் கேட்டேன். டாட்டன் ஹாம் ரோட்டில் உள்ள பெண்கள் பள்ளியில் இருந்த 15 வயது சிறுமியர்களைப் பார்த்து நான் கேட்டேன். 'What kind of further education you would like to have?'

அதற்கு பதில் சொன்னார்கள் 'We do not want any more education. This education is a bore. அதற்குப் பிறகுதான் நான் அந்த அறிக்கையில் பார்த்தேன். அந்த அறிக்கையின் முதல் அத்தியாயமே இப்படித்தான் துவங்குகிறது :

'Boredom that everything the schools stand for enthusiasm'. இங்கிலாந்து நாட்டில் இருக்கின்ற கல்வி நிபுணர்கள் இன்றையதினம் இருக்கின்ற கல்வி நிலைமைப்பற்றி வெளியிடப்பட்டிருக்கின்ற அறிக்கையில்கூட உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய கல்வித் திட்டத்தில் தாங்க முடியாத சுமைகள் மாணவர்களுக்குத் தேவையில்லாதவை என்று சொல்லத்தக்கவை ஏராளமாக இருக்கின்றன. அது தேவாரம், திருப்புகழ் ஆனாலும், 5-வது, 6-வது வகுப்பிலேயே படித்துவிட்டாலும், சீதாப் பிராட்டியாருடைய கதையையும், கம்பராமாயணத்தின் பெருமைகளையும் தமிழ் ஆசிரியர் 6-வது, 7-வது வகுப்பிலேயே கற்றுக் கொடுத்தாலும், அதை யெல்லாம் நான் புரிந்து கொண்டதாக இன்றையதினம் கூட எனக்குத் தோன்றவில்லை. அது பெரும் சுமையாகத்தான் தோன்றியது. ஆனால், அதையே 12, 15 வயதான பையனுக்கு அல்லது 18, 19 வயதான மாணவ, மாணவியர்களுக்கு சொல்லிக் கொடுத்தால், அவர்கள் உணர்ந்துகொள்வது மிக எளிதாகும். அது மட்டுமல்ல நம்முடைய கல்வித் திட்டத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மூன்றும் [illegible] என்று ஒரு பாடம் எடுக்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம்.

1973 நவம்பர் 29] [திரு. க. அறிவழகன்]

எல்லாப் பள்ளிகளிலும் எல்லா எலெக்டிவ் பாடங்களும் இருப்பதில்லை. பயாலஜி இல்லாத பள்ளிகளும் உண்டு. கெமிஸ்டிரி இல்லாத பள்ளிகள் உண்டு. ஒரு கிராமத்திலிருக்கின்ற பள்ளியில் பயாலஜி இல்லாத காரணத்தால், அவன் பயாலஜி படிக்க முடியாத காரணத்தால், ஒரு வேளை அவன் டாக்டராக வேண்டுமானால், அவன் டாக்டராவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடக் கூடிய ஆபத்து இன்றையதினம் இருக்கிறது. 'எலெக்டிவ்ஸ்' ஆல் வருகின்ற இந்த ஆபத்தை பத்து ஆண்டுக்காலக் கல்வித் திட்டத்தின் மூலமாகப் போக்கிவிட முடியும். ஒரு பையன் பிஸிக்ஸ் எலெக்டிவ்ஸ் எடுத்துக்கொண்டு போய் கல்லூரியில் முதல் குரூப் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், உனக்கு கணக்கு பேஸிக் இல்லை, ஆகவே முதல் குரூப் கொடுக்க முடியாது, பிஸிக்ஸ், கெமிஸ்ட்டிரி, நேச்சுரல் ஸயன்ஸ் தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிவிடுகிறார். ஆகவே நம்முடைய கல்வித் திட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்று நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மனிதனுக்குத் தேவையான ஒரு முழுக் கல்வியை, எல்லா அறிவியல், கலாசார, பண்பாட்டு முறைகளையும் பெறத்தக்க ஒரு முழுக் கல்வியைத் தர வேண்டுமே தவிர, கல்வியில் சிலவற்றை ஒரு 15 வயதுக்குள் தந்து, அதிலே சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதால், அந்த இளைஞனுக்கு, அந்த இளம் மாணவனுக்கு ஏற்படும் இழப்பு பெருத்த இழப்பாகும். நம்முடைய கல்வித் திட்டத்தில் இதைவிடப் பெரிய மாற்றங்களை நாம் செய்தாக வேண்டும். நம்முடைய நாட்டிலே எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலே ஒரு லட்சம் பேர், ஒன்றரை லட்சம் பேர் தோற்றுப் போகிறார்கள். ஏனென்று கேட்டால், அவர்கள் ஆறு பாடங்களை எழுதியாக வேண்டும். அதிலே ஒன்றிலேகூட அவர்கள் வெற்றி பெறவில்லையென்றால், அவர்கள் வரலாற்றிலே 90 மார்க், கணக்கிலே 40 மார்க் வாங்கவில்லையென்றால், அவர்கள் கல்லூரிக்குள்ளே நுழைய முடியாது என்ற நிலைமை இருக்கிறது. அதை நாம் மாற்ற முடியும். நான் இங்கிலாந்து நாட்டிலே பார்த்தேன். 15 வயது சிறுமியர் எழுதுகிற லோயர் லெவல் எக்சாமினேஷன் என்றால், 16 சப்ஜக்ட்ஸ் வைத்திருக்கிறார்கள். அதிலே 4 எழுதினால் போதும், அந்த நான்கிலும் தேறியிருந்தால், அவர்கள் கல்லூரிக்குள்ளே வரலாம் என்று அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இரண்டாண்டுக் கல்வித் திட்டம் அமைந்திருக்கிறது. அது ஹையர் லெவல் எக்சாமினேஷன் என்று வைத்திருக்கிறார்கள். அதைவிட மிகச் சிறப்பான முறையிலே செய்ய வேண்டுமென்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 6–10 பி.ப.

நம்முடைய கல்வித் திட்டத்தில் தலைமை ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் முழு சுதந்தரமும் அளிக்கவில்லை. அவர்களுடைய திறமைகளை வளர்த்துக்கொள்கின்ற முறைகளும் இல்லை. அதே நேரத்தில் கட்டுப்பாடு

களும் இருக்கின்றன. ஒரு தலைமை ஆசிரியர் தன்னுடைய நூல் நிலையத்திலே மிக மோசமாகிவிட்ட புத்தகங்களைத் தேவையில்லையென்று நீக்கிவிட முடியாது. அதை டி.இ.ஓ. வந்து பார்த்தாக வேண்டும். இருபது ஆண்டுகளுக்கு முந்தைய புத்தகங்களானாலும், அப்படிச் செய்ய வேண்டும். நாற்காலிகள் உடைந்தாலும், பெஞ்சுகள் உடைந்தாலும், அதை அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர், சரி போகட்டும், புதிதாக வாங்கலாம் அல்லது அதை ரிப்பேர் செய்யலாம் என்று முடிவு செய்ய முடியாது. அதற்கு டி.இ.ஓ.-வினுடைய அனுமதி வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இருக்கின்றன. நல்ல வளர்ந்த கல்வித் திட்டத்தில் எல்லா அதிகாரங்களும் தலைமை ஆசிரியர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்து நாட்டில்

'The Headmaster may consult the Chief Educational Officer, if necessary' என்று போட்டிருக்கிறார்கள். கல்வித் துறையின் தலைமை அதிகாரியுடன் சேர்த்து எண்ணத்தக்க அளவுக்கு தலைமை ஆசிரியர்களுக்கு மதிப்புத் தந்திருக்கிறார்கள். வகுப்பிலே இருக்கிற ஆசிரியர்கள் மிகச் சிறப்பாகச் சொல்லித் தருவதற்கேற்ற அளவுக்கு அவர்களுக்கு அறிவுநலம் இருக்கிறதா என்பதை நாம் நிச்சயம் பார்த்தாக வேண்டும். அப்படிப்பட்ட அறிவுநலம் பெற்றவர்கள் ஆசிரியராக நீடிக்கவும் செய்ய வேண்டும். அவர்கள் மிகத் திறமையோடு சொல்லித் தருவதற்கு ஏற்ற எல்லா வசதிகளையும் செய்து தருவதற்கு ஓராண்டு பள்ளிக்கூடத்தைக் குறைக்கலாம். அதிலே கிடைக்கிற பாடக்கருவிகளை, அதில் கிடைக்கின்ற நிதியை, நாம் இடைநிலைக் கல்வியை மிகச் சிறப்பாக்குவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்வதற்கு இது பயன்படும் என்று கூறி, இவ்வார்த்தைகள் கூறுவதற்கு அனுமதி தந்ததற்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு நண்பர்கள் இந்தப் பத்தாண்டுப் பள்ளிப் படிப்பு வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி இங்கே பேசினார்கள். அதிலும் முதலிலே பேசிய நண்பர் அவர்கள் மாணவர்களிடையிலே நல்ல முறையிலே ஒழுங்கு—டிசிப்ளின்—இருக்க வேண்டுமென்றால், பாடத் திட்டங்களிலே மாறுதல் வேண்டும் என்ற கருத்தையும், அதே சமயத்திலே செமெஸ்டர் சிஸ்டம் என்று நடத்தப்பட்டு இன்டர்னல் எவால்யுவேஷன் நடத்தப்படுகிற முறையிலே தேர்வு முறையும் வைத்தால், ஓரளவு மாணவர்களிடையே ஒழுக்கமும், கட்டுப்பாடும் இருக்கும் என்ற கருத்தையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், என்னைப் பொறுத்த வரையிலே, கிட்டத்தட்ட 15 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் பழைய இண்டர்மீடியட் என்ற அளவிலே இரண்டு ஆண்டுகள் கல்வித் தரத்திலே நான் பயின்றவன். அப்பொழுதும் மாணவர்களிடையே பல

பிரச்சினைகள், பல சிக்கல்கள் தோன்றிக்கொண்டுதான் இருந்தன. அதே போல மாணவர்களிடையே புகுமுக வகுப்பு என்ற மாறுதல்கள் வந்த பிறகும். இம்மாதிரிக் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. ஒரு வேளை இப்போது மாணவர்களிடையே அதிகமான அளவிலே கட்டுப்பாடு குறைந்து, டிசிப்ளின் இல்லாமல் போகுமானால் அதற்குக் காரணம் கால ஓட்டத்திலே எல்லா இடங்களிலேயும் அந்த மாறுதல் வந்துகொண்டிருக்கிறது; ஆகவே அது நம்முடைய நாட்டிலேயும் வந்துகொண்டிருக்கிறது என்பதைத் தவிர, பள்ளிப் படிப்பிலே இரண்டு ஆண்டை ஒரு ஆண்டு என்று குறைத்து விடுவதாலோ, இரண்டாண்டு காலம் இன்டர்மீடியட், அதற்குப் பிறகு இரண்டாண்டுக்காலம் டிகிரி என்ற காரணத்தாலோ மாணவரிடையே பெரிய அளவு கட்டுப்பாடும் ஒழுங்கும் ஏற்பட முடியும் என்ற கருத்தையும் நான் ஒத்துக்கொள்வதற்கில்லை என்று இந்த சமயத்திலே சொல்ல விரும்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I did not say that altering the duration of education would improve discipline. I only recommended the semester course of education which might have its effect on discipline.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. தாமோதரன் அவர்களுடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்தை அநேகமாக இதுதான் முதல் தடவையாக நான் தெரிவிக்கிறேன் என்று நினைக்கிறேன். மாணவர்களிடத்திலே அந்த மாதிரி முறை மாறியிருக்கிறது என்றால், எல்லா நாடுகளிலேயும் மாறியிருக்கிறது, நம்முடைய நாட்டிலேயும் பல மாநிலங்களிலே மாறியிருக்கிறது, இந்த மாநிலத்திலே இப்பொழுது மாறியிருக்கிறது என்ற கருத்தை நான் சொல்வேன். நேற்றைய தினம் இதே அவையிலே மாணவர் பிரச்சினைபற்றி நான் எடுத்துச் சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். நேற்றையதினம் பச்சையப்பன் கல்லூரிப் பகுதியிலே பெரிய அமளி நடந்தது. அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலேயும், நானும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னோம். இந்த மாதிரி நடந்துகொண்டே இருப்பதற்கு இவர்களை அனுமதித்தால், இது இன்னும் அதிகமாகிக்கொண்டே போகும் என்ற கருத்தைச் சொன்னேன். நேற்று நடந்தவைகளைவிட பத்து மடங்கு அதிக அளவிலே நடைபெற்றிருக்கிறது என்று பத்திரிகையிலே பார்க்கிறோம். நேற்றையதினம் கல் எடுத்து அடித்தது மட்டும் இருந்தது. அமிஞ்சிக்கரைப்

பகுதியிலே கடைகள் மூடப்பட்டதாக மட்டும் இருந்தது. ஆனால் இன்றைய தினம் 3 பேருந்துகள் சென்னையிலே கொளுத்தப்பட்டிருக்கின்றன என்று நண்பர்கள் சொன்னார்கள். லாயிட்ஸ் ரோடிலே ஒரு பேருந்து கொளுத்தப் பட்டிருக்கிறது. பீட்டர்ஸ் ரோடிலே ஒரு பேருந்து கொளுத்தப்பட்டிருக்கிறது. இதே பச்சையப்பன் கல்லூரிக்கு அருகிலே ஒரு பேருந்து கொளுத்தப் பட்டிருக்கிறது. இதைத் தவிர கல்லெறியும் பல இடங்களிலே நடைபெற்றிருக் கிறது. நான் சென்றபோது பார்த்தேன், சைனா பஜார் பகுதியிலேயும், மவுண்ட்ரோடு பகுதியிலேயும், எல்லாக் கடைகளும் இன்று மூடப்பட்டுள்ளன. அந்த அளவுக்கு நிலைமை முற்றிவிட்டதைப் பார்க்கின்றோம். இன்று கல்லூரிகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. நான் அரசாங்கத்திற்கு இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த மாண்புமிகு அவை நடந்து கொண்டிருக்கிற சமயத்திலே முக்கியமான அறிவிப்புகள் ஏதாவது இருக்கு மானால், அந்த அறிவிப்புகளை அரசு இந்த அவையிலேதான் சொல்வது வழக்கம். ஆனால் பத்திரிகை அலுவலகங்களிலிருந்து வந்த செய்தியின்படி, அரசு எல்லாக் கல்லூரிகளையும் ஜனவரி மாதம் வரையிலே மூடும்படியாக உத்தரவிட்டிருப்ப தாக நான் அறிகிறேன். அப்படிப்பட்ட உத்தரவு இருக்குமானால், அதைக் காலையிலே அசெம்பிளியிலே . . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தரவேதும் இடப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, என்னுடைய பத்திரிகை அலுவலகத்திலே இருக்கிற நண்பர்களும், மாணவர்களும் அப்படிக் குறிப்பிட் டார்கள். கல்லூரி மாணவர்களும் குறிப்பிட்டார்கள். சில கல்லூரிகளிலே பிரின்சிபாலே விடுமுறை விடுகிறார் என்றார்கள். அந்தந்தக் கல்லூரி முதல்வர் களே கல்லூரியை மூடுவதைவிட, அரசே கூட மூடிவிடலாம். அது தவறு இல்லை. இப்படிச் செய்தால், எல்லாக் கல்லூரிகளையும் மூடிவிடுவார்கள். அப்படிச் சொல்லவில்லை என்றாலும் ஒரு நாளைக்கு 5 கல்லூரிகள் என்று மூடப்போகின்றன.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்களே, கல்லூரியை மூடச் சொல்கிறாரா அல்லது லீவு விடச் சொல்கிறாரா என்று தெரியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மூடுதல் என்று சொல்கிற போது, லீவைத்தான் சொல்கிறேன். " Colleges are being closed " என்றால் " for Vacation " என்று அர்த்தம். கல்லூரியை மூடவேண்டும் என்று சொல்வதற்கு, அதுவும் கல்வித் திட்டத்திலே

சொல்வதற்கு, பேசவேண்டிய அவசியமில்லை. அதுவும் மூடவேண்டும் அல்லது விடுமுறை அளிக்க வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், இந்த மாதிரிப் பிரச்சினைகள் அதிகமாகப் போகக்கூடாது என்பதற்காகத்தான். அரசாங்கத்தைக் காப்பதற்காக அந்தக் கொள்கையை நான் சொல்லவில்லை. இதுமாதிரிக் கலவரங்கள் நடக்கின்றன. சில இடங்களிலே கண்ணீர்ப்புகை விட வேண்டிய அவசியத்திற்கு அரசு போகிறது. அதற்கு மேலே துப்பாக்கிச் சூடுக்கு போக வேண்டிய அவசியத்திற்கு அரசு போகிறது. அப்படி வந்து இரண்டு பேர் இறந்துவிட்டார்களானால், உடனே மாணவர்கள் கூட்டம் 5,000 பேர் இருந்தது 50,000 பேராகிவிடுகிறது. இன்னும் அமளி ஏற்படுகிறது. அந்த அமளியிலே குளிர் காய்வதற்கு அரசியல் கட்சிகள் தயாராகக் காத்துக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்திலே மாணவர்களுக்கு அந்த நிலைமை ஏற்படுவதை மாணவர்களேகூட விரும்பமாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, இந்த விடுமுறை விடவேண்டும் என்பதை மாணவர் களேகூட வரவேற்கின்றார்கள் என்பதையும் சொல்கின்றேன். அப்படி விடுமுறை அளித்தால், அவர்களுக்குக்கூட நல்லதுதான். ஒரு வேளை இந்தப் பிரச்சினையே கூட இந்த விடுமுறை அளிக்க வேண்டும் என்பதற்காகவே இருக்கலாம். அதை நான் நேரடியாகச் சொல்ல விரும்பவில்லை. மாணவர்கள் அந்த மாதிரி இருக்கிறபோது, பெற்றோர்கள்கூட அப்படித்தான் நினைக்கி றார்கள். அவர்களுடைய குழந்தைகள் சென்னையிலே படிக்கிறார்கள். அவர்க ளுடைய குழந்தைகளுக்கும், பையன்களுக்கும் என்ன நிலைமை சென்னையிலே ஏற்படும் என்று ஐயுற்றுக்கொண்டிருக்கலாம். இன்றையதினம் நமது மாண்புமிகு உறுப்பினர் திரு பகவதி அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய வீட்டுக் குழந்தையை இங்கிருந்து எத்திராஜ் கல்லூரியிலே விட்டுவிட்டு நான் வந்திருக்கிறேன், மவுண்ட் ரோடு பகுதியிலே கலவரம் நடப்பதாகத் தெரிந்தது, மூன்று, மூன்றரை மணியிலிருந்து அழைத்துக்கொண்டு 5½ மணி வரையிலே சுற்றிக்கொண்டிருந்தேன். மிகவும் சிக்கலாகவும் கஷ்டமாகவும் இருந்தது என்று பெற்றோர் சொன்னார்கள். பெற்றோர்களின் சார்பாகவும், மாணவர்களின் சார்பாகவும் நான் அரசுக்குச் சொல்வேன். எனக்குத் தெரிந்த செய்தியின்படி. ஒருவேளை அரசாங்கம் செய்திருக்கக்கூடும் என்ற கருத்துக்காக இதைச் சொன்னேன். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறபோது, கல்லூரி களுடைய பாடத்திட்டங்களிலே மாறுதல் ஏற்பட்டுவிட்ட காரணத்தாலேயே மாணவர்களிடையே பெருமளவுக்கு 'டிசிப்ளின்' என்ற ஒழுங்குமுறை வந்து விடும் என்று நான் கருதவில்லை. இப்பொழுது 11 ஆண்டுகள் பள்ளிப்படிப்பு வைத்திருக்கிறார்கள். நாளையதினம் 10 ஆண்டுகள் பள்ளிப்படிப்பு என்று வைத்த பிறகு ஒரு ஆண்டு பி.யு.சி. என்பதையும் எடுத்து, இரண்டு ஆண்டு

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 நவம்பர் 29

களுக்கு ஜூனியர் காலேஜ் என்ற அளவிலே தனியாக காலேஜ் நடத்தலாம் என்றார்கள். அல்லது பள்ளிக்கூடத்திலேயே இன்னொரு ஆண்டையும் கொண்டு வந்து பி.யு.சி. யையும் சேர்த்து வைக்கலாம் என்றார்கள். காரணம் என்ன வென்றால், பள்ளியிலே பையன் படித்துவருகிறபோது, 15½ ஆண்டு ஆகிறது. அதற்கு மேலே சிறிய பையனாக இருக்கிற காரணத்தாலே, வேலைக்கு அனுப்ப முடியவில்லை. எனவே கல்லூரிகளிலே இன்னும் ஒரு ஆண்டு கூடப் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகவே இன்னொரு ஆண்டு படித்தால். 16½ ஆண்டு ஆகும், வேலைக்கு அனுப்பலாம் என்று நினைக்கிறார்கள். 16½ ஆண்டிலே அந்த மாணவன், இன்னும் ஒரு ஆண்டு அதிகம் படித்துவிட்ட காரணத்தால், அந்த மாணவனுக்கு யார் வேலை கொடுக்க முடியும்? இந்தக் காலத்திலே படித்துப் பட்டம் பெற்றுவிட்டு பி.ஏ., எம்.ஏ. என்று தனிப்பட்ட நிறுவனங்களுக்கு வருகிறார்கள். அவர்களுக்கே இரண்டு வார்த்தை ஆங்கிலத்திலே எழுதத் தெரியவில்லை. ஆகவே தமிழிலே எழுதுங்கள் என்றால், அவர்களுடைய ஆங்கிலமே நல்ல முறையிலே இருக்கும் அளவுக்கு தமிழிலே எழுதுகிறார்கள்.

அந்த அளவுக்கு, பட்டம் படித்தவர்களுடைய நிலைமை இருக்கும்போது, இன்னும் ஓராண்டு பள்ளிக்கூடத்திலே கொண்டு வந்து வைப்பதால், நிலைமை எதுவும் மாறிவிடப் போவதில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய நண்பர்கள் எல்லாம் ஒன்றை மறந்துவிடுகிறார்களென்று சொல்கிறேன். 'டாஸ்க் போர்ஸ்'-லும் சொன்னார்கள். அகில இந்திய அளவிலே இதை மாற்ற ஒரு முடிவு எடுத்தார்கள். மாநில அளவிலும் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கல்வி, மாநில அளவிலுள்ள கொள்கைக்கும், மாநில அதிகாரத்திற்கும், உட்பட்டதாகும். அகில இந்திய ரீதியில் எந்தவிதமான கல்விக் கொள்கைகள் இருந்தாலும், மாநில அளவிலே நாம் கல்வியில் ஒரு கொள்கையை வைப்பதில் எந்தவிதமான தவறும் கிடையாது. மாநில அளவிலே உள்ள கொள்கைக்கும் அகில இந்திய ரீதியிலுள்ள கொள்கைக்கும் மாறுதல்கள் எப்போதும் உண்டு. வேறு மாநிலங்களில் Three language formula மூன்று மொழித் திட்டம் இருக்கிறது. அங்கு இந்தி இருக்கிறது, ஆங்கிலம் இருக்கிறது, அவர்கள் சொந்த மொழியும் இருக்கிறது. நமக்குப் பள்ளிகளில் ஆங்கிலமும், தமிழும்தான் இருக்கின்றன. இதிலேயே மாறுதல் இருக்கிறது. அதுமட்டுமல்ல. கல்லூரிகளிலே பல மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளைக் கொண்டுவந்து விட்டார்கள். நம்முடைய மாநிலத்திலும் கொண்டுவரப் பார்த்தோம். நம் மாணவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. ஆக, ஆங்கிலத்திலும் வகுப்புகள் நடத்துகிறோம்.

1973 நவம்பர் 29] [திரு. ஜி. சுவாமிநாதன்]

இப்போதுள்ள நிலைமையை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் நன்கு அறிவார்கள். கல்லூரிகளிலே, ஒரு வகுப்பு நடந்துகொண்டிருந்த இடத்திலே, 2 வகுப்புகள் நடைபெறுகின்றன. பி.யு.சி.-ல் தமிழில் ஒரு வகுப்பு நடத்த வேண்டும், ஆங்கிலத்திலே ஒரு வகுப்பு நடத்த வேண்டும். அந்த வகுப்புகளை நடத்தவே இப்போது கல்லூரிகளில் இடமில்லையென்ற நிலைமை இருக்கிறது. எனவே மாணவர்களுக்கு 10 ஆண்டுப் படிப்பை பள்ளிகளில் வைத்தால், நம்முடைய நண்பர்கள் என்ன சொல்லுவார்கள்?, 'ஒரு வகுப்பிற்கு 60 மாணவர்கள் படிக்கிறார்கள்; அதை 40-ஆகக் குறைக்க வேண்டும்' என்று கோத்தாரி கமிஷனில் சொன்னார்கள். மற்ற கமிஷன்களிலும் சொன்னார்கள். பள்ளிக்கூடத்தில் 10 ஆண்டுப் படிப்பாக வைத்துவிட்டு, 11 ஆண்டுகளுக்கு இருக்கும் இடத்தை 10 ஆண்டுகளுக்கு திறவிக் கொடுத்தால், தரமான கல்வி முறை ஏற்படுமென்று சொல்லிவிடுவார்கள்.

அடுத்தபடி, அங்கிருக்கிற பள்ளி மாணவர்களைக் கொண்டு போய், கல்லூரி களில் சேர்ப்பதற்கு இடம் கிடையாது. பி.யு.சி. மாணவர்களுக்கு இடம் கிடையாது. ஆக அவர்களுக்கு இடம் கொடுக்க என்ன செய்வது என்பதைப் பார்க்க வேண்டும். எனவே மொத்தப் பிரச்சினையைப் பார்க்கும்போது, அது சாதாரணமாக 'அகடமிக்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு, இப்படிச் செய்வது நல்லது. அப்படிச் செய்வது நல்லது என்று பேசலாமே தவிர, செய்வதற்கு வேண்டிய பணம், வசதிகள், இடம் ஆகியவை அரசாங்கத்தினிடத்திலே இருக்கிறதா என்ற கருத்தையும் மனதிலே வைத்துப் பார்க்க வேண்டும். அந்த வசதிகள் இப்போது இல்லையென்று சொன்னால், இப்போது இருக்கிற பி.யு.சி. முறையே இருக்கலாம். அந்த அளவிலே தரமான கல்வியை 5 ஆண்டுகளுக்கு நடத்தலாம். இப்போது கல்விக்கு 119 கோடி இருக்கும் இடத்தில், மாண்புமிகு முதலமைச்சரவர்கள், கல்வி அமைச்சரிடத்தில் இன்னும் 100 கோடி அதிகமாகக் கொடுத்தால், அதிகப்படியான ஜூனியர் காலேஜுகளைக் கட்டலாம்; இன்னும் அதிகமான மாணவர்களைச் சேர்க்கலாமென்று தெரிவித்துக்கொண்டு, நான் இந்தக் கொள்கையை ஒத்துக்கொள்ளவில்லை என்று தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இதன் மீது தொடர்ந்து விவாதம் 6–25
அடுத்த தனி உறுப்பினர் அலுவல் நாளன்று நடக்கும். அது பின்னால் பி.ப.
அறிவிக்கப்படும். இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other Papers.

*38. The Tamil Nadu Appropriation (No. 4) Bill 1973 (L.A. Bill No. 35 of 1973), as passed by the Legislative Assembly.

*39. The Tamil Nadu Appropriation (No. 5) Bill 1973 (L.A. Bill No. 36 of 1973), as passed by the Legislative Assembly.

40. Answers to Unstarred Questions Nos. 11 and 12.

*** Laid on the table of the House on 28th November 1973.**

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

வெள்ளிக்கிழமை 1973 நவம்பர் 30.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

(1) ஒழுங்குப்பிரச்சினைகள்

1. "பாட்ஜ்" அணிவது குறித்து.

THIRU G. VASANTHA PAI: On a point of order, Sir. May I know whether a Member can wear a badge—black badge—inside the House? An hon. Member is foun dwearing a black badge.

THIRU A. R. DAMODARAN: Sir, it is to denote the Petroleum Dealers' Mourning Day. I intend no disrespect to the House or to its Members.

MR. CHAIRMAN: That is all right.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு அங்கத்தினர்கள் இருவரும் சேர்ந்துகொண்டு கேட்கின்றார்களா? அவர்கள் உண்மையாகவே கேட்கிறார்களா?

THIRU G. VASANTHA PAI: Sir, I am not objecting to the intervention.

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Stagnation Increments.

*158 Q.—THIRU S. MUTHUSWAMY: }
THIRU M. RAJAH IYER: } Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal to grant stagnation increments to the Secondary Grade and Higher Grade Teachers working under all managements; and

(b) if so, the details thereof?

பதவித் தேக்க நிலை ஊதிய உயர்வுகள்.

திரு. செ. முத்துசாமி & திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தனியார் நிர்வாகங்கள் அனைத்தின் கீழும் பணியாற்றுகிற இடைநிலைத் தர உயர் தொடக்க நிலைத்தர ஆசிரியர்கட்கு பதவித் தேக்க நிலை ஊதிய உயர்வுகள் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லா நிர்வாகங்களின் கீழ் பணிபுரியும் எல்லா வகையான ஆசிரியர்களுக்கும் தேக்கப்படி வழங்குவதற்கு ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இவ்வாணையின்படி, ஆசிரியர்களின் மாதச் சம்பளம் ரூ. 1,000-க்கு மேற்படாமலிருந்தால், திருத்தியமைக்கப்பட்ட சம்பள விகிதத்தின் பெருமத்தையடைந்த ஆசிரியர்களுக்கு ஈராண்டுக்கு ஒருமுறையாக அவர்கள் இறுதியாகப் பெற்ற ஊதிய உயர்வுக்குச் சமமாக ஐந்து ஊதிய உயர்வுக்கு மேற்படாதவரை அளிக்கப்படும்.

Appointment of B.Ts. as Headmasters of Corporation Middle Schools.

* 159 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received from the Madras Corporation Primary School Headmasters' and Headmistresses' Association protesting against the resolution, dated 7th February 1973 of the Corporation of Madras regarding appointment of B.Ts. as Headmasters of Corporation Middle Schools; and

(b) if so, the action taken thereon ?

மாநகராட்சி இடைநிலைப் பள்ளிகளில் பி. டி. பட்டதாரிகளை தலைமையாசிரியர்களாக நியமித்தல்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநகராட்சி இடைநிலைப் பள்ளிகளில் பி. டி. பட்டதாரிகளை தலைமையாசிரியர்களாக நியமிப்பது குறித்த சென்னை மாநகராட்சியின் 7—2—1973 நாளிட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள், தலைமை ஆசிரியைகளிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொடக்கக் கல்வியை விரிவாக்குவதற்கும் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குமான மைய அரசுத் திட்டத்தின்கீழ் உயர்தொடக்கப் பள்ளிகளில் நியமிக்கப்படும் பி. டி. ஆசிரியர்கள் "கல்வி பயிற்றுவித்தற்கான தலைமை ஆசிரியர்கள்" ஆக நியமிக்கப்பட வேண்டும் என்றும் ஏற்கெனவே உயர்தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணிசெய்யும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் "நிருவாக தலைமை ஆசிரியர்கள்" ஆக ஆக்கப்பட வேண்டும் என்றும் சென்னை மாநகராட்சித் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்தனர். பி. டி. தலைமை ஆசிரியர் நியமிக்கப்படுவதால் பாதிக்கப்பட்ட செகண்டரி கிரேடு தலைமை ஆசிரியர் கூடுதல் தலைமை ஆசிரியராக தொடர்ந்து பணி செய்வர்—ஊதிய இழப்பு ஏதுமின்றி செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ஊதிய இழப்பு ஏதுமில்லையாகையாலும், உயர் தொடக்கப் பள்ளிகளில் பி. டி. தலைமையாசிரியர்களை நியமிக்க வேண்டும் என்னும் கொள்கை 1961-ம் ஆண்டிலேயே அரசால் ஏற்கப்பட்டதாகையாலும், மேற்கண்ட வேண்டுகோளை அரசு ஏற்பதற்கில்லை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு அதிகமாக மேல் பட்டம் பெற்ற ஆசிரியர்களை, பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதாக கல்வி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆதலால், அவர்கள் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கும் ஏற்கெனவே அனுபவத்தின் காரணமாக நிர்வாகத் திறமையும் உள்ள செகண்டரி ஆசிரியர்களை நிர்வாகத் தலைமை ஆசிரியர்களாகவும் அவர்களை மற்ற பொறுப்புகளை வகிக்கவும் நியமிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை அரசு பரிசீலிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சாதாரணமாக, உயர் நிலைத் துவக்கப் பள்ளிகளிலே ஒரு தலைமை ஆசிரியர் அட்மினிஸ்ட்ரேஷனுக்கு என்றும் இன்னொரு தலைமை ஆசிரியர் அகாடமிக் சைடுக்காக என்றும் சொல்கின்ற அளவுக்கு அது ஒரு பெரிய பல்கலைக்கழகமாக அல்லது வேறு பல நிலைமைகளிலே இருப்பதற்கு வழியில்லை. ஆகவே அவர்களுக்கு எந்த விதத்திலும், சம்பளம் மற்ற வகைகளிலே பாதிப்பு ஏற்படாத அளவுக்கு, கூடுதல் தலைமை ஆசிரியர் என்ற பொறுப்பு தரப்படுகிறது. பி. டி. ஆசிரியரைப் போடவேண்டுமென்ற கொள்கை 1961-ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டது என்றாலும், இப்போது படிப்படியாகத்தான் கொள்ளப்படுகிறது. 900 ஆசிரியர்கள் போட்டுக்கொள்வதற்கு மத்திய அரசு முன்வந்துள்ள நிலைமையில் இவர்களைப் போடலாம் என்று நான் வற்புறுத்திக்கேட்டேன். பி. டி. ஆசிரியர்களாகவே இல்லாமல் உயர் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களையும் நியமிக்கலாம் என்று நாமே கேட்டுக்கொண்டோம். மத்திய அரசு ஒப்புக்கொண்டது. அதன்பேரில் இந்த ஏற்பாடு ஏற்பட்டது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில், 159 உயர் தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த 159 பள்ளிகளுக்கும் முதலிலே

போடுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இருக்கின்ற தலைமை ஆசிரியர்களும், மற்றவர்களும் "இங்கேயே போட்டுவிட்டால் நாங்கள் ரொம்ப பாதிக்கப்படுகிறோம்" என்று சொன்னார்கள். மறுபடியும் பரிசீலனை செய்யச் சொல்லி 53 இடங்களை பி. டி. ஆசிரியர்களுக்கு என்று போட்டுவிட்டு, மற்ற மாநிலங்களுக்கு மற்ற இடங்களைத் தரும்படியாக நான் குறிப்பிட்டேன். 150, 59 என்ற அளவுக்குப் போடப்பட்டு, பிறகு படிப்படியாகப் போட்டுக்கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஓரளவுக்கு ஆசிரியர்களிடையே சமாதான நிலை ஏற்பட்டிருக்கின்றது. என்றாலும், அவர்கள் வற்புறுத்துகிறார்கள். அதை அரசு ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று கூறப்பட்டது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, கூடுதல் தலைமை ஆசிரியர் என்று கூறும்போது தலைமை ஆசிரியருக்கு என்று சில கடமைகள் இருக்கின்றன. கூடுதல் தலைமை ஆசிரியர் என்று சொல்லும்போது, அவர்களுக்கு என்ன கடமைகள் அரசு நிர்ணயித்திருக்கின்றது ? சில பள்ளிகளிலே தலைமை ஆசிரியருக்கு என்னென்ன பணி, கூடுதல் தலைமையாசிரியருக்கு என்னென்ன பணி என்ற சிக்கல்கள் இருக்கின்றன. ஆதலால் கூடுதல் தலைமை ஆசிரியருக்கு என்னென்ன பணி என்று அரசு நிர்ணயிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சாதாரணமாக, முதல்வர்கள், துணை முதல்வர்கள் வைஸ் பிரின்ஸிபால் என்ற அளவுக்கு அந்த வேலைகளைப் பகிர்ந்துகொள்ளலாம். அவர்களுக்குள்ளாகவே பகிர்ந்துகொண்டு பணியாற்றலாம் என்ற முறை வைக்கப்பட்டிருக்கின்றது. அவரவர்கள் இன்னின்ன பணிகள் தான் செய்யவேண்டுமென்று வரையறுக்கப்படவேண்டிய அவசியம் ஏற்படுமானால், அதைத் தனியாகச் சிந்திக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள உயர் தொடக்கப் பள்ளிகளில் 159 பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களைப் போடத் திட்டமிட்டு இன்றைக்கு 59 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். சில நடுநிலைப் பள்ளிகளில் பல ஆண்டுகளாகப் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆனாலும் செகண்டரி கிரேட் தலைமை ஆசிரியர்களுடைய சம்பளத்தை வாங்கிக் கொண்டிருப்பவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பெத்தேன்புரம் என்ற இடத்தில் மைலோ மெமோரியல் நடுநிலைப் பள்ளியில் பயிற்சி பெற்ற பட்டதாரி தலைமை ஆசிரியர் 7 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார். பட்டதாரி தலைமை ஆசிரியருக்குரிய சம்பளம் கொடுக்கப்படவில்லை. இந்தத் திட்டத்தின்கீழ் அந்த இடம் ஒதுக்கப்படவில்லை என்ற முறையீடு அரசுக்கு வந்திருக்கிறதா ? அது கவனிக்கப்படுமா ? இந்த மாநகராட்சியில் பல பட்டதாரித் தலைமை ஆசிரியர் பதவிகளைக் குறைத்துள்ளதால், அதில் ஒன்று கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் கூறுகின்ற அந்தப் பிரச்சினை தனியாகத் தான் ஆராயப்பட வேண்டும். ஆனால் இங்கே பி.டி. தலைமை ஆசிரியர்கள் என்று போட்டிருக்கின்றோம். பட்டதாரி தலைமை ஆசிரியர்கள் அல்லது பி. டி. பட்டம் பெற்றவரைத் தலைமை ஆசிரியராகப் போடுவது என்ற திட்டத்தின்கீழ் இந்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு அங்கத்தினர் கூறுவதிலே ஏதாவது சிக்கல்கள் இருக்குமானால், தனியாக அதைப் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் இயங்கிவரும் உயர் தொடக்கப் பள்ளிகளில் ஒரு சிலவற்றில் இத்திட்டத்தின் மூலம் அரசு பி. டி. ஆசிரியர்களை நியமித்திருக்கின்றது. கல்வியினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு எஞ்சிய உயர் தொடக்கப் பள்ளிகளிலே பி. டி. ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 5,817 உயர் தொடக்கப் பள்ளிகளில் 1,190 உயர் தொடக்கப் பள்ளிகளிலே தான் பொதுவாக பி. டி. பட்டம் பெற்றவர்கள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்கள். மற்ற இடங்களிலே நாம் மெல்ல மெல்ல, படிப்படியாக அதைக் கொண்டுவரலாம் என்ற எண்ணத்திலே அரசு இருக்கின்றது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, கூடுதல் தலைமை ஆசிரியர்கள் என்பது ஏற்கெனவே தலைமை ஆசிரியர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு சம்பளம் குறையக் கூடாது என்பதற்கு மட்டும் வைத்திருக்கக்கூடிய திட்டமாக இருக்கின்றது. செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு புரோமோஷன் வாய்ப்பே இல்லை என்ற காரணத்தினால்தான் சென்னை மாநகராட்சியிலே போராடியிருக்கின்றார்கள். இந்தக் கூடுதல் தலைமை ஆசிரியர்கள் நடுநிலைப் பள்ளிகளிலே நிரந்தரமாக வைக்கப்பட, ஒரு கூடுதல் தலைமை ஆசிரியர் ரிடையர் ஆகிவிட்டால் இன்னொருவர் அந்தப் பொறுப்புக்கு வரக்கூடிய முறையிலே அதை அரசு செய்ய முயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிப் பிரச்சினை எழவில்லை. அதைத் தனியாகத்தான் ஆராய வேண்டும்.

[1973 நவம்பர் 30

Declaration of Elementary Schools as Non-vacation Department.

*160 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal to declare the Elementary Schools as non-vacation department for the purpose of calculating Earned Leave;

(b) if so, the details thereof; and

(c) if not, the reasons therefor?

தொடக்கப்பள்ளிகளை விடுமுறையற்ற துறையாக அறிவித்தல்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஈட்டிய விடுப்பினைக் கணக்கிடுவதற்காக, தொடக்கப் பள்ளிகளை விடுமுறையற்ற துறையாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இல்லையெனில், அதற்குரிய காரணங்கள் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் ஆகிய அனைத்துமே ஆண்டுதோறும் விடுமுறை உள்ள துறைகளாக முறைப்படுத்தப்பட்டுள்ளன. ஆகையினால் ஆரம்பப் பள்ளிகளை மட்டும் ஆண்டு விடுமுறை இல்லாத துறையாக, ஈட்டிய விடுப்பைக் கணக்கிடும் பொருட்டு, கருதுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு தலைவரவர்களே, Education is a continuous process என்று கூறுவார்கள். அப்படிப்பட்ட அடிப்படையிலே அனைத்து ஆசிரியர்களின் பணியையுமே விடுமுறையற்ற

1973 நவம்பர் 30]

துறைப் பணியாகக் கருதி, எல்லோருக்கும் பயிற்சி அளிக்கத்தக்க வகையில் திட்டமொன்றினை அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவரவர்களே, education is a continuous process என்றால் தொண்ணூறு ஆண்டுகளாகக்கூட கல்வி என்பது தொடர்ந்திருக்கக்கூடிய ஒன்றுதான். ஆனால் ஆசிரியர்களிலே துவக்கப் பள்ளியிலே 365 நாட்களிலே 220 நாட்களும், நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் 365 நாட்களிலே 200 நாட்களும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் 180 நாட்களும் வேலை நாட்கள் என்ற கணக்கிற்கு வருகின்றது. இதற்கு மேலே விடுமுறை வேண்டும், விடுப்புகள் வேண்டும் என்று கேட்பது பொருத்தமானதில்லை என்ற காரணத்தினால், இந்தத் துறையிலுள்ள ஆசிரியர்கள் விஷயத்தில் விடுமுறையற்ற துறையாகக் கருதுவதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, அவர்களுக்கு அதிகமாக விடுமுறைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரவில்லை. அவர்களுக்கு இப்போது உள்ள விடுமுறையை பயிற்சி காலத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு, மற்றவர்கள் விஷயத்தில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல அவர்கள் விரும்பும்போது அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுமா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இவர்கள் ஈட்டிய விடுப்பினைக் கணக்கிடும் முறை இப்போது ஒரு முறையில் அமைந்திருக்கின்றது. இதை அதிகரிப்பதற்கோ, மேலும் தருவதற்கோ அந்தத் துறையை விடுமுறையற்ற துறையாகக் கருதுவதற்கில்லை.

புலவர் ஒ. அறிவுடைநம்பி: தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்கள் அனைவருமே விடுமுறைக் காலங்களிலும் தொடர்ந்து வேலை செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். எனவே தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டிலாவது, அவர்கள் விடுமுறையற்ற துறையிலிருப்பதாகக் கருதப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஒன்றும் அரசிடம் இல்லை.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இன்று தொடக்கப்பள்ளிகளைப் பொறுத்தமட்டில், தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் 'ரிஸல்ட்' போடுவது, 'ஸென்ஸஸ்' கணக்கு எடுப்பது போன்ற பணிகளை மே மாதத்திலிருந்து செய்ய வேண்டி வருகின்றது. விடுமுறை என்று இருந்தும் அவர்கள் விடுமுறையை அனுபவிக்காமல் தொடர்ந்து இப்பணிகளைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

[1973 நவம்பர் 30

எனவே அந்த நாட்களையும் கணக்கிட்டு அதை டி. எஸ். ஆரில் சேர்ந்துக் கொள்வதற்கான நடைமுறையை அரசு கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் பணிகளையெல்லாம் கல்வியோடு சேர்ந்து செய்ய வேண்டிய பணிகளாகத்தான் நாம் கணக்கிட வேண்டியவர்களாக இருக்கிறோம். எந்தெந்த நேரத்தில் எதை எதைச் செய்கின்றார்கள் என்று கணக்கிட்டுப் பார்த்து மற்றத் துறைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது என்றால், பல சங்கடங்கள் வரும். ஆகவே இதில் மாற்றம் காண்பதற்கு இடமில்லை.

Short-term Teacher's Training Course

* 161 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of candidates who applied for admission to the Short-term Teacher's Training Course during 1971–72 and 1972–73; and

(*b*) the number of candidates selected ?

குறுகிய கால ஆசிரியர் பட்டப் பயிற்சி

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971–72, 1972–73 ஆம் ஆண்டுகளில் குறுகிய கால ஆசிரியர் பட்டப் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு இடம் கிடைத்தது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ)

வருடம்.	விண்ணப்பித்தவர்கள்.	சேர்க்கப்பட்டவர்கள்.
1971–72	680	225
1972–73	1,057	232

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, விண்ணப்பித்தவர்களிலே இன்னும் 800 பேருக்குத்தான் இடம் கிடைக்க வேண்டும் என்ற நிலையில், அனைத்துப் பயிற்சிப் பள்ளிகளிலும் ஒரே ஆண்டில் இவர்களுக்கு இடமளித்து, குறுகிய கால பயிற்சியினை அளித்து, இவர்கள் அனைவரையும் பி.டி. ஆசிரியர்களாக ஆக்குவதற்கு அரசு முயற்சி எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆங்காங்கு உள்ள இடவசதிகளைப் பொறுத்தும், எவ்வளவு பேரைச் சேர்க்கலாம் என்று பல்கலைக் கழகம் அளிக்கும் ஒப்புதலைப் பொறுத்தும் தான் இவர்கள் ஆண்டுதோறும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். எனவே இப்போதுள்ள விதிப்படிக்கும், உள்ள வசதிகளைப் பொறுத்தும்தான் ஆண்டுக்கு ஆண்டு இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றார்கள்.

திரு. எம். சங்காலிங்கம் : தலைவரவர்களே, இந்தக் குறுகிய காலப் பயிற்சிக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பது என்பது அவர்களுடைய வயதின் அடிப்படையிலா அல்லது அவர்கள் பி.ஏ. பட்டம் பெற்ற நாளிலிருந்தா அல்லது ஸர்வீஸ் அடிப்படையிலா, எந்த விதிமுறை பின்பற்றப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போதுள்ள நிலையில் 17, 18 அல்லது 19 ஆண்டு காலம் பணியாற்றியவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகின்றது. இதில்கூட "பார்வர்டு" கம்யூனிடியைச் சார்ந்தவர்களில் 16 ஆண்டுக்கால ஸர்வீஸுக்கு மேல் இருப்பவர்களைத்தான் எடுக்க முடிந்தது இந்த ஆண்டு. 'பேக்வர்டு' கம்யூனிடியைச் சார்ந்தவர்களைப் பொறுத்த வரையில், 14 ஆண்டுக்காலத்திற்கு மேல் இருப்பவர்களைத்தான் எடுக்க முடிந்தது. அடுத்த ஆண்டுக்கு அடுத்த ஆண்டு இது குறையக்கூடும். இந்த ஆண்டிலே நமது பல்கலைக்கழகத்திடம் அனுமதி பெற்று, பெண்களுக்காக ஐம்பது இடங்களைக் கூடுதலாக லேடி வெல்லிங்டன் கல்லூரியிலே பெற்று, கூடுதலாக ஐம்பது பேர் சேர்க்கப்பட்டுள்ளார்கள். கூடுமான வரையில் இப்போதுள்ள இடங்களைப் பெருக்குவதற்கு வசதி உள்ளதா என்று பரிசீலிக்குமாறு இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். பல்கலைக்கழகம் அனுமதியளித்தால், ஓரளவிற்கு இடத்தைப் பெருக்க இவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்கக்கூடுமா என்று ஆலோசிக்கிறோம்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தற்போது செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்து தமிழாசிரியர்களாகத் தேர்வு பெற்றவர்களுக்கு எந்தவிதமான பயிற்சியும் தேவையில்லை என்று அரசிடத்திலே விதிமுறை இருக்கின்றது. இது போலவே செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்து பட்டம் பெறுகின்றவர்களுக்குப் பயிற்சி தேவையில்லை என்ற நடைமுறையை அரசு கடைப் பிடிக்க முன்வருமா ? ஏற்கெனவே அவர்கள் ஒரு முறை பயிற்சி பெற்றவர்கள் என்பதால், இவர்களுக்கு மீண்டும் பயிற்சி தேவையில்லை என்ற நடைமுறையை அரசு பின்பற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே ஏற்கெனவே ஒரு நிலையில் அவர்கள் பயிற்சி பெற்றவர்களானாலும் குறுகிய காலப் பயிற்சி பெறுவிட்டால், அவர்கள் முழுப் பயிற்சியினையும் பெறவேண்டிய நிலை வரும்.

[1973 நவம்பர் 30

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, அண்மையில் கோவையில் ஆரம்பிக்கப்பட்டதொரு பயிற்சிப் பள்ளியில், தனியார் பயிற்சிப் பள்ளியில், எந்த அடிப்படையிலும் இல்லாமல் இந்த ஆண்டு 30 இடைநிலை ஆசிரியர்களைப் பயிற்சிக்காக எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அடிப்படையற்ற கல்லூரிகளிலும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான முறையை ஏற்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் சொல்லுகின்ற கணக்கெல்லாம் அரசின் சார்பிலே நடத்தப்படும் பயிற்சிக் கல்லூரிகளைப் பொருத்ததாகும். இவற்றுக்காக உள்ள நடைமுறைகளை நாம் பின்பற்றி வருகிறோம். தனியார் கல்லூரிகளிலே இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதற்கில்லை. ஆனால் அவர்களும் நாம் வகுத்துக்கொண்டுள்ள நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளுவார்களானால் மிக நன்றாக இருக்கும்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, குறுகிய கால ஆசிரியர் பட்டப் பயிற்சியினைச் சற்று வேகமாக எல்லோருக்கும் தருவதன் மூலம் கல்வியின் தரத்தினை உயர்த்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம் அதில் வெற்றிபெற முடியும். இன்றுள்ள நிலையில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் உள்ளத்திலே அவர்களுக்கு காலம் தாழ்த்தி இப்பயிற்சியினை அளிப்பதால்—ஒரு ஏக்கமும், தாங்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாதோ என்ற எண்ணமும் ஏற்பட்டுள்ளது. திரு. மால்கம் ஆதிசேஷையா அவர்கள் இதில் தீர்மானம் போட்டு இவர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று அறிக்கை கொடுத்திருக்கின்றார்கள். அந்த அளவில் எல்லா ஆசிரியர்களும் குறுகிய கால பயிற்சி பெறத்தக்க அளவிற்கு துரித நடவடிக்கையை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நாம் வைத்துள்ள விதி குறைந்தது ஐந்தாண்டு காலமாவது ஆசிரியராக இருக்க வேண்டும், பட்டதாரி ஆசிரியர்களாக இருக்க வேண்டும், இடைநிலை ஆசிரியர்களானாலும் அதில் அவர்கள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பது. அந்த அடிப்படையில்தான் இப்போது இது செயல்படுத்தப்படுகிறது.

இன்னும் அதிக எண்ணிக்கையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்றால், நான் முன்னமே குறிப்பிட்டதைப் போல, பல்கலைக் கழகம் எந்த அளவிற்கு அனுமதி அளிக்கின்றதோ அந்த அளவிற்குத்தான் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஏற்கெனவே ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் கல்லூரிகளில் உள்ள இடத்திற்குத் தக்கபடி நாம் ஆசிரியர்களைப் பயிற்சிக்கு அனுப்ப வேண்டிய காரணத்தினால், அவர்கள் குறிப்பிடும் எண்ணிக்கையின் அடிப்படையில்தான் நாம் மாணவ மாணவிகளைச் சேர்க்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

1973 நவம்பர் 30]

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இன்றைக்கு கல்வித் துறையில் ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தனியாக எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதி தேறிய பிறகு அவர்கள் நேரடியாக/பிரைவேட்டாக செகண்டரி தேர்வினை எழுதுவதற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு இந்த வாய்ப்பு இருக்கின்றது. அதுபோல செகண்டரி கிரேடில் பணியாற்றுகின்றவர்கள் தனியாகப் பட்டம் பெற்று இந்தப் பயிற்சியைப் பெறுவதற்காக பிரைவேட்டாக தேர்வு எழுதக்கூடிய திட்டம் இப்போது இல்லாததால், இப்போது நிறைய பேர் தேங்கியிருப்பதால், இதை அரசு பரிந்துரை செய்து, நமது பல்கலைகழகத்தில் இதை 'இண்ட்ராட்யூஸ்' பண்ணுவதற்கு துணை புரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது விஷயத்தில் பல்கலைக் கழகத்தின் விதிமுறைகள் எப்படி இருக்கின்றன என்பது பற்றித் தனிக் கேள்வியாகக் கேட்டால், விவரம் கொடுக்க இயலும். ஆனால் அஞ்சல் மூலம் கல்விபெறும் திட்டத்தை மதுரையில் வைத்திருப்பதால், அந்த வாய்ப்பினை இவர்களும் பயன்படுத்திக் கொள்ள இடமிருக்கின்றது.

Creation of a Separate Audit Wing for Aided Colleges

* 162 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to create a separate Audit Department to audit the accounts of the Aided Colleges; and

(*b*) if so, the details thereof ?

மானியம் பெறும் கல்லூரிகளுக்கென தனியாக கணக்குத் தணிக்கைத் துறையை ஏற்படுத்துதல்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் கல்லூரிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கென்று தனியாக ஒரு கணக்குத் தணிக்கைத் துறையை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தனியார் கல்லூரி கணக்குகளை தணிக்கை செய்வதற்காக கல்லூரிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் ஒரு " தணிக்கைப் பிரிவு " அமைக்க அரசு ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளது.

(இ) இதுகாறும் தனியார் தணிக்கையாளர் செய்துவந்த வேலையை இனி, அவ்வப்போது அரசு வெளியிடும் விதிகளை நன்கு அறிந்த கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலர்கள் செய்வர்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்தத் தணிக்கையாளர்கள் கடந்த ஆண்டுகளிலே சில கல்லூரிகளிலே ஒரு தவறான செய்தியைக் கொடுத்து உதவித் தொகையினைப் பெற்றிருப்பதாகக் கண்டுபிடித்தால், அவர்கள் மீது இப்போது தக்க நடவடிக்கை எடுக்க அரசுக்கு உரிமை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, அப்படித் தவறான எணக்குகளைக் கொடுத்து தொகையினைப் பெற்று அதைச் சரி செய்திருக்கின்றார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அரசு நடத்தும் கல்லூரிகளிலே பல ஆண்டுகளாகக் கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் பல குறைபாடுகள் ஏற்பட்டிருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது பற்றிய தகவல்கள் இல்லை. அதுபற்றிச் சுட்டிக்காட்டப்பட்டால், முயற்சி எடுத்துக் கொள்ளப்படலாம்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, மான்யம் பெறும் கல்லூரிகளிலே அவர்கள் அரசாங்கத்திடமிருந்து பெறும் தொகைக்குத்தான் தணிக்கை முறை இருக்கின்றது. அரசிடமிருந்து பெறாத தொகைகளையும் சேர்த்துத் தணிக்கை செய்வதற்கான முயற்சியினை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது சம்பந்தமான விதிமுறைகள் எந்த அளவில் இருக்கின்றன என்ற விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வியாகக் கேட்டால், அதுபற்றி ஆராய்ந்து சொல்லலாம்.

Scholarships under Harijan Welfare Scheme.

* 163 *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether any discrimination exists between the students studying in Standards VI-VIII in the High Schools recognised under Madras Educational Rules and those studying in Standards VI–VIII in the Higher Elementary Schools in the matter of payment of scholarships under Harijan Welfare Scheme; and

(*b*) if so, the action taken thereon to remove the discrimination ?

அரிசன நலத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசன நலத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை அளிப்பதில், சென்னை கல்வி விதிகளின் கீழ் ஏற்பளிக்கப்பட்ட உயர் நிலைப் பள்ளிகளில் VI–VIII வகுப்புகளில் படிக்கும் மாணவர்கட்கும், உயர் தொடக்கப் பள்ளிகளில் 6–8 வகுப்புகளில் படிக்கும் மாணவர் கட்குமிடையே வேறுபாடு ஏதும் நிலவுகிறதா ?

(இ) ஆமெனில், அத்தகைய வேறுபாட்டை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) தொகை விகிதத்தில்தான் வித்தியாசம் உள்ளது. பாகுபாடு ஏதும் இல்லை.

(இ) வழங்கப்படும் பள்ளிப் படிப்பு உதவித் தொகையினை உயர்த்தி ஒரே சீராக அமைக்கவும், அரசு பரிசீலனை செய்தது ; ஆனால் அதில் ஏற்படும் அதிகப்படியான செலவை முன்னிட்டு செயல்குறிப்பு தள்ளி வைக்கப்பட்டது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளியிலும், தொடக்கப் பள்ளியிலும் ஒரே வகுப்பில் ஒரே 'சிலபஸ்' பின்பற்றப்படுகிறது. வாய்ப்பில்லாத மாணவர்கள் கிராமப் பகுதிகளில் இருக்கக் கூடிய நடு நிலைப் பள்ளிகளில் 6, 7, 8-வது வகுப்புகளில் படிக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, உதவித் தொகை கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கும்போது, நிதி நிலைச் சிக்கல் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறுவது சரியா ? மீண்டும் பரிசீலித்து உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இதை உயர்த்த வேண்டுமென்றுதான் நலத்துறை இயக்குநர் அவர்கள் 1971-ஆம் ஆண்டு செயற்குறிப்பை அனுப்பினார்கள். இதைக் கல்வி இயக்குநரும் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் தொகை ரூ. 87·6 லட்சம் என்று வருகின்ற காரணத்தினால், இது பரிசீலனை செய்யப்பட்டு கைவிடப்பட்டிருக்கிறது. ஆனால் இதை மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

Residential School for the Children of the Burma Repatriates at Thirunagar, Madurai.

* 164 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVA THIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the residential school for the children of the Burma repatriates at Thirunagar, Madurai, has been closed; and

(*b*) if so, the reason therefor ?

மதுரை, திருநகரில் பர்மா அகதி குழந்தைகள் உறைவிடப் பள்ளி.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, திருநகரில் இருந்த பர்மா அகதி குழந்தைகள் உறைவிடப்பள்ளி மூடப்பெற்று விட்டது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) தெரியும்.

(இ) பர்மா அகதிக் குழந்தைகளுக்காக திருச்சி மாவட்டம் மாத்தூரில் பள்ளி இருந்ததால் செலவைக் குறைப்பதற்காக மூடப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இதற்கு எவ்வளவு செலவாகிக்கொண்டிருந்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, செலவு எவ்வளவு என்ற புள்ளி விவரம் இல்லை. அங்கே மொத்த மாணவர்களே 100 பேர்கள் இருந்தார்கள். அதிலே 17 பேர்கள் திருநகர் உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்ததால், அவர்கள் திருப்பரங்குன்றம் அரசாங்க மாணவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எஞ்சிய 83 பேர்கள் மாத்தூரில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எனவே 100 பேர்களுக்காகப் பள்ளி நடத்துவது வீண்செலவு என்று கருதித்தான் மதுரை, திருநகரில் இருந்த மாணவர்களை மாத்தூரில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம்.

Sugar Industry.

* 165 *Q*.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government for expansion of the Sugar Industry in the State; and

(*b*) if so, the details thereof ?

சர்க்கரைத் தொழில்

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், சர்க்கரைத் தொழிலை விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அதாவது, வேலூர், திருப்பத்தூர், கோயம்புத்தூர் சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எட்டு சர்க்கரை ஆலைகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நிறுவப்படவிருக்கிற சர்க்கரை ஆலைகள் தஞ்சை மாவட்டத்தில் நிறுவப்படவிருக்கிறதா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்தப் புதிய 8 சர்க்கரை ஆலைகளை நிறுவுகின்ற விஷயத்தில் தஞ்சை மாவட்டமும் பரிசீலிக்கப்படவேண்டுமென்று திட்டக் குழு யோசனை கூறியிருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, ஏராளமான கரும்பு வந்தவாசி பக்கத்தில் விளைகிறது. இப்போது பட்டாளத்தில் இருக்கிற கரும்பு போதாமல் பக்கத்திலிருந்து வாங்குகிறார்கள். ஆகவே வந்தவாசி பக்கத்தில் ஒரு சர்க்கரை ஆலை துவக்கப்படுமானால், அங்குள்ள விவசாயிகளுக்கு அதனால் லாபம் உண்டு. விவசாயிகள் நன்மை அடையக் கூடும். இதுபற்றி அரசு பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, பட்டாளத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. படாளம் என்றுதான் கூறுகிறார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் புதிய 8 சர்க்கரை ஆலைகளை எங்கே நிறுவுவது என்று பரிசீலிக்கும்போது, எல்லா மாவட்டங்களிலுமுள்ள சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

THIRU G. VASANTHA PAI : Sir, are these sugar mills to be set up in the private sector or the public sector ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 3 சர்க்கரை ஆலைகளை கூட்டுறவுத் துறையிலேதான் ஆரம்பிக்க அனுமதி பெற்று முயற்சி எடுத்து வருகிறோம். எந்தச் சர்க்கரை ஆலைக்கும் எதிர் காலத்திலே விவசாயினுடைய ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. தனி மனிதர் இதுபோன்ற அத்தியாவசியப் பொருளைத் தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்திருக்கக்கூடாது என்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே இதுபற்றிப் பரிசீலித்து எந்தத் துறையில் கொண்டு வருவது என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government think of having Sugarcane Farms of their own for the purpose of these sugar factories ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இப்படி ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வேறு மாவட்டங்களில் இப்போதைக்குப் பரிசீலனையில் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் இந்தச் சர்க்கரை ஆலைகளில் கரும்பிற்குக் கொடுக்கப்படுகிற விலை குறைவாக இருக்கிறது என்ற அபிப்பிராயம் இருக்கிறது. இதைப்பற்றி மத்திய அரசுக்கு இந்த அரசு ஏதேனும் எடுத்து இயம்பி உள்ளதா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறியதற்கு விளக்கம் சொன்னேன். நம்முடைய கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்தவரை, இந்த ஆண்டு 120 ரூபாய் வரை கொடுத்திருக்கிறோம். மத்திய அரசுக்கும் நமக்குமுள்ள பிரச்சனையெல்லாம் நாம் உற்பத்தி செய்யும் சர்க்கரையில் 70 சதத்தின் விலையை அவர்கள் நிர்ணயிக்கிறார்கள். மீதி 30 சத உற்பத்தியைத்தான் நம்மிடத்தில் அவர்கள் கொடுக்கிறார்கள். இதை எவ்வளவு வேண்டுமானாலும் விலையேற்றி விற்பதற்கு அவர்கள் அனுமதிக்கிறார்கள். இந்த 70 சத உற்பத்தியைப் பொறுத்தவரை, நமக்குக் கட்டுமான விலை, டேரிஃப் கமிஷன் விதிகள்படி 165 ரூபாய். ஆனால் நமக்கு மத்திய சர்க்கார் கொடுக்கிற லெவி பிரைஸ் 154 ரூபாய். நம்மை 70 சதவீத உற்பத்தியை நஷ்டத்திற்கு விற்கச் சொல்லியிருந்தார்கள். இதை நாங்கள் கேட்டபோது, 30 சதவீத உற்பத்தியை நீங்கள் என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம். 30 சதவீத உற்பத்தியில் கொள்ளையடித்து லாபம் சம்பாதித்து, கரும்பிற்கு விலை கொடுக்கவேண்டுமென்று அவர்கள் சொல்வதுபோலத் தோன்றுகிறது. அப்படி அவர்கள் சொல்கிறார்களாவென்று எனக்குத் தெரியவில்லை. இதை ஆட்சேபித்து வருகிறோம். ஆகவே, மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கிற விலையை 'ஸ்டாச்சுடரி பிரைஸ்' என்று போட்டு, அவர்கள் கொடுக்கிற 'ஸ்டாச்சுடரி லெஸ் பிரைஸ்' சர்க்கரைக்குள்ளதை, ஒத்திட்டு, கோரிலேட், செய்து கொடுக்கிறார்கள். இது தவறு. இரண்டு பிரைசையும் நம்மிடம் ஒப்படைத்தால் கரும்பிற்கு அதிகமான விலை கொடுக்க முடியுமென்று சொல்கிறோம். இது வாதங்கள். நடைமுறையில் இந்த ஆண்டு மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையைவிட 5 ரூபாய் கூடக் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். கரும்பு அரவை தொடங்கியதற்குப் பின்னாலே லாபத்தை அனுசரித்து மீண்டும் விலையை அதிகப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்ற உறுதியை அரசு தந்திருக்கிறது.

திரு. வி. வேங்கா : தலைவரவர்களே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இயக்குநராக வருபவர்கள் அந்த விவசாயிகள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படியானால், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட கோரிக்கை வந்திருக்கிறது. அது நியாயமான கோரிக்கை.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, இந்தச் சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரை, இது பருவ கால தொழிற்சாலை என்ற இலக்கணத்திற்கு உட்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட விரிவுபடுத்தப்பட்ட பணிகள் மூலம் ஆண்டில் முழுமையாக அல்லது 11 மாதங்கள் வரையிலே பணிகள் நடந்து வருகின்றன. எனவே, இந்தச் சர்க்கரை ஆலைத் தொழிலை நிரந்தரத் தொழிற்சாலை என்ற இலக்கணத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதற்கு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இது ஒரு வேண்டுகோள். ஆனால் சர்க்கரை ஆலைகளிலே பணியாற்றுகிற தொழிலாளர்களைப் பொறுத்த அளவிற்கு அகில இந்திய அளவிலே சில முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அந்த முடிவுகள் தான் தொடர்ந்து அமுல்படுத்தப்படும்.

திரு. எல். பலராமன் ; தலைவரவர்களே, மேலும் 8 சர்க்கரை ஆலைகள் ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த சர்க்கரை ஆலைகளை எந்த அடிப்படையில் தேர்வு செய்யவிருக்கிறார்கள் ? எந்த மாவட்டங்களில் ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். மேலும் இருக்கக்கூடிய கூட்டுறவு ஆலைகளை விஸ்தரிப்பதற்கான திட்டமிருக்கிறதா ? அப்படிச் செய்தால் அரசாங்கத்தினுடைய பொறுப்பு குறையுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு அதிகமான உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்ற முயற்சி ஏற்கெனவே இருக்கிறது. இந்த 8 சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த அளவிற்கு, நான் ஏற்கெனவே கூறியபடி, இடங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. அங்கங்கே விவசாயிகள் கரும்பு கொடுக்காவிட்டால், இந்த மாதிரித் தொழிற்சாலைகளை நடத்த முடியாது. இந்த மாதிரித் தொழிற்சாலைகளிலே விவசாயிகள் அதிகமாகப் பங்கேற்று, அதே நேரத்திலே அரசாங்கமும் பங்கு பெற்று, தனியார் ஆதிக்கம் இல்லாத ஒரு முறையைக் கொண்டு வரவேண்டுமென்று தான் பரிசீலித்துக்கொண்டு வருகிறோம். இதை நான் விளக்கமாகச் சொல்வதற்குக் காரணம், கூட்டுறவு என்று சொன்னாலே அதிலே சில தகராறுகள் ஏற்படுகின்றன. ஆகவேதான், விவசாயிகளும் அரசாங்கமும் சேர்ந்து கூட்டுத் துறை என்று உருவாக்கலாமா என்று யோசிக்கிறோம். அப்போது எளிதாக வங்கியிலிருந்து பணம் வாங்க முடியும். கூட்டுறவு என்றால் ரூ. 55 லட்சம் ஷேர் கேப்பிடல் சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அது கஷ்டமாக இருக்கிறது. அதற்காக இதை விளக்கமாகச் சொன்னேன்.

திரு. எஸ். கி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : தலைவரவர்களே கூட்டுறவு ஆலைகளில் ஒரு டன் கரும்பிற்கு 120 ரூபாய் கொடுக்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் தனியார் ஆலைகளிலே தொகைகளை குறைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே கொடுத்த தொகை அளவிற்குக் கொடுக்க அரசு அவர்களுக்கு உத்தரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, நான் சொன்ன கணக்கு சென்ற ஆண்டுக்கானது. நமக்கும் இந்த ஆண்டு அந்தக் கதைதான் வரப்போகிறது. நமக்கு அவர்கள் குறைத்த விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். மத்திய அரசு நிர்ணயித்ததைவிட 5 ரூபாய் கூடக் கொடுக்க நாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கோவையில் ஒரு சர்க்கரை ஆலை அமைவதாகத் தெரிவித்தார்கள். எப்போது அமையும், எந்த இடத்தில் அமையுமென்று அறிவிப்பார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். நான் முன்னாலேயே சொன்னேன், இப்படிக் கூட்டுறவுத் துறையில் பணம் சேர்ப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கோவையைப் பொறுத்த அளவிற்கு, இந்தக் கஷ்டத்தோடுகூட, எந்த இடத்தில் அமைப்பது என்ற பிரச்சினை அவர்களுக்குள்ளாக இருக்கிறது. அமைச்சர்கள் இதைப்பற்றிப் பரிசீலித்து முடிவு சொல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, தற்போது தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய ஆலைகளில் உற்பத்தியாகக்கூடிய சர்க்கரை தமிழ் நாட்டிற்குப் போதுமானதாக இருக்கிறதா? அப்படியிருந்தால், இந்தத் தொழிலை ஆரம்பிப்பதைவிட வேறு தொழிலிலே முதலீடு செய்ய அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, நம்முடைய தேவைக்கு மிகுதியாக உற்பத்தி செய்தாலும், இன்னும் உற்பத்தியாகக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், அந்தத் தொழிலை விருத்தி செய்ய வேண்டும். இப்போதைக்கு நம்முடைய உற்பத்தி 3 லட்சம் டன். நம்முடைய தேவை சுமார் 170,000 டன். இரண்டு மடங்கு அதிகமாக உற்பத்தி செய்து வருகிறோம். இன்னும் அதிகமாக உற்பத்தி செய்தால், மற்ற மாநிலங்களுக்கு அது பயன்படும்.

Temple in Panampakkam, North Arcot District

*166 Q.—Thiru C. V. RAJAGOPAL (on behalf of Thavathiru KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Government are aware of the fact that a temple in Panampakkam, North Arcot District remains closed without any puja being performed for the past several years; and

(b) if so, whether the Government have any proposal to open the temple and arrange for regular pujas?

வடஆற்காடு மாவட்டம் பணம்பாக்கத்தில் உள்ள திருக்கோயில்.

திரு. சி. வி. ராஜகோபால்: (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், பணம்பாக்கத்தில் ஒரு திருக்கோயில் கடந்த பல ஆண்டுகளாக வழிபாடு இல்லாமல் பூட்டப்பட்டிருப்பது தமிழக அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அந்தக் கோயிலைத் திறந்து வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) மேற்படி திருக்கோயிலுக்கு வருமானம் ஏதும் இல்லாததால், கோயில் நடைமுறை அறங்காவலர் தம் சொந்த செலவில் தீபச் செலவு மாத்திரம் செய்து வருகிறார். நிர்வாகத்தை சீர் செய்யவும் அறங் காவலர்களை நியமனம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்தக் கோயில் அரசுக் கட்டளையின்கீழ் எப்படி வந்தது? ஒரு குறிப்பிட்ட வருமானம் இருந்தால்தானே, அறங்காவலர்களின் தலைமையில் இயங்கக் கூடும். இந்தக் கோயிலுக்கு என்ன வருமானம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தக் கோயிலுக்குச் சொந்தமாக 12 செண்ட் நஞ்சையும் ஒரு ஏக்கர் 4 செண்ட் புஞ்சையும் உள்ளது. ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 500 வருமானம் கிடைக்கும். நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, வேலூர் சப்–கோர்ட்டு தீர்ப்பின்படி சின்னைய முதலியார், மாணிக்க முதலியார், தங்கவேல் முதலியார் என்ற மூவரும் அந்தக் கோயிலை நிர்வாகம் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அந்தத் தீர்ப்பிலிருந்து அவர்களுக்குள்ளேயே தகராறுகள் ஏற்பட்டு நிர்வாகம் சரிவர நடைபெறாமல் இருந்தது அவர்களுக்குள்ளிருந்த தகராறுகள் இப்பொழுது தீர்ந்து, அந்தக் கோயிலைத் திறந்து வைத்திருக்கிறார்கள். இனிமேல்தான் வருமானத்தைப்பற்றி யோசிக்க வேண்டும்.

Separation of Srirangam Arulmigu Ranganathaswamy Devasthanam and Samayapuram Arulmigu Mariamman Devasthanam.

*167 Q.—Thiru K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal with the Government to separate the Srirangam Sri Ranganathaswamy Devasthanam and the Samayapuram Sri Mariamman Devasthanam of Thiruchirappalli District; and

(b) if so, the details thereof?

திருவரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோவில் நிர்வாகத்தையும் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் நிர்வாகத்தையும், தனித்தனியாகப் பிரித்தல்

திரு கே எஸ் கணபதி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திருவரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோவில் நிர்வாகத்தையும், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நிர்வாகத்தையும் தனித்தனியாகப்பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மு கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 64 (5) (எ) பிரிவின் கீழ் விசாரணை செய்து ஆணை பிறப்பிக்கும்படி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் கோயம்புத்தூர் துணை ஆணையரைக் கேட்டுக் கொண்டுள்ளார். இது கோயம்புத்தூர் துணை ஆணையர் முன்பு கவனிப்பில உள்ளது.

திரு. கே எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்த இரண்டு திருக்கோவில்களின் நன்மையைக் கருதி இரண்டு கோவில்களையும் தனித் தனியாகப் பிரிக்க வேண்டுமென்று திருச்சியிலிருந்த டெபுடி கமிஷனர் அவர்கள் கருதி, அம்மாதிரி உத்தரவு போடலாம் என்று அவர் சொன்னதன் பேரில், அறநிலையத்துறை ஆணையர் 1970—டிசம்பர் திங்களில் உத்தரவிட்டிருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உண்மையில்லை

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, அந்த உத்தரவின் நகல் வைத்திருக்கிறேன். அதை அமைச்சரிடம் கொடுக்கத் தயார்.

பேரவையில்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

(I) 'பேட்ஜ்' அணிவது குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'பாட்ஜ்' அணிந்து கொண்டு மேலவைக்கு வருவதுபற்றி முன்பு பிரச்சினை எழுந்திருக்கிறது.

The Speaker ruled that demonstration by wearing badges was not against any rules or conventions. But such things were not necessary and such things should be left to the good sense of a Member.

மேலவையில் உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி கருப்பு பாட்ஜ் அணிந்து கொண்டு வந்தார். அப்பொழுது தலைவர் கூறியது பின்வருமாறு :

'அவருக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வெளியே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை இந்த மாமன்றத்திற்குக் காண்பிப்பதன் அறிகுறியாக ஒரு பாட்ஜை அணிந்துகொள்ளலாம் என்றோ அல்லது அணிய வேண்டாம் என்றோ சொல்வதற்கு சட்டம் ஒன்றும் இல்லை என்றாலும் கூட, இந்த மாமன்றத்தின் கண்ணியத்தினைக் காப்பாற்றுவதற்கு அந்த மாதிரி அடையாளங்களை இந்த மாமன்றத்தில் அணிவது சரியில்லை என்ற முறையில் அவரிடம் சொல்லிக்கொள்ளுகிறேன்.'

Thiru A. R. DAMODARAN : I did not hear about any decision given by the Hon. Chairman. Now that the Hon. Chairman has ruled, I shall willingly remove the badge. (The badge was removed).

(2) 29-ம் தேதியன்று அவையை ஒத்தி வைத்ததைக் குறித்து.

Thiru G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, I rise on a point of order. Yesterday, the House was adjourned by the Hon. Chairman at about 6-30 p.m., when the House should normally meet between 4 p.m. and 7 p.m. The Hon. Chairman has got power to adjourn the House or suspend a sitting until a specific hour only when there is grave disorder. I want to know the rule under which the Hon. Chairman adjourned the meeting yesterday at 6-30 p.m., when there were two or three speakers to speak on the subject before the House and when the hon. Members were very eager to hear the reply of the Hon. the Education Minister.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்கு சான்ஸ் வந்து விட்டது அல்லவா ?

Thiru G. SWAMINATHAN : Sir, in fact, I had my chance to speak yesterday. But I want to know the reason why the House was adjourned earlier yesterday.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கல்வி அமைச்சர் உடனே வர வேண்டுமென்று அங்கிருந்து டெலிபோன் வந்தது, உடனே போக வேண்டியதாக இருந்தது. நேற்று டிஸ்கஷன் முடியவில்லை. 'கண்டின்யூ' ஆகும்.

Thiru G. SWAMINATHAN : Sir, simply because the Hon. Minister had some engagement with the Governor or some other business, does it mean that the Council should be adjourned when there were hon. Members to speak? At least the Leader of the Opposition and others on this side of the House should have been consulted. If such things were allowed, at some time in future, even when there is pending business on the agenda, the House might be adjourned at 5 p.m. itself.

MR. CHAIRMAN : It is possible.

THIRU G. SWAMINATHAN : Sir, I do not think the Hon. Chairman has got powers to adjourn the sitting of the House at any time unless the House gives him the power. If he can say that the sitting is postponed to another date and if that precedent is to be accepted, even when there is subject to be discussed before the House, I think under the Rules it will not be proper. It will not be wise to do so.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதற்காக Rules கமிட்டி போடப்பட்டு, அதில் எல்லோரும் ஒப்புக்கொண்டு முடிவு செய்யப்படுகிறது. அதிலே நீங்களும் உறுப்பினராக இருக்கிறீர்கள். கல்வி அமைச்சர் அவசரமாகப் போகவேண்டியிருந்ததால், அவை ஒத்தி வைக்கப்பட்டது. டிஸ்கஷன் கண்டினியூ ஆகும்.

THIRU G. SWAMINATHAN : Sir, suddenly it was adjourned, My wish is that the Members of the opposition should have been taken into confidence and we should have been informed.

தலைவரவர்களே, திடீரென்று கல்வி அமைச்சர் அவர்கள் செல்ல வேண்டியிருந்த காரணத்தால் 6½ மணிக்கே ஒத்தி வைத்து விட்டார்கள். இன்னும் இரண்டு மூன்றுபேர் பேசவேண்டியிருந்தது. அதற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். கல்வி அமைச்சர் அவர்களுடைய உரையைக் கேட்க நாங்கள் ஆவலுடன் இருந்தோம். திடீரென்று யாரையும் கேட்காமல் எந்தச் சட்ட விதியின் அடிப்படையில் ஒத்தி வைத்துவிட்டார்கள் என்று பார்த்தோம்.

THIRU G. VASANTHA PAI : Sir, with the consent of the House, the discussion on the Resolution could be continued to-day, because, I think there will be enough time to-day.

3. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker, Legislative Assembly transmitting copies of the following Bills as passed by the Legislative Assembly and signed by him for the consideration of the Council :—

1. The Tamil Nadu Prohibition (Suspension of Operation) (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 25 of 1973).

2. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1973 (L.A. Bill No. 32 of 1973).

3. The Tamil Nadu Cultivating Tenants Protection (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 27 of 1973).

I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Excise (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 26 of 1973), as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

4. கவன ஈர்ப்பு

1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டத்தில் கலந்துகொண்ட பட்டதாரி ஆசிரியர்களை எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மேற்பார்வைப் பணிக்கு நியமிக்காதது குறித்து.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

" தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தால், 1973-ஆம் ஆண்டு, மார்ச்சு திங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட பட்டதாரி ஆசிரியர்களை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் திட்டவட்டமாக அளித்த உறுதிமொழிக்கு முரண்பாடாக 1973-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்களில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மேற்பார்வை பணிக்கு நியமிக்காதது குறித்தும் அதனால் அதுபோன்ற ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட இடர்பாடு குறித்தும் "

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வேலை நிறுத்தக் கிளர்ச்சியில பங்கு கொண்ட பட்டதாரி ஆசிரியர்கள் பழி வாங்கப்பட மாட்டார்கள் என்று அரசின் சார்பில் உறுதி கூறப்பட்டது. இந்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுள்ளது. அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அவர்கள் வேலையில் மீண்டும் அமர்த்திக்கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு வேலை முறிவு எதுவும் ஏற்படாமலும் பார்த்துக்கொள்ளப்பட்டது. ஆதலால் பழி வாங்கப்பட்டார்கள் என்ற கூற்றுக்கு சற்றும் ஆதாரம் கிடையாது. 1973 அக்டோபரில் நடந்த எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளில் இவர்கள் [illegible] கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்படவில்லை என்று புகார் கூறப்பட்டுள்ளது. அக்டோபர் தேர்வில் கலந்துகொள்ளும் மாணவர்

களின் எண்ணிக்கையும் தேர்வு மையங்களின் எண்ணிக்கையும் குறைவானவையே. இவற்றுக்குத் தேவைப்பட்ட உதவி கண்காணிப்பாளர்கள் எண்ணிக்கையும் குறைவானதே. ஆகவே ஒரு சில பட்டதாரி ஆசிரியர்களையே உதவி கண்காணிப்பாளராக நியமிக்க வேண்டியிருந்தது. வேலை நிறுத்தக் கிளர்ச்சிகளைச் செய்த பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு நேரத்தில் கண்காணிப்பாளராக பணியாற்ற மாட்டோம் என்று கூறியிருந்ததன் பேரில், முன் எச்சரிக்கையாக அவ்வாறு கூறாத மற்ற ஆசிரியர்களைக் கொண்டு தேர்வுகள் நடத்த முன்பே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடு அகடோபர் தேர்வின் போதும் பின்பற்றப்பட்டிருக்கக் கூடும். தேர்வில் கலந்து கொள்ள மாட்டோம் என்று கூறியிருந்த ஆசிரியர்களை விலக்கிவிட்டு, மற்றவர்களை நியமித்தது, நிர்வாக நலனுக்கு அவசியமான நடவடிக்கையேயொழிய, பழி வாங்கும் நடவடிக்கை ஆகாது. அடுத்த தேர்வுக்கு இப்பொழுதிருந்தே முன் ஏற்பாடுகள் செய்யப்படும். அதுபோது எந்த ஆசிரியர்களையும் விலக்கி வைக்க வேண்டுமென்ற உத்தேசம் இடையாது.

<u>திரு. ஜி. சுவாமிநாதன்</u> : தலைவரவர்களே. இந்தப் போராட்டத்தின் போது தேர்வில் பங்கு கொள்ள மாட்டோம் என்று சொன்னார்கள். ஆகவே அவர்கள் பங்கு கொள்ளாமலே அந்தத் தேர்வு நடந்திருக்கிறது. பல இடங்களில் பட்டதாரி ஆசிரியர்களை உதவி கண்காணிப்பாளர்களாக நியமித்து உத்தரவு கொடுத்து, பிறகு அந்த உத்தரவுகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. இதனால் பட்டதாரி ஆசிரியர்கள் பழி வாங்கப்பட்டார்கள் என்ற நிலைமை இருந்து வருகிறது. அப்படி ஏதும் நடைபெறவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் வருகிற மார்ச்சு தேர்வில் அவர்களுக்கு உதவி கண்காணிப்பாளர் நியமனம் கொடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, போன ஆண்டு மார்ச்சு திங்களில் அத்தகைய முன் ஏற்பாடு செய்து வைத்ததன்படி, நடத்தியிருக்கிறார்கள். அதன் பிறகுதான் இந்தப் பிரச்சினை என்னுடைய கவனத்திற்கு வந்தது. பட்டதாரி ஆசிரியர்களின் குழுத் தலைவர் என்னைச் சந்தித்தபோது, நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். அடுத்து நடைபெறவிருக்கின்ற தேர்வில் இம்மாதிரியான நிலைமை ஏற்படாத அளவுக்கு, சிக்கல்கள் ஏதும் இல்லாத அளவுக்கு குறைபாடுகள் இல்லாத அளவுக்கு நடைபெறும் என்று தெரிவித்திருக்கிறேன். அப்படி ஏதும் ஏற்படாது என்று நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கே. எஸ். கணபதி</u> : தலைவரவர்களே, கும்பகோணம் மையத்தில், டவுன் ஹைஸ்கூல் மையத்தில் மூன்று பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஒரு தமிழ் ஆசிரியருக்கும் நியமன உத்தரவுகள் கிடைக்கப்பெற்று, பிறகு அவைகள் ரத்து செய்யப்பட்டு, அந்த இடங்களுக்கு இடைநிலை ஆசிரியர்கள் போடப்பட்டார்கள். அப்படிப்பட்ட உத்தரவுகளின் நகல்கள் என்னிடம் இருக்கின்றன.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன் நிர்வாக நலன் காரணமாக சில காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கிறது. சாதாரணமாக ஒரு முறை உத்தரவு போட்ட பிறகு மறுபடியும் ரத்து செய்து, இப்படி மாற்றிக் கொண்டே போனால், பல கோளாறுகள் ஏற்படும் என்ற காரணத்தால், அப்படியே விடப்பட்டது. இதை பட்டதாரி ஆசிரியர்களுடைய குழுவின் தலைவர், செயலாளர் இருவரிடமும் விளக்கிக் கூறியிருக்கிறேன். பல சங்கடங்கள் ஏற்பட்டுவிடும் என்று எடுத்துக் கூறினேன். ஆக இந்த முறை அடுத்த தேர்வில் ஏற்படாது. அதற்கான ஆணை கல்வித் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதிலே பழி வாங்கும் எண்ணம் ஏதுமில்லை என்று மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்த உறுப்பினர்கள் இரண்டு தரம் கேள்வி கேட்கலாம். வேறு யாரும் கேட்கக்கூடாது. 4·40 பி.ப.

<u>திரு. கே. எஸ். கணபதி</u> : நானும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : நீங்களும் கொடுத்திருக்கிறீர்களா ? அப்படியானால் சரி.

<u>திரு. கே. எஸ். கணபதி</u> : தலைவர் அவர்களே, உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் அது சம்பந்தப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து ஒப்புதல் அல்லது சம்மதம் தெரிவிக்கும் கடிதம் பெறப்படுகிறது. அப்படி அந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் கடமையைச் செய்ய முன்வந்தும், கடைசி நேரத்தில் அந்த பொறுப்பு எந்தப் அடிப்படையில் மறுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவரவர்களே, அதைத்தான் முதலிலே குறிப்பிட்டேன். சென்ற மார்ச்சு திங்களில் அப்படிப்பட்ட ஆசிரியர்களை நியமிக்காமல், மற்ற ஆசிரியர்களைக் கொண்டு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவு பின்வாங்கப்படாமல், கலைக்கப்படாமல் இருந்த காரணத்தால் இதிலே ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று அவர்கள் அப்படிச் செய்து விட்டார்கள். அது பிறகு என் கவனத்திற்கு வந்தது. இதுமாதிரி இனிமேல் நடக்காது என்று உறுதி மொழி அளிக்கப்பட்டது.

5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே: --

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்."

இந்திய அரசியலமைப்பின் 47-வது பிரிவில் கண்டுள்ள நெறிமுறைக் கோட்பாட்டினையொட்டி மதுவிலக்கினை இம்மாநிலத்தில் படிப்படியாக மீண்டும் செயலுக்குக் கொண்டு வர இவ்வரசு முடிவு செய்தது. முதற்படியாக தமிழ் நாட்டில் உள்ள கள்ளுக் கடைகள் அனைத்தும் 1973 செப்டம்பர் 1-ஆம் நாளிலிருந்து மூடப்பட்டு விட்டன. மேற்கண்ட முடிவின் விளைவாக, கள்ளைப் பொறுத்தவரையில் கள் இறக்குதல், விற்பனை செய்தல், போக்குவரத்து செய்தல், கையகம் வைத்திருத்தல் ஆகியவற்றைத் தடை செய்ய வேண்டி தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தினை (தமிழ் நாடு சட்டம் 10/1937) மீண்டும் செயலுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியமாயிற்று. மேற்சொன்ன தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு 10-வது சட்டம், கள் வியாபாரத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிக்க முற்படுவதால், தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு மதுவிலக்கு (செயல் திறனைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) திருத்தச் சட்ட வரைவினைச் சட்டமன்றப் பேரவையில் கொண்டு வருவதற்காக இந்திய அரசியலமைப்பின் 304 (பி) பிரிவின் வரம்பு நிபந்தனையின் கீழ் குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதல் பெற்று அதனைத் தெரிவிக்குமாறு 1973 ஆகஸ்ட் திங்களில் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. இவ்வவையின் கடந்த கூட்டத்தின்போது குடியரசுத் தலைவரிடமிருந்து முன் ஒப்புதல் வராததால், அவசரச் சட்டம் ஒன்றை, அதாவது தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மதுவிலக்கு (செயல் திறனைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1973) சாற்றுரைக்க முடிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாகச் சட்டம் ஒன்றைக் கொண்டுவர இச்சட்ட வரைவு விழைகிறது.

இதனை இம் மேலவை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

@ 62-63 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது

தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்,

சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மதுவிலக்கு செயல்திறனை நிறுத்தி வைத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு சட்டப் பேரவை, சட்ட முன்வடிவு எண் 25/73) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கும் கீழ்க்கண்ட திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்:

"That the Tamil Nadu Prohibition (Suspension of Operation) (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 25 of 1973), as passed by the Assembly, be referred to a Select Committee of the Council consisting of the following Members:

'The names and number of Members will be announced later.)"

திரு. எஸ். சி. செங்கோட்ட வேலப்ப கவுண்டர்: தலைவரவர்களே, நான் இந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, இந்தச் சட்டத்திருத்தத்தின் தொடர்பாக ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மதுக் கடைகளிலே, கள் விற்பனையாகும் கடைகளைச் சாத்துவது—மூடுவது என்கிற திட்டம் வந்திருக்கின்ற இதே நேரத்தில், நம்முடைய நாட்டில் பல்வேறு இடங்களில் சாராயக் கடைகள் பொது இடங்களில் பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் அருகிலேயே அமைந்திருக்கின்றன. அவற்றை மாற்றியமைப்பதன் மூலம் நம்முடைய குழந்தைகள் அப்படிப்பட்ட சாராயக் கடைகள் அருகில் செல்வதை, அதன் மூலம் தவறான பழக்கத்தைப் பெறுவதை நாம் தடுக்க முடியும். பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவர்கள் இன்றைய தினம் ஈடுபடும் பல்வேறு விதமான, தவறான நடவடிக்கைகளைப் பார்க்கின்றபோது அவர்கள் கலகம் விளைவிக்கின்ற எண்ணத்தில் பல காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை நாம் பார்க்கும்போது அவர்கள் எந்தவிதமான கெட்ட நடவடிக்கையிலும் ஈடுபடாமல் தடுக்க வேண்டியது நம்முடைய மிக முக்கியமான கடமையாகும். அந்த முறையில் சாராயக் கடைகள் பள்ளிக்கூடங்களுக்கு அருகில் இருக்கக்கூடாது என்பது மட்டுமல்ல, வெளிப்படையாக 'சாராயக் கடைகள்' என்ற பெரிய போர்டுகள் மாட்டப்படுவதையும் இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் நாம் மாற்றியமைக்கவேண்டும். அது பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் நாட்டுக்கும் மிகவும் நன்மை செய்வதாகும் என்று சொல்லி அமைகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தின்மீது பேசும்போது, சாராயக் கடைகளை இடம் மாற்றுவது மட்டுமின்றி, பூரண மதுவிலக்கு கொண்டுவருவது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எரிகிற வீட்டிலே பாதியை அணைத்துவிட்டு பாதியை அணைக்காமல் விடுவது பெரிய சிரமங்களை நாட்டிலே ஏற்படுத்தும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வருகின்ற செப்டம்பரில் அண்ணா அவர்களின் நினைவு நாளின்

போது பூரண மதுவிலக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையென உறுதிப்படுத்தப்பட்டு, அந்த அடிப்படையில் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று தலைவரவர்களின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இந்த மதுவிலக்குச் சட்டத்திருத்தத்தின் பேரில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது அரசு சில ஆண்டுகளுக்கு முன்னால் மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தி, தற்காலிகமாக ரத்து செய்தபோது, இந்த நாட்டில் சிலர் இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கையற்றதாக இருக்கிறது என்று பரைசாற்றி வந்தார்கள். உண்மையிலேயே நாட்டின் சூழ்நிலை காரணமாகவும், அரசு ஊழியர்களுக்கு அதிகமாகச் சம்பளம் வழங்குவதற்கான உத்தரவு பிறப்பித்ததன் காரணமாகவும், நம்முடைய பொருளாதாரத்தில் ஏற்பட்ட ஒரு நெருக்கடியின் காரணமாகவும் தற்காலிகமாக நாம் மதுவிலக்கை நிறுத்தி வைத்தோம். அந்தக் காரணங்களை நாம் நாட்டுக்குச் சொன்னோம். நாட்டிலே சிலர் நம்ப மறுத்தார்கள். நம்முடைய நல்ல நோக்கத்தை, நல்ல எண்ணத்தைக் காட்டும் வகையில் அதை மீண்டும் அமுல்படுத்துகிறபோது, நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த மதுவிலக்குக் கொள்கையையும் காந்தியடிகள் கனவு கண்ட நிலையையும் நாம் தீவிரமாக அமுல்படுத்த முன்வருகிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆங்கிலத்தில் 'அபு பென் ஆடம்' என்ற கவிதையைப் பலர் படித்திருப்பார்கள். அவர் ஒரு நாள் இரவு தன்னுடைய அறையில் விழித்துப் பார்க்கிறபோது ஒளி மிகுந்த ஒன்று தோன்றியது. பக்கத்தில் சென்று பார்க்கும்போது அது தேவ தூதராக இருந்ததாம். அந்த தேவ தூதர் பக்கத்தில் சென்று என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அவர் 'இந்த உலகில் இறைவனை வார் யார் விரும்பி வழிபடுகிறார்களோ, அவர்களின் பெயர்களையெல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறேன்' என்று சொன்னாராம். அபு பென் ஆடம் 'என்னுடைய பெயர் அங்கே எந்த இடத்தைப் பெற்றிருக்கிறது' என்று கேட்டாராம். அதற்கு தேவ தூதர் 'உங்கள் பெயர் இல்லை' என்று சொன்னாராம். மறுநாள் இரவு அதே நேரத்தில் அபு பென் ஆடம் விழித்துப் பார்க்கும்போது அதே தேவ தூதர் மீண்டும் எழுதிக் கொண்டிருந்தாராம். என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்' என்று கேட்டதற்கு, அவர், 'நேற்று இறைவனை யார் யார் விரும்பி வழிபடுகிறார்கள்' என்று எழுதினேன், 'இன்று இறைவன் உலகில் யார் யாரை விரும்புகிறார்' என்று எழுதிக் கொண்டிருக்கிறேன் என்றாராம். 'நேற்று என்னுடைய பெயர் இல்லையே, இன்று என்னுடைய பெயர் இருக்கிறதா' என்று கேட்டதற்கு, 'உன்னுடைய பெயர் தான் முதலில் இருக்கிறது' என்று சொன்னாராம். அதுபோல் காந்தியடிகள் கண்ட கனவை நனவாக்குவதில் இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கும் அரசுகளில் ஒன்று இருக்குமானால், அது தமிழ்நாடு அரசாகத்தான் இருக்க முடியும் என்பதை நான் உறுதி

யாகக் கூறிக்கொள்ளுகிறேன். இன்று காந்தியடிகள், அவர்கள் கூறுகின்றபடி தேவலோகத்தில் இருந்து, அவர், தன்னுடைய கொள்கையை விரும்பி ஏற்று அமுல்நடத்துகின்ற அரசுகளைப் பாராட்டி ஒரு பட்டியல் எழுதினால், தமிழ் நாடு அரசுதான் அதில் முதல் இடத்தில் இருக்கும். காந்திக் குல்லாவுக்குள்ளே இருந்துகொண்டு, காந்திக் கொள்கையைச் சொல்லிக் கொண்டிருக்கின்ற பிற மாநிலங்களில் இந்த மதுவிலக்குக் கொள்கையை எளிதாக, கொஞ்சம்கூட வருத்தம் இல்லாமல் கும்மாளம் அடித்துக்கொண்டு ரத்து செய்துவிட்ட நிலைமை இருக்கும்போது, இங்கே இந்த அரசு பொருளாதார நெருக்கடியைப்பற்றிக் கூடக் கவலைப்படாமல், மீண்டும் தற்காலிகமாக நிறுத்தி வைத்து, அதற்கான காரணங்களையும் எடுத்துச் சொல்லி, மதுவிலக்கை அமுல்படுத்துகிறது. வருவாய் குறைந்தாலும் அதைச் சரிக்கட்ட முடியும் என்ற நம்பிக்கை வந்தவுடனே மதுவை ரத்து செய்வதற்கு இந்த அரசு துணிந்து முன் வந்து, மனித சமுதாயத்திலும், உயர்ந்த நோக்கக் கொள்கைகளிலும், காந்தியடிகளுடைய கொள்கையிலும், காந்தியடிகளுடைய வழியில் தென்னாட்டுக் காந்தி அண்ணா அவர்கள் வழி வகுத்துக் கொடுத்த கொள்கையிலும் உறுதியான நம்பிக்கையுடன் இந்த அரசு செயல்படுகிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு இதைவிட ஒரு சான்று தேவையில்லை என்று நினைக்கிறேன்.

நாற்பது கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதை மத்திய அரசு தர வேண்டுமென்று இந்த மாநில மக்களின் சார்பாக நமது முதலமைச்சரவர்கள் மத்திய அரசிடம் எடுத்து வைத்திருக்கிறார்கள். நமது அமைச்சரவையும் கேட்டு வருகிறது. ஆனால், மத்திய அரசு பாராமுகம் காட்டிக்கொண்டிருக்கிறது. உண்மையில் அவர்களுக்கு காந்தியடிகளின் கொள்கையில் நம்பிக்கை இருந்தால், காந்தியடிகளைப் பற்றிப் பேசுகின்ற உரிமை இருந்தால், இந்த நஷ்ட ஈட்டில் பாதி அளவேனும் தருகிறோம்; மற்ற மாநிலங்களும் ஒப்புக்கொண்டால், பாதி அளவு தருகிறோம் என்று முன்வரவேண்டும். பிற மாநில அரசுகள் மதுவிலக்கைப் பற்றி அக்கறை காட்டவில்லை. ஆனால், அதை அக்கறையோடு செயல்படுத்தும் மாநிலம் தமிழகம் தான். எனவே, பலமுறை நம்முடைய அரசின் சார்பிலே, மத்திய அரசு நமக்கு நஷ்ட ஈடு தர வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். ஆனால், அவர்கள் செவி சாய்க்கவில்லை. இனிமேலாவது செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் செவி சாய்க்காததற்குக் காரணம் முறையாக நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம், நமது உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். எனவே, கட்சி சார்பற்ற முறையில், மத்திய அரசைச் சேர்ந்த அமைச்சர்களும், பிரதம அமைச்சரும் இங்கே வரும்போது, நம்முடைய உணர்ச்சிகளை அவர்களிடத்தில் காட்டுவதற்கு எல்லா கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு சர்வ கட்சித் தலைவர்கள் ஒன்று சேர்ந்து, திட்டம் அமைத்து, இந்த நாட்டினுடைய உணர்வினை, இந்த அரசினுடைய உணர்வினைக் காட்டவேண்டும். காந்தியடிகள் அளித்த நல்ல 4·50 பி.ப.

திட்டத்தை நாம் அமல் செய்வதற்கு, அவர்கள் உதவவேண்டும். அது அவர்களது கடமையென்று உணர்வதற்கு ஆவன செய்யவேண்டும். அந்த முறையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவரும், அவர்கள் கருத்தை ஈர்க்கின்ற வகையில் அவர்களுக்கு நம்முடைய உணர்ச்சியைக் காட்டுகிற ஏதாவது ஒரு முறையை வகுத்துக்கொண்டு அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மதுவிலக்கை மீண்டும் அமுல்படுத்துகிறபோது, அடுத்த ஆண்டு சாராயக் கடைகளையும் மூடுவோமென்ற உறுதியை முதல்வரவர்கள் கொடுத்திருக்கிறார்கள். படிப்படியாக முழு மதுவிலக்கை அமுல்படுத்துவதாக இருக்கிறோம். ஆனால், முதலமைச்சரவர்கள் கூறியது போல், இது 'நெருப்பு வட்டத்தினுள்ளே கற்பூரமாக இருந்து கொண்டிருக்க இயலாது' என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இனியும் அதே நிலை இருக்குமென்பதை மறந்துவிடக் கூடாது. மீண்டும் கற்பூரத்தை நெருப்பு வட்டத்தினுள்ளே வைத்துக் கொண்டிருக்கிறோம். அண்டை மாநிலங்களான பாண்டிச்சேரி, கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் மதுவிலக்கை அமுல்படுத்தாமல் இருக்கிறார்கள். நாம் அமுல்படுத்துகிறோம். அங்கும் மதுவிலக்கை அமுல்படுத்துகிற நிலையை உருவாக்குவதற்காக, எல்லோரும் கட்சி சார்பற்ற முறையில், மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வணக்கம்.

* <u>திரு. வி. வெங்கா</u>: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்த வரையில், இந்த நாட்டிலே மதுவிலக்கு இருக்க வேண்டுமென்று மிக உறுதியோடுதான் அன்றைய தினமும் நம்பிக் கொண்டிருந்தது, இன்றைய தினமும் நம்பிக்கொண்டு வருகிறது. இந்த இயக்கத்தை உருவாக்கி, கட்டிக் காத்து, இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்ற எங்களுடைய தலைவர், காலஞ்சென்ற மாண்புமிகு முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள், இந்த மதுவிலக்குக் கொள்கையிலே மிகவும் அழுத்தம் திருத்தமான கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதை, அவரோடு நெருங்கிப் பழகியவன் என்ற முறையில் நான் உணர்ந்திருக்கிறேன். அதைப்போலவே, அவருக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்களும் இந்தக் கொள்கையிலே மிக்க அழுத்தம் திருத்தமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால், நாட்டினுடைய, தமிழகத்தினுடைய பொருளாதார நிலைமையும், மத்திய அரசினுடைய போக்கும், கலைஞர் அவர்களின் சிந்தனையிலே மாறுதலை ஏற்படுத்த முற்பட்டது. தமிழ் நாட்டில் பற்றாக்குறைப் பொருளாதாரம் இருந்தது. அதே நேரத்திலே மத்தியிலே உள்ள பிரதமர் அவர்கள், புதிதாக எந்த மாநிலமாவது மதுவிலக்கை அமுல் செய்ய முன்வருமானால், அதனால் ஏற்படும் நஷ்டத்தை மத்திய நிதியிலிருந்து மானியமாகக் கொடுக்க தயார் என்று

அறிவித்தார்கள். அதையொட்டி, நம்முடைய தமிழக அரசு, "எங்கள் மாநிலத்தில் ஏற்கெனவே மதுவிலக்கை அமுல் செய்து கொண்டிருக்கிறோம்; அதனால் எங்களுக்குப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது; எங்களுக்கு வர வேண்டிய தொகை குறைகிறது; பிற மாநிலங்களில் மதுவிலக்கை அமுல் செய்தால் உதவித் தொகை அளிப்பதாக அறிவித்திருக்கிறீர்கள்; ஏற்கெனவே நாங்கள் அமுல் செய்திருக்கிற காரணத்தால், இழப்பு ஏற்பட்டுள்ளதால், தமிழக அரசுக்கு நிதி உதவி செய்ய வேண்டும்" என்று மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டது. அந்த நேரத்தில், "ஏற்கெனவே அமுல்படுத்தியிருக்கக்கூடிய மாநிலத்திலே எப்படி இழப்பு ஏற்படும்; எனவே உதவித் தொகை கொடுக்க முடியவில்லை" என்று மத்திய அரசு பதிலைச் சொன்னது. அதற்குப் பிறகுதான் நம்முடைய வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், நம்முடைய அண்டை மாநிலங்கள் அனைத்திலும் மதுவிலக்கு இல்லாமல், மதுக்கடைகள் திறந்திருக்கிற காரணத்தாலும், நம்முடைய மாநிலத்தில் மது அருந்தக்கூடிய பழக்கத்தை உடையவர்கள் பிற மாநிலங்களுக்குச் செல்வதாலும், இங்கே கள்ளச் சாராயத்தை ஒரு குடிசைத் தொழிலாக ஏற்றுக்கொண்டுள்ள நிலை இருந்ததாலும், மதுவிலக்கை ரத்து செய்ய கழக அரசு முன் வந்தது. அதைக்கூட பூரணமாக ரத்து செய்ய வேண்டுமென்ற அளவுக்கு இல்லாமல், ஓரளவுக்கு நிறுத்தி வைத்து, மக்களுடைய எண்ணங்கள், பிரதிபலிப்புகள் இவையெல்லாம் எப்படி இருக்கின்றன என்பதை ஒரு அளவுகோலாகப் பார்ப்பதற்குத்தான் செய்யப்பட்டது. மதுவிலக்கை தற்காலிகமாகத்தான் அன்றைய தினம் ரத்து செய்தார்கள். ஆனால், நடைபெற்ற ஓரிரண்டு ஆண்டுக்கால அனுபவத்திலே இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் மதுவிலக்கை ஆதரிக்கிறார்கள்; மதுக் கடைகள் திறப்பதை எதிர்க்கிறார்கள் என்பதை உணர்ந்த உடனே, இந்த அரசுக்குக் கிடைத்துவந்த 40 கோடி ரூபாய்க்கு மேலான வருவாயை இழக்க நேரிடுமென்றாலும், மீண்டும் ஒரு பொருளாதாரச் சிக்கலை அரசு சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுமென்று உணர்ந்தாலும், கலைஞர் அவர்கள், தனக்கே உரிய மிகத் தைரியமான பாணியிலே மீண்டும் மதுவிலக்கை அமுலாக்கியிருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். இங்கேகூட சிலர் எடுத்துச் சொன்னார்கள். கள்ளுக் கடைகளை மூடியிருக்கிறீர்கள். அதே போன்று சாராயக் கடைகளையும் பிற கடைகளையும் மூட வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபோதே, படிப்படியாக; நிச்சயமாக மூடுவேன் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைச் செய்வார்களென்ற உறுதிப்பாடு இருக்கிற காரணத்தால், நிச்சயமாக அந்தச் சாராயக் கடைகளை மூடுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதை நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், இன்றைய தினம் ஒரு அரசு கடைகளை மூடுவதால் மட்டுமே அந்த நாட்டிலுள்ள பழக்கம் போய்விடுமா என்பதனைப் பார்க்கவேண்டும். கடந்த 10, 15 ஆண்டுகளாக மதுவிலக்கை அமுல்படுத்தும்போதுகூட, நாட்டிலே கள், சாராயம் குடிப்பதற்கு ஆட்கள் இருந்துகொண்டிருந்தார்கள். அதிலும் புதிதாக இரண்டு

ஆண்டுக் காலத்திலே புதிய குடிகாரர்கள் உருவாகியிருக்கிறார்கள். அவர்களும் அந்தக் குடியை நிறுத்தக்கூடிய பழக்கத்தைப் பெற்றிருக்கிறார்களா அல்லது பெறுவார்களா என்பது சந்தேகமாகத் தான் இருக்கிறது. வெளி நாடுகளில் அனைத்துக் கட்சிகளும் இதை ஒரு பிரச்சாரமாகச் செய்கிறார்கள். அங்கே மதுக்கடைகள் இருந்தாலும் கூட, ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் அருந்துகிறார்கள். தேவையானவர்கள் மட்டும் அருந்துகிறார்கள். அனைத்து மக்களும் அருந்துவதில்லை என்ற நிலை அங்கே இருந்து வருகிறது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதைப் பிரச்சாரத்தை எவ்வளவு பலமாகச் செய்தாலும், இன்னும் ஆஸ்திக இயக்கம் மறையாமல், அப்படியே இருந்து வருகிறது. எப்படி ஒவ்வொரு கட்சியும் மது விலக்கு வேண்டும், வேண்டும் என்று சொல்கிறார்களோ அதைப்போல் தங்கள் அரசியல் கட்சிக் கூட்டங்களில் யாரும் மது அருந்தக்கூடாது, அதனால் தீமைகள் ஏற்படும் என்று அனைத்துக் கட்சிக்காரர்களும் பிரச்சாரம் செய்ய வேண்டும். நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து அமைப்புகளும் ஒரு முனைப்பாக இதைப்பற்றிப் பிரச்சாரம் செய்து, மக்கள் மனதிலே மது அருந்துவது தீயது என்ற எண்ணத்தை உருவாக்கினால்தான் அது நல்ல முறையில் செயல்படும். ஒரு அரசு சட்டத்தைப் போடுவதனால் மட்டுமே
பி.ப. 5·00 இதை அமுல்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில்லை. இருந்தபோதிலும் இந்த அரசு தைரியமாக இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவைக்கொண்டு வந்திருக்கின்றது. அதற்காக அரசை நாம் பாராட்டுவதோடு, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும், அனைத்து அமைப்புகளும் இந்தப் பிரச்சாரத்தைத் தீவிரமாகச் செய்யவேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகின்றேன். வணக்கம்.

(மாற்றுத் தலைவர் திரு. க. அறிவழகன் தலைமை)

*திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புமிகு தலைவர்வர்களே, இந்த மது விலக்கு திருத்த மசோதாவைப் பாராட்டி, நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்கு என்பதை மகாத்மாஜி அவர்கள் ஒரு தத்துவ ரீதியிலே (பிலாசபி என்ற முறையிலே) கொண்டுவந்தார். அதை (பிராக்டிகலுக்கு) நடைமுறைக்குக் கொண்டுவருகிறபோது எதிர்ப்படுகின்ற தொல்லைகளையும், ஏற்படுகின்ற பொருளாதாரத் தாழ்வுகளையும் நினைக்கின்றபோது, இது அகில இந்திய அளவிலே இருக்கவேண்டுமே அல்லாது தனிப்பட்ட ஒரு மாநிலத்திலே மட்டும் இருப்பதால் எவ்விதப் பலனும் பெற முடியாது என்று டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மதுவிலக்கு என்றால், இந்தியாவில் இருக்கின்ற 38 கோடி மக்களுக்கும் என்றுதான் அந்தக் காலத்திலே மகாத்மாஜி அவர்கள்

அறிமுகப்படுத்தினார்கள். அதை குடித் தடை என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற 13 மாநிலங்களில் குடிக்கலாம், தமிழ் நாட்டில் மட்டும் குடிக்கக்கூடாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதை அமுல்படுத்த நமது தமிழ்நாடு சர்க்கார் முன்வந்திருப்பது உண்மையிலேயே பாராட்டக் கூடியதாகும். இதிலும் கூட ஒரு திருத்தத்தைச் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதாவது, குடிப்பவர்களுக்குத் தடை இல்லை. குடிக்கும் பகுதிக்குத்தான் தடை இருக்கிறது. குறிப்பாக கடலூரில் குடிக்கக் கூடாது. பாண்டிச்சேரியில் குடிக்கலாம். கடலூரிலிருந்து பாண்டிச்சேரிக்கு ஊடே உள்ள தூரம் 10 மைல். 8 அணா தான் பஸ் சார்ஜ். இன்னும் வசதியிருப்பவர்கள் கோவையிலிருந்து இரவு பம்பாய்க்குப் பறந்துபோய் குடித்துவிட்டு மறுநாள் காலை கோவைக்கு வந்துவிடுகிறார்கள். ஆகவே நாம் செய்வதைச் செய்கின்றோம். அதை முழு அளவுக்குச் செய்யும் வகையில் குடிகாரர்களே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இப்போது இடத்திற்கு மட்டும் இருக்கிற தடையோடு நபர்களுக்கும் சேர்த்துத் தடை விதிக்கவேண்டும். எவரும் குடித்தால், குடித்திருந்தால், குடித்திருக்கக் கூடிய 'சிம்டம்' அதாவது வாசனை தெரிந்தால், அவர்களும் சட்ட விரோதிகள் என்ற அளவுக்கு சட்டத்தைக் கடுமையாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். மணி: மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைய தினம் ஒத்திவைக்கப்பட்ட மதுவிலக்குத் திருத்தச் சட்டத்திலே ஒரு பகுதிக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து அந்தச் சட்டத்திருத்தம் நிறைவேறவிருக்கின்றது. எல்லோருமே இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற வேண்டுமென்று எதிர்பார்த்தாலும், ஒரு கருத்தை எனனைப் பொறுத்த வரையில் சொல்லலாம் என்று கருதுகிறேன். கள்ளுக்கடை மூடப்பட்டு விட்டது. சிறிய கள்ளுக்கடைகள் மூடப்படவிருக்கின்றன என்ற செய்தியை நாம் கேட்கின்றோம். ஆனால் இதற்கிடையில் கள்ளுக்கடைகள் மூடப்பட்டன என்ற செய்திக்குப் பிறகு, ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் லைசென்ஸ் இல்லாத ஒரு புதிய கடை திறக்கப்பட்டிருக்கின்றது. இது அனேகமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் வந்திருக்கின்றது. குறிப்பாக கள்ளுக்கடை, சாராயக் கடை, பிராந்திக் கடை இப்படிப்பட்ட கடைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டு அரசாங்க அனுமதியோடு விற்கப்படுகிறது. ஆனால் மருந்து என்ற பெயரால் கிராமத்திற்கு கிராமம் மதுக்கஷாயம் என்ற போதை வஸ்து நிரந்தரமாக விற்கப்படுகிறது. சாராயம் குடித்தவன்கூட குடித்த அளவுக்கு போதை வரவில்லை என்றால், கொஞ்சம் காசைக் கொடுத்து அதிலே ஒரு அவுன்சோ அல்லது இரண்டு அவுன்சோ வாங்கிக் குடிக்கக்கூடிய அளவுக்கு அதுவே இன்றையதினம் மதுபானங்களில் தலை சிறந்ததாக விளங்குகின்றது. நான் அதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வதற்குக் காரணம், இந்தச் சட்டத்தை ஒத்திவைத்த பிறகு எவ்வளவோ சங்கடங்கள், நஷ்டங்கள் கண்கூடாகத் தெரிந்தும், அந்தக் கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் இடையில், இத் திருத்தச் சட்ட முன்வடிவை இவ்வாறாகக் கொண்டு வந்திருக்கிறது. சொன்னதையே

சொல்லிக்கொண்டிருக்கும் அரசு இது இல்லை என்பதை எடுத்துக் காட்டும் வகையில் பல நேரங்களில் பல சட்டங்களை இந்த மாமன்றம் தமிழ்நாடு முதலமைச்சரின் மூலமாக நிறைவேற்றித் தந்திருக்கிறது. எனினும் இந்தச் சட்டத்திலிருந்து விட்டுப்போகின்ற அளவுக்கு மதுக் கஷாயம் இருக்கின்றது. ஊருக்கு ஊர் ஒரு பெயரில் இருக்கின்றது. ஒரு ஊரில் வேலி முட்டி என்றும், ஒரு ஊரில் மது முட்டி என்றும் சொல்கின்றார்கள். இதுமாதிரி ஔடதம் என்ற பெயரிலே வழங்கப்படுகின்ற மதுக்கஷாயம் என்ற ஒரு மது பானம் ரொம்ப வலுவாய்ந்த போதையைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. சாராயம் குடித்தவரை விட அதிகமான போதையுடன், வெறி பிடித்தவனாகவும், தரம் குறைந்தவனாகவும் மாற்றிவிடக்கூடிய தன்மையிலே மதுக் கஷாயம் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையிலே, இப்படிப்பட்ட சட்டங்களை இயற்றுகிற நேரத்தில், அப்படிப்பட்ட மருந்து வகைகளைக்கூட மதுபான சட்டதிட்டங்களுக்கு உட்படுத்தி, மதுவாக அதைக் கருதி, மதுக்கஷாயத்தை விற்பதைத் தடை செய்ய வேண்டும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, கேவலம், அந்த மதுக் கஷாயத்தைக் கட்டுப்படுத்தக்கூட, அதிகாரம் நம்மிடமில்லை. அதுவும் மத்திய அரசிடம்தான் இருக்கின்றது.

<u>திரு. கே. எஸ். மணி</u> : ஏராளவுக்கு இருந்தத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தபோதிலும், இந்த ஆட்சியைக் கவிழ்க்க என்னென்ன வகைகளிலே போராட்டங்கள் நடத்துகின்றார்கள். உள்ளபடியே அந்தப் போராட்டங்களை நடத்துவது நாட்டுக்குத் தேவைதானா? ஆளுகின்ற ஆட்சியை அழிக்கப் பார்க்கும் போராட்டங்கள்தான் என்பது தெரிந்திருக்கின்றது. இந்தப் போராட்டங்களை நடத்துபவர்களும், பகல் இரவு பாராமல் கவலைப்பட்டுக்கொண்டு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றவர்களைக் கவிழ்க்க வேண்டுமென்று கருதுகின்ற மற்றக் கட்சிக் காரர்களும், தயவு செய்து அந்தப் பொறுப்பில் இருப்பவர்களும் ஒன்று கூடி, மதுக் கஷாயம் மதுபானமாக நாட்டில் விற்கப்படுகிறதா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப்பார்த்து, இந்த மது அருந்திய அநேக குடும்பங்கள் கெட்டுவிட்டன என்றெல்லாம் பறை சாற்றி இதைப் போக்குவதற்கு, இந்த ஆட்சியால் திட்டவட்டமாகச் செய்ய முடியாது என்று தெரிந்தபிறகாவது, தயவு செய்து அவர்களுடைய ஆட்சியிடத்தில் தெரிவித்து அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். மற்றைய எதிர்க்கட்சிக்காரர்கள் எதெதற்காகவோ போராட்டங்கள் நடத்துகிறார்கள். தயவு செய்து அதற்கு ஒரு போராட்டம் நடத்தினால் உள்ளபடியே எங்களைப் போன்றவர்கள் அதிலே ஈடுபடவும் தயாராக இருக்கின்றோம் என்ற உறுதியைச் சொல்லி அமைகிறேன். வணக்கம்.

<u>திரு. என். சுந்தரேசத் தேவர்</u> : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மதுவிலக்குத் திருத்த மசோதாவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். திருத்த மசோதாவிற்கு எதிர்க் கட்சித் தலைவர்

அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். பூரண மதுவிலக்கு கொண்டுவரவேண்டுமென்ற உள்நோக்கோடு இதை ஒரு ஆய்வுக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை நான் ஆதரிக்கின்றேன். காரணம் என்னவென்றால், இந்த மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்யும்போது, எல்லா கட்சியினர்களையும் கலந்தாலோசித்து அது செய்யப்படவில்லை. ஆளும் கட்சி தன்னிச்சையாகச் செய்த முடிவாகும். மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் பேசும்போது, எல்லாக் கட்சிக்காரர்களும் இதை ஏற்றுக்கொண்டு இதில் தீவிரமான பிரச்சாரத்தைச் செய்ய வேண்டுமென்று கூறினார்கள். நண்பர் திரு. வெங்கா அவர்களும் இதே கருத்தை வலியுறுத்திக் கூறினார்கள். இப்போது மதுத் திட்டத்தை ரத்து செய்யக்கூடிய அதே நேரத்திலே எதிர்க் கட்சி வரிசையிலே உள்ளவர்களை நிச்சயமாக ஆளுங்கட்சிக்காரர்கள், இதை ரத்து செய்யவேண்டுமா அல்லது தீவிரப்படுத்த வேண்டுமா என்பதைப்பற்றிக் கலந்தாலோசித்து ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும். அப்படியிருந்திருந்தால், மதுவிலக்கு வேண்டுமென்ற முறையிலே எல்லாருமே தீவிரமாக ஈடுபட்டு இதை ஆதரித்திருப்பார்கள். அது போல தமிழ்நாடு பூராவும் இந்த மதுவிலக்கை அனுசரிக்க வேண்டுமென்று கூறி பிரச்சாரம் செய்திருப்பார்கள். அப்படி ஆளுங்கட்சியினர் சொல்லாத காரணத்தினாலே, கேட்காத காரணத்தினாலே எதிர்க் கட்சிகாரர்கள் வாளாவிருக்கவில்லை. இந்த மதுவிலக்குத் திருத்த சட்ட முன்வடிவைக்கொண்டு வருவதை எல்லாக் கட்சிகளும் எதிர்த்திருக்கின்றன. ஆளும் கட்சி இதை அவ்வளவாக விரும்பாத முறையிலே பல கூட்டங்களில் பேசியிருக்கின்றார்கள். அப்படி இருக்க, இதையே எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் ஒப்புக் கொண்டது போல கூறினார்கள். அந்த மாதிரியான நிலையிலே இருக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசினுடைய உதவி கோரி அந்த உதவி இடைக்காத காரணத்தினாலே, இது கொண்டுவரப்பட்டது என்று கூறினார்கள். மத்திய அரசு மதுவிலக்கை அமுல்படுத்தக்கூடிய மாநிலங்களுக்கெல்லாம் உதவி அளிப்பதாகக் கூறவில்லை. எனக்கு ஞாபகம் இருக்கின்றது. மொரார்ஜி தேசாய் ஏதோ கூறினார். பல மாநிலங்களில் அமுல்படுத்தாத காரணத்தினாலே, அம்மாதிரி அமுல் பி.ப. 5·10
படுத்தினால், அதற்கு வேண்டிய உதவிகள் எல்லாம் கொடுக்க முடியும் என்று கூறினார். அமுல்படுத்தாத மாநிலங்கள் அமுல்படுத்த வேண்டுமென்பதற்காக உதவி அளிப்பதாகக் கூறியிருந்தார்கள். நமது மாநிலம் இதற்கு முன்பே பூரண மதுவிலக்கினை அமுல்படுத்திய மாநிலம். எனவே மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய இழப்போ அல்லது அதை ரத்து செய்வதால் ஏற்படக்கூடிய வருவாயோ நமது மாநிலத்தைச் சார்ந்ததாகும். நாம் இதில் எப்போதும் மத்திய சர்க்காரை எதிர் நோக்கியிருக்கவில்லை. எனவே மதுவிலக்கைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லும் நேரத்திலே, மத்திய அரசைக் குறிப்பிடுவது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. நிதி உதவி என்று கேட்பதில் தவறில்லை. ஆனால் இதைக் குறிப்பிட்டு நிதி உதவி கேட்பது பொருத்தமானதாக இல்லை. இன்று பூரண மதுவிலக்கு

வேண்டும் என்று எல்லா எதிர்க் கட்சிகளும் கோருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கூடிய விரைவில் பூரண மதுவிலக்கு தமிழ் நாட்டில் வரும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதை வரவேற்கிறோம். இப்போது கள்ளுக்கடைகள் மூடப்பட்டு, சாராயக் கடைகளும் பிராந்திக் கடைகளும் தான் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போதுள்ள நிலையில் பூர்ண மதுவிலக்கு என்று சொல்லும்போது, அதற்கான சட்ட திட்டங்களைக் கொண்டு வரும்போது, குறிப்பிட்ட மாதத்திலிருந்து சாராயக் கடைகள், இதர கடைகளை மூடி பூர்ண மதுவிலக்கை அமுல்படுத்துகிறோம் என்ற முறையில் அரசு பரிசீலிக்குமா என்ற நோக்கத்தோடுதான் இந்தத் திருத்தத்தினை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பிரேரேபித்திருக்கின்றார் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட முறையில் அது அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, திரு. கே. எஸ். மணி அவர்கள் மதுக் கஷாயம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை நானும் உண்மையிலேயே ஆதரிக்கிறேன். ஏதோ ஒரு மருந்தின் பெயரில் இதை விற்கின்றார்கள். இது நமது மாநிலம் முழுவதும் விற்கப்படுகிறது என்று சொல்லுகின்றார்கள். இதை நிறுத்த வேண்டுமென்றால், அதற்கு மத்திய சர்க்காரின் அனுமதி தேவை என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நிலையில், மதுவிலக்கை தீவிரமான முறையில் அமுல்படுத்த சட்டத்தைக் கொண்டுவரும்போது, எந்தவிதமான போதை தரும் பொருளும், மயக்கம் தரும் பொருளும் விற்கப்படக்கூடாது என்று எல்லாவற்றையும் சேர்த்து சட்டம் கொண்டுவர வேண்டும். அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு மத்திய அரசின் அனுமதி தேவையென்றால், நாங்கள் அதை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். மதுவிலக்கைப் பூர்ணமாக அமுல்படுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. வேறு இல்லை. மதுவிலக்கு இருக்கிறது என்று சொல்லிவிட்டு, எங்கே பார்த்தாலும் கள்ளச் சாராயம் காய்ச்சுவது என்பது சகஜமாகிவிட்டது. இதையும் கண்டிப்பாக நிறுத்த வேண்டும். மதுவிலக்கிற்கு ஆதரவாக பிரச்சாரம் தேவை என்றார்கள். அதற்கு நாங்கள் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏதோ பெயரில்லாத ஒரு கட்சிதான் மதுவிலக்கு கூடாது என்று சொல்லி வந்ததே தவிர, மற்றப்படி அரசியல் ரூபத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும் மதுவிலக்குத் திட்டத்தைப் பூரணமாக ஆதரிக்கின்றன. இதற்காக பிரச்சாரம் செய்யவும் தயாராயிருக்கின்றன. எப்படி குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை, சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பது போன்ற திட்டத்தை ஆதரித்து எல்லாக் கட்சிகளும் செயல்படுத்த முன் நிற்கின்றனவோ, அதுபோலவே இதையும் அனைத்துக் கட்சிகளும் ஆதரிக்கத் தயாராயிருக்கின்றன. எப்படி அந்தத் திட்டங்களுக்காக வட்டங்கள், மாவட்டங்கள் என்ற அளவில் பிரச்சாரம் செய்ய கமிட்டிகள் இருக்கின்றனவோ அதுபோல மதுவிலக்குத் திட்டத்தைப்பற்றிப் பிரச்சாரம் செய்யவும், கள்ளச் சாராயம் காய்ச்சுவதை, குடிப்பதைப் பற்றிய தீமைகளை எடுத்துச் சொல்ல எல்லாக் கட்சிகளும் சேர்ந்த ஒரு கமிட்டியை அமைத்து செயல்படுத்தக்கூடிய ஒரு நல்ல நிலையை

உருவாக்கினால், நிச்சயமாக மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெறும், பிரச்சாரம் செய்வதோடு நின்றுவிடக்கூடாது. அரசன் எவ்வழியோ அதுபோல்தான் குடிமக்களும் என்று சொல்லுவார்கள். ஆகவே மதுவிலக்கு வேண்டும் என்று ஒரு பக்கம் சொல்லிவிட்டு, கள்ளச் சாராயம் காய்ச்சுவது என்றால், அது பொருத்தமானதாக இருக்க முடியாது. சட்டத்திலும் சரி, மக்களிடமும் சரி, இது தவறான காரியம் என்று பிரச்சாரம் செய்ய வேண்டும். எதிர்க் கட்சிகளிலே யாராவது இதற்கு ஆதரவு கொடுக்கவில்லையென்றால், அதை நிச்சயமாகக் கண்டனம் செய்யலாம் என்று கூறி, சட்டம் என்று கொண்டுவரும்போது பூரண மதுவிலக்கை அமுல் செய்வதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அறிய இதை ஒரு பரிசீலனைக் கமிட்டியில் கொண்டு வந்து 'இந்தத் தேதியிலிருந்து பூர்ண மதுவிலக்கு அமுலாகிறது' என்று சொல்ல அரசாங்கம் முன்வர வேண்டும். அதற்கான திருத்தங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

திரு. சி. வி. ராஜகோபால்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் பேசுவதற்கு வாய்ப்பைத் தந்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதற்கு முன்பு மதுவிலக்குச் சட்டத்தைப்பற்றி அருமை நண்பர்கள் பல பேர் பேசினார்கள்.

இரண்டு வருஷத்திற்கு முன்பு நமது முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கை ஸஸ்பெண்டு செய்ய சட்டம் கொண்டுவந்தார்கள். ஏன் கொண்டுவந்தார்கள்? மதுவிலக்கு இருந்த நேரத்தில், ஏதேதோ பெயரில் 'ஆல்கஹால்' அதிகமாக உள்ள பல மருந்துகளை தெருவிற்குத் தெரு, வீதிக்கு வீதி விற்றுக்கொண்டிருந்த நேரத்தில், அதைக் குடித்துவிட்டு பலர் பல வியாதிகளினால் அவதிப்பட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்துத்தான், நமது முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கைக் கொஞ்சம் ரத்துசெய்து வைத்தால் என்ன ஏற்படுகிறது என்று ஒரு வருஷம், இரண்டு வருஷம் பார்த்துவிட்டு, பிறகு வேண்டுமானால் மீண்டும் கொண்டு வரலாம் என்ற நோக்கத்தோடுதான் அந்தச் சட்டத்தை 'ஸஸ்பெண்டு' செய்து வைத்தார்கள். ஏதோ இந்த நாட்டிலுள்ள நாலரை கோடி மக்களும் குடித்தே தீர வேண்டும் என்று இந்தச் சட்டத்தை 'ஸஸ்பெண்டு' செய்யவில்லை. மக்களுடைய நன்மைக்காகத்தான் இதைக் கொண்டு வந்தார்கள். நான் பேசுகிறேன் என்றால் நான்கூட பேசுவது ஒரு பக்கம் இருந்தால், காரியங்களிலே வேறுவிதமாக இருக்கிறோம். இப்படியெல்லாம் இருக்க வேண்டாம் என்றுதான் இதை ஒரு வருஷம் 'ஸஸ்பெண்டு' செய்து பார்க்கலாம் என்று இதைக் கொண்டுவந்தார்கள். கொண்டு வந்தபிறகு இதனால் பயன் கிடைக்கவில்லை என்று தெரிந்த பிறகுதான், வடநாட்டிலுள்ள அரசாங்கம் நமக்குப் பணம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், எங்களை நாங்களே காப்பாற்றிக் கொள்ளுகிறோம். மதுவிலக்கைக் கொண்டுவருவதால் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று இப்பொழுது அந்தச் சட்டத்தைத்

திரும்பக்கொண்டு வருகிறோம். நமது முதலமைச்சர் அவர்கள்கூட வெகு உணர்ச்சிவசப்பட்டுக் கேட்டுக்கொண்டார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு, பரிபூர்ண மதுவிலக்கை தமிழ் நாட்டிலே எதிர் காலத்தில் கொண்டுவரப்போகிறோம் என்று சொன்னார்கள். அதைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இங்கே இல்லையென்றால், நமது பணம் பாண்டிச்சேரிக்குப் போய்விடும், பெங்களூருக்குப் போய்விடும் என்கின்றார்கள். அதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தத் திருத்த மசோதாவை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன், இது இந்த நாட்டு மக்களுக்குப் பயன் தரத்தக்க விதத்தில் இருக்கின்றது என்பதைக் கூறி இந்த நடவடிக்கையை வாழ்த்தி என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

பி.ப. 5.20 திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, மதுவிலக்கு ரத்தில் ஒரு பகுதியை ரத்து செய்யும் தீர்மானத்தை அரசு கொண்டு வந்திருப்பதை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதில் பெரிதும் மகிழ்கிறேன். ஒரு பகுதி ரத்து என்பது, முழு ரத்துத் தீர்மானமாக இருந்திருந்தால், நான் இன்னும் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்திருப்பேன். மது விலக்கு ரத்துத் தீர்மானம் கொண்டு வந்த சமயத்திலே, இதைக் கொண்டு வரக் கூடாது என்று தீவிரமாக எதிர்த்த கட்சியைச் சேர்ந்தவன் நான். மது விலக்கை ரத்து செய்தால், இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுடைய ஆதரவைப் பெரிதும் இழக்கக் கூடும், இந்தக் கெடுதல், இந்தத் தீங்கு ஆளும் கட்சியினருக்கு வரக்கூடாது என்ற ஒரே அடிப்படையின் காரணமாகத் தான் முஸ்லீம் லீக் வலியுறுத்தி மதுவிலக்கு ரத்துத் தீர்மானத்தைப் பலமாக எதிர்த்தது. அப்போது நான் சொன்ன யோசனைகள், நல்லெண்ணத்துடன் சொன்னதாக வரவேற்கப்படவில்லை. ஆளும் கட்சியினர் நம்முடைய தோழமையை அறுத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு நம்முடைய யோசனைகளை ஏற்க மறுத்தார்கள். இன்றைக்கு நாம் சொன்னது சரியானது என்ற முறையில்தான் மதுவிலக்கு ரத்துச் சட்டத்தில் ஒரு பகுதி ரத்து என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்தத் தீர்மானம் வருவதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தால் எனக்கு ஒன்று தோன்றுகிறது. திண்டுக்கல்லிலே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்ட தோல்வி ஒரு வகையிலே இந்தத் தீர்மானம் வருவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். தோல்வியால் தீமை தான், நஷ்டம் தான். ஆங்கிலத்தில் சொல்லுவார்கள், பிளெச்சிங் இன் டிஸ்கைஸ் என்று. தோல்வியும் ஒரு படிப்பினையாக அமைந்தது. ஒரு நல்ல காரியத்திற்கு, அடிப்படையாக அமைந்தது. இது உண்மையில் வரவேற்கத் தக்க அம்சம் தான். ஆனாலும் ஒன்று சொல்கிறேன். மதுவிலக்கு ரத்திலே ஒரு பகுதியை ரத்து செய்துவிட்டு, இன்று அதைத் தீர்மான ரூபத்திலே கொண்டு வருகிறோம், அமுல்படுத்தி விட்ட பிறகு, மக்களுடைய ஆதரவை இழந்திருந்த ஆதரவை திராவிட முன்னேற்றக் கழகம் பெருமளவு திரும்பப் பெற்றிருக்கிறது. இந்தக்

கண்கூடாகப் பார்க்க முடிகிறது. இன்றைக்கு மக்களுடைய ஆதரவு பெருகும் நிலையைப் பார்த்தால், நான் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன், கோவையில் தேர்தல் வரவிருக்கிறது. அந்தத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக வெற்றி பெறும் என்பது என்னுடைய கணிப்பு. ஆனாலும், நான் ஒன்று சொல்லிக்கொள்வேன். அப்படி வெற்றி பெற்றுவிட்டால், மக்கள் முழு ஆதரவு கொடுத்து விட்டார்கள் என்ற எண்ணம் உருவாகி, முழு ரத்து தீர்மான அபிப்பிராயத்தைக் கைவிட்டுவிடக் கூடாது என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி ஒரு நல்ல தீர்மானம் கொண்டு வந்ததற்காக மனப்பூர்வமாக முஸ்லீம் லீக் ஆதரவு தெரிவித்துக்கொள்கிறது என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீர்மானம் சம்பந்தமாக எங்களுடைய கட்சித் தலைவரவர்கள் கொண்டுவந்த திருத்தத்தையும் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே கள்ளுக் கடைகள் மட்டும் ரத்து செய்யப்பட்டு ஓரளவு திருப்தியடைந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கள்ளுக் கடைகளை மூடிவிட்டு, சாராயக் கடைகளைத் திறந்துவிட்டதனால், குடிப்பவர்களுடைய எண்ணிக்கை குறைந்துவிட்டது என்று அர்த்தமல்ல. ஆண்டுக்காண்டு குடிப்பவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு தான் போகிறது. குறிப்பாக, இன்றைய தினம் ஒரு பகுதியிலே ஒரு சாராயக் கடை நடத்துவதற்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னால், அதற்கு அருகில் லைசென்ஸ் இன்றி, அனுமதியின்றி பல கடைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் குறிப்பிட்ட மாதிரி, பள்ளிகள், கோயில்கள் அருகாமையில் இருந்தாலும் சரி, அந்த இடங்களிலே அனுமதியின்றி கடைகளை வைத்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் சரிவரக் கண்காணிக்கப்படுவதில்லை. பூரண மதுவிலக்கு அமுல் செய்யப்படும்போது சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதிலே மிகவும் கவனமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, அனுமதியின்றி பல இடங்களில் இருப்பதாகச் சொன்னார்கள். உதாரணமாகச் சொன்னால், உதவியாக இருக்கும். இது போல தகவல் இருந்தால், அரசாங்கத்திற்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தனியாக அவர்கள் என்னிடம் சொன்னால்கூட, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவண்டர்: தலைவரவர்களே; அமைச்சரவர்கள் தனிப்பட சொல்லலாம் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு எழுதிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். பூரண மதுவிலக்கு அமுல் செய்யப்படும்போது, நாட்டிலே திருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதை, கள் இறக்குவதைத் தடை செய்தாக வேண்டும். ஏனெனில், சாராயக் கடைகள் இருப்பதனாலே பாதிக்கப்படுகிறவர்கள், கிராமங்களிலேயுள்ள ஏழை எளிய மக்கள். அவர்கள் வருவாயிலே பெரும் பகுதியை இதில் செலவிட்டு, குடும்ப வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரையில், பூரண மதுவிலக்கு தான் வேண்டும். எங்களுடைய போராட்டத்திலே பூரண மதுவிலக்கு வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை, இது முக்கியமான கோரிக்கை. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இதில் பேசிய நண்பர்கள் இதைத் தீவிரமாக, தர்மப் பிரச்சாரம் என்ற அடிப்படையில் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே இதைச் செய்து வருகிறோம். என்னுடைய நோக்கமெல்லாம் பூரண மது விலக்கு அமுல் செய்யப்பட வேண்டும் என்பது. இந்த சந்தர்ப்பத்தில் முதலமைச்சரவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். கள்ளுக்கடைகளை மூடி விட்டார்கள். வரவேற்கக் கூடிய காரியம். அதற்கு நன்றி கூட சொல்லிக்கொள்கிறோம். இருந்தாலும் சாராயக் கடைகள் இருப்பது மக்களுடைய உடல் நலத்தை மிகவும் பாதிக்கக் கூடியது என்பதை அவர்களே தெரிந்துகொண்டிருப்பார்கள். தயவு செய்து வருகிற தமிழ்ப் புத்தாண்டு தினத்திலிருந்தாவது, பூரண மதுவிலக்கு என்று சொல்லக் கூடிய ஒரு காரியத்தை அவர்கள் இங்கே அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ்ப் புத்தாண்டு தினத்திலோ, ஒரு குறிப்பிட்ட தினத்திலோ கூட அறிவிப்பதற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்போது சாராயக் கடைகளை ஏலம் எடுத்தவர்கள நீதி மன்றத்திற்குப் போவார்கள். அதையும் மாற்றுக் கட்சிப் பத்திரிகைகளில் வெளியிட்டு, விளம்பரப்படுத்துவார்கள்.

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்கள் பத்திரிகைகள பெரிதுபடுத்தும் என்று சொன்னார்கள். ஆனால் நாம் மக்களுக்காக நல்ல காரியம் செய்வதில் பத்திரிகைகள் பெரிதுபடுத்தினாலும், ஆட்சேபித்தாலும், அதைக் கருத்தில் கொள்ளக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் பத்திரிகை வெளியிடும் என்பதற்காகச் சொல்லவில்லை. சாராயக் கடைக்காரர்களுக்கு குறிப்பிட்ட காலவரையறை கொடுத்துவிட்டு, இடையிலே ரத்து செய்தால், அவர்கள் கோர்ட்டுக்குப் போவார்கள் என்றுதான் சொன்னேன்.

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: அவர்கள் சட்டப்படி கோர்ட்டுக்குச் செல்லக்கூடும் என்று கூறினார்கள். இருந்தாலும் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து இது மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய காரியம் என்று கருதி, இந்தக் காரியத்தை உடனடியாகச் செய்வதற்கு முதல்வர் அவர்கள் முன் வரவேண்டுமென்று, எங்கள் கட்சியின் சார்பாக, தெரிவித்துக்கொண்டு எங்கள் கட்சித் தலைவர் கொண்டு வந்த திருத்தத்தை ஆதரித்து பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, பூரண மதுவிலக்கு நமது நாட்டில் இரண்டே மாநிலங்களில் தான் இருந்து வந்தது. ஒன்று, அண்ணல் காந்தி பிறந்த குஜராத் மாநிலம், மற்றொன்று, அவர் சம்மந்தம் செய்துகொண்ட தமிழ்நாடு. இந்தியாவில் வேறு எங்குமே பூரண மது விலக்கு இல்லை. ஒரு ஜில்லா, இரண்டு ஜில்லா, மூன்று ஜில்லா என்ற அளவில்தான் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள், 1971-ல் தேர்தல் முடிந்தவுடன், மதுவிலக்கை—அவருடைய மொழியில் சொல்ல விரும்புகிறேன்—ஒத்தி வைக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தார்கள். ரத்து செய்தார்கள் என்று சொன்னால், அவர்கள் உடனே மறுத்துச் சொல்வதற்கு எழுந்திருப்பார்கள். ஆதலால் அவருடைய மொழியிலேயே சொல்கிறேன், ஒத்தி வைக்க வேண்டுமென்று மசோதா கொண்டுவந்தபோதே, நான் ஆட்சேபித்தேன். மது விலக்குச் சட்டம் என்று அமுலுக்குக் கொண்டு வருவதில் உள்ள கஷ்டத்தைப்பற்றிச் சொன்னேன். மீண்டும் மது விலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது கஷ்டமான காரியம். ஒரு முறை தளர்த்தி விட்டால், பின்னால் அமுலுக்குக் கொண்டுவர கஷ்டப்படுவோம்; வேண்டாமென்று மன்றாடினேன். பலரும் சொன்னோம். இதில் பண வருவாயை மட்டும் மனதில் கொண்டு மது விலக்குச் சட்டத்தை ஒத்தி வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ஒரு 30 கோடியோ அல்லது 40 கோடியோ வருமானம் வருமென்றால் அது பெரிய காரியமல்ல. இது வெல்ஃபேர் ஸ்டேட், போலீஸ் ஸ்டேட் அல்ல, டிக்டேடர் ராஜ்யம் நடக்கவில்லை. மக்கள் சம்மதப்படி 'டெமாக்ரஸி" நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் நலனைப் பிரதானமாகக் கொண்டு ஆட்சி நடத்த அரசியல் சட்டத்தை நிர்ணயித்து, ஒவ்வொரு மாநிலமும், மத்திய அரசாங்கமும் நமது நாட்டில் நடந்து கொண்டு வருகின்றன. இட்டத்தட்ட மாநிலங்களுக்கு 500 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அத்தனையும் மக்கள் நலனுக்காகவே செலவழிக்கிறோம். இதிலே ஏதோ ஒரு 30 கோடி பாதிப்பு வந்துவிடும் என்பதற்காக வேண்டி, மக்கள் நலனுக்குப் பாதகமான ஒரு காரியத்தைச் செய்வது விரும்பத்தக்கதல்ல என்று அன்றும் வலியுறுத்தினோம்; இன்றும் அதைத் தான் சொல்கிறோம்.

30, 40 கோடி ரூபாய் பணம் கிடைக்காமல் போகுமென்றால், 500 கோடியில் 30 அல்லது 40 கோடி குறைவாக மக்கள் நலனுக்காகக் குறைவாகச் செலவழிக்கப் போகிறோம். ஆகவே பூரணமாக மது விலக்கு கொண்டுவருவது நல்லதில்லையா என்பதுதான் பிரச்சினை. மது விலக்கு

கொண்டு வருவது நல்லதல்ல என்று சொல்வதற்கு யாருமே கிடையாது. முழுக்க, முழுக்க, 24 மணி நேரமும் குடித்துக் கொண்டிருக்கின்ற ஒருவன் கூட. "ஏதோ யாருடனோ சேர்ந்து இந்தக் கெட்ட பழக்கத்தை மேற்கொண்டு விட்டேன், இந்தப் பழக்கம் யாருக்கும் கூடாது, கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் இவற்றை எடுத்து விடவேண்டும்" என்று தான் சொல்கிறான். அவன் குடித்தாலும் தன்னுடைய பிள்ளைகள் குடிக்கக் கூடாது என்று பிரார்த்தனை செய்கிறான், விரும்புகிறான். பூர்ண மது விலக்கு வேண்டும் என்பதில் யாருக்கும் வித்தியாசமான எண்ணம் கிடையாது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சட்டம் கொண்டு வந்தவுடனே, அதாவது கள்ளுக்கடைகளை மூட வேண்டும் என்ற சட்டம் போட்டவுடனே, அதை ஆட்சேபணை செய்து ஹைகோர்ட்டில் வழக்குப் போட்டார்கள்.

* திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, குறிப்பிட்ட தவணைக்கு முன்னாலே மூடச் சொன்னால் சட்டப் பிரச்சினை எழலாம். ஆகஸ்ட் மாதம் 31-ஆம் தேதி வரையில் ஏலம் விட்டு விட்டு திடீரென்று மூடவேண்டுமென்று சொல்வது தான் பிரச்சினைக்குரியது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, கள்ளுக்கடைகள் வேண்டுமென்று கோர்ட்டுக்குப் போய் ரிட் மனு போட்டிருக்கிறார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, திருடுவதற்குக் கூட உரிமை இருக்கிறது என்று சொல்லக் கூடிய காலம் இது. அதையும் ஒரு வாதமாகத்தான் சொல்வார்கள். மது விலக்குச் சட்டம் அமுலில் இருக்கின்றபோது, வருமானம் கோடி, கோடியாகப் போவதோடு மட்டுமின்றி, அதை அமுல்படுத்துவதற்கு 5 கோடி 10 கோடி ரூபாய் என்று செலவு செய்கிறோம் என்றும் கூறப்படலாம். ஆகவே தேவையில்லை என்று வாதாடுபவர்களும் உண்டு. அமுல்படுத்துவதற்கு எத்தனை சட்டங்கள் வந்தாலும், பரிபூர்ண மதுவிலக்கை அமுல் நடத்தினாலும், ஒரு பக்கம் திருட்டுச் சாராயம் காய்ச்சி விற்றுக் கொண்டுதான் இருப்பார்கள். மது விலக்குச் சட்டம் இல்லாமலிருந்தாலும், திருட்டுத்தனமாகக் கள்ளுக்கடைகளும், சாராயக் கடைகளும் இருக்கத்தான் இருக்கின்றன. இப்பொழுதும் சாராயம் திருட்டுத்தனமாகக் காய்ச்சிக்கொண்டுதான் இருக்கிறார்கள். போன வருஷம் விஷம் கலந்த சாராயத்தைக் குடித்து விட்டு பல பேர் செத்துவிட்டதைப் பார்த்தோம். வார்னிஷ் குடித்து விட்டு நம்முடைய மாநிலத்திலும், மற்ற மாநிலங்களிலும் கூட செத்திருக்கிறார்கள். மது விலக்கு அமுலில் இல்லாத இடத்திலும் இது நடந்திருக்கிறது. கடைகளிலேயே வார்னிஷை வாங்கிச் சாப்பிடுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பூரண மதுவிலக்கு தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் இந்த அவைக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதை நான் பல

நேரங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். மது விலக்கு வெற்றி பெறாமல் தோல்வியடைகிற சூழ்நிலை ஏற்பட்டதாலும், பக்கத்து மாநிலங்களில் மது விலக்கு அமுலில் இல்லாத காரணத்தாலும், வேறு வழி இல்லாமல் அது ஒத்தி வைக்கப்பட்டது என்பதையும் நான் அப்பொழுதே அறிவித்திருக்கிறேன். ஆனாலும் இப்பொழுது அடுத்த ஆண்டில் பூர்ண மது விலக்குத் திட்டத்தை இந்த அரசு அமுலபடுத்தும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. நான் அப்பொழுதே கேட்டுக்கொண்டிருக்கிறேன். இப்பொழுதும் உறுதியாகச் சொல்கிறேன். நாம் பூர்ண மது விலக்கை அமுல்படுத்துகின்ற நேரத்தில், அகில இந்திய ரீதியில் மதுவிலக்கு அமுல்படுத்தாத அளவில், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, எங்கேயும் வெற்றிகரமாக நடத்த முடியாது. இப்பொழுதே எழுதி வைத்துக் கொள்ளுங்கள். நாம் இதை வெற்றிகரமாக நடத்த முடியாமல், நம்முடைய வருமானத்தை இழந்து விடப்போகிறோம், அதை மறந்துவிடத் தேவையில்லை. ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் உத்தமர் காந்தியடிகள் வாழ் நாளெல்லாம் பாடுபட்ட அந்தக் கொள்கை நிறைவேற்றப்படும். இங்கே பூர்ண மதுவிலக்கு கொண்டுவந்த பிறகு, அகில இந்திய ரீதியில் அமுல்படுத்த தமிழகத்தில் உள்ள மாற்றுக் கட்சிகளோடு சேர்ந்து மத்திய அரசிடம் போராடுவோம் என்று முன்பே கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்கு இங்கே இருக்கின்ற ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தயாராக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னதில் மாறுபட்ட கருத்துகள் இருப்பதைக் கண்டு வருந்துகிறேன். பூர்ண மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்தாலும் கூட, திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்பதைச் சொல்லிவிட்டு, அதே நேரத்தில் இந்தியா பூராவும் மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால்தான் நாம் வெற்றிகரமாக நடத்த முடியும் என்று சொல்கிறார். இந்தியா மட்டும் என்ன, உலகம் பூராவுமே மதுவிலக்குச் சட்டம் வந்தாலும், திருட்டுத்தனமாகக் காய்ச்சுவதும், குடிப்பதும் இருக்கத்தான் செய்யும். உதாரணத்திற்கு போலிஸ் ஸ்டேஷன்கள் ஏற்பட்டு இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. திருட்டு கூடாது, தவறு செய்யக் கூடாது, பிக் பாக்கெட் பண்ணக்கூடாது, கொலை, களவு கூடாது என்பதற்குத்தான் அவை இருக்கின்றன. அதற்காகத்தான் போலீஸ் ஸ்டேஷன்கள் வைத்தோம். என்ன நின்று விட்டது? எந்தப் போலீஸ் ஸ்டேஷன் சரகத்தில் கொலை இல்லை? எந்த போலீஸ் ஸ்டேஷன் சரகத்தில் கொள்ளை இல்லை. எந்த போலீஸ் ஸ்டேஷன் சரகத்தில் திருட்டு இல்லை? எல்லா இடங்களிலும் எல்லாம் இருக்கிறது. 200 வருஷங்களாகப் போலீஸ் ஸ்டேஷன்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கொலையையும், கொள்ளையையும், திருட்டையும் நிறுத்த முடியவில்லை. ஆகையினால் போலீஸ் ஸ்டேஷன்களை எடுத்துவிடுமாறு கூறுவது போன்ற ஒரு வாதமாக இது இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் கேட்கின்ற கேள்வியை நேரடியாகச் சந்திக்காமல், ஏதோ போலீஸ் ஸ்டேஷன், திருட்டு என்று பேசுவதில் பயனில்லை. நான் கேட்பது

அகில இந்திய ரீதியில் மதுவிலக்கு வேண்டுமா, வேண்டாமா என்பது. நாம் அகில இந்திய ரீதியை ஒத்துக்கொண்டிருக்கிறோமா இல்லையா? பிறகு அகில இந்திய ரீதியில் மதுவிலக்கு வேண்டும் என்று வற்புறுத்தப் போகிறோமா இல்லையா?

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் முன்னுக்குப்பின் முரண்பட்டுப் பேசுவதை நான் இப்பொழுது விளக்குகிறேன். இவர்கள் மாநில சுயாட்சி வேண்டுமென்று போராடிக் கொண்டு, சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அடுத்த மாநிலத்தில் என்ன இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாநில சுயாட்சியைப்பற்றிப் புரிந்து கொள்ளாமலேயே பேசுவது குறித்து வருந்துகிறேன். மாநில சுயாட்சி என்பது தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும்தான்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, அடுத்த மாநிலம் புதுச்சேரி, அங்கே போய் நீங்கள் இதைக் கேட்க வேண்டும், இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சொல்வதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது? அவர்களுக்கு வேண்டியதை அந்த மாநில மக்கள்தான் முடிவு செய்யவேண்டும். அதே மாதிரி ஆந்திரா மக்கள் தங்களுக்கு கள்ளுக்கடை வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்து கொள்ள வேண்டும். தமிழ் நாட்டில் நூற்றுக்கு நூறு பேர் முடிவு செய்து பூர்ண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். அதை (One fine morning) திடீரென்று இங்கேயுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு 1971 தேர்தலுக்குப் பின்னால் தளர்த்தியது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆக மதுவிலக்கு வேண்டுமா, வேண்டாமா, என்பதை மக்களிடம் வாக்கு எடுத்து அதன் பிறகுதான் முடிவு எடுக்கவேண்டும் என்பதுதான் தங்களுடைய கருத்தா?

*திரு. கே. ராஜாராம்: வாக்கு எடுக்கவேண்டிய அவசியமில்லை. மக்களுடைய பிரதிநிதிகளாக, நூற்றுக்கு நூறுபேர் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் இருக்கின்றார்கள். அவர்களிற்பெரும்பாலோர் பூர்ண மதுவிலக்கு வேண்டும் என்று சொல்கின்றபோது, அது மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிப்பதாகும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அப்படியானால் புதுச்சேரியில மக்கள் பிரதிநிதிகளாக பெரும்பாலான அளவில் காங்கிரஸ் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மதுவிலக்கு ஏன் அமுல் நடத்தப்படவில்லை?

*திரு. கே. ராஜாராம்: அது அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்தது. அந்த மாநில மக்களை வற்புறுத்துவதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது? அந்த மாநில மக்களின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்த மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிப்பார்கள். அந்த மாநில மக்களுடைய எண்ணம் என்னவோ அதைக் கொண்டு செய்வார்கள். அவர்களைப் போய் "தமிழ்நாட்டில் நாங்கள் இப்படிச் செய்திருக்கிறோம். அப்படித்தான் நீங்களும் செய்ய வேண்டும்" என்று சொல்வதற்கு நமக்கு உரிமையில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, மாநில சுயாட்சி கிடைத்ததற்குப் பின்னால்தான் மதுவிலக்கு கொண்டுவரவேண்டும் என்பது அவருடைய கொள்கை என்று நினைக்கிறேன்.

*திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இப்பொழுது உள்ள சுயாட்சியிலேயே மதுவிலக்கு என்பதும், கள்ளுக்கடை, சாராயக்கடை சம்பந்தப்பட்ட விஷயங்கள் பூராவும் முழுக்க, முழுக்க மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள விஷயங்கள். இவை மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட சப்ஜெக்ட்டுகள் அல்ல. நாம இங்கேயே தீர்மானிக்க வேண்டிய விஷயம். இப்பொழுது நான் கொண்டுவந்திருக்கின்ற திருத்தத்தின் நோக்கம் இந்த மசோதாவிலேயே சாராயக்கடை, பிராந்திக்கடை, விஸ்கி கடை, அபின், கஞ்சா எல்லாவற்றையும் நிறுத்தி விடுவது என்று குறிப்பிட்டு விடுவோம் என்பதுதான். இப்பொழுது கள்ளுக்கடைகளை மூடி விட்டோம். சபையில் இப்பொழுது திருத்தம் செய்வதைவிட ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட்டு மற்ற மதுக் கடைகளையும் ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து நிறுத்தி விடுவோம் என்று சொல்லலாம். இந்தத் திருத்தத்திலேயே செய்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை. ஒரு சிறிய விஷயந்தான், ஆனால் பெரிய நோக்கம் ஆழ்ந்த நோக்கம், இரண்டு வரிகள் சேர்த்து மற்ற கடைகளையும் மூடுவது என்பது தானே. முதலமைச்சர் அவர்கள் வெளியிலும் இந்தச் சபையிலும் என்ன சொன்னாரோ அதுவேதான் சாரம். பல இடங்களில் சொல்லி வருகிறார். அதைச் செயல்படுத்த வேண்டும் என்பதுதான். இந்தத் திருத்தத்தைச் இப்போதே சட்டமாக்கச் சொல்லவில்லை. பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்பதுதான் திருத்தம். அரசாங்கமே ஒரு திருத்தம் கொடுத்து முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னாரோ அதைச் செயல்படுத்தினால் போதுமானது. அவர்கள் எதைச் சொல்லிக் கொண்டிருக்கிறாரோ அதைச் செயல்படுத்தினால் போதுமானது. அவர் சொல்லாததை நாங்கள் சொல்லவில்லை. இதைமட்டும் சொல்லி, இந்தத் திருத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. கே. பொன்னுவேலு: தலைவரவர்களே, அபின், கஞ்சா கடைகள் என்று சொல்லியிருக்கிறாரே; அவைகள் எங்கே இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: இங்கே, தமிழ் நாட்டிலே இருக்கின்றன. ஜன்னலிலேயே வைத்து விற்கிறார்கள். சில கடைகளும் இருக்கின்றன.

[திரு. கே. ராஜாராம்] [1973 நவம்பர் 30

அதை நிறைவேற்றுவதற்கு ஒரு தேதியைக் குறிப்பிட்டு இதில் சேர்த்துவிட்டால், நாளைக்கு அசெம்பிளிக்குத் திருப்பியனுப்பி அங்கே நிறைவேற்றிவிடலாம். அரசாங்கம் விரும்பாததைச் சொல்லவில்லை. ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் முடிவு பண்ணாத ஒன்றை நான் சொல்லவில்லை. ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஒப்புக் கொண்டிருக்கிறது. வருகிற செப்டம்பர் 1-ஆம் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆட்சே
5–40 பி.ப. பனை இருப்பதற்கு எந்த விதக் காரணமும் இல்லை. அதைத் தான் முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்போதே இரண்டு வார்த்தைகள் சேர்த்துக் கொள்வதற்குச் சொல்லிவிட்டால் போதும், திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன்; பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டிய அவசியமில்லை. இதனுடைய அடிப்படை நோக்கத்தை முதலமைச்சர் அவர்கள் உணர்ந்து இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தத் திருத்த மசோதாவைப்பற்றி பல உறுப்பினர்கள் கருத்துக் களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மசோதாவின் பேரில் 11 பேர் மொத்தமாகப் பேசியிருக்கிறார்கள். எல்லாத் தரப்பினைச் சேர்ந்தவர்களும் இந்த மசோதாவை ஆதரித்துத்தான் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மசோதாவை எதிர்த்து எந்த உறுப்பினரும் கருத்துத் தெரிவித்ததாக நான் கருதவில்லை. நம்முடைய அரசைப் பொறுத்த வரையில், மது விலக்குக் கொள்கைபற்றி நம்முடைய முதல்வர் அவர்கள் விளக்கமான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மது விலக்கு ரத்து செய்யப்படவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, மதுவிலக்கை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தோம். It is only suspension and not scrapping. மது விலக்கை இன்றைய தினம் மீண்டும் கொண்டுவருவதற்கு இந்த மசோதாவை இந்த மன்றத்தில் பிரேரேபித்திருக்கிறேன். நம்முடைய குன்றக்குடி அடிகளார் அவர்கள் பூரண மதுவிலக்கு தேவை என்று சொன்னார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், கள்ளுக்கடைகளை மூடியாகிவிட்டது, சாராயக் கடைகளை மூடுவதற்கு ஒரு தேதியைக் குறித்து விடுங்கள் என்று சொன்னார்கள். நம்முடைய அரசின் கொள்கையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். மது விலக்கை மீண்டும் படிப்படியாகக் கொண்டுவருவது தான் அந்தக் கொள்கை என்று ஒப்புக்கொண்டு, முதற் கட்டமாக கள்ளுக் கடைகளை மூடினோம். பிறகு சாராயக் கடைகளை மூடுவது என்ற கருத்து ஏற் கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், இதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் வரவேற்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

எதிர்க் கட்சியின் சார்பாக, உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது, மத்திய அரசு மான்யம் வழங்குவது பற்றிச் சொன்னார்கள். அவர்கள் சொல்லுவதைப் பார்க்கும்போது, மத்திய அரசு முன்வந்து கொடுத்தாலும், இவர் கொடுக்கமாட்டார் என்று

1973 நவம்பர் 30] [திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா]

சொல்வதாகத் தான் என்னால் அறிய முடிந்தது. நாம் மதுவிலக்கை அமுல்படுத்துவதால் ஏற்படுகின்ற இழப்பை ஈடுகட்டுவதற்கு மத்திய அரசு மான்யம் தர வேண்டுமென்று கேட்டோம். அவர்கள் தரவில்லை. மற்ற மாநிலங்களில் மதுவிலக்கு இல்லாத நேரத்தில் நாம் அமுல் படுத்துகிறோம் என்ற அளவில் மத்திய சார்க்காரிடம் கேட்டோம். மத்திய சர்க்கார் திட்டவட்டமாக மான்யம் கொடுக்க முடியாது என்ற கருத்தைத் தெரிவித்து விட்டார்கள். இருந்தாலும் இந்தத் திருத்தம் தேவை என்று கருதி, இந்த அவையின் முன்னால் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் இந்தத் திட்டத்தை ஏன் அமுல்படுத்துவதில்லை என்ற கேள்விக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விடையளிக்கும்போது, அதை மற்ற மாநில மக்கள் முடிவு செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்கு அகில இந்தியக் கொள்கை என்று சொல்லிக்கொள்வதற்கு ஏதாவது அருகதை இருக் கிறதா என்று யோசிக்கிறேன். சில கட்சிகள் பூரண மதுவிலக்குத்தான் தங்களுடைய கொள்கை என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால் அந்தக் கொள்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். நம்முடைய அரசைப் பொறுத்த வரை யில், இந்த மதுவிலக்கை, மீண்டும் படிப்படியாக அமுல்படுத்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்து, இந்த மசோதாவை இந்த மன்றத் தின் முன்னால் வைத்திருக்கிறேன். இதை அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்ற ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மசோதா ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற அவசரச் சட்டத்திற்குப் பதிலாகத் தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவின் கருத்து தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவிற்கு ஒரு திருத்தம் தேவை என்று நான் கருதவில்லை. பொறுக்குக் குழு விற்கு அனுப்ப வேண்டிய அவசியமும் இல்லை. ஏற்கெனவே நம் முடைய அரசாங்கம் அதன் கொள்கையை அறிவித்து விட்டது. படிப்படியாக மதுவிலக்கை நிறைவேற்றுகிறோம் என்று சொல்லியிருக் கிறது. அந்த அடிப்படையில் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற அரசின் கொள்கையைச் சொல்லி, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவ ரவர்கள் திருத்தத்திற்கு அவசியமில்லை என்ற கருத்தைத் தெரிவித்து இந்த மசோதாவை அனைவரும் ஏற்று நிறைவேற்றித்தர வேண்டு மென்று இந்த மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலை வர் தன்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா ?

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, நான் வலியுறுத்துகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Prohibition (Suspension of Operation) (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 25 of 1973), as passed by the Assembly, be referred to a Select Committee of the Council consisting of the following Members :

(The names and number of Members will be announced later.)"

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்விற் எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 25/73) நிறைவேற்றப்படவேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 25/73) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(2) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 26/73).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு ஆயத்தீர்வை (திருத்த) சட்ட முன் வடிவு @(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/73) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

இந்த மாமன்றத்தில் முன்னரே குறிப்பிடப்பட்டவாறு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவில் கண்டுள்ள நெறிமுறைக் கோட்பாடுகளை ஒட்டி, இம்மாநிலத்தில் மதுவிலக்கை மீண்டும் படிப்படியாகச் செயலுக்குக் கொண்டுவருவதென இவ்வரசு முடிவு செய்து அதன் முதற்படியாக 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் 1-ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள கள்ளுக்கடைகள் அனைத்தும் மூடப்பட்டு விட்டன. அதன் விளைவாக தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு ஆயத் தீர்வைச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 34/1971) கள் பற்றிய குறிப்பீடுகளை நீக்கும் வகையில் அச்சட்டத்தைத் திருத்துவது அவசியமாகிறது.

இதன் அவசர நிலையைக் கருதி, 1973-ஆம் ஆண்டு ஆயத்தீர்வை (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1973) என்கிற அவசரச் சட்டம் ஒன்றை இதற்கெனச் சாற்றுரைக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

மேற்படி அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இந்தச் சட்டவரைவு இப்போது கொண்டு வரப்படுகிறது.

இத்தருணத்தில் ஆயத்தீர்வை விதிக்கப்படத்தக்க பொருள்கள் மீது எந்தப் பேரளவு வரம்புக்கு உட்பட்டு ஆயத்தீர்வை அல்லது அதற்கீடான தீர்வை விதிக்கப்படலாம் என்று மேற்படி சட்டத்தின் 20-வது பிரிவில் குறிப்பிடப்படக்கூடிய வகையில் அப்பிரிவைத் திருத்தவும், தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1959) அன்னிய மது வகை மீது விற்பனை வரி விதிப்பதற்கு வகை செய்வதால் அத்தகைய விற்பனை வரி விதிப்புக்கு வகை செய்யக்கூடிய மேற்படி சட்டத்தின் 28-வது பிரிவை விட்டுவிடவும் இச்சந்தர்ப்பம் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தை ஏற்குமாறு இம் மேலவையை நான் இப்போது கேட்டுக்கொள்கிறேன்.

@ 64-66 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை.
"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, ஆயத் தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/73) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

[பரிந்துரை எதும் இல்லை]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,
"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 26/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(3) தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/73).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மேலவைத் தலைவரவர்களே,

5-50 பி.ப. "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1955) 3-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ், நில உரிமையாளர், குறிப்பிட்ட சில காரணங்களைக் காட்டி, பயிரிடும் குத்தகைதாரரை வெளியேற்றுவதற்காக, மனுச் செய்து கொள்ளலாம். அவருக்குச் சேரவேண்டிய

@ 67 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

குத்தகை கொடுக்கப்படாமை, நிலத்திற்கு அல்லது பயிருக்கு ஊறு விளையும் வகையில் பணியில் அசட்டையாக இருத்தல், நிலத்தைப் பயிரிடத் தவறுதல், வேளாண்மை அல்லது தோட்டத் தொழில் அல்லாத பிற காரியத்திற்காக நிலத்தைப் பயன்படுத்துதல், அல்லது அந்த நிலம் குறித்து நில உரிமையாளரது உடைமையுரிமையை வேண்டுமென்றே மறுத்தல் போன்ற காரணங்களுக்காக குத்தகை தாரரை வெளியேற்ற நில உரிமையாளர் மனுச் செய்துகொள்ளலாம். மேலே சொல்லப்பட்டுள்ள காரணங்களில் எதை முன்னிட்டேனும் பயிரிடும் குத்தகைக்காரரை வெளியேற்ற விழையும் நில உரிமையாளர் ஒருவர், மேற்படி சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்கீழ் வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். குத்தகைக்காரரை வெளியேற்றி, வருவாய்க் கோட்ட அதிகாரி பிறப்பிக்கும் ஆணைக்கு எதிராக, குத்தகைக்காரர், மேற்படி சட்டத்தின் 6-பி பிரிவின்கீழ் உயர் நீதி மன்றத்திற்கு மறு விசாரணை மனு ஒன்றைச் செய்துக்கொள்ளலாம். ஆனால், குத்தகைக்காரரை வெளியேற்றி வருவாய்க் கோட்ட அதிகாரி பிறப்பித்த ஆணை, உயர் நீதி மன்றத்தினால் தள்ளிவிடப்படும் நேர்வில், குத்தகைக்காரரின் சுவாதீனத்தில் மீண்டும் நிலத்தை ஒப்படைக்க வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அதிகாரமளிக்கும் விதித்துறை எதுவும் இச்சட்டத்தில், இப்போது இல்லை. வெளியேற்ற ஆணையை உயர் நீதி மன்றம் மாற்றியமைத்த போதிலும் நிலத்ினை மீண்டும் தமது சுவாதீனத்தில் பெற இயலாத நிலையில் குத்தகைக்காரர்கள் உள்ளதால், குத்தகைக் காரர்களுக்கு இதனால் இடர்ப்பாடு ஏற்படுகிறது.

வருவாய்க் கோட்ட அதிகாரி, குத்தகைக்காரரை வெளியேற்றிப் பிறப்பித்த ஆணையை, உயர் நீதி மன்றம் மறு விசாரணை செய்து தள்ளிவிடும் நேர்வில், பயிரிடும் குத்தகைக்காரருக்கு இடர் ஏற்படாமல் இருப்பதற்காக, நிலத்தை அக் குத்தகைக்காரரின் சுவாதீனத்தில் ஒப்படைக்குமாறு உயர் நீதி மன்றம் ஆணையிட வகை செய்து சட்டத்தில் விதித்துறை செய்ய வேண்டுமென முடிவு செய்யப் பட்டுள்ளது. அரசின் மேற்படி முடிவைச் செயல்படுத்துவதே இச்சட்ட வரைவின் நோக்கமாகும்.

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு மேலவையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்.—
"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண், 27/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த குத்தகைதாரர்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்ட முன்வடிவு ஏன் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலே, குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் காரியங்களைச் சரியாகச் செய்யாவிட்டால், அவர்களை வெளியேற்றும் உரிமை நில உரிமையாளர்களுக்கு சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது ; அதன் மூலம் அவர்கள் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதற்குரிய வழியும் சட்டத்தில் இருக்கிறதென்ற கருத்தையும் எடுத்துக் கூறினார்கள். அப்படி வெளியேற்றப்பட்ட ஒரு குத்தகைதாரர் கோர்ட்டுக்குச் சென்று, அங்குள்ளவர்கள், குத்தகைதாரர் வெளியேற்றப்பட்டது தவறு என்று முடிவு செய்வார்களானால், அந்த முடிவுக்குப் பிறகு அவர்களை மறுபடியும் குத்தகைதாரர்களாக ஆக்குவது இயலாத காரியமாக இருக்கிற காரணத்தால், இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

இங்கு சில மாதங்களுக்கு முன்னால் நாம் ஒரு சட்டத்தைச் செய்திருக்கிறோம். அந்தச் சட்டத்தின்படி குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் அவர்கள் பயிர் செய்யும் நிலத்தை தாங்களாகவே வாங்குவதற்குரிய வழியைச் சட்டமாகச் செய்திருக்கிறோம் அப்படிப்பட்ட குத்தகைதாரர்கள், தாங்கள் பயிரிடும் நிலத்தை அவர்களே வாங்கிக் கொள்ளலாமென்று வழி வகை செய்துவிட்டு, அவர்களை வெளியேற்றுவதற்கும் வழியில்லாமல் செய்துவிட்டு, அவர்களை வெளியேற்றுவதற்கு முனைவார்கள் என்பதற்காக மறுபடியும் சட்டத்திலே ஒரு மாறுதல் கொண்டுவரவேண்டிய அவசியமென்ன என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் எந்த குத்தகைதாரர்களாக இருந்தாலும் அவர்கள் பயிரிடும் நிலத்தை, அவர்களே வாங்கிக்கொள்ள வழிவகை செய்திருக்கிறோம், அந்தச் சட்டத்தையும் இங்கே நிறைவேற்றியிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திருத்தம் ஆக்ட் 25/1955-ன் கீழ் கொண்டுவந்துள்ளோம். அந்தச் சட்டப்படி, அவர்களுக்கு உயர்நீதி மன்றத்தில் அனுகூலமாகத் தீர்ப்புக் கிடைத்தாலுங்கூட, சில காரணங்களுக்காக ' எவிக்ஷன் ' செய்யலாமென்று இருக்கிறது. அந்தக் காரணங்களுக்காக ஆர். டி. ஓ. கோர்ட்டிலே பிராது போட்டு, ' எவிக்ஷன் ' உத்தரவு பெற்ற பிறகு, அந்த உத்தரவு சரியில்லை என்று உயர்நீதி மன்றத்தில் முடிவு செய்தால், மீண்டும் அந்த நிலத்தை ' ரெஸ்டோர் ' செய்து கொடுப்பதற்கு சட்டத்திலே விதி முறையில்லையென்ற காரணமாகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கிற சட்டத்தின்படி குத்தகைதாரர்களுக்குள்ள, பாதுகாப்பு எப்போதும் இருக்கும். அந்தப் பழைய சட்டத்தின்படி ஏற்பட்டிருக்கிற உரிமைகளை அவர்கள் இழந்துவிடக் கூடாதென்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே நாம் மாறுதலை கொண்டுவந்திருக்கிறோம். அந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திலேயே, குத்தகைதாரர்களாக இருப்பவர்கள், அவர்கள் பயிரிடும் நிலங்களை அவர்களே வாங்குவதற்குரிய வழி முறைகளையும் செய்திருக்கிறோம். அந்தச் சட்டத்தை நம்முடைய பேரவையும், மேலவையும் நிறைவேற்றி, ஜனாதிபதியின் கையெழுத்திற்கு டில்லிக்கு அனுப்பியிருக்கிறோம். அப்படி அனுப்பிவிட்ட பிறகும் எந்தக் குத்தகைதாரர்களாக இருந்தாலும், அவர்கள் எந்த நிலத்தைச் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்களோ, அந்த நிலங்களுடைய உரிமையாளர்களாகிவிடுவார்களென்ற நிலைமை வந்த பிறகும், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Chairman, Sir, the Lower Court holds that he is not a cultivating tenant. In that case, he goes to the High Court on revision. The High Court holds that he is a cultivating tenant. But a Law Court cannot pass an order for restoration of the land. On the ruling of the High Court, the Government ...

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, as I understand it, the Hon. Minister is mentioning about the non-abiding by the tenant of the conditions specified in the Act. If the tenant does not act according to these conditions, then the landlord has got a right to evict the tenant. But, in a different Act, we have empowered the tenant to purchase the land and in that case he will no longer be a tenant. Once he purchases the land, he will become the owner of the land. We have made an Act sufficiently protecting the interest of the tenant and making him owner of the land. When he no longer continues to be the tenant of the land, what is the purpose of this amendment, so as to protect his rights as a tenant ? I want to know the position clearly. We all know that the new Act was passed a few months ago, amidst protest by the Opposition both in this House and the Lower House. With all that the Act was passed and has been sent to the President for his signature. I do not know what has happened to that Act. I want to know whether this Act is not going to be signed by the President.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Not ' signed ', it is " assent of the President ".

THIRU G. SWAMINATHAN : Sir, I want to know whether the Government themselves are under the feeling that the assent of the President is not going to be given, that the tenants will not

be made owners of the land and consequently no protection would be given to the tenants. If the assent of the President has not been given, I want to know why the President has not given assent after the Act has been passed.

THIRU C. V. RAJAGOPAL : We cannot question the act of the President.

THIRU G. SWAMINATHAN : Sir, I do not want to question the President. I only want information whether the Government have got any information why the assent has not been given.

* திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் சொன்ன விஷயத்தில் ஒன்றைப்பற்றிக் கூற விரும்புகிறேன் 'டெனன்ட்' என்று நிலத்தை உழுது சாகுபடி செய்துகொண்டிருப்பவர்கள் எல்லோரும் நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. அதற்கும் 'குவாலிபிகேஷன்' இருக்கிறது. ஏற்கெனவே சொந்தத்தில் 5 அல்லது 6 ஏக்கர்கள் இருந்து, இன்னும் 2 ஏக்கருக்கு 'டெனன்ட்' ஆக இருந்தால், இந்த நிலத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள முடியாது. அவர்கள் 'டெனன்ட்' ஆகத்தான் இருக்க முடியும். அந்த மாதிரி 'கேஸ்' களுக்கு இந்தச் சட்டம் நிறைவேறியாக வேண்டும். இப்போது ஆர். டி. ஓ. 'எவிக்ஷன் ஆர்டர்' போட்டுவிட்டால், ஹைக்கோர்ட்டுக்குப் போகலாம். அங்கு போய் 'எவிக்ஷன் ஆர்டர்' ஐ 'கேன்சல்' செய்துவிட்டால், புதிதாக வந்துள்ள டெனன்டைக் காலி செய்து, பழைய டெனன்டுக்கு 'ரெஸ்டோர்' செய்து கொடுக்க, இந்தச் சட்டம் வந்திருக்கிறது. உழுபவர்கள் எல்லோரும் நிலத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள முடியாது. எல்லா டெனன்ட்சும் அவர்கள் உழுகிற நிலங்களைச் சொந்தமாக்கிக்கொள்ள முடியாது. நிலமே இல்லாதவர்கள், ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்கள் இன்னொரு ஏக்கரைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். 5 ஏக்கரை உழுதுகொண்டிருந்தால், 5 ஏக்கரையும் சொந்தமாக்கிக் கொள்ளும்படியாக நாம் சட்டத்தை நிறைவேற்றவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறவேண்டிய பதிலை, எதிர்க்கட்சித் தலைவரவர்கள், அமைச்சருடைய சார்பாகக் கூறியதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, ஆளுங் கட்சிக்காகவோ அமைச்சருக்காகவோ நான் சொல்லவில்லை. இது சட்டப் பிரச்சினை, நாம் நிறைவேற்றிய சட்டத்தை, நாமே தவறாகப் பொருள் செய்யக் கூடாதென்பதற்காகத்தான் விளக்கம் கூறினேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பற்றிப் பேசும்போது சில ஐயங்களைக் கேட்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையிருக்கின்றது. எனவே இந்த மாதிரி ஐயங்களை எழுப்பி அதற்கான விளக்கங்களை அங்கத்தினர் பெறுவதற்கு இந்த வாய்ப்பை உபயோகப்படுத்திக் கொள்வதிலே தவறில்லை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அறிவார்கள். இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதுமாதிரி மசோதாவை நிறைவேற்றி அனுப்பினோமே. அந்த மசோதாவின் நிலைமை என்ன? தமிழ் நாட்டில் இருக்கின்ற லட்சக்கணக்கான நில உடைமையாளர்கள், பல லட்சக்கணக்கான குத்தகைதாரர்கள் இதைப்பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகின்றார்கள். அவர்களுடைய விருப்பத்தைத்தான் என்னுடைய பேச்சின் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன். அமைச்சர் அவர்கள் குடியரசுத் தலைவர் இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லையென்று சொன்னார்கள். அந்த நிலைமை இருக்குமானால், அவர்களே ஒப்புதல் அளிக்கவில்லை என்பதை அரசுக்குத் தெரியச் செய்துவிட்டார்களா? அல்லது அவர்களிடமிருந்து தாக்கீது எதுவும் வரவில்லையா? அப்படி ஒப்புதல் அளிக்கவில்லை என்று சொன்னால், என்ன காரணத்திற்காக ஒப்புதல் அளிக்கவில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்? பல மாதங்களாகி விட்டன. நாம் நமது சட்டமன்றத்திலே பல தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். கிட்டத்தட்ட 10, 12 தீர்மானங்கள் அனுப்பியிருக்கின்றோம். பல தீர்மானங்கள் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. எவ்வளவு காலம் இருக்கலாம் என்று வரைமுறை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஒப்புதல் அளிக்க முடியாது என்று அரசுக்கு அறிவிப்பார்களா என்பதையும் நான் அறியேன். அப்படிச் செய்தி வந்தால், அதனுடைய நிலைமை என்ன என்பதை தமிழ்நாட்டிலுள்ள பல லட்சக்கணக்கான குத்தகைக்காரர்கள் மிக ஆவலோடு எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதனாலே அதுபற்றிய விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்கள் என்று நம்புகிறேன். இப்போது அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கின்றார்கள். கோயில்களுடைய நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்ற நிலைமையிலே, ஆஸ்திகப் பெருமக்கள், அந்த மதச்சார்புடைய அவர்களின் நிலங்களை நல்ல முறையிலே பாதுகாக்கவேண்டி அந்த நிலங்கள் எல்லாம் போகக் கூடாது என்று நினைப்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். ஆகவே அவர்கள் சார்பாகவும் விளக்கத்தைப் பெற இந்த மசோதாவின் மீது பேசுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 6-00 பி.ப.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, குத்தகைதாரர்கள் பாதுகாக்கப்பட சட்டம் மிக இன்றியமையாதது. எனக்குத் தெரிந்த வரையிலே, அண்மையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு குத்தகைதாரர் வழக்கு நடந்தது. அவர் குத்தகைதாரர் அல்ல என்று தீர்ப்பு அளிக்கப்பட்டு, உயர்நீதி மன்றத்திற்கு அந்த வழக்கு வந்தது. வழக்கிலே அவர் வெற்றிபெற்றிருக்கின்றார். ஆனால் நிலத்தை குத்தகைதாரரிடமிருந்து ஏற்ற பிறகு அவர்கள் நிலத்தையே

விற்றுவிட்டார்கள். நிலச்சுவான்தாரர்கள் குத்தகைதாரரிடமிருந்து நிலத்தை ஆர். டி. ஓ. உத்தரவுப்படி எடுத்துக்கொண்டு, குத்தகைதாரர் உயர்நீதி மன்றத்திற்குப் போய் தீர்ப்பு வாங்கி வருவதற்கு முன்னாலேயே நிலத்தை வேறு ஒரு ஆளுக்கு விற்றுவிட்டார்கள். விலையாகப் போய்விட்டது. ஆகவே இத்தகைய சட்டம் இருந்தால்தான், குத்தகைதாரர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் வற்புறுத்திக்கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது குத்தகைதாரர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கும் என்று கூறி ஆதரிக்கின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த மசோதாவிற்கான விளக்கத்தை, நமமுடைய அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்லியது போல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களே எடுத்துச் சொல்லிவிட்டார்கள். மேலும் விளக்குவதற்கு ஒன்றுமில்லை என்று நினைக்கின்றேன்.

The Tamil Nadu Rights to Purchase Land-ownership Rights Bill, 1973 has not yet received the assent of the President. Further, the Bill gives the tenant option to purchase the land cultivated by him. The Bill does not also prevent future tenancy. So, the Cultivating Tenants Protection Act will continue to be in force. So, the amendment is necessary.

நம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல் The tenancy relationship should continue. அப்பேர்ப்பட்ட சூழ்நிலைகளிலே இது போன்ற ஒரு திருததம் தேவை என்று ஹைக்கோர்ட் கருத்து இருக்கின்றது. ஒருவர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு வழக்குத் தொடர்ந்தார், ஆர்.டி.ஓ. கோர்ட்டிலே. ஆர்.டி.ஓ. கோர்ட்டிலே அவர்களுக்கு பாதகமாக முடிந்ததன்பேரில். ஹைக்கோர்ட்டுக்குச் சென்ற பிறகு, ஹைக்கோர்ட்டிலே அந்தக் குத்தகைதாரருக்கு அனுகூலமாக உத்தரவு பிறப்பித்தும்கூட, அவர்களால் அநத நிலத்தை மீண்டும் மீட்டுத் தர முடியவில்லை என்ற நிலையிலே இந்தச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டுமேயொழிய வேறு வழியில்லை என்று அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர நேரிட்டது. "டெனன்ட்ஸ்" இல்லை என்று கீழ் கோர்ட்டில் முடிவாகிறது.

The High Court observed as follows:—

"Unlike the Courts of Law which would have inherent powers with them, although there is no specific enabling statutory provision, the position of statutory bodies entrusted with specific powers is entirely different. The powers of such a statutory body are only limited and controlled by the Statute which confers that and it cannot go outside the limits of the Statute creating it. On

that view, it could have no inherent power. It is another matter if on a construction of a statutory provision, an inference therefrom can be made of an ancillary or necessary power to execute the main purpose covered by the Statute. But, in our view, that principle will be inapplicable to the construction of section 4 (5) of the Act." The High Court has further observed that it may be unfortunate that notwithstanding the reversal of the eviction order, the tenant is unable to get restoration and that it is for the Legislature to provide for the situation.

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, I quite agree with the Hon. Minister regarding the previous Act, the Cultivating Tenants Protection Act. But, if the new Act is assented to by the President, then about 90 per cent of the cases would not occur, and there would be only about 5 per cent or 10 per cent of such cases. Since the Minister has stated that the new Act has not received the assent of the President, I would like to know whether the Government are of the view that the assent by the President to the new Act could be expected or that the matter is to be dropped?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஜனாதிபதி அவர்களிடத்திலே இருக்கின்ற அந்த மசோதாவைப் பொறுத்தவரையிலே அவர்கள் கையெழுத்துப் போடவில்லை என்ற கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அது ஜனாதிபதியிடத்திலே இருக்கின்றது. கையெழுத்திட்டு அனுப்புவார் என்று எதிர்பார்க்கிறோம். அதற்காக பல முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. ஜனாதிபதி கையெழுத்துப் போட்டபிறகுதான் சட்டம் அமுலுக்கு வரும் நிலை இருப்பதால், வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதைத் தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: சட்டத்திலே ஜனாதிபதி கையெழுத்துப் போடச் செய்யுமாறு ஏற்பாடு செய்வதற்காக ஏதாவது நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள யோசனை செய்திருக்கின்றதா அல்லது இன்னும் எவ்வளவு மாதங்கள் அரசு பார்த்துக்கொண்டிருக்கும்? அப்படி அவர்கள் கையெழுத்தே போடவில்லை என்று சொன்னால், அதை என்ன செய்வதாக உத்தேசம் என்பதைப் பற்றி அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கையெழுத்துப் போடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். எப்போது போடுவார்கள் என்று கேட்க முடியாது. ஆனால் போட வேண்டும் என்று வற்புறுத்தி கடிதங்கள் எழுதலாம். கடிதங்களுக்குப் பதில் வரும்போதுதான் நமக்குத் தெரியும். கடிதங்களுக்கு ஏதாவது பதில் வந்து விளக்கம்

கேட்டால், விளக்கங்களைக் கொடுக்கலாம். இதுவரை எந்த விளக்கமும் கொடுக்கவில்லை. காலதாமதத்தில் தான் எழுதுவார்கள் என்று எதிர் பார்க்கின்றோம். மாண்புமிகு அங்கத்தினர் கூறுவதுபோல, இது மிக முக்கியமானதுதான். இந்தச் சட்டத்தை மிக விரைவாக ஜனாதிபதி ஏற்றுக் கொண்டு அனுப்புவது மிக நல்லதாக இருக்கும் என்று நான் கருது கிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், " This is only a consequential amendment in view of the High Court's judgment. " என்ற காரணத்தினாலே இந்த மசோதாவை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 27/73) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

